SORNAMMAL ENDOWMENT LECTURES

“கொங்குவேளிர்”

By

C. M. இராமச்சந்திரன் செட்டியார்

ANNAMALAI UNIVERSITY

1967

SORNAMMAL ENDOWMENT LECTURES

"கொங்குவேளிர்"

By

C. M. இராமச்சந்திரன் செட்டியார்

ANNAMALAI UNIVERSITY

1967

கீதா பிரஸ், திருச்சிராப்பள்ளி-2.

முன்னுரை

அண்ணுமலைப் பல்கலைக் கழகத்திற் சில ஆண்டுகள் செந்தமிழ்ப் பணிபுரிந்து பின்பு சென்னைப் பல்கலைக் கழகத் தமிழ்த்துறைத் தலைவராகத் திகழ்ந்து தமிழுக்குப் பெரும் பணி புரிந்த பேராசிரியர் டாக்டர் ரா. பி சேதுப்பிள்ளை அவர்களைத் தமிழகம் நன்குணரும். சொல்லின் செல்வராகிய பிள்ளையவர்கள் தம் தாயை மறவாத பேரன்புடன் தமிழ்த் தாய்க்குப் பெருந் தொண்டாற்ற விரும்பித் தம் அன்னையார் சொர்ணம்மாள் நினைவாக அண்ணுமலைப் பல்கலைக் கழகத்தில் இருபத்தையாயிரம் வெண்பொன் நன்கொடை வழங்கினுர்கள். இத்தொகையின் வருவாயைக்கொண்டு ஆண்டு தோறும் பண்டைத் தமிழ்ப் புலவர் பெருமக்களில் ஒருவரைக் குறித்து, தமிழறிஞர் ஒருவரைக் கொண்டு மூன்று சொற்பொழிவுகள் நிகழ்த்தப்பெறுதல் வேண்டும் என்பது இந்த அறக்கட்டளையின் நோக்கமாகும்.

செந்தமிழ் இலக்கியங்களையும் தென்னிந்திய சாசனங்களையும் நன்குணர்ந்து தமிழக வரலாற்றுத் துறையில் சிறந்த பணிபுரிதலைத் தமது பொழுது போக்காகக் கொண்ட செந்தமிழ்ப் பேரன்பர் திருவாளர் இராவ்பகதூர் சி. எம். இராமச்சந்திரன் செட்டியார் அவர்கள் அண்ணுமலைப் பல்கலைக் கழகத்தில் சொர்ணம்மாள் அறக் கட்டளையின் சார்பில் கொங்குவேள் என்னும் புலவர் பெருமானைக் குறித்து நிகழ்த்திய மூன்று சொற்பொழிவுகளின் தொகுப்பாக அமைந்தது 'கொங்குவேள்' என்னும் இந்நூலாகும்.

இந்நூலாசிரியர் திரு. செட்டியாரவர்கள் தமிழ் வளர்ச்சியிலும் சைவ சமய வளர்ச்சியிலும் பேரார்வமுடன் அரும்பணிகள் சில புரிந்து வருபவர். தாம் பிறந்த கொங்குநாட்டின் நடைமுறைகள் குறித்தும் அந்நாட்டில் கடைச்சங்க கால முதல் இவ்விருபதாம் நூற்ருண்டு முடியவுள்ள காலப் பகுதியில் தோன்றிய தமிழ் நூல்களைக் குறித்தும், அவற்றை இயற்றியுதவிய புலவர் பெருமக்கள், இயற்றுவித்த வள்ளல்கள் முதலியோரைக் குறித்தும் இடைவிடாது ஆராய்ந்து, தம் ஆராய்ச்சியை நூல் வடிவில் விளக்கி வருபவர்கள். இவர்கள் எழுதிய கொங்கு நாட்டு வரலாறு என்னும் நூல் அண்ணுமலைப் பல்கலைக் கழகத்தால் வெளியிடப்பெற்றுள்ளது.

'கொங்குவேள்' என்னும் இந்நூலில் கொங்குவேள் மாக் கதையாகிய பெருங்கதையின் அமைப்பு, அதற்கு மூலமாக வடமொழியில் அமைந்த பிருகத் கதைக்கும் இப்பெருங்கதைக்கும் உள்ள ஒற்றுமை வேற்றுமைகள், பெருங்கதையின் இலக்கிய நயம், செந்தமிழ்வளம், இயற்கைவளம், காவியத் தலைவர் முதலோரின் பண்பு நலன்கள், கதை நிகழ்ந்த நாடு நகரங்களின் இயல்புகள், ஆசிரியர் கொங்குவேள் பிறந்த கொங்குநாட்டின் வரலாறு, ஆசிரியர் வரலாறு, கல்வித்திறன், சமயம், கொங்கு நாட்டில் உள்ள சமண் சமய நிலையங்கள், அக்கால மக்கள் வாழ்க்கை நிலை, பெருங்கதை நூலின் நடைப்போக்கும் சொற் போக்கும், அணிநலன்கள் முதலிய பல அரும் பொருள்கள் இனிய எளிய நடையில் விரித்துரைக்கப் பெற்றுள்ளன. கொங்கு வேள் மாக்கதையின் கதையமைப்பினையும், காப்பியச்சுவை நலங் களையும் விரிவாக அறிந்து கொள்ள விரும்புவார்க்கு இந்நூல் பெருந்துணைபுரியும் நிலையில் அமைந்துள்ளது.

இந்நூலின் அச்சுப்படிகளைத் திருத்தி உதவிய தமிழ்க் கலைத் துறைத் துணைப் பேராசிரியர் திரு ஆ. இராமசாமிப் பிள்ளை M.A., L.T., M.Litt. அவர்களுக்கும், ஆசிரியர் புலவர் திரு அ. ஆனந்த நடராசன் M.A., B.O.L. அவர்களுக்கும், இதனை அழகுற அச்சிட்டு உதவிய திருச்சிராப்பள்ளி கீதா அச்சகத்தாருக்கும் பல்கலைக் கழகச் சார்பில் நமது நன்றியுரியதாகும்.

அண்ணாமலைநகர்,
24—10—67.

கோ. சுப்பிரமணியம்,
தமிழ் ஆராய்ச்சி, கலைத்துறைத் தலைவர்.

பொருளடக்கம்

Lecture I — நூலின் சிறப்பு

1. முன்னுரை ... 1
2. இலக்கிய வளர்ச்சி ... 2
3. பாரத நாட்டுக் கலை வளர்ச்சி ... 4
4. அடிப்படைக் கதை ... 6
5. அடிப்படைக் கதையின் விரிவுகள் ... 11
6. ஆசிரியர் குணாட்டியர் வரலாறு ... 15
7. குணாட்டியரைப்பற்றி மேல் நாட்டு அறிஞர்கள் கூற்று ... 17
8. குணாட்டியரின் வரலாற்று வகைகள் – காஷ்மீர் ... 20
9. குணாட்டியரின் வரலாற்று வகைகள் – நேபாளம் ... 21
10. பைசாச மொழி ... 24
11. கொங்குவேளிர் உதயணன் கதை ஆண்ட விதம் ... 25
12. நூலின் அமைப்பு ... 30
13. படிப்பினைகள் ... 32
14. நூலின் பெருமை ... 39

Lecture II — இலக்கிய நயம்

1. இலக்கிய நயம் ... 41
2. சிறந்த பண்புகள் சில ... 42
3. சிறந்த அழகுகள் சில ... 44
4. விளையாடலில் கண்ட சுவை இன்பப் பெருக்கு ... 48
5. ஊடல் இன்பம் ... 52
6. மெய்ப்பாடுகள் ... 54
7. தண் தமிழ் வளம் ஆளப்பட்டமை ... 63
8. இயற்கை வருணனைகள் ... 67
9. செந்தமிழ் வளம் (நாட்டு வளம்) ... 70
10. கதைத் தலைவர், தலைவியர் முதலியோர் பண்புகள் ... 73
11. கதை நிகழ்ந்த இடங்கள் ... 82

Lecture III — ஆசிரியர் வரலாறு

1. ஆசிரியர் வரலாறும், குறிப்புக்களும் ... 87
2. ஆசிரியர் பிறந்த மண்டலம் ... 89
3. ஆசிரியர் வாழ்ந்த நாடுகள் ... 91
4. ஆசிரியர் தோன்றின ஊர் ... 93
5 வழிபட்ட கோவில் ... 95
6. ஆசிரியர் குலமும், சமயமும் ... 98
7. நூல் ஆசிரியர் தொழில் ... 101
8. நூல் ஆசிரியர் கல்வித்திறம் ... 102
9. சமயப் படிப்பு ... 105
10. சமயக் கொள்கைகள் ... 107
11. வழிவந்த சமணப் புலவர்கள் ... 110
12 கதையில் மன்னர் உறவு ... 113
13 நகரமும், நாட்டுப்புறமும் ... 115
14. விளையாடல் ... 119
15 இயந்திரப் பொறிகள் ... 120
16. போர் புரிதல் ... 123
17. சமய நிலையங்கள் ... 126

Lecture IV

1. அக்கால மக்கள் வாழ்க்கை நிலை, ... 128
2. நூலின் நடைப்போக்கும் சொற்போக்கும் ... 135
3. வேற்றுமைகள் ... 139
4. ஓவியப் பயிற்சியின் சிறப்பு ... 141
5. தேவைப் பொருள்கள் ... 142
6. அணிவகைகள் ... 145
7. மலர் வகைகள் ... 146
8. பொருளணிகள் சில ... 148
9. ஊடல் இன்பம் ... 151
10. அணியியல் வகைகள் ... 152
11. வரலாற்றுப் பகுதிச் சான்றுகள் ... 154
12. பலவகைப் பொருள்கள் ... 156

BOOKS CONSULTED

1. Sanskrit Brihadkatha and the allied books
2. Sanskrit Classical Literature by A.B. Keith
3. Sanskrit Drama by A. B. Keith
4. Mythic Society Journal - Father Tabard's essay
5. Mythic Society Journal - Yougandarya
6. Mysore Gazetteer Vol. II
7. Gangas of Talakad - M. V. K. Rao
8. பெருங்கதை - உ. வே. சாமிநாத ஐயர்
9. கொங்குநாட்டு வரலாறு - C. M. R.
10. கொங்குநாடும் சமணமும் - C. M. R.
11. தமிழும் சமணமும் - T. P. M.
12. கொங்கு தேச ராசாக்கள் - Grated Mss
13. சோழன் பூர்வபட்டயம் - ,,
14. கொங்குநாட்டுப் புலவர்கள் - C. M. R.
15. Age of Imperial Unity - K. M. Munshi Edn.
16. Coimbatore District Gazetteer
17. South Indian Inscriptions

கொங்குவேள்

முன்னுரை :

பெருங்கதை என்னும் சிறந்த நூல் கொங்கு நாட்டில் தோன்றிய நூல். அதனை இயற்றிய கொங்கு வேளிர் கொங்கு நாட்டில் திகழ்ந்த ஒரு பெரும் புலவர் பெருமகனார். அச் சிறந்த நூலும் அதனை இயற்றிய பெருமகனாரும் கொங்கு நாட்டிற்கு வாடாத பெரும் புகழைத் தந்து சென்றிருக்கிறார்கள். சில ஆண்டுகளின் முன்னர் அதாவது சென்ற நூற்றாண்டில் கொங்கு நாட்டில் சிறந்த நூற்களோ, சான்ற புலவர்களோ தோன்றினதில்லை என்று தமிழ்நாடு எண்ணியிருந்தது. பெருங்கதை வெளிவந்த பிறகு அந்த எண்ணம் மறைந்தது. ஏனைய தமிழ் வழங்கும் நாடுகளைப் போலவே கொங்குநாடும் தமிழ் வளர்ச்சிக்கும் தமிழ் இலக்கியத்திற்கும் தக்க பங்கு அளித்திருக்கிறது என்று அறியவேண்டும். அதற்குச் சான்று பெருங்கதையே ஆகும்.

தமிழ் நாட்டுச் சிறந்த இலக்கியங்கள் என்றால் மலைநாட்டில் இளங்கோவடிகள் இயற்றிய சிலப்பதிகாரமும், பாண்டிய நாட்டில் சீத்தலைச் சாத்தனார் இயற்றிய மணிமேகலையும், சோழ நாட்டில் சிந்தாமணியும், தொண்டைநாட்டிலும் நடுநாட்டிலும் சூளாமணி முதலிய காப்பியங்களும் சிறந்த இலக்கியங்களாகப் பாராட்டப்பட்டன. அக்காப்பியங்களுக்குச் சிறிதேனும் குறைவில்லாத சிறப்புடைய பெருங்கதை கொங்கு நாட்டில் பண்டைய நாளிலேயே தோன்றியிருக்கிறது என்றால் கொங்கு நாட்டுப் புலமை அந்நாடுகளுக்குச் சிறிதும் இளைக்கவில்லை என்றால் மிகையாகாது. பிற்கால இலக்கியங்களில் மற்ற நாடுகளில் திருத்தொண்டர்

புராணம், கந்தபுராணம், திருவிளையாடல் புராணம், கம்ப ராமாயணம், வில்லிபாரதம், தேவார திருவாசகம், திவ்வியப் பிரபந்தங்கள் தோன்றினாற் போலக் கொங்கு நாட்டில் தொடர்ச்சியாகச் சிறந்த புராணங்களும், பிரபந்தங்களும் தோன்றாத காரணத்தை முன்னிட்டு, கொங்கு நாட்டில் இலக்கிய மணம் செழிக்கவில்லை என்று பிறர் எண்ணியிருக்கலாம். கொங்கு நாட்டு இலக்கியங்களைத் தொகுத்து ஓர் ஆராய்ச்சி நூல் வெளிவராத காரணம் இவ்வெண்ணத்திற்கு அடிப்படை எனலாம். அண்மையிலே ஆராய்ந்து பார்த்த அளவில் கொங்கு நாட்டில் சங்க காலம் முதல் அண்மைக்காலம் வரையில் குறைந்தபட்சம் 175 புலவர்களும், 250 நூல்களும் தோன்றியிருக்கின்றன. ஆகவே, இவ்வெண்ணம் மாறவேண்டும். அதற்குக் கொங்குவேள் வரலாறு ஒருவாறு உதவிபுரியும் என்று எண்ணலாம்.

இலக்கிய வளர்ச்சி :

நாகரீகம் அடைந்த எந்த நாட்டிலும் இலக்கியம் நல்லதோர் வளர்ச்சி பெற்றிருக்கும். இலக்கிய வளர்ச்சியின் சிறப்பினால்தான் அந்நாட்டின் பண்பாடும் புகழும் விளங்கி நிற்கும். நம் நாட்டு மொழிகளிலும் பிறநாட்டு மொழிகளிலும் இதனை நன்கு காணலாம். பண்டைக் காலங்களில் நாட்டில் வழங்கி வந்த கர்ண பரம்பரைக் கதைகளிலும், நாட்டுப் பாடல்களிலும், பாட்டிமார் கூறும் கதைகளிலும் உள்ள அடிப்படைக் கதைகளில் சில பகுதிகளை எடுத்துக்கொண்டு பின்வரும் புலவர்கள் அவைகளைப பெருக்கியும், கூட்டியும், கழித்தும், வகுத்தும் அழகு பொருந்த எழுதிக் காவியங்கள் ஆக்கியும், நாடகங்கள் ஆக்கியும், கவிதைகள் ஆக்கியும் இலக்கியத்தைச் செம்மைப்படுத்துவார்கள். அவ்வாறு செம்மைப்படுத்துகையில் நாளாவட்டத்தில் பெரிய இலக்கியச் சோலை உண்டாகிவிடும். அதன் வளர்ச்சி வரலாறே இலக்கிய வளர்ச்சி ஆகும்.

மேல்நாட்டு இலக்கிய வளர்ச்சிகளில் இந்த முறையே காண்கிறோம். கிரேக்க நாட்டில் முன்னாளில் வழங்கி வந்த கர்ண பரம்பரைக் கதைகளை வைத்துக் கொண்டு ஹோமர், ஹிரோடிடசு என்ற கவிஞர்கள் பெருங் காவியங்களை எழுத்தோவியங்களாக வகுத்தார் கள். அவர்கள் பாடிவைத்த கதைகளில் பலவற்றை எடுத்துக் கவிதைகளாகவும், நாடகங்களாகவும் பிற் காலத்தில் வந்த சபோக்லிசு, ஈஸ்ச்சிலிசு, யூரிபைடிசு முதலான கவிஞர்கள் உலகமே போற்றும் நாடக இலக் கியங்களாக இயற்றிச் சென்றார்கள். அதேபோல உரோ மானிய இலக்கியமும் பிற்காலத்தில் பெருகியது. ஆங்கில இலக்கியத்தில் ரீஹாலின் ரிஷிட் வரலாறுகள், ஆர்தர் மன்னன் கதைகள் முதலியவைகள் முன்னர் தோன்ற அவற்றில் சிற்சில பகுதிகளை ஷேக்ஸ்பியர், மாரிசு, லெனின் முதலிய பெருங் கவிஞர்கள் நாடகங்களும், கவிதைகளும், காவியங்களும் இயற்றினார்கள். பழைய கதைகளுக்கு அற்புத வடிவமும் மெருகும் கொடுத்து புதிய தோற்றமும் அளித்தார்கள். இந்த முறை எல்லா சிறந்த மொழிகளிலும் உண்டு.

மேலும் ஆங்கில மொழி வளர்ச்சியில் மற்றொரு சிறந்த மாறுதல் உண்டு. அம்மொழியில் முன் இருந்த நாட்டுக் கதைகளிலும் நாட்டுப் பாடல்களிலும் இருந்த சிறந்த பகுதிகளை எடுத்துப் பக்குவப்படுத்தி அழகிய கவிதைகள் ஆக்கினதுமட்டும் அன்றி, கிரேக்க உரோமா னிய, நார்வீஜிய, யூத, விவிலிய வரலாறுகளிலிருந்தும் அள்ளி அள்ளி, சிறந்த கவிதைகள், நாடகங்கள் உண்டாக்கியிருக்கின்றனர். ஷேக்ஸ்பியர் இத்தாலியக் கதைகளிலிருந்து தம் நாடகங்களுக்கு மூலமும், மில்டன், யூத விவிலிய வரலாறுகளிலிருந்து துறக்க நீக்கம் துறக்க மீட்சி என்ற காவியங்களையும், மாரிஸ் பல மொழிகளிலிருந்து 'உலகீய துறக்கம்' என்ற காவியத் தையும் மற்றும் பல கவிஞர்கள் பல மொழிகளிலிருந்து கரண்டி கரண்டியாக இலக்கியப் பாயசத்தை முகந்து

கொண்டு நற்சுவை யளித்தார்கள். இம்முறை பாரத நாட்டிலும் இருக்கக் காண்கிறோம்.

பாரத நாட்டுக் கலை வளர்ச்சி :

பாரத நாட்டு இலக்கிய வரலாற்றில் மூன்று பெரும் அடிப்படை மூலக்காஞ்சியங்கள் இருக்கக் காண்கிறோம். ஒன்று இராமாயணம், இரண்டு மகாபாரதம், மூன்று மாக்கதைகள். இம்மூன்றும் முப்பெரும் இலக்கியத் தொகுதிகளாக இருக்கின்றன என்று இலக்கிய வல்லோர்கள் வகுத்திருக்கிறார்கள். இம்மூன்று தொகுதிகளைச் சுற்றியே மிகப் பெரிய இலக்கியச் சோலைகள் வளர்ந்திருக்கின்றன. முதலில் சொன்ன இராமாயணம் திரேதாயுகத்தில் அயோத்தியாபுரியில் ஆண்ட சூரிய குலத்து வமிசத்து மன்னர்களின் வரலாற்றைக் குறித்தது. முதன் முதல் அந்த வரலாற்றை வால்மீகி முனிவர் ஒரு பெருங் காவியமாக வடமொழியில் இயற்றினார். அவ்வமிசத்து மன்னர்கள் பரம்பரையைக் குறித்ததாலும் பெரும்பான்மையாக இராமன் இலங்கை மன்னன் இராவணனை வதைத்து அவன் பற்றிச் சென்ற சீதையை மீட்டிவந்த சரிதத்தைக் கூறுவது. இதனைச் சுற்றி வளர்ந்த சரிதம் 24000 அரிய சுலோகங்களைக் கொண்ட பெருங்காப்பியம் ஆகும். பின்னால் தோன்றிய பாரத நாட்டுப் பெரும் புலவர்கள் இந்நூலிலிருந்து பல அரிய பகுதிகளை எடுத்துக்கொண்டு கவிதைகள், காவியங்கள், நாடகங்கள் எழுதியிருக்கிறார்கள். பெருங் கவிகளான காளிதாசர், தண்டி, பாரவி, முதலிய வடமொழிப் புலவர்களேயன்றி தமிழ், தெலுங்கு, மலையாளம், கன்னடம் முதலிய தென்னாட்டு மொழிகளிலும் இந்தி, மராட்டி, குஜராட்டி, வங்காளி முதலிய வடநாட்டு மொழிகளிலும் பல கவிஞர்கள் அகப்பை அகப்பைகளாக முகந்து கவிதைகளை எழுதியிருக்கிறார்கள். அவர்கள் எழுதிய காவியங்களில் இந்தியில் இராமமானசமும், தமிழில் கம்ப இராமாயணமும் சிறந்தவைகள். இந்நூல்களில் கதை மூலம் மட்டும் எடுத்துக்கொண்டார்களேயன்றி கதைப்

போக்கு, இலக்கிய இன்பம், பாத்திரங்களின் பண்புகள், முதலியன முதல் நூல்கள் என்று சொல்லும்படியாக ஆக்கப்பட்டிருக்கின்றன. மேலும் உத்தரராம சரிதம் குசலவ நாடகம், சுக்ரீவ சக்யம் முதலிய பகுதிகள் தனி நாடகங்களாக மிளிர்கின்றன. இந்த இலக்கியங்கள் ஒரு பெருந் தொகுதியாக ஏற்பட்டிருக்கின்றன.

இரண்டாவதான மகா பாரதம் துவாபர யுகத்தில் அஸ்திணுபுரியில் ஆண்ட சந்திரகுலத்து அரசர்களின் வரலாற்றைக் குறித்தது. இதனை ஒரு நூறு பிரம் சுலோகங்களாலே வியாசர் இயற்றினர். இக்காவியத்தில் கண்ட கதைகள் கணக்கற்றவை. இடையிடையில் மிகப் பெருமை கொண்ட பகுதிகள் இருக்கின்றன. இவ் வரலாறுகளில் கண்ட பகுதிகளைப் பின் வந்த பெரும் புலவர்கள் கணக்கற்ற நூல்களாக வகுத்திருக்கின்றனர். ஒவ்வொரு பாத்திரத்தைப்பற்றியும் ஒவ்வொரு தனி நூலே ஏற்பட்டிருக்கின்றது. அதில் ஒரு பெரும் பகுதி கீதை யென்ற அரிய தத்துவ நூல். அது எல்லா மொழிகளிலும் பேருரைகளோடு விரிக்கப்பட்டிருக்கிறது. தமிழில் பெருந்தேவனர், வில்லிப்புத்தூரார், நல்லாப் பிள்ளை முதலியோர் அரிய நூல்களை இயற்றியுள்ளார்கள். கணக்கற்ற நாடகங்கள் இசை நூல்கள் · யக்ஷகானங்கள் பிரபந்தங்கள் வளர்ந்திருக்கின்றன. இந்தத் தொகுதி மிக விரிவாக பாரதநாட்டில் வளர்ந்து கொண்டிருக்கிறது.

மூன்ருவது தொகுதி பெருங்கதைத் தொகுதி. இது ஒரு அற்புதமான தொகுதி. மற்ற இரண்டும் இதிகாசத்தின் பாற்பட்டு, சமய நூல்களாக எடுக்கப்பட்டுள்ளன. ஆனல் கதைத் தொகுதியோ மேல்நாட்டு இலக்கியங்களைப் போல சமயச் சார்பு அற்றது. கதை இன்பத்திற்காக இலக்கியச் சுவை வளர்ப்பதற்காக ஏற்பட்டது. இதனை மேல்நாட்டுப் பெரும் அறிஞர்களும் மொழிவல்லார்களும் தார்க்கிகர்களும் (திறனய்வோர்) ஏற்றுக் கொண்டு பெருமையுடன் போற்றியுள்ளார்கள். கீழ்க்

கலை நிபுணர்களான பெரிடல் கீத் (Beridel Keelt), பாதிரி டேபார்ட் (Father Tabard), பேராசிரியர் லெவி (Levi) முதலிய கணக்கற்ற அறிஞர்கள் இப்பாகுபாட்டை வகுத்தும் போற்றியும் ஆராய்ந்தும் கட்டுரைகள் எழுதியும் வெளியிட்டிருக்கிறார்கள். இத் தொகுதியைப் பற்றித்தான் இனி விரிவாக இங்கே எடுத்து ஆளுவோம்.

அடிப்படைக் கதை:

இந்தக் கதை கலியுகத்தில் தோன்றியது. புத்தர் இமயமலைச்சாரலில் உலும்பினி வனத்தில் அவதரித்து, தனக்கு உரிமையான அரசுபீடத்தைத் துறந்து பெருந் துறவியாகி ஞானம் பெற்று உலக மக்களை ஈடேற்ற சமய போதனை செய்து புத்த சமயத்திற்கு ஆசிரியரானார். அவர் காலத்தில் கௌசாம்பி என்ற நகரத்தில் உதய ணன் என்ற ஒரு புகழ் பெற்ற அரசன் ஆண்டனன். அவன் மகத நாட்டு அஜாத சத்துரு உஜ்ஜியினி நகரத்து பிரத்யோதனன் என்ற அரசர்களின் சமகாலத் தவன். உதயணன் வத்சநாட்டு அதிபதியானதினால் வத்சராஜன் என்ற பெயரால் விளங்கினான். அவனைப் பற்றி வடமொழியும் பாலிமொழியும் புகழ்ந்து பேசுகின் றன. புத்த ஜைன நூல்களில் பாராட்டப்படுகின்றான். அவன் பல்கலைகளிலும் சிறந்தவனாக இருந்து மிகப் புகழோடு ஆண்டபடியால் அவனைப்பற்றிப் பல புலவர்கள் பலவாறு எழுதத் தொடங்கினர். அவ்வாறு விரிந்தது அவனது அடிப்படைக் கதை.

மேற் சொன்ன உதயணனுக்கு நரவாண தத்தன் என்ற அரச குமாரன் இருந்தான். அவன் வித்தியாதர சக்கரவர்த்தியாக ஆண்டான். இவ்விருவர்களுடைய வரலாறுகளோடு வேறு சில கதைகளையும் சேர்த்து 'பிரகத்கதா' அல்லது 'பெருங்கதை' என்ற தலைப்பில் முதலில் குணாட்டியர் என்ற முனிவர் பைசாச மொழியில் இயற்றினாராம். அந்நூல் தற்போது கிடைக்கவில்லை. அந்த பைசாச மொழி நூலை வடமொழியில் ஒரு காவிய

மாக மொழிபெயர்த்த கவிஞர் தலைக்காட்டில் கங்க வமிசத்தில் தோன்றிய துர்வநீதன் என்ற கங்கை வாழ் அரசன். அவன் ஜைன சமயத்தினன். பல ஜைன கோட்பாடுகளை அதில் புகுத்தியிருந்திருக்கலாம். அந் நூலை விஜயமங்கலத்துப் பெருங் கவிஞர் கொங்கு வேளிர் பெருங்கதை அல்லது மாக்கதை என்ற தலைப்பில் தமிழில் ஒரு காப்பியமாக எழுதினார். அது தான் தமிழில் உள்ள பெருங்கதை. அதில் கண்ட கதையை இனிச் சுருக்கமாகக் கூறுவாம்.

வடதிசையில் வத்சவ நாட்டில் யமுனைக்கரையில் கௌசாம்பி என்ற தலைநகரில் குருகுலத்துச் சதாநிகன் என்ற அரசன் ஆண்டு வந்தான். சேதிநாட்டில் வைசாலி நகரில் ஏயர்குலத்தில் சேடகன் என்ற அரசனுக்கு மிருகாவதி என்ற ஒரு புதல்வி இருந்தாள். சதாநிகன் மிருகாவதியை மணஞ் செய்து கொண்டு இருவரும் இல்லறத்தை இனிது நடத்தி வந்தார்கள்.

சேடகன் உலக வாழ்க்கையின் நிலையாமையைக் கண்டு அரசியலை வெறுத்துத் தன் மூத்த மக்களிடம் அரசாட்சியை ஏற்றுக்கொள்ளும்படி வேண்ட அவர்கள் ஒவ்வாது போக, இளைய மகன் விக்கிரனிடம் ஒப்புவித்து விபுலமலைச் சாரலில் சீதர முனிவரிடம் உபதேசம் பெற்றுத் தவம் செய்து வந்தான்.

மிருகாபதி நாளாவட்டத்தில் கருவுற்று அரண்மனை மாடத்தில் நிலா முற்றத்தில் ஒரு மஞ்சத்தில் சிவந்த பட்டாடை உடுத்திக்கொண்டு தூங்கினாள். விண்ணில் பறந்து சென்ற சிம்புள என்ற சரபப் பறவை அவளைத் தசைத் தொகுதி என்று எண்ணி மஞ்சத்தோடு தூக்கிச் சென்று விபுலமலைச் சாரலில் சேடக முனிவர் சாலைக் கருகில் வைத்துத் தின்ன எண்ணிற்று.

அப்போது மிருகாவதி விழித்துக் கொள்ள அப் பறவை 'இது உயிருள்ளது' என்று கண்டு பறந்து

போயிற்று. மிருகாவதி கருப்ப வேதனையுற்று விடியலின் போது ஒரு ஆண் மகவைப் பெற்றாள். தன் அவல நிலைமையைக் கண்டு புலம்பின தாயின் குரலைக் கேட்டு அவ்வழி சென்ற சேடகன் அங்குச் சென்று பார்க்கத் தன் மகளென்று அறிந்து அவளையும் குழந்தையையும் அழைத்துக்கொண்டு தன் பள்ளியில் இருக்கச் செய்து ஆறுதல் தந்தான். உதயத்தின்போது பிறந்ததினால் உதயணன் என்று பெயர் இட்டனர்.

அங்குத் தங்கி தவம் புரிந்து வந்த பிரமசுந்தர முனிவரும் மனைவி பரம சுந்தரியும் குழந்தையைப் பாதுகாத்தனர். இம் முனிவருக்கு யூகி என்ற மகன் தோன்றினான். உதயணனுக்கும் யூகிக்கும் நட்பு ஏற்பட்டு முனிவர்களிடம் சகல கலைகளும் கற்று வந்தனர். முனிவர்கள் ஆசி கூற இருவரும் எல்லாக் கலைகளிலும் தேர்ந்தனர். பிரமசுந்தர முனிவர் உதயணனுக்கு யானையை அடக்கும் மந்திரம் உபதேசித்தும் விலங்குகளை அடக்கும் இசைவல்ல கோடக யாழை அளித்தும் உதவினார்.

ஒரு நாள் தன் யாழிசையால் வயப்பட்ட ஒரு தெய்வ யானை 'யான் உண்ணும் முன் நீ உண்பாய் ஆயின் உன்னை விட்டு நீங்குவேன்' என்று சொல்ல அதற்கு உடன்பட்ட உதயணன் அந்த யானையால் பல உதவிகள் பெற்றான். பிறகு தன் மாமன் விக்கிரமனுடைய அரசுரிமையை முதலிலும் தன் தந்தையின் அரசுரிமையைப் பின்னரும் பெற்று ஆட்சி புரிந்து வந்தான். ஒரு நாள் மறந்து தெய்வ யானை உண்ணும் முன் தான் உண்டமையால் அது மறைந்து போயிற்று. அதனைத் தேடிக் கொண்டு யாழும் கையுமாகக் காட்டில் திரிந்தான். திரை கொடுக்கவில்லை என்ற காரணத்தைக் கொண்டு உச்சையினி அரசன் பிரச்சோதனன் அவன் நாட்டின் மீது யந்திர யானையை அனுப்பினான். அதனைத் தன் யானை என்று எண்ணி உதயணன் அதனருகில் சென்று யாழ் வாசிக்க உள்ளிருந்த வீரர்கள் வெளிப்போந்து போர் செய்தார்கள். சாலங்காயனன் என்ற அமைச்சன் உதய

ணனைப் பிடித்து உச்சையினிச் சிறையில் அடைத்தான். அதைக்கேட்ட யூகி வஞ்சனை செய்து பிடித்த அரசனின் மகளைத் தன் நண்பனுக்கு மணம் செய்து வைப்பேன் என்று சபதம் செய்து தான் இறந்து விட்டதாகப் பொய் வதந்தி கிளப்பி விட்டு உச்சையினியில் நளகிரி என்ற மத யானையை அவிழ்த்து விட்டான். அது கண்டு பிரச்சோதனன் உதயணனைச் சிறை விடுத்து யானையை அடக்கச் செய்து தன் மகளுக்குக் கலைகளை அறிவிக்கும் படியும் மகளுக்கு யாழ் வித்தை கற்பிக்கவும் நியமித்தான். அதற்காக அரசனால் நன்மதிப்புப் பெற்றான்.

பிறகு அந்நகரில் நடந்த நீர் விழாவில் வயந்தன் என்ற தோழனால் யூகியின் கருத்தை அறிந்து அரசன் மகள் வாசவதத்தையைத் தோழி காஞ்சனையுடன் பத்திராபதி என்ற பெண் யானையின் மீது ஏற்றிக்கொண்டு பிரச்சோதனன் நாட்டைக் கடந்து சேனையுடன் அங்கே வந்த இடபகன் என்ற தோழன் ஆதரிக்க தன் நாட்டு செயந்தி நகரம் அடைந்தான்.

பிறகு உதயணன் வாசவதத்தையை மணந்து காம பரவசனாகி இடைவிடாமல் அவளுடனே தங்கி இருக்க, யூகி உச்சயினில் தான் செய்ய வேண்டியதைச் செய்து முடித்து விட்டுச் சாங்கியத்தாய் என்ற தவமுது மகளுடன் யந்திர வண்டி ஒன்றை ஊர்ந்து விரைந்து போய் உதயணன் நிலையை யறிந்து அவனை வாசவதத்தையினின்றும் சிறிது காலம் பிரித்து வைக்க எண்ணித் தோழர்களை நோக்கி இன்ன காரியங்களை இன்னவிதம் செய்ய வேண்டும் என்று சொல்லி விட்டுத் தான் இறந்ததாகப் பொய் வதந்தி கற்பித்து விட்டான்.

அச்செய்தியைக் கேட்ட உதயணன் வருந்தி நிற்க தோழர்களால் அவனைத் தேற்றி வாசவதத்தையை அழைத்துச்சென்று இலாவாண நகரத்தின் பக்கம் சோலையில் உண்டாடுவித்து அரண்மனையில் இருக்கச் செய்தான்.

ஒரு நாள் உதயணன் வேட்டையாடச் சென்றபோது சாங்கியத்தாய் வாசவதத்தையைச் சுரங்க வழியாய்ச் அழைத்துச் சென்று வேற்றுவடிவத்தில் வந்த யுகியுடன் சண்பை நகர் அடைந்து மறைந்திருந்தாள். மற்ற தோழனைக் கொண்டு அரண்மனையை எரித்துவிடும்படி செய்தான். வேட்டையாடி மீண்ட உதயணன் வாசவதத்தை இறந்தாள் என்று சோகிக்க, 'தேவியும் யூகியும் இறந்தபின் உயிர்வாழேன்' என்று கூறினான்.

'இறந்தவர்களைப் பிழைப்பிக்கும் பெரியோர் ஒருவர் மகத நாட்டு இராச கிரியில் உள்ளார் என்று கேட்டுத் தோழருடன் அந்நகர் சென்று ஒரு சோலையில் மறைந்திருந்தான். அப்போது அந்நகரில் நடந்த ஒரு வயந்த விழாவில் காமக்கடவுளை வழிபட வந்திருந்த அரசன் மகள் பதுமாபதி என்பவளைக் கண்டு மயங்கி காதல் கொண்டு கன்னிமாடத்தே சில நாள் எவருமறியாமல் தங்கி இருந்தான்.

பிறகு அந்நகர அரசனோடு போர் புரிய வந்த பகைவர்களை எதிர்த்து உதயணன் சென்று அரசனுடைய மதிப்பைப் பெற்று பதுமாபதியை மணந்து கொண்டான்.

பிறகு தன்சேனைத் தலைவர் தம்பிமார்கள் முதலியவர்களோடு படையெடுத்துத் தன் தலைநகரை மீட்டு அங்கே அரசு புரிந்தான். இதை அறிந்த யூகி, வாசவதத்தையுடன் கௌசாம்பி வந்து சந்திக்க, உதயணனும் வாசவதத்தை பதுமாபதி இவர்களோடு இல்லறம் நடத்தி அரசாண்டு வந்தான்.

தனக்குப் பேருதவிபுரிந்த உருமண்ணுவா, யூகி என்ற அமைச்சர்களுக்குப் பெரும் பொருள் தந்து பாராட்டிப் பிரச்சோதனன் விடுத்த பொருளை அங்கீகரித்துத் தானும் உருமண்ணுவா மூலம் பொருள்களை அனுப்பினான்.

ஒருநாள் வாசவதத்தை, பதுமாபதி ஆடவைத்த மகளிர் பந்தாட்டத்தில் மேம்பட ஆடிய மானனீகை என்ற கன்னியையும் இராசமுனிவர் மகள் விரிசிகை என்பவளையும் மணந்துகொண்டு வாழ்ந்தான்.

பின்னர் கருவுற்ற வாசவதத்தையின் விருப்பப்படி புது விமானம் செய்து அதில் ஏற்றிக்கொண்டு பொதியில் முதல் இமயம் வரை நாடுகளைக் காட்டினன். வாசவ தத்தையும் நரவாண தத்தன் என்ற புதல்வனைப் பெற்றாள். அவ்வரசிளகுமரன் யூகியின் மக்கள் நால்வர்களோடு கல்வி கேள்விகளில் சிறந்து விளங்கினன். அவன் மந்திர வித்தையில் சிறந்தோனாகி மதன மஞ்சிகையென்பவளை மணந்து கொண்டான். பின்னர் கௌசாம்பியில் நிகழ்ந்த விழாவைக் காணவந்த ஒரு வித்தியாதரன், மானசவேகன் என்பவன் மதன மஞ்சிகையைக் கவர்ந்து தன் உலகம் சென்றான். அதைக்கேட்ட நரவாணதத்தன் தன் மந்திர வலியால் விண்வழி சென்று அவனுலகை அடைந்து அவ்வுலகத் தாரை வென்று மதனமஞ்சிகையைப் பெற்று வித்தியாதர அரசனாக வாழ்ந்தான். உதயணன் பதுமாபதியின் மகன் கோமுகனுக்கு ஆட்சியை அளித்துவிட்டுத் துறவு பூண்டு தவம் செய்யச் சென்றான். இக்கதையே இந்நூலில் காணும் வரலாறு.

அடிப்படைக் கதையின் விரிவுகள் :

இக்கதையினைப் பெருக்கியோ வகுத்தோ கூட்டியோ கழித்தோ பலநூல்கள் எழுதப்பட்டன என்று முன்பே கூறப்பட்டது. அவைகளைப் பல புலவர்கள் பல மொழி களில் இயற்றிப் போந்தனர். தமிழில் தோன்றியவை மூன்று 1. பெருங்கதை-கொங்குவேளிர் 2 உதயண குமார காவியம் – இது விருத்தப்பா நூல். உஞ்சைக் காண்டம் முதல் துறவுக்காண்டம் வரை ஆறு காண்டங் களை உடையது. நடை திருத்தமானதன்று, சமண சமயச் சார்பானது. 3. வச்சத் தொள்ளாயிரம் 900 வெண்பாக் களால் ஆனது. தொகைமொழி அல்லது சுருக்கமானது.

சில வெண்பாக்களே மேற்கோள்களாகக் கிடைத்திருக்கின்றன.

குணாட்டியார் எழுதிய பைசாச மொழிப்பிரகத்கதை சைவ சம்பந்தமாக இருப்பதாலும் பெருங்கதை சமண காவியமாக இருத்தலாலும் அதன் வழிநூலாக இருத்தலாகாது எனச் சிலர் கூறுகின்றனர். ஆனல் பைசாச மொழியிலிருந்து துர்விநீதன் வடமொழியில் அதனை எழுதினபடியாலும் அவன் ஜைனன் ஆனதினலும் துர்விநீதனுடைய நூல் சமணக் கொள்கைகளைப் புகுத்தி விட்ட நூலாயிருக்கக் கூடுமாதலாலும் அவனுடைய ஆட்சிப்பகுதியில் வாழ்ந்த கொங்கு வேளிர் சமண காவியமாக இயற்றியிருக்கலாம். இந்நூலைப் பேராசிரியர், நச்சினர்க்கினியர் அடியார்க்கு நல்லார், மயிலைநாதர், நேமிநாத உரையாளர், யாப்பருங்கல உரையாளர், வீரசோழிய உரையாளர், தக்கயாகப்பாணி உரையாளர், இலக்கண விளக்க உரையாளர் முதலியோர் எடுத்தாண்டுள்ளதால் இதன் பெருமை அளவிடத்தக்கதன்று. இதிலுள்ள பாக்கள் நிலைமண்டில ஆசிரியப்பாக்கள். இவை தொடர்நிலைச் செய்யுளுக்கு மிக ஏற்றவை. வடமொழியில் பிரகத்கதை சுலோகங்களால் இயற்றப் பெறினும் தமிழில் ஆசிரிப்பாவினல் இயற்றப்பட்டது ஒரு சிறப்பாகும். மணிமேகலை போன்று இந்நூல் செய்யுள் நடை விளங்குகிறது. கிடைத்துள்ள காண்டங்கள் ஐந்தும் அகவல்கள் 100-ம் ஆகும். உஞ்சைக் காண்டத்தில் முற்பகுதியும் நரவாண காண்டத்தில் பிற்பகுதியும் கிடைக்கவில்லை. ஆருவது காண்டமுழுதும் கிடைக்கவில்லை.

இந்நூற்கதை மிகப் புகழ்பெற்றது என்பதற்கு வடமொழியில் காளிதாச மகாகவியாலும், தென்மொழியில் திருமங்கையாழ்வாராலும், கூலவாணிகர் சீத்தலைச் சாத்தனாலும் எடுத்தாளப்பட்டதே சான்ருகும். காளிதாசர் இயற்றிய மேகசந்தேசத்தில் (30சு) "மேகமே உதயணனது சரிதையைக் கூறுவதில் ஆற்றல் வாய்ந்த

முதியோர்களை உடையதான அவந்தி தேசத்தை அடைவாய்" என்றும் மணிமேகலை 15–61–66 வரை அடிகளில்

"கொடிக்கோ சம்பிக் கோமகனுகிய
வடித் தேர்த்தானை வத்தவன் தன்னை
வஞ்சம் செய்துழி வான்றனை விடீஇய
உஞ்சையிற் றேன்றிய யூட அந்தணன்
உடுவுக் கொள்வா உறுநோய் கண்டு
பரிவுறு மாக்களின் "

என்றும் திருமங்கைமன்னன் இயற்பா சிறுமடல் 66–68

"வாரார் வனமுலை வாசவதத்தையென்
றாராலும் சொல்லப் படுவா ளவளுந்தன்
பேராய மெல்லா மொழியப் பெருந்தெருவே
தாரார் தடந்தோள் தனைக் காலன் பின் போருள்
ஊரா நிகழ்த்திடப் பட்டாளே"

என்றும் போற்றப்பட்டுள்ளது.

இவைபோன்ற மேற்கோள்களினுல் உதயணன் கதை வடநாடு தென்னுடு முழுதும் பண்டைக்காலம் முதற்கொண்டே வழங்கிவந்தது என அறியலாம். காவியங்களிலும் உரைநூல்களிலும் மட்டும் அன்றி சமய நூல்களாகுன ஆழ்வார் பாசுரங்களிலும் வழங்கி வந்த பெருமை இக்கதைக்கு உண்டு என அறியலாம்.

இனி வடமொழியில் அடியிற்கண்ட நூல்கள் இந்த உதயணன் கதையைத் தொடர்ந்து எழுதப்பட்டன.

1. பிரகத்கதாசஸ்சிரக சுலோகம்
2. பிரகத் கதா மஞ்சரி
3. பிரகத் கதா சரித்சாலுரம்
4. உதயோத காவியம்
5. ரத்னுவலி
6. சுவப்ன வாசவதத்தா
7. வாசவதத்தா
8. பிரியதர்சிகா
9. பிரதிஞ்சா பெளகந்தராயணம்
10. மிருச்சகடிகா
11. கருப்பூர மஞ்சரி
12. காதம்பரி

பைசாச பாஷை குணுட்டியார் எழுதிய பிரகத்கதை

M. இராகிருஷ்ண கவி அடியிற்கண்டபடி காலம் வரையறை செய்கிறார்.

1. வாசவதத்தா – சுபந்து கவி
பிந்துசாரன் மந்திரி 300 கி. மு.
2. வீணவாசவதத்தா சூத்ரகன் 3 அங்கம்
மிருத்சகடி நூலாசிரியர் 56 கி. மு.
3. பைசாச பிரகத்கதா குணாட்டியர் 78 கி. மு.
4. ஸ்வப்பன வாசவதத்தா
5. பிரதிக்ஞா யௌகந்தராயண } பாசன் (100–150)
6 சம்ஸ்கிருத பிரகத்கதா - துர்விநீதன் 570 கி.பி
7. உன் மாதவாசவதத்தா–சத்திபத்திரன் நாடகம்
8. உதயோதனகதா – வசனம்
9. பிரகத் கதா மஞ்சரி – க்ஷேமேந்திரர் 1030
10. கதாசரித் சாகரம் – சோமதேவபட்டம் 1120
11. பிரகத் கதா மஞ்சரி-வாமனபட்டராயர் 1450

தெலுங்கு

உதயோதயம் – சூரன்ன பத்யம் 1300

ரத்னவளி, பிரியதர்சிகா ஸ்ரீஹர்ஷர் } 450
இவ்விரண்டு நாடகங்களும் வத்சராஜ } 620
சரித்திர நாடகங்களே.

இவைகளிலே பாசகவி எழுதிய நாடகங்கள் அண்மையிலே திருவனந்தபுரத்திலே வெளியிடப் பட்டன. அவைகளைச் சில திறனாய்வோர்கள் ஒத்துக் கொள்வதில்லை. அவைகளில் 13 நாடகங்கள் உள்ளன. பண்டை நூல்களான இராமாயணக் கதைகளில் 2, பாரதத்தில் 6, கதா நூல்களில் 3, மற்றவைகளில் 2 ஆக 13 இயற்றினர். இவ்வாறு எடுத்துப் பயன்படுத்திக் கொண்ட வகையில் முதல் நூலில் இருந்த கதைப் பகுதியோடு வரலாற்றுப் பகுதிகளையும் புகுத்தி அரிய

நாடகமாக இயற்றி இருக்கிறர். ஆகவே அக்காலத்தில் உதயணன் கதைகள் மிகமிகப் போற்றப்பட்டவை எனலாம். பாசகவியின் எண்ணப் போக்கின்படி இராமாயணம், பாரதம், கதை என்ற முப்பகுதிகள் தெரிந்தெடுக்கவல்ல மூலப்பகுதிகள் கொண்டிருக்கின்றன என அறியலாம். ஆகவே பிரகத் கதையும் மற்ற இரண்டு இதிகாசங்களுடன் ஒப்பவைக்கும் திறன் பெற்றதென்று கருதலாம் அல்லவா ?

ஆசிரியர் குணாட்டியர் வரலாறு :

பிரகத்கதை தோன்றிய வரலாறு ஒரு பௌராசிரிய கதைபோல் காணப்படுகிறது. வடமொழியிலும், தமிழிலும் இவ்வாறு புலவர் பெருமக்களுடைய சரிதங்கள் அமைந்திருப்பதை நாம் அறிவோம். அவைகளை முற்றும் தள்ளிவிடாமல் உண்மையானவற்றை நாம் பொறுக்கி எடுத்துக்கொள்வது நமது கடமை.

கயிலையில் பார்வதியும் பரமசிவனும் தனித்து இருக்கையில் பார்வதி தேவி பரமசிவனை எவரும் அறியாத ஒரு அற்புதக் கதையைச் சொல்லும்படி கேட்க பரமசிவன் ஏழு வித்தியாதரர்களுடைய சரிதத்தைக் கூறினன். இதனை மாலியவானும், புட்பதந்தனும் ஒற்றிருந்து கேட்டதை அறிந்து அவர்களை உமா தேவியார் சபிக்க அவர்கள் முறையே குணாட்டியராகவும் வரருசியாகவும் உலகில் பிறந்தார்கள். அதுபோலவே குபேரனுடைய சாபத்தால் சுப்பிரதீகன் என்ற அரக்கன் காணபூதியாக உலகில் பிறந்தான். இம் மூவருள் வரருசி என்பவர் காணபூதிக்கு இக்கதையைச் சொல்ல காணபூதி குணாட்டியருக்குச் சொல்ல அதனைச் குணாட்டியர் ஒரு நூலாக இயற்றினர். அவ்வாறு ஒரு நூல் இயற்றினமையால் இம்மூவரும் சாபம் நீங்கப் பெற்று பழைய பதவியை அடைந்தார்கள். இவ்வாறு பிரகத் கதா சரித்சாகரத்திலுள்ள கதாபீடலம்பகத்தில் கூறப்பட்டுள்ளது.

மேலும் சுப்பிரதிஸ்டா நகரத்தில் ஆட்சி புரிந்த சாதவாகனன் என்ற அரசனிடம் குணாட்டியர் மந்திரியானார். அவர் ஒரு கலா நிபுணர். ஒருநாள் அவ்வரசன் மனைவி அரசனைக் 'கல்வியறிவில்லாதவன்' என்று அவமதித்தாள். அதற்கு அவன் மனம் வருந்தி கல்வியறிவதற்கு எத்தனைக் காலம் பிடிக்கும் என்று குணாட்டியரைக் கேட்க அவர் பன்னிரண்டு ஆண்டுகள் பிடிக்கும் என்றார். அது கேட்ட மற்றொரு மந்திரி சர்வவர்மா என்றவன் ஆறு மாதம் என்றான். அதற்கு குணாட்டியர் 6 மாதத்தில் அவ்வாறு கற்பித்தால் நான் மும்மொழிகளான சம்ஸ்கிருதம், பிராக்ருதம், தேச பாஷை இம்மூன்றையும் அறவே துறப்பேன் என்று சூளுரைத்தார். சர்வவர்மா அவ்வாறு கற்றுக்கொடுக்காவிட்டால் உமது பாதுகையை 12 ஆண்டுகள் சுமப்பேன் என்றார். அரசன் மகிழ்ந்து சர்வவர்மாவிடம் படித்தான். முருகக் கடவுளை வழிபட்டுக் கடவுள் அருளால் 6 மாதங்களில் முழுக் கல்வியையும் கற்பித்தான். தோல்வியுற்ற குணாட்டியர் விந்தியமலை யடைந்து அங்கிருந்து பிசாசங்கள் பேசும் மொழியைக் கற்றுத்தேர்ந்து அங்கு இருந்த காணபூதி என்ற பிசாசிடம் செல்ல தம் பழம் பிறப்பு உணர்ச்சி பெற்றார். பிசாச மொழியில் அவர் கூறிய 7 வித்தியாதரர்களுடைய வரலாறுகளையும் அழகிய காவியமாகப் பாடினார். அதனை ஏழிலக்கக் கிரந்தங்களாக ஏழு வருடங்களில் செய்து முடித்தார். அதற்குப் பிரகத்கதா என்ற பெயர் உண்டாயிற்று. சித்தர் வித்தியாதரர் முதலியோர் அதன் சொல் பொருள் இனிமைகளைக் கேட்டு மகிழ்ந்தனர். பின்பு அந்நூலை உலகில் பரவச்செய்ய வேண்டும் என்ற எண்ணம் குணாட்டியருக்கு உண்டாயிற்று. அதனை அறிந்த மாணாக்கர்கள் குணதேவர் நந்திதேவர் இருவரும் அதனைச் செய்யக்கூடியவன் அரசன் சாதவாகனனே என்றனர். அவனுக்குக் காட்டும்படி அந்நூலை அவர்கள் வயம் அனுப்ப அவன் பெருமிதத்தால் பாராட்டாதிருந்தான். அதனை அறிந்த குணாட்டியர் மானிட சஞ்சார

மற்ற ஓரிடத்தில் தீக்குண்டம் எழுப்பி அந்நூல் ஏடுகளைப் படித்துப் படித்துத் தீயிலிட்டார். அதனைக் கண்டும் கேட்டும் பிசாசங்கள், விலங்குகள், பறவைகள் கண்ணீர் விட்டு அழுதன. அவ்வாறு ஆறு சரிதங்கள் அழிந்தன. ஏழாவது சரிதமான நரவாணதத்தன் சரிதத்தை மாணக்கர்கள் கேட்டுப் பெற்றனர். அரசன் கேட்டு வருந்தி அதனைப்பெற்று மன்னிக்கும்படி வேண்டினன். பிறகு யோகவலிமையால் குணாட்டியார் தம் உடலை நீத்துப் பரலோகம் அடைந்தனர் இதற்கு மாணக்கர்கள் கதா பீடிகை எழுதி உலகில் பரவச்செய்தனர். இது அற்புதக் கதையல்லவா ?

குணாட்டியரைப்பற்றி மேல்நாட்டு அறிஞர்கள் கூற்று :

பேரறிஞர் லாகோடே (Lacote) என்பவர் பிரஹத் கதா ஸ்லோக மஞ்சரி என்ற அரிய நூலை வெளியிட்ட போது ஆராய்ச்சியின்பாலப்பட்ட ஒரு முன்னுரை எழுதியிருந்தார். அதனை அருண்டே டார்பு (Father Tabard) என்ற பெங்களூர் பேராசிரியர் ஆங்கிலத்தில் மொழிபெயர்த்து Mythric சஞ்சிகையில் 14 பகுதிகளில் வெளியிட்டார் (1923—24). அதில் பிரஹத் கதா எழுதிய குணாட்டியரின் வரலாற்றின் உண்மைகள் பல கூறப்பட்டுள்ளன. அவர் கருத்துக்களை ஒரு சிறிது வெளியிடுவோம் “இதுவரை வெளிவந்த நூல்கள் கதாசரித்சாகரம் (சோமதேவர்), 2. பிரகத்கதாமஞ்சரி (க்ஷேவேந்திரன்), 3. பிரகத்கதா ஸ்லோக சங்கிரகம் (புதசுவாமி) என்பன. இவைகளில் பல வேறுபாடுகள் இருக்கின்றன. ஆனால் மூன்றையும் ஒத்திட்டுப் பார்க்கும்போது, குணாட்டியரின் உண்மை வாழ்க்கையும் மேன்மையும் கண்டுகொள்ளமுடியும். பற்பல வேறு கதைகளும் உள்ளே புகுந்திருப்பதைக் காணமுடியும். அவைகளை நீக்கிப் படித்தால்தான் உண்மை தெரிய வரும். சுலோக சங்கிரகத்தில் 28 சர்க்கங்களும் 45 24 சுலோகங்களும் கிடைத்திருக்கின்றன. உதயணன் மகன் நரவாணதத்தனுடைய (வித்யாதர அரசன்)

சரிதம் அதில் கூறப்பட்டுள்ளது. கதாசரித்சாகரத்திலும் பிரகத்கதா மஞ்சரியிலும் அதே கூறப்பட்டிருந்தாலும் பகுதிகளின் அமைப்புகள் வேருக இருக்கின்றன. புத சுவாமி மற்ற இருவர்களைக் காட்டிலும் கதையை வெகு தெளிவாக உரைத்திருக்கிருர். மற்ற நூல்களில் அறிய முடியாத இடங்களைப் புதசுவாமி தெளிவாக்குகிருர் இம் முறையில் அவரது நூல் மிகவும் போற்றத்தக்கது. மக்கள் பழக்க வழக்கங்களை நன்கு அறிந்து வெகு நன்ருகத் தெளிவுபடுத்துகிருர். கௌசாம்பி நகரத்தை நேரில் கண்டவர் என்று கூறமுடியும். அங்கே வழங்குகின்ற கட்டுக்கதைகள் கர்ணபரம்பரைக் கதைகள் மட்டுமேயன்றி நடந்த வரலாறுகளையும் எழுதுகிருர். ஒவ்வொரு ஊருக்கும் உள்ள தூரம், சிறப்பு முதலியவைகளையும் குறிக்கிருர். பாரத கண்டத்தில் வடமலை முதல் தென்குமரி வரையில் படிப்போர்களை இழுத்துச் செல்கிருர். மேலும் சாம்பா, தாமிரலிப்தி, பாண்டிய நாட்டு மதுரை, பொன்னிநாடு இவைகளுக்கும் இழுத்துச் சென்று காசி வரையிலும் வத்ச நாட்டிற்கும் கொண்டு செலுத்துகிருர். நரவாணதத்தன் சரிதம் வெறும் மனோராச்சியக கதையாகச் சொல்லாமல் ஒரு மனிதனுடைய வாழ்க்கை வரலாருகச் சித்தரிக்கின்ருர். குணாட்டியர் ஒருவேளை உயர்வுநவிற்சியில் இயற்றியிருந்தாலும் சுலோகமஞ்சரி அதனைச் சாந்தப்படுத்தி விடுகிறது. மற்ற ஆசிரியர்கள் குணாட்டியருடைய பெருமையை உயர்வு நவிற்சியில் மறைத்துவிட்டாலும் புதசுவாமி அதனைத் தூய்மைப்படுத்திவிடுகிருர் ".

பிரகத் கதை ஏழாம் நூற்ருண்டிலேயே இருந்திருக்கவேண்டும் என்று சுபந்து கவிஞர் எழுதிய வாசவதத்தையின் முகவுரையில் Hall என்ற பேரறிஞர் எழுதியிருக்கிருர். பின்னர் வெளிவந்த பிரகத்கதா மஞ்சரி அதனை ஆதரிக்கிறது. லெவி ((Levi) என்ற அறிஞர் மற்ருெரு சான்றை கம்போடியா கல்வெட்டிலிருந்து எடுத்துரைக்கிருர். அது யசோவர்மன் என்ற மன்னனைப் பற்றியது (9. நூ)

"பாரத: ஸ்திர கல்யர்ஞோ குணாட்யா: ப்ராக்கிருதப்பிரியா:
அளீதிர் யயோ விசாலாக்ஷஸ் சூரோ நியாக்ருதபீமகா".

உதவிபுரிய இச்சிப்பவனும் எப்போதும் மகிழ்ச்சி உடையவனும் பிராக்கிருத்தத்தை விரும்பாத குணாட்டியர் நீதி நெறிக்கு அயலோன் பெரிய கண்களை உடையவன் பீமனை வென்ற சூரன். (LVIII-C 15)

மற்றொரு சான்று—

'குவான் விதாஸ் திங்ட்டாது தூணிதோபி
ஸ்தாணுர்ப்பிதோ யேன புனர் குணாட்யா:
கதோமை அலண் சாருவிபூழஷணாய
ஹரப்பிரயுக்தா கிம் உதாம்ருதான் சூ'

"நல்லோனைத்திட்டினாலும் திட்டலாம் ஏனெனில் அவன் நல்லவனை குணாட்டியரைத் தக்க இடத்தில் திருப்பி அமைத்தார்கள். சிவனோடு தொடர்புடைய நஞ்சும் அவனுக்கு அணியாகிறது. திங்களைப் பற்றி என்ன சொல்லமுடியும்" (LIX-26)

இனி மூன்றாவது சான்று.

"யார்யா கீர்த்தேர் குணாட்டயாயாத்யுல்லாங்கணாயாத் இவா
பதிதாபூஷமுத்ராத்களை க்ஷமாகம் பீர்யாதைர் யதிக்"
(LVIII C. 9)

இச்சான்றுகள் குணாட்டியர் ஒருவர் இருந்தார் என்று நிரூபிக்கின்றன.

மேலும் மேல் நாட்டறிஞர் இச்சான்றுகளையும் மற்ற சான்றுகளையும் முறையே எடுத்துத் தம் கொள்கைகளை நிரூபிக்கிறார்கள். அவைகளை வெளிச் சான்றுகள் உட் சான்றுகள் என்ற இரண்டு முறைகளிலும் திறண் ஆய்வு செய்கிறார்கள். அவைகளை இங்கு விவரமாக எடுத்துக் கூறவேண்டியதில்லை. மீதி சங்கநூலில் படித்தறிந்து கொள்ளலாம்

குணாட்டியரின் வரலாற்று வகைகள் :

குணாட்டியருடைய வரலாறு இரண்டு வகைகளாக அமைந்திருக்கின்றது. ஒன்று காஷ்மீரம், மற்றொன்று நேபாளம். காஷ்மீர வரலாறு கதாசரித்சாகரம், பிரகத் கதாமஞ்சரி, ராஜாகைஜயரதன் எழுதிய ஹரசரித சிந்தாமணி - இவைகளில் காணப்படுகிறது. நேபாள வரலாறோ நேபாள மகாத்மியம் என்ற நூலில் காண்கிறோம். இவைகளில் கதாசரித்சாகரத்தில் காஷ்மீர வரலாறு மற்ற நூல்களைவிட முழுவதுமாகக் கூறப்பட்டுள்ளது. நேபாள மான்மியத்தைவிட நன்றாக முதிர்ச்சியடைந்திருக்கிறது. இந்த வரலாறு எவ்வாறு தோன்றியது எத்தனை தொன்மையானது என்ற கேள்விகளை எழுப்பி அதனை ஆராய்வது நலம்.

1. காஷ்மீர வரலாறு

மேலே கூறிய குணாட்டியருடைய வரலாறே கதா சரிதசாகரத்தில் கூறப்பட்டுள்ளது. அதில் சில வேறுபாடுகள் காணப்படுகின்றன. கயிலாயத்தில் நடந்த பார்வதி பரமசிவனார் சம்வாதத்தில் தக்ஷயாக அழிவும் பார்வதி மறுபிறப்பும் சிவபெருமான் திருமணமும் அதிகமாகக் கூறப்பட்டுள்ளன. மற்ற பகுதிகள் மேலே சொன்னவையே. ஜயரதன் தட்சயாகத்தைப்பற்றி ஒன்றும் சொல்வதில்லை. தேவேந்திரன் பார்வதி கோபத்தைக் கூறாமல் 7 வித்யாதாரர்களின் கதை உடனே கூறினதாகக் காட்டுகிறார். மேலும் அந்த சம்வாதத்தைப் புஷ்பதந்தன் அந்தர்யாமியாக உள்புகுந்து கதைகளைக் கேட்டுவிட்டுத் தன் மனைவி ஜயாவிடம் கூறினான். அதனை ஜயா பார்வதியிடம் சொன்னாள். பார்வதிக்குக் கோபம் வந்தது; புஷ்பதந்தன் மால்யவான் இருவரையும் மானுடராகும்படி சபித்தாள். புஷ்பதந்தன் வரருசியாகவும், மால்யவான் குணாட்டியராகவும் உலகில் பிறந்தார்கள். விந்திய கிரியில் சபிக்கப்பட்ட காணுழதி என்ற பிசாசுக்குக் கதைகள் கூறுகிறார்கள். கதை கேட்டவுடன் சாபம் தீருகிறது.

நிலவுலகில் நடந்த வரலாற்றிலும் வேற்றுமை சிறிது இருக்கிறது. தேவகிருபையால் சுருதார்த்தர் என்ற அந்தணக் கன்னிக்குக் குணாட்டியர் பிறந்தார். அவர் சாதவாகனனுக்கு மந்திரி ஆகிறார். சர்வவர்மனிடம் சபதம் செய்து தோற்று விந்தியகிரியில் பிசாசுக்களிடம் சென்று அன்னார் பாஷையைக் கற்றுக்கொள்கிறார். அங்கே வரருசியிடம் கற்றுக்கொண்ட காணபூதியிடம் 7 வித்தியாதரக் கதைகளை அறிகிறார். அந்தக் கதைகளைப் பிசாசு மொழியில் தன்னுடைய இரத்தத்திலேயே 7 நூறுயிரம் செய்யுள்களில் எழுதுகிறார். அரசன் அக் கதை முரட்டு மொழியில் உள்ளதாகச் சொல்லி ஏற்றுக் கொள்வதில்லை. மிகுந்த துயரங்கொண்டு நூலைத் தீயில் இடுகிறார். துயரப்படுகிற விலங்குகள் மெலிந்தபடியால் அரசனுக்குத்தகுந்த உணவு கிடைப்பதில்லை. அரசன் அறிந்து எரிக்கப்படாத ஏழாவது காண்டத்தை வாங்கிக் கொள்கிறான். அதற்குத் தானே முகவுரை எழுதுகிறான். இந்த வகையில் வேற்றுமை காண்கிறோம்.

2. நேபாள வரலாறு

இனி குணாட்டியருடைய வரலாறு நேபாள மான்மியத்தில் கண்டபடி எடுத்து ஆராய்வோம். நேபாள மான்மியம் 1923-24 Mythic சஞ்சிகையில் 217 ஆம் பக்கத்தில் ஆங்கில லிபியில் அச்சடிக்கப்பட்டுள்ளது. ஜனமேஜய மகாராஜன் யாகம் செய்த காலத்தில் பல ரிஷிகள் கூடியிருந்த கட்டிடத்தில் ஜைமினி ரிஷியின் வேண்டுகோளுக்கிணங்கி மார்க்கண்டேயர் நேபாளப் புனித ஸ்தலங்களின் விவரங்களைக் கூறுகிறார். 27-ம் அத்தியாயத்தில் பிருங்கீசுவரரின் வரலாறு கூறப்பட்டு உள்ளது. அந்நூலில் (27—68+28—63+29—76=3—207) 207 சுலோகங்களில் அடங்கியுள்ளது.

நேபாள வரலாற்றிலும் காஷ்மீர வரலாற்றைப் போல பிரகத் கதையின் சரிதம் பார்வதி பரமசிவம் சம்வாதத்திலே தொடங்குகிறது. அதுவரை சொல்லப்

படாத கதையைச் சொல்லும்படி பார்வதி கேட்கச் சிவனுர் சொல்லுகையில் கதவு சாத்தப்பட்டது. பிருங்கி என்ற கணன் வண்டுவடிவமாக சாவித்துளேயில் புகுந்து கதை முழுதும் கேட்டுவிட்டு மனேவி விஜயாளுக்குச் சொல்லுகிருன். மற்ருெரு நாள் பார்வதி தன் தோழிக்கு சபக்கதை சொல்லுகையில் விஜயாள் தனக்குத் தெரிந்ததே என்கிருள். இதற்குக் காரணபூதன் யார் என்று யோகத்திஞல் அறிந்து பிருங்கியைச் சபிக்கிருர். பிருங்கி மன்னிக்கும்படி கெஞ்ச அவர் அதற்கு ஒரு மாறுதல் செய்து மனிதனுகப் பிறந்து கல்விமான் ஆகி 9 நூருயிரம் செய்யுளால் ஒரு காவியமாக அதனே உயர்ந்த கவிதையாகப் பாடி மனிதன் அணுகாத ஒரிடத்தில் ஒரு லிங்கம் தாபித்தால் அச் சாபம் நீங்கிக் கயிலே யடையலாம் என்று அருளிஞர்.

இந்தத் தொடக்கக் கதையில் காஷ்மீரக் கதைக்கும் நேபாளக் கதைக்கும் உள்ள ஒற்றுமை யாதெனில் சொன்ன கதை ஒரு காதற் கதையாகவும் அது சுவைகள் வெளியிடும் நாடகக் கதையாகவும் இருப்பதேயாம். வேற்றுமை யாதெனில், ஒன்றில் சபிக்கப்பட்டவன் பிருங்கி என்னும் கணம்; அவனும் ஒருவனேயாகும். நேபாளத்தில் தலங்களின் பெருமையையும் புனிதத்தையும் கூறவந்த மான்மியம் தங்கள் நாட்டில் பிருங்கீசுரம் என்ற லிங்கம் இருப்பதையும் அதன் ஆதி வரலாறு பிருங்கி என்ற முனிவன் செயலே ஒட்டியதும் அம் முனிவஞல் அத்தலம் புனிதப்பட்டதையும் கூறுகிறது. ஆகவே இம்முறையில் தொடக்கக் கதை சிறிது மாறுபடுத்தப் பட்டிருக்கலாம் அல்லவா !

இனி கதையைத் தொடரலாம்: பிருங்கி மதுரையில் குணுட்டியர் என்ற பெயருடன் பிறக்கிருர். இளமையில் பெற்ருேர்களே இழந்ததிஞல் உஜ்ஜினிச் செல்லுகிருர். அங்கே கௌட மன்னன் மகள் லீலாவதியின் கணவன் மதனன் ஆளுகிருன். அவ்வரசன் அவைப் புலவன் சர்வவர்மன் குணுட்டியரின் புலமையறிந்து அரசனிடம்

பண்டித வேலையில் அமர்த்துகிறான். அரசன் மனைவியிட பேசுகையில் மோதசம் என்ற சொல்லின் பொருள் அறியாமல் நாணப்படுகிறான். வியாகரணம் கற்பிப்பதற்குக் குணாட்டியர் 12 ஆண்டுகள் கேட்க சருவர்மன் இரண்டு ஆண்டுகளில் முடியும் என்கிறான். பிறகு இருவருள் சபதம் நடக்கிறது. கலாமம் (காதந்திரம்) என்ற வியாகரணத்தின் உதவியினால் சருவவர்மன் வெல்லுகிறான். குணாட்டியர் தோல்வியுற்று வனத்திற்குச் சென்று மௌன விரதம் கொள்கிறார். அப்போது புலஸ்தியர் என்ற ஒரு முனிவர் அவரைச் சந்தித்து பைசாச மொழியில் கதைகளை எழுதச் சொல்லுகிறார். பிறகு நேபாளம் சென்று லிங்க தாபிதம் செய்து முத்தி பெறலாம் என்கிறார். குணாட்டியர் மரத்தின் இலைகளில் பாஷாண மையினால் கதைகளைக் காவியமாக எழுதினார். எழுதும்போது உரக்கப்படிக்கிறார். விலங்குகள் கேட்டுக்கொண்டு உண்ணாமல் இருந்தன. அரசனுக்கு மாமிசம் குறைந்து விடுகிறது. அரசன் விசாரிக்கச் சொல்ல வேடர்களும் கேட்டுக் கொண்டே தங்கிவிடுகிறார்கள். அரசனுக்கு உணவே இல்லாமல் போகிறது. கோபித்துக் கொண்டு அரசனே நேரில் வனத்திற்குச் செல்கிறான் அங்கே குணாட்டியரைக் கண்டு தன் நகருக்கு அழைக்கிறான். குணாட்டியர் அதனை மறுதளித்து அரசே 9 நூறாயிரம் செய்யுள் எழுதினேன். அவைகளை நீ சமஸ்கிருதத்தில் எழுதுவிக்க வேண்டும். நான் நேபாளம் போகிறேன் என்றார். பிறகு குணாட்டியர் நேபாளம் சென்று பசுபதீஸ்வரரைப் பிரதீக்ஷம் செய்து நேபாள முனிவர்களை அழைத்து அவை கூட்டி பிருங்கீசுவரரைத் தாபித்து விமானத்தில் கயிலை செல்லுகிறார். இப்போதும்கூட வண்டு வடிவில் பிருங்கி நேபாளம் வந்து, தான் தாபித்த லிங்கத்தை வழிபடுகிறாராம்.

இவ்வரலாறு தல மான்மியத்திற்குத் தக்கபடி மாற்றப்பட்டது. காணபூதிக்கு மாறாக புலஸ்தியர் வருகிறார். மற்றவை அதிக வேறுபாடில்லை. மேலும் நேபாளத்தில் பிராக்ருதம் இல்லாதபடியால் அரசனை

இந்தக் காவியத்தைச் சமஸ்கிருதம் ஆக்கும்படி குணாட்டியர் கேட்கிறார். குணாட்டியர் மதுரையில் பிறந்து உஜ்ஜினியில் வாழ்கிறார். தென்னாட்டுப் பிரஸ்தான நகரத்தைவிட இந்த நகரம் அவருடைய ஊராக இருக்கலாம். பிரகத்கதையிலும் உஜ்ஜயினியையும் கௌசாம்பியையுமே குணாட்டியர் மிகுதியாகப் பாராட்டுகிறார் அல்லவா? இக் கதை வட இந்தியாவில் மத்தியப் பிரதேசமே எழுதப்பட்ட இடமாதல்வேண்டும்..

பைசாச மொழி :

குணாட்டியர் பிரகத் கதையை எழுதிய பைசாச மொழி எது என்பதைப் பற்றிப் பல பெரிய ஆராய்ச்சியாளர்கள் பல கட்டுரைகளை எழுதியிருக்கிறார்கள். (விரிவாகத் தெரியவேண்டுமாயின் Mythik சஞ்சிகை 1923–24 காண்க) கதைத் தொடக்கத்தில் அது விந்திய மலைகளில் வசித்தவர்கள் பேசின மொழி என்று சொல்லப்பட்டிருக்கிறது. விந்திய மலைகளில் பல காட்டு மலை வாசிகள் வசித்தார்கள். அவர்கள் மொழி திருத்தம் அடையாத மொழி; எவ்வாறு அதில் காவியம் இயற்ற முடியும் என்று ஒரு கேள்வி. அம்மொழி சமஸ்கிருதம் பிராக்ருதம் தேச மொழி இவைகள் அல்லாத மொழியாக இருக்கவேண்டும். அம்மொழி ஆதி வாசிகளுடைய மொழியாக இருக்கவேண்டும். தற்போதும், தொதவர், காடர், இருளர், சவரர், கோண்டர், வில்லவர் இவர்கள் மொழிகள் நாகரிக மொழிகளினின்று வேறுபட்டிருக்கின்றன அல்லவா? அவைகளைப் போல ஒரு மொழியாக இருக்கவேண்டும்.

பல ஆராய்ச்சியாளர் நர மாமிசம் உண்பவர் பிசாசர் என்றும் அப்படிப்பட்டோர் வடமேற்கு மலைகளில் வசிப்பவர்கள் என்றும் கருதுகிறார்கள். ஆனால் நடு இந்தியாவில் விந்தியமலைச் சாரலுக்கு வடமேற்கு மலைகளுக்கு வெகு தொலைவு என்று அறியவேண்டும். சாதாரண பிராக்ருதத்திற்கும் பிசாச மொழிக்கும் வேற்றுமை மிகுதியாக இருந்ததாகையால் அதனை முன் சொன்ன மூன்று

பிரிவுகளுக்குள் அடக்கவில்லை எனலாம். பல வேறு பண்டை மக்கள் மொழிகளில் நடு இந்திய ஆதி வாசிகளின் மொழிதான் இழிவு தோன்ற பைசாச மொழி என்று கூறியிருக்கலாம். அம்மொழியில் இருந்தன வாகச் சில சொற்களைப் பொறுக்கி எடுத்து ஆராய்ச்சி யாளர்கள் குறித்துள்ளார்கள். அவைகளை இங்கே எழுத வேண்டியதில்லை.

மேலும் அப்படிப்பட்ட திருத்தமற்ற மொழியில் ஒரு காவியம் எழுத முடியுமா? கவிதைகள் இயற்ற முடி யுமா? சந்தம் புகுத்த முடியுமா என்றும் கேட்கலாம். தொதவர் இசைபாடுவதும் ஆடுவதும் உண்டு. மற்ற ஆதிவாசிகளும் தங்கள் தங்கள் மொழிகளில் இன்னிசை யும் பாடலும் கர்ண பரம்பரையாகக் கூறுவதுண்டு. எழுத்து வாசனை இல்லாத மொழியாளர்களும் அரிய பாட்டுக்களைப் பாடுவதைக் கேட்டிருக்கிறோம். அது போல விந்தியமலை வாசிகளான பிசாசங்களும் இந்திய இசையில் பாடுவதைக் குணட்டியர் கேட்டு இந்த அரிய கதைகளை இயற்றியுள்ளார் எனக்கொள்ளலாம். ஆகவே பிசாச மொழியைப் பற்றி இனி அதிகமாகக் கூற வேண்டியதில்லை அல்லவா? மேலும் குணட்டியர் பல நாடுகளையும் சுற்றிப் பல பைசாச அல்லது காட்டுமிராண்டிகளின் மொழிகளையும் கற்றறிந்தவராக இருக்கலாம்.

கொங்கு வேளிர் உதயணன் கதை ஆண்ட விதம் :

பைசாச மொழியில் இருந்த கதையை துர்விநீதன் வடமொழியில் எழுதினன் என்பர். அவன் ஆண்ட வட கொங்குக் கவிஞர் பெருமான் கொங்கு வேளிர் அதனைத் தமிழ்ப் படுத்தினர் என்பது கர்ண பரம்பரை. காலப் போக்கின் அமைப்புக்களை நோக்கினல் இந்தச் செய்தி பெரும்பாலும் உண்மையாகவே இருக்கக்கூடும். அல்லது கொங்கு வேளிர் நேராகவே வடநாட்டில் வழங்கிய கதைகளைக் கேட்டுத் தமிழ்க் காவியம் ஆக்கி

யிருக்கலாம். எதுவானாலும் பெருங்கதை தமிழில் ஒரு சிறந்த காவியமாக ஏற்பட்டுவிட்டது.

மேலும் இக் கதை தமிழ்நாட்டில் முன்னமே பரவி யிருந்தது என்பதற்கு மணிமேகலையில் இதனைக் கூறி யிருத்தலே சான்று ஆகும். அதன் ஆசிரியர் சீத்தலைச் சாத்தனார் இக்கதையை அறிந்திருந்தார். ஏனைய தமிழ்ச் சங்கப் புலவர்களும் அறிந்திருப்பார்கள். ஆகவே அக் காலத்தில் சீவகன் கதை, சூளாமணிக் கதை, மணிமேகலைக் கதை முதலியவைகள் தமிழ் நாட்டில் வழங்கி யிருந்த ஆதரவுகளைப் பெருக்கி காப்பியங்களை இயற்றியது போலவே கொங்கு வேளிரும் உதயணன் கதையை நாட்டில் கர்ண பரம்பரையாக வழங்கி வந்ததைக் கோவைப்படுத்திப் பெருக்கிக் காப்பியமாக்கி இருக்கக்கூடும். உதயணன் கதை நடந்ததாகக் கூறப் படும் அஜாத சத்துரு காலத்திற்கும் (5 நூ. கி. மு.) தமிழில் எழுதப்பட்ட காலமாகிய மறுமலர்ச்சிக் காலத் திற்கும் 10 நூற்றாண்டுகளுக்கு மேலேயே இடைக்காலம் இருக்கலாம். இந்தக் கால அளவில் கதைகள் மிகப் பெருகி இருக்கலாம். அவைகளை எல்லாம் தாம் எடுத் துக் கொண்டு ஒரு சிறந்த காவியப் போக்காகக் கொங்கு வேளிர் தம் கல்வித் திறத்தால் நன்கு அமைத்திருப்பார் அல்லவா ?

கொங்கு வேளிர் தமிழில் பெருங்கதையை இயற்றிய காலம் மிகச் சிறந்த காலமாகிய மறுமலர்ச்சிக் காலம். சங்க காலம் கடந்துபோன காலம். அக் காலத்துப் புலமை வாய்ந்த இலக்கியம் மூன்று வகைப் பட்டிருந்தது. பத்துப் பாட்டு, எட்டுத் தொகை, பதி னெண் கீழ்க்கணக்கு என்ற வகையில் தோன்றியவை அகவற்பா, வெண்பா, கலிப்பா, இவைகளில் எழுதப் பெற்ற அகம் புறம் என்ற துறைகளும் நீதி நூல்களுமே யாகும். அகம் புறம் என்றவைகளுக்கு அகவற்பாவும் நீதி நூல்களுக்கு வெண்பாவுமே கருத்தோவியங்கள் இயற்றப்படுவதற்குத் தக்க ஊர்திகளாக அமைந்த

வைகள். வடமொழியில் இருந்த விருத்தங்கள் தமிழில் எடுத்தாளப்படவில்லை. பொருட் செறிவு அக் காலக் கவிதைகளுக்குச் சிறப்புத் தந்ததேயன்றி சொற்செறிவு சிறப்புத் தரவில்லை என்று அறியலாம்.

சங்க காலச் செய்யுட் போக்கையே அதனை அடுத்த மறுமலர்ச்சிக் காலத்தில் கொண்டார்கள். ஆனல் எழுதப்பட்ட நூல்கள் காப்பியங்களாக அமைந்தன. அவைகள் தொடர் நிலைச் செய்யுள்களாக ஆளப்பட்டன. தனிச் செய்யுட்களும் தனிக்கருத்துக்களும் விடப்பட்டன. கதைகளைக் கொண்ட காப்பியங்களாக உருவாக்கப் பட்டன. அந்தப் பிற்காலம்தான் காப்பியக் காலம், சிலப்பதிகாரம், மணிமேகலை, பெருங்கதை முதலிய அகவல் நூல்கள் தோன்றி மக்களை இன்புறுத்த வந்த கதைகள் உட்கொண்டு வெளிவந்த காலம். இந்தக் காலத்தில் விருத்தங்களை ஏற்றுக்கொள்வது கிடையாது. சமயப் பாடல்களும் இராமாயணம், பாரதம் முதலிய இதிகாச நூல்களும் தோன்ருத காலம். அப்போது பெருங்கதை தோன்றியது.

சரித வரலாற்றை எழுதுவதற்கு அகவலே சிறந்தது. அகவல் பாடுவதற்கு எளிதாகவும் படிப்பதற்கு எளிதாகவும் அமையவல்லது ; சொல்லணிகளைக் காட்டிலும் பொருளணிகள் எளிதாக அமைக்க வல்லது. பிற்காலத்தில் வந்த ஆசிரிய விருத்தப், கட்டளைக் கலித்துறை, யமக அந்தாதிகள் முதலியவைகளில் பொருளணிகள் இயற்றுவதும் இயற்றினும் பொருள் விளங்குவதும் கடினம். அரிய கருத்துக்களை ஆணித்திறமாக அறிவிக்கவேண்டுமென்ருல் அகவற்பாவே சிறந்தது. அதனல்தான் மாணவர்களும் புலவர்களும் எல்லா நூல்களைக் காட்டிலும் சிலப்பதிகாரம், மணிமேகலை என்பவைகளையே படித்து இன்புறுகிருர்கள். அந்த வகையில் பெருங்கதை சிறிதேனும் இளைத்ததல்ல. பொருட்செறிவிலும் அணிவகைகளிலும் இன்ப வகைக் கருத்துவமைகளிலும் பெருங்கதை மிகச் சிறந்தது.

சோழர்காலத்திலும் முடிவேந்தர்கள் தம் வெற்றிப் புகழ்களாகிய மெய்க் கீர்த்திகளை அவகலிலேயே எழுதி வைத்தார்கள். இந்த முறையைக் கொங்குவேளிர் பயன் படுத்திக் கொண்டது அவருடைய கல்விப் பெருமைக்கு அடையாளம் ஆகும்.

இந்தக் கருத்தையே ஆங்கில மொழியிலும் காண லாம். தனிக்கருத்தோவியங்களுக்கு நாலடி முதலான பாடல்களை எழுதினார்கள். ஆனால் கதைகளை எழுதுவ தற்குக் கணக்கற்ற அடிகள் கொண்ட நீண்ட பாக்களை எழுதினார்கள். நாலடிப் பாடல்களில் எதுகை மோனை யைப்போல் இயைபுத் தொடை (rhyme) வகுத்தார்கள். நீண்ட செய்யுட்களில் (blank verse) வெறும் யாப்பு என்றும் இயைபு யாப்பு என்றும் இரு வகைகளைக் கொண்டார்கள். வெறும் யாப்பே மிகச் சிறந்தது என்று திறன் ஆய்வாளர் கூறுவர். மில்டன் எழுதிய 'துறக்க நீக்கம்' சேக்ஸ்பியர் எழுதிய நாடகங்கள், டெனிசன் எழுதிய மன்னன் கவிதைகள் (Idylls of the King) வெறும் யாப்பில் அமைந்தன. இவைகளே புலவர்களால் பாராட்டப் படுகின்றன. இயையு யாப்பில் (Rhyme verse) இறுதி எதுகை இருக்கும் கோல்ட்ஸ்மித்து எழுதிய "பாழடைந்த ஊர்" (Deserted village) மாரிசு எழுதிய நிலவுலகத் துறக்கம் (Earthly paradise) இந்த வகையில் சேரும். தமிழ் மொழியில் உள்ள சிலப்பதிகார அகவல் களும், மணிமேகலை அகவல்களும் இந்த இயைபுத் தொடை யாப்பில் ஒருவாறு சேர்க்கலாம். பெருங்கதை ஏகதேசமாக இந்த வகையிலேயே சேரும். இந்த வகை யாப்பு வடமொழியில் இல்லை. படிப்பதற்கு இனிமையாக வும் கருத்தோவியங்கள் நன்கு பொருத்திப் பாடுதற்கும் இந்த யாப்பே சிறந்ததெனக் கூறலாம். இந்தவகையி லும் மற்ற காப்பியங்களைவிடச் சில வேறுபாடுகளை வேளிர் கையாண்டு இருக்கிறார்.

பெருங்கதைப் பாட்டுக்கள் எல்லாம் நிலைமண்டில ஆசிரியப்பாக்கள். சிலப்பதிகாரம் மணிமேகலை போல்

இந்நூலின் ஒவ்வொரு பாட்டும் 'ன' கர ஒற்றில் முடியும். இதனைத் தொல்காப்பியர் இயைபு என்னும் வனப்பு என்பர். சிலப்பதிகாரமும் மணிமேகலையும் பொருள் தொடர்ச்சியாம் கதைத் தொடர்ச்சி மட்டுமே கொண்டன பெருங்கதையோ இதனோடு அந்தாதி எனக் கூறப்பெறும் சொல்த் தொடர்ச்சியும் கொண்டு விளங்குவது. இதனை யாப்பருங்கல விருத்தி எடுத்துக் காட்டும்.

இதனை அகலக்கவி என்று உரையாசிரியர்கள் கூறு கின்றனர். இந்நூலில் வரும் சில சொற்களும் பொருள் களும் வீரசோழிய உரையாசிரியர் காலத்திலேயே விளங்காது போயின. 'அகலக்கவி செய்வானுக்கு அப்படி யல்லாது ஆகாது', என்று அவர் கூறுகிறார். ஒரு வேளை நூல் செய்த காலத்தில் அவை விளங்கி யிருக்கலாம் என்று அமைதி கூறுகின்றார்.

இதனைச் சிறிது விவரிப்போம். இப்பாக்களில் எங்கும் அமைந்துள்ளவை தன்மை நவிற்சி, உவமை, உருவகம் இவை போன்ற பொருளணிகளே. 'ன'கர ஒற்றை இறுதியாகப் பெற்ற ஆசிரியப்பாக்கள் சொற் றொடராகவும் பொருட்டொடராகவும் அமையலாம். இந் நூல் தொடர்நிலைச் செய்யுளின் இலக்கணமாகிய அம்மை முதலிய எட்டு வனப்பினுள் இயைபு என்பதன் பாற்படும். இந்நூலில் சிற்றுறுப்பின் இறுதி அடுத்த சிற்றுறுப்பின் முதலாக வருவதல்லாமல் ஒரு காண்டத்தின் இறுதி மறு காண்டத்தின் முதலாக வரும்.

"ஞகாரை முதலா னகாரை யீற்று
புள்ளி இறுதி யியைபெனப்படுமே"

என்பது தொல்காப்பியம். "னகரப் புள்ளியை இறுதி யாகக் கொண்டு சொல்லும் பொருளும் இயைந்து வந் தன மணிமேகலையும் உதயணன் கதையும்" என்றார் உரையாசிரியர்கள்.

[இதில் சொற்ருெடர் என்பது அந்தாதித் தொடை பொருட்டொடர் - கதையின் தொடர்ச்சி னகர விறுதி என்று கூருமல் என் என்ற அசைநிலை கொண்டது என்பாரும் உளர்].

இந்நூலை எடுத்தாண்ட புலவர்கள் 1. பேராசிரியர், 2. நச்சிஞர்க்கினியர், 3. அடியார்க்கு நல்லார், 4. மயிலைநாதர், 5. நேமிநாத உரையாசிரியர், 6. யாப்பருங்கல விருத்தி உரை ஆசிரியர், 7. வீர சோழிய உரையாசிரியர் 8. தக்கயாகப்பரணி உரையாசிரியர், 9. இலக்கண விளக்க உரையாசிரியர். இவர்களுடைய உரைகளில் தக்க இடங்களில் மேற்கோள்கள் காட்டப்பட்டுள்ளன. ஆகவே பண்டைக் காலத்திலேயே இந்நூல் மிகச் சிறப் புற்ருேங்கி இருந்தது என்க.

நூலின் அமைப்பு :

இந்நூற்கு மற்றைய காப்பியங்களைப் போல் கடவுள் வாழ்த்து, பதிகம் முதலிய உறுப்புக்கள் கிடைக்க வில்லை. கிடைத்தவற்றிலும் சில பகுதிகள் குறைவாக இருக்கின்றன. தற்போது கிடைத்துள்ள காண்டங்கள் ஐந்தே.

1.	உஞ்சைக் காண்டம்	58	சிற்றுறுப்புக்கள்
2.	இலாவாண காண்டம்	20	,,
3.	மகத காண்டம்	27	,,
4.	யுத்த காண்டம்	17	,,
5.	நரவாண காண்டம்	7	,,

ஆக 129. இவைகளில் தற்போது கிடைத்துள்ளவை 100 சிற்றிறுப்புக்கள். இவைகளிலும் சில பகுதிகள் மறைந்தன. கிடைத்த அகவல்களில் அடி எல்லை சிறியவை 35, பெரியவை 360. மற்ற நூலாகிய உதியோதய காவியத்தை ஒத்துப் பார்க்கையில் ஆரு வது காண்டமாக துறவுக் காண்டம் ஒன்று இருந்து மறைந்திருக்கலாம்.

1. உஞ்சைக் காண்டம் – அவந்தி நாட்டு உஞ்சையில் நடந்த சரிதை – கோசாம்பி நகர அரசன் உதயணன் யானையைத் தேடிச் செல்ல உஞ்சையரசன் இயந்திர யானையின் மூலம் அவனைப் பிடித்துச் சிறையிலிட்டு, தன் நகரில் தன் யானை வெறிகொண்டு அழிக்க அதனை உதயணன் மூலம் அடக்கி அவனுக்கு மதிப்புத் தந்து தன்மகள் வாசவதத்தைக்கு யாழ்கற்பிக்க வைத்து நீராடு விழாவில் அவளை அவன் கவர்ந்துகொண்டு தன் நாடு புகும்வரை உள்ள கதை.

2. இலாவண காண்டம் – வத்த நாட்டு இலாவண நகரில் நடந்த சரிதை – உதயணன் வாசவதத்தையை சயந்தி நகரில் திருமணம் செய்துகொண்டு இருக்க, அமைச்சன் யூகி வந்து அவன் இன்பநிலை கண்டு அதிலிருந்து விடுவிக்க எண்ணி தான் இறந்ததாக வெளியிட்டுச் செல்ல, உதயணன் புலம்பி இலாவாண நகருக்குச் சென்று வசித்தலும் பிறகு விரிசிகை என்ற பெண்ணை வதுவை செய்தலும் வாசவதத்தைக்கு ஊடல் வரலும் பிறகு கூடுதலும், யூகி சூழ்ச்சியாலே வாசவதத்தை இறந்தாள் என்ற வதந்தி கற்பித்தலும் கழிபெரும் காமத்தால் விளையும் தீமையை பெரியோர்களால் அறிதலும், யூகி முதலியோர் சண்பை நகரில் வசித்தலும் கூறுவது.

3. மகத காண்டம் – உதயணன் மகத நாட்டில் இருந்தபோது நிகழ்ந்த வரலாறு கூறுவது. இறந்தோரை எழுப்பவல்ல ஒரு முனிவர் மகத நாட்டு இராஜகிரியத்தில் உள்ளார் எனக் கேட்டு உதயணன் அந்நகர் சென்று இருக்க, காமன் விழாவில் அரசன் மகள் பதுமாபதியைக் கண்டு காதலித்து அவள் மூலம் அந்தப்புரத்தில் உதயணன் சிறிது காலம் இருக்க, பகையரசன் அந்நகரின்மீது படையெடுக்கத் அதனைக் கண்டு உதயணன் போருக்கெழுந்து பகை மன்னர்களைத் துறத்திவிட அதனைக் கண்ட அரசன் தருசகன் அவன் வீரத்தை மெச்சி அவனுக்குப் பதுமாபதியை மணஞ்

செய்விக்கத் தன் நகரைப் பிடித்திருந்த பஞ்சாலராயன் மீது படையெடுத்து அவனைக் கொன்று நாடுபிடித்து அதில் ஆட்சி புரியும்வரை சரிதை உள்ளது.

4. வத்தவ காண்டம் - உதயணன் வத்த நாட்டில் கோசாம்பியில் ஆட்சிபுரிந்த செய்தி கூறுவது. அரசு கட்டில் ஏறி தனக்கு உதவிபுரிந்தவர்களுக்குப் பரிசு கொடுத்துவிட்டு ஆட்சி புரிகையில் வாசவதத்தையும் பதுமாவதியும் ஒன்று சேர்ந்து வாழ்கையில் பந்தடி விழா தேவிமார்கள் நடத்த அதில் மானசீகை ஆட்டம் வெகு நன்றாக இருக்க அவளைக் காதலித்த உதயணன் நெற்றியில் எழுதிய காதல் கடிதத்தால் உணர்வித்து திருமணம் செய்துகொள்ளும் விரிஇசை திருமணமும் நிறைவேற நான்கு மனைவியருடன் இல்லற இன்பம் நடத்தும் சரிதை கூறுவது.

5. நரவாண காண்டம் - உதயணனுக்கு வாசவதத்தையிடம் நரவாணன் பிறத்தலும் அவன் பருவம் வந்த பிறகு மதனமஞ்சிகையை மணத்தலும். வித்தியாதரன் ஒருவன் கோசாம்பியில் நடந்த விழாவிற்கு வந்து மதனமஞ்சிகையை எடுத்தேகுதலும் நரவாணன் துயரப்படுதலும் இதில் கூறப்படுகின்றன. பிறகு நரவாணன் வித்தியாதர உலகிற்குச் சென்று அவளை மீட்டிக் கொண்டு அங்கே சக்கிரவர்த்தி ஆகிறான்.

6. துறவு காண்டம் - இக்காண்டம் இந்நூலில் இல்லை. உதயண காவ்யத்தில் உள்ளது. உதயணன் அமைச்சர் தேவிமார்கள் எல்லோரும் உலக வாழ்வில் வெறுப்பு அடைந்து அரசை தன்மகன் கோமுகனுக்குக் கொடுத்துவிட்டு தருமசுருதி முனிவரைச் சரணடைந்து தருமோபதேசம் கேட்டு தவம் செய்து சித்த சமாதியடையும் வரலாறு கூறுவது.

படிப்பினைகள் :

கொங்குவேளிர் இந்நூலில் பல பல நீதி நெறிகளை கதையின் இடைஇடையே எடுத்தாண்டிருக்கிறார்.

அவைகள் வரலாற்றுப் பகுதிகளோடு ஒட்டியுள்ளன வாதலால் படிப்போர் மனத்திற்கு நன்கு புலப்படும். மக்கள் தம் வாழ்க்கை நெறிகளுக்கு மிகவும் நன்ருக ஏற்றுக் கொள்ளமுடியும். இந்நெறிகள் எல்லா நாடு களுக்கும் மக்களுக்கும் பொதுவாக இருப்பனவும் கதை நடந்த வடநாட்டில் சிறப்பாக வழங்குவனவும் தென்ளுட் டில் தனியான பண்பில் விளங்குவனவும் ஆக இருக் கின்றன. ஆகவே அப்பாகுபாடுகள் அமைக்கப் பெற்றி ருக்கும் முறைகள் புலவர் பெருமகனுரின் உயர்ந்த அறி வும் சிறந்த ஒழுக்கமும் ஆழ்ந்த படிப்பும் கூர்ந்த ஆய் வும் ஒருங்கே சேரத் தெரிவிக்கின்றன. அவைகளில் சிலவற்றை விவரித்து எழுதுவோம்.

1. தெய்வவழிபாடு சிறந்தது – திருமணம் ஆன வுடனே உதயணனும் வாசவதத்தையும் அருகன் கோயிலுக்குச் சென்று வழிபாடு செய்கிருர்கள். இறை வனை இறைஞ்சித் தம் உயிருக்கு ஈடேற்றம் அருளும்படித் துதிக்கிருர்கள்.

2. பெரியோர் வணக்கம் பேணற்பாலது – வாச வதத்தை இறந்தாள் என்ற செய்தி கேட்ட உதயணன் மிகவும் துயரம் அடைந்த பொழுது, கழிபெரும் காமத்தால் விளையும் தீமையைப் பற்றிப் பெரியோர்கள் கூற அவர்களை வணங்கி ஆறுதல் அடைந்ததும் இறுதியில் தருமசுருதி என்ற பெரியோர் மூலம் தருமோபதேசம் கேட்டு வணக்கம் செலுத்தியதும் இதனை வற்புறுத்தும்.

3. ஊழ்வினை உறுத்துவந்தூட்டும் - மிருகாவதி அரசனுடைய தேவியாக இருந்தும் அரண்மனையில் உப்பரிகையில் சிவப்புத்துகிலை உடுத்துப் படுத்திருக்கை யில் சிம்புட் பறவை தசைத் தொகுதி என எண்ணிக் கால் களால் எடுத்துக்கொண்டு விபுலகிரியில் வைத்து உண்ணத் தொடங்க, வீரிட்டெழுந்த அரசியைக் கண்டு சிம்புள் பறந்துபோக பிரசவவேதனைப் பட்டு யாதொரு

திக்குமின்றி உதயணனைப் பெற்றாள். தெய்வாதீனமாக அந்த இடம் தன் தகப்பன் தபோவனமாக இருந்தது. இவையெல்லாம் ஊழ்வினை என்க.

4. ஒருவன் சிறந்த கல்விமானாக இருந்தால் அவன் பகைவராலும் நன்கு மதிக்கப் பெறுவான் - உதயணன் கலைகளிலும் யாழ்கலையிலும் மிகச் சிறந்தவன். உஞ்சையில் சிறையில் அடைக்கப்பட்டபோது அவன் கல்வித்திறத்தை மெச்சி பிரச்சோதனன் தன் மக்களுக்குக் கல்வி கற்பிக்க வைத்தான். அச்செயலை நன்கு செய்ததால் மதிக்கப்பெற்றான்.

5. அந்தக் காலத்தும் கல்வியைக் கைவிடலாகாது- உதயணனும் அவன் தோழன் யூகியும் இளமையிலேயே எல்லாக்கலைகளையும் கற்று அறிந்ததினால் பின்னால் வாழ்க்கையில் வந்த துன்பங்கள் எல்லாம் மறைய வாழ்வில் சிறந்து விளங்கினார்கள்.

6. ஒரு காரியத்தை நிறைவேற்றக் கருதினோன் அதனை முடித்தற்குரிய அன்புடைத் துணைவர்களையும் தக்க கருவிகளையும் பெறுதற்கு முயலவேண்டும். யூகி உதயணனுக்கு வாசவதத்தையைத் திருமணம் செய்விக்க வேண்டும் என்ற சபதம் செய்த பிறகு அதை நிறைவேற்ற வேண்டி அவனுடைய தோழர்கள் மூலம் அதை நிறைவேற்றினான். அதற்கு தான் இறந்ததாகப் பாசாங்கும் செய்தான்.

7. அன்புள்ள நல்ல துணைவர்களைப் பெற்றால் சிறிதும் கவலையின்றி வாழலாம்—

உதயணன் நான்கு அமைச்சர்களைப் பெற்றதனால் எல்லா ஆபத்துக்களிலிருந்தும் தப்பினதன்றி நான்கு அரசிகளையும் மணந்து நன்கு வாழ முடிந்தது. அவன் கவலைகள் எல்லாம் மறைந்தன.

8 எந்தக் காரியத்தையும் மந்தணமாகவே நிறைவேற்ற வேண்டும் மந்தணம் என்றால் இரகசியம். யூகி

செய்த காரியங்கள் எல்லாம் இரகசியமாகவே செய்யப் பட்டன. தான் இறந்ததாகப் பொய்வதந்தி இரண்டு தடவை செய்வித்தல், தன் தோழர்களை மாறுவேடத் துடன் அனுப்பி தன் காரியங்களைச் செய்தல் முதலியன இரகசியமாகவே செய்ததில் வெற்றி யடைந்தான்.

9. ஒவ்வொன்றையும் காலமறிந்து இடமறிந்து செய்ய வேண்டும் - சிற்றின்பத்திலேயே உதயணன் காலங்கழித்து அரசியலைக் கவனிக்காததைக் கண்ட யூகி, உடனே அவனிடம் புத்திமதி கூறின் காரியம் கெட்டு விடும் என்று அறிந்து தான் இறந்ததாக வதந்தி கிளப்பி விட்டுத் தன் நண்பர்கள் மூலம் காலமும் இடமும் கவனித்துத் தன் எண்ணத்தை நிறைவேற்றிக் கொண்டான்.

10. செயலுக்கேற்ற பயன் விளையும் – பத்திராபதி என்ற யானை உதயணனையும் வாசவதத்தையையும் ஏற்றிக்கொண்டு பகைவர் நாட்டிலிருந்து விரைந்து செல்லுகையில் நோய்வாய்ப்பட்டு உயிர் விட்டதினால் உதயணன் அது செய்த நன்றிக்கு அதுவீழ்ந்த இடத்தில் நினைவுக் கோயிலும் வடிவமும் நித்திய பூசையும் நடத்தி வந்தான். நன்றி பாராட்டப்பட்டது.

11. சிறந்த குணங்கள் பகைவர்பாலிருப்பினும் அவற்றைக் கண்டவிடத்து மகிழ்ந்து ஆதரிக்க வேண்டும்–உஞ்சை மன்னன் பிரச்சோதனன் உதயண னைச் சிறைப்பிடித்து வைத்தான். அவனிடம் பல நற்குணங்களும் கல்வித்திறமும் இருந்தது கேட்டு அவனை விடுவித்து மதிப்புடன் நடத்தி அவனிருக்க ஒரு இடமும் தந்தான். இதனால் குணங்கள் இருக்க அதனை மதிக்க வேண்டும்.

12. பெண்பாலாரும் பல மொழிகளை அறிய வேண்டும்–மானனீகை தாய்மொழியோடு யவன மொழி யும் அறிந்ததினால் உதயணன் வாசவதத்தையின் நேற்றி

யில் எழுதின காதல் கடிதத்தைப் படித்து அதற்கு விடையும் எழுதினாள். ஆகவே ஆண்களைப் போலவே பெண்களும் பல மொழிகளைக் கற்றல் பயனுடையதாகும்.

13. தம்முள் பகைமை கொண்ட அரசர்க்கு இடையே நின்று உசிதமாகப் பேசி சந்து செய்விக்க வல்லார் பெண்பாலரிலும் உள்ளார்.

சங்க காலத்து ஔவையார் இவ்வாறு சந்து செய்ததை அறிவோம். அது போலவே இக்கதையிலும் உண்டு.

14. தன்குடி தளர்வுற்ற விடத்து அதனைப் போக்க முயலவேண்டும் — உதயணனுடைய வத்த நாட்டை அவன் விஞ்சையிலிருந்தபோது பாஞ்சாலன் பிடித்துக்கொண்டான். பிறகு அதனை மீட்கப் பலமுயற்சிகள் செய்து மகதன் முதலியோர் துணைபெற்று படையெடுத்து பாஞ்சாலனைக் கொன்று தன் நகரை வென்று ஆட்சி புரிந்தான் – முயற்சி திருவினையாக்கும்.

15. தினைத்துணை நன்றி செயினும் பனைத்துணையாக அறிந்து செய்தவர்களைப் பாராட்டவேண்டும். உதயணனுடைய துணைவர்கள், அமைச்சர்கள், வேலையாட்கள் செய்த நன்றியைச் சிறிதும் மறவாமல் அவர்களுக்குப் பரிசுகள் நிரயபத் தந்து பாராட்டினான். சாதகன் என்ற குயவனுக்கும் அவன செய்த நன்றிக்காகப் பட்டமும் இரண்டூர்களும் தந்தான்.

16. காலத்தைக் கண்ணாக மதித்து நியமத்துடன் அதனை ஒழுங்காகப் போக்கவேண்டும் —

உஞ்சையில் நீராட்டு விழாவில் கலந்துகொண்ட வாசவதத்தையைப் பத்திராபதி என்ற யானையின்மீது ஏற்றிக்கொண்டு உதயணன் செல்ல, பிரச்சோதனன் இதுகேட்டு பிடித்துவரும்படி சேனையை அனுப்ப காலம் அறிந்து யானையை விரட்டி ஓட்ட, யானை இறந்துபடும்

மட்டும் ஓட, நாட்டு எல்லை அடைந்தனர். காலம் கண்ணுக மதிக்கப்பட்டது; தப்பினர் தம்பதிகள்.

17. ஒருவரையும் இகழலாகாது - உதயணன் தெய்வீக யானையால் பல உதவிகள் பெற்றும் அதன் நிபந்தனையை அசட்டை செய்து மறந்து உணவு உண்டபடியால் அது மறைந்து போகத் துன்புற்ருன். அதனை இகழ்ந்திருத்தலாகாது.

18 யாரிடத்தும் பகை கொள்ளலாகாது - உதயணன் தன்னிடம் கோடக யாழும் தெய்வ யானையும் இருக்கின்றன என்ற மமதையால் சக்கிரவர்த்தியான பிரச்சோதனனுக்குக் கப்பம் செலுத்தவில்லை. அதனுல் பகை ஏற்பட்டு சாலங்காயனனுல் சிறைப்பிடிக்கப்பட்டான். அப்போது தன் நாட்டையும் பாஞ்சால மன்னனுல் பிடிக்கப்பட்டு இழந்தான். இப்பகையினுல் பல ஆண்டுகள் மிகவும் துயரப்பட்டான்.

19. அருளுடைமை சிறந்தது - பெருங்கதையில் வரும் முனிவர்கள் பலர். அவர்கள் எல்லாம் சமண சமயிகள். அவர்கள் அருளுடையவர்கள். எப்போதும் நன்மையே செய்கிறவர்கள். தருமோபதேசம் செய்து தம் சீடர்களை நல்வழிக்குக் கொண்டு செலுத்துபவர்கள்.

20, அறத்தையே உயிர்த்துணையாகக் கொண்டு ஒழுகல் வேண்டும் - வாசவதத்தை நகர் எரிய அத்தீயில் இறந்தாள் எனக் கேட்ட உதயணன் தன் உயிரினைத் தானே போக்கிக் கொள்ள எண்ணினன். அப்போது துணைவர்களும் சமயப் பெரியார்களும் சன்மதி போதனை செய்ய அதனையே ஏற்றுக்கொண்டு ஆறுதல் பெற்றனன்.

21. துன்பம் வந்தவிடத்து அது தன்னுடைய தீவினைப் பயன் என்று எண்ணி நுகர வேண்டும். யூகி இறந்தான் என்று கேட்டபோது உதயணன் துயர் உற்றதும் வாசவதத்தை தீயில் எரித்தாள் என்று கேட்ட

போது மிக்க துயர் உற்றதும் தன் தீயினைப் பயன் என்று எண்ணி நுகர்ந்தான். அவ்வாறு எண்ணியதால் பின்னர் இன்புற்றான்.

22. பெருஞ் செல்வம் உடையோர் தமக்கு முதுமைப் பருவம் வந்தவிடத்து புதல்வர்பால் ஒப்புவித்து விட்டுப் பற்றற்று துறவு பூண்டு வீடு பெறுதற்கு முயல வேண்டும். மிருகாவதியின் தந்தை, உதயணன், யூகி, மற்ற அமைச்சர்கள் முதலிய பலரும் முதுமைப் பருவம் வந்தவுடன் அதிகாரங்களை ஒழித்துவிட்டுத் துறவுபூண்டு தவம் புரிந்தார்கள். தற்காலத்தில் உண்டோ?

23. மகளிர் மேல் விருப்பம் ஆடவர்க்கு யாதொன்றையும் அறியவொண்ணாதபடி மிக்க மயக்கத்தைச் செய்யும் - வாசவதத்தையிடம் பெருங்காமம் கொண்டதினால் அரசாட்சியைக் கவனிக்கவில்லை; தன் கடமை மறந்தான். யூகி அதனை அறிந்து தந்திரங்கள் செய்து அவனைத் தப்புவித்தான். மானனீகை நன்கு பந்தடித்ததைக் கண்டு அவள் சேடியாக இருந்தும் அவள்மீது காதல் கொண்டான். அது கொண்டு இயற்கைக்கு மாறாகத் தன் தேவி நெற்றியில் காதற் கடிதம் எழுதினான். அவள் அதனை மறுத்தும் சூழ்ச்சி செய்து அவளை மணந்தான். இது அவன் அறிவை மயக்கும் காமம் என்க.

24 தம்பதிகளின் இயல்பு, இல்வாழ்க்கை, புதல்வர் கடமை, ஆசிரியர் மாணாக்கர் இயல்பு, அரசாட்சிமுறை, குடிகளியல்பு முதலியன பெருங்கதையில் வருகின்றன. மற்றும் வேந்தர்க்குப் பெருந்துயரம் விளைவிப்பது வேட்டையாடச் செல்வதும், அதில் மிக விருப்பம் கொள்வதும் ஆகும் என்றும் அறிவிக்கின்றது.

மந்திரிகளின் இயல்பு, நட்பின் கடப்பாடு, தரமறிந்து ஒழுகல் முதலியனவற்றைப் பல இடங்களில் காணலாம். உதயணனுடைய நான்கு மந்திரிகளும் செய்த உதவி சொல்லுக்கடங்காதன. அதுபோலவே பிரச்சோதனன் அமைச்சன் சாலங்காயனனும் அவனுக்குப் போரில்

வெற்றி கிடைத்ததற்காக யந்திர யானையை அனுப்பி 'உதயணனை வசப்படுத்தித் தன் மன்னனுக்குத் தொண்டு புரிந்ததும் அறியலாகும்.

நூலின் பெருமை: பெருங்கதை அந்நூலின் பெயருக்கு ஏற்றபடி மற்ற காப்பியங்களைக் காட்டிலும் பல செய்திகளில். மிக்க பெருமை வாய்ந்தது. காப்பியங்களிலே வரும் தலைவர்களும் மற்ற ஆட்களும் குறிப்பிட்ட எண்ணிக்கை கொண்டிருப்பார்கள். நாம் எளிதாய் நினைவில் கொள்ளலாம். ஆனால் பெருங்கதை யிலே மொத்தம் பாத்திரங்கள் 108 பேர்: அவர்களில் ஆண்கள் 80, பெண்கள் 28. இவர்களில் சிறந்த ஆட வர்கள் – உதயணன் (கதாநாயகன்) உருமண்ணுவா - (அமைச்சன்,) பிரச்சோதனன் (சக்கரவர்த்தி) யூகி (அமைச்சன்,) வயந்தகன் (அமைச்சன்) என்ற 5 தலை வர்கள். பெண்மணிகளில் பதுமாவதி (அரசி) வாச வதத்தை - (அரசி) ஆக இருவர் தலைவியர். பிறகு சாதாரண ஆடவர்களில் ஆருணியரசன் (பாஞ்சாலன்), இடவகன் (அமைச்சன்), சாலங்காயன் (அமைச்சன்), தருசகன் (மகத அரசன்), நரவாணதத்தன் (அரசன்மகன்) பிங்கலகடகர் (உதயணன் தம்பியர்) என்ற ஆறு பேர் ஆண்களும், இராசனை (பதுமை தோழி) ஐராபதி (மற் றொரு தோழி) காஞ்சனமாலை (வாசவதத்தை தோழி) பாகீரதி (தேவராட்டி) மானனீகை (அரசி) ஆக 5 பெண் கள் ஆவர். மற்ற ஆண்களும் பெண்களும் முக்கியமான வர்கள் அல்லர். என்றாலும் 108 பேர் என்ற எண்ணைக் குறிக்கும்போதே இத்தனை மக்களை எப்படி நினைவு கொள்ளக்கூடும் எனலாம்.

இனி ஆடவர்கள் பெண்கள் என்ற பாத்திரங்களைத் தவிர காப்பியத்தில் வரும் மற்ற பெயர்களும் வியக்கத் தக்க எண்ணிக்கை கொண்டவைகளாக இருக்கின்றன. அவைகள் முறையே, நாடுகள், ஊர்கள், ஆறுகள், இடங்கள், குலங்கள், மலைகள், தேவர்கள், விழாக்கள், விலங்குகள், மற்றப் பொருள்கள் எனப் பிரிக்கலாம்.

இவைகளில் உதயணன் நாடாகிய வத்தவ நாட்டைத் தவிர 15 நாடுகள் கூறப்பட்டுள்ளன. பாரதகண்டத்தில் இருந்த 56 நாடுகளிலே இக் கதையில் 16 நாடுகள் பங்கு எடுத்துக் கொள்கின்றன. அவற்றில் சிறந்தவை, அங்கம், அவந்தி, கலிங்கம், காந்தாரம், காம்போசம், கோசலம், சிந்து, சேதி, பாஞ்சாலம், மகதம், மராட்டம் பவணம் முதலிய 12 நாடுகள். ஆரிய வர்த்தம் முழுதும் இவைகளில் வந்துவிட்டது.

இனி உதயணன் நகரமாகிய கோசாம்பியைத் தவிர இருபது ஊர்கள் வருகின்றன. அவைகளில் அத்தின புரம், அயோத்தி, இராசக்கிரியம், இலாவணகம், உஞ் சேனை, காசி, சயந்தி, பாடலிபுரம் முதலிய எட்டு சிறந்த ஊர்கள்.

ஆறுகள் நான்கு: அவையாவன சிந்து, நருமதை, யமுனை, வஞ்சகாந்தை என்பன. இடங்கள் 12: அவைகள் ஊர்ப்புற நகர்கள், உபவனங்கள் முதலியன. மலைகள் 5: ஐராவதம், விஞ்சையம், பெருமலை, விந்தம், விபுலம் என்பன. குலங்கள் மூன்று, உக்கிர குலம், ஏயர் குலம், (ஹேஹயர்) குருகுலம் (கதா நாயகன் குலம்) என்பன. தேவர் பெயர்கள் மூன்று காளக் கடவுள் ஆகிய சிவபெரு மான், அருகர், காமக் கடவுள் என்பர். மேலும் அருகக் கடவுளும் அவரது கோயிலும் இருந்தது. விழாக்கள் நீர் விழா, மன்மதன் விழா என்பன. இவைகளில் காமக் கடவுளாகிய மன்மதன் விழா மிகச் சிறப்பாக அந்நாளில் கொண்டாடப்பட்டது. அதுபோலவே நீர் விளையாட்டு விழாவும் கொண்டாடப்பட்டது. விழாக்களின் வருணனை சிறப்பாக உள்ளது. இனி விலங்குகளிலே யானைகளைத் தான் சிறப்பாகக் காண்கிறோம் அவைகள் சிறப்பான பெயர்களும் கொண்டிருந்தன. நளகிரி யானை, பத்திரா பதி யானை, மந்தரம் என்ற யானை. இவைகள் முறையே பிரச்சோதனன் பட்டத்து யானை, பிரச்சோதனுக்குச் சேர்ந்து உதயணனுக்குக் கொடுக்கப்பட்ட யானை, ஆருணி அரசனுடைய பட்டத்து யானை என்பன.

சிறப்புப் பொருள்களில் கோடபதி என்ற அற்புத யாழும், சிங்கச் சுவணம் என்ற பொன்னும், வைராக்கிரம் என்ற தேரும் புகழ் பெற்றவை. மற்றவைகளை வேண்டிய இடங்களில் குறிப்போம். பொதுவாகவே கதாமக்களும் நாடு முதலிய பொதுப் பெயர்களும் இக்கதையில் வரும் அளவற்ற சிறப்புக்களுடன் வேறு காப்பியங்களில் வரக்கிடையா என்றால் மிகையாகாது.

இலக்கிய நயம்

தலைசான்ற கவிஞர்கள் தாம் எழுதுகிற காப்பியங்களுக்கு அடிப்படைக் கதையினைப் பிறரிடத்திலிருந்து எடுத்துக் கொண்டாலும் அக்கதைப் போக்கினைச் செம்மைப்படுத்தி மானிட வாழ்க்கைக்குப் பொருந்திய வாறு அமைத்தும், இடையிடையே படிப்போர்கள் நெஞ்சை அள்ளும் சுவைகளைப் உட்படுத்தியும், புதுப் புது உண்மைக் குணங்களைச் சேர்த்து அழகுபெறச் செய்தும், தாம் எழுதும் நூல்களை உயர்ந்த நிலைக்கு ஏற்றி வைப்பார்கள். அவ்வாறு செய்வதில் எது முதல் நூல் எது வழி நூல் என்று மயங்கும்படியும் ஆக்கி வைப்பார்கள். உண்மையாகவே முதல், வழி, என்ற பாகுபாடுகள் அவைகளில் எழும்பவேண்டியதே இல்லை. இந்தக் கேள்விகளை நமது தற்கால ஆராய்ச்சியாளர்களும் உரைகாரர்களுமே எடுத்துக்கொண்டு குழப்பி வருகிறார்கள். உயர்ந்த நூல்களில் இவ்வகை ஆராய்ச்சி வீண் வாதம் தருவதாகும்.

பெருங்கதை தலைசான்ற நூலாகும். இதில் தோன்றிய அடிப்படைக் கதை வடநாட்டுக் கதையாயினும் அதனை ஆக்கியிருக்கும் உயர்ந்த நிலையானது அது முதல் நூல் என்று கூறும் வகையில் அமைந்தது. அந்த உயர்விற்கு அதில் உள்ள இலக்கிய நயங்களே காரணம் என்க. அந்நயங்கள் கதையின் பகுதிகளைச் சிறப்பிப்பதே யன்றி கதாநாயகர்கள் ஆன வரலாற்றுப் பாத்திரர்களை நல்ல பண்புடையவர்களாக ஆக்கி

இருப்பதே சான்றாகும். மேலும் கதைப்போக்கினை நல்ல வாய்ப்புடையதாகச் சமைத்துச் சிறந்த சுவை யுடையதாக நிறுத்திப் படிப்பவர்கள் நெஞ்சைக் கவர்ந்து மேம்பாடு அடையும்படியாகச் செய்து சிறந்த மகிழ்ச்சி ஊட்டுவிக்கும். இத்தகைய பண்புகளுக்குச் சில எடுத்துக் காட்டுக்களைக் கூறுவாம்.

சிறந்த பண்புகள் சில

1. நட்பின் தன்மையை வெகு அழகாக

"கெட்டகாலை விட்டனர் என்னாது
நட்டோர் என்பது நாட்டினை நன்று"

என்று கூறியும்,

"முன்னுப காரத்து நன்னர் ஆற்றிய
நட்பு மன்றி நம்மொடு கலந்த
சுற்ற மாதலின் சுடர்பூண் உதயணன்
அற்ற மெல்லாம் அறிந்தனம் ஆகிக்
கொற்ற நந்நாடு கொண்டனம் கொடுத்தல்
கடன் நமக் கது என" (3-23-14)

என்றும்

"அற்றங் காத்தலின் ஆண்மை போலவும்
குற்றங் காத்தலின் குரவர் போலவும்
ஒன்றி ஒழுகலின் உயிரே போலவும்
நன்றி யன்றிக் கன்றிலது கடிதற்கு
தகவில செய்தலில் பகைவர் போலவும்
இனையன பிறவும் இனியோர்க் கியன்ற
படுகடனுதியில் பட்டது நினையாள்" (2-9-219)

இதில் நண்பர் செய்தற்குரியன கூறப்பட்டன. யூகி தான் இறந்ததாக அறிவித்து அந்த சூழ்ச்சியால் தன் நண்பன் உதயணனைச் சீலனுக்க முயன்றான். அது நண்பன் செய்யத்தக்கதாகும் என்றார். மேலும் அடைக்கலம் அடைந்தவரைப் பாதுகாத்தல் கடமை என்று வற்புறுத்துகிறார்.

2. மன்னன் ஒரு செய்தியைக் கண்டு கோபித்த காலை அமைச்சன் அச்செயல் குற்றமாகாது என்று மதியுரைத்துக் கூறியது :

"குலத்தினும் குணத்திலும் நலத்தகு நண்பினும்
நிலத்தினில் நின்னோடு நிகர்க்குநன் ஆதலின்
மேல்வகை விதியின் விழுமியோர் வகுத்த
பால்வகை யல்லது பழிக்குநர் இல்லை"

ஆதலின் சினம்தணிதல் நலம் என்று கூறின நன்மதி எத்தனை சிறந்தது !

3 இரண்டு செயல்களில் எது சிறந்தது என்பதற்கு அடியிற்கண்ட கருத்தைக் காண்க :

"இழிந்த மக்களோ டின்பம் ஆர்தலின்
உயர்ந்த மக்களோ டுறுபகை இனிது"

என்ற கருத்தை ஆராயின் 'வெற்றி வேற்கை'யில்

"கொடுங்கோன் மன்னர் வாழு நாட்டில்
கடும்புலி வாழும் காடுநன்றே"

என்ற அடிகளும் ஆங்கிலக் கவியில்,

"துறக்கத்தில் அடிமைப்படலின்
நிரையத்தில் ஆளுதல் நன்றே"

என்பதும் ஒத்திட்டுப் பார்க்க.

4. அன்புமயமான மொழிகளைக் கூறுமிடத்து அடியிற்கண்ட அரிய கருத்துக்கள் வருகின்றன

"துன்பக் காலத்து துணைஎமக்கு ஆகி
இன்பம் ஈதற்கு இயைந்து கைவிடாது
பெருமுது தலைமையின ஒருமீக் கூறிய
உயர்தவக் கிழமைநும் உடம்பின் ஆகிய
சிற்றுப காரம் வற்றல் செல்லாது
ஆல வித்தின் பெருகி ஞாலத்து
நன்றி யீன்றது"

இது வெற்றிவேற்கையில்

"தெள்ளிய ஆலின் சிறுபழத் தொரு விதை
........................மன்னர்க்கிருக்க
நிழலா கும்மே."

என்ற செய்யுளில் வருதல் காண்க. (பாண்டிய மன்னன் அதிவீரராமன் கொங்கு வேளிரிடம் கடன் பெற்றிருக்கலாம்).

5. பிரிவு எத்துணை துன்பம் தரும் என்பதனை உணர்த்த

"நவில்தொறும் இனிய ஞானம் போல
பயில்தொறும் இனியநின் பண்புடைக் கிழமை
உள்ளுதொ றுள்ளுதொ றுள்ள மின்புறப்
பிரிவுறு துன்பம் எம்மாட்டு எய்த"

நகரம் செல்வாய் என்ற மொழிகளால் உணர்த்துகிருர்.

சிறந்த அழகுகள் சில

கொங்கு வேளிர் ஆண்டிருக்கும் கவிப்போக்கு ஆங்கிலத்தில் தென்னிசன் (Tennyson) "மன்னன் ஓவியங்கள்" (The Idylls of the King) என்ற காவியத்துடன் ஒத்திட்டு மகிழலாம். கருத்துக்கள் படிப்பவர் நெஞ்சில் ஆணித்தரமாகப் படும்படியும் படிக்கப் படிக்க அரிய உணர்ச்சிகளை எழும்படிக்கும் சொல் ஓவியங்களும் கருத்தோவியங்களும் ஆங்காங்கே நிரம்பியிருக்கக் காணலாம். கதாநாயகர்கள் முதலியோர்களுடைய குணங்கள் அழுத்தம் திருத்தமாக அமைக்கப் பெற்றிருப்பதையும் காணலாம். இவ்வாருன பண்புகள் காவியத்தின் உயர்வை எடுத்துக் காட்டுகின்றன.

1. கதாநாயகி வாசவதத்தையின் அழகை விவரிக்க வந்த ஆசிரியர் அவளுடைய அவயவங்களை இவ்வாறு வருணிக்கிருர்.

"பிறைஎனச் சுடரும் சிறுநுதல் பிறையின்
நிறையெனத் தோன்றும் கறையில் வாண்முகம்;
கிளியென மிழற்றும் கிளவி கிளியின்
ஒளிபெறு வாயினன்ன ஒள்ளுகிர்"

எனவும்

"வேயெனத் திரண்ட மென்றோள் வேயின்
விளங்கு முத்தன்ன துளங்கொளி முறுவல்
காந்தள் முகிழன்ன மெல்விரல் காந்தள்
பூத்துடுப் பன்ன புனைவளை முன்கை"

இவ்வருணனை எத்துணைச் சிறந்த ஓவியம் என்று கூறலும் வேண்டுமா?

2. ஒரு யானை பாகர்களைக் கொன்றுவிட்டு ஊரில் ஓட நகரத்தார் நடுங்கினார்கள். அச்செய்தியைக் கேள்வியுற்ற மன்னன்

"நாவாய் கவிழ்ந்த நாயகன் போல
ஓவா வலமொடு காவலன் கலங்கி"

அந்த யானையை அடக்கும்படி சேனையை அனுப்பியும் அதனால் ஆகாதது கண்டு உதயணனிடம் தெரிவிக்க, அவன் அதனை அடக்கி நகர வீதி வழியாய் உலாச் சென்றான். அதனைக் கண்ட நகரத்தார்கள்

"மன்னவன் வாழ்க வத்தவன் வாழ்க
ஒலிகெழு நகரத் துறுபிணி நீக்கிய
வலிகெழு தடக்கை வயவன் வாழ்க"

என்று வீதிதொறும் ஏத்தி எதிர் கொண்டார்கள். அதற்காக அரசன்

"பன்மணி விளக்கும் பள்ளிக் கட்டிலும்
பொன்னினடைப்பையும் பூரண கலசமும்"

முதலான பல பொருள்களையும் கொடுத்து ஒரு மாளிகையில் இருக்கச் செய்தான். அம்மாளிகை

"அந்த கேணியும் எந்திரக் கிணறும்
தண்பூங் காவும் தலைத்தோன் றருளிய
வெண்சுதைக் குன்றொடு வேண்டுவ பிறவும்
இளையோர்க் கியற்றிய விளையாட் டிடமும்"

கொண்டிருந்தது. அங்கே வீற்றிருந்த அளவில் கதிரவன் மறைந்தான். உடுக்கள் விளங்கின.

“முலைபாற் காலத்து முடிமுறை யெய்திக்
குடைவீற்றிருந்த குழவி போலும்”

பிறை உதித்தது. இந்தக் காட்சி எத்தனை அழகியது!

3 பெண்மணிகளின் தேர்ச்சியைக் கூறும்போது அரசன்

“பந்துங் கிளியும் பசும்பொற் றூதையும்
சுத்தியன் மயிலும் கரந்துறை பூவையும்
கண்ணியும் கழங்கும் கச்சும் முற்றிலும்
பவழப் பாவையும் பனிக்குக் கிளிக்கூடும்”

அவர்களுக்களித்து நீங்கள் இதுவரையில் கற்ற

“அழகில் விளையும் யாழின் றுறையும்
கடிமலர்ச் சிப்பமும் கரந்துறைக் கணக்கும்
வட்டிகை வரைப்பும் வாக்கின் விகற்பமும்
கற்றவை யெல்லாம் காட்டுமின்”.

என்று உரைத்து மகிழ்வித்தான். இந்தக் காட்சியை எத்துணைச் சிறந்ததாகக் கொள்ளுவோம்!

4. பெண்டிர் கோலம் கொள்ளுதலை வருணிக்கையில் கூந்தலை உலர்த்திப் பூமாலை முடித்து-

“பைங்கூற் பாதிரி போதுபிரித் தன்ன
சாங்கோ சிகமும் வங்கச் சாதரும்
கொங்கார் கோங்கின் கொய்ம்மல ரன்ன
பைங்கேழ்க் கலிங்கமும் பட்டுந் தூசும்
நீலமும் அரத்தமும் வாலிழை வட்டமும்
கோலமொடு புணர்ந்த வேறுவே றியற்கை
நூலினும் உலண்டினும் நாரினும் இயன்றன
யாவை யாவை யவையவை மற்றவை
மேவன மேவன காமுற வணிந்து”

அதன்பின் ஏற்ற அணிகளை அணிந்து கொண்டனர்.

5. காளிதாசர் மேக சந்தேசத்தில் காதற் பொருட்டுத் தூதுவிட்ட மேகத்தினிடம் அது செல்ல

வேண்டிய இடங்களை எல்லாம் வெகு அழகாக வருணிக்கிருர். அதுபோலவே ஆசிரியர் ஒரு யானை செல்கையில் அது ஐந்து வகை நிலங்களையும் தாண்டிச் சென்றதாக அந்நிலங்களை வருணிக்கின்ருர். மருதத்திணையை

> "பாளைக் கமுகும் பணையும் பழுக்கிய
> வாழைக் கானமும் வார்குலைத் தெங்கும்
> பலவும் பயிலும் இலைவளர் மாவும்
> புன்னையும் செருந்தியும் பொன்னென ஞாழலும்
> மடைவாய் திருத்து மன்னர் சுபமையும்
> எடையரவின்றி இறையாறு தழீஇ
> வயற்புலச் சீறூர் அயற்புலம் அணுகி"

என்றும், முல்லைத் திணையை

> "இறங்குகுரல் இறடி இறுங்குகடை நீடி
> கவைக்கதிர் வரகும் கார்பயில் எள்ளும்
> புகர்ப்பூ அவரையும் பொங்குகுலை பயறும்
> உழுந்தும் கொள்ளும் கொழுந்துபடு சணையும்
> தோரையும் துவரையும் ஆயவும் பிறவும்"

என்றும், குறிஞ்சித்திணையை

> "ஈரமில் குரவர் இதன்மிசைப் பொத்திய
> ஆரத் துணியொடு காரகில் கஞமிய
> கொள்ளி கூரெரி வெள்ளி விளக்கில்
> கவரிமான் ஏறு கண்படை கொள்ளும்
> தகரங் கலினிய தண்வளர் சாரல்"

என்றும், பாலைத்திணையை

> "ஓமமும் முழிஞ்சிலும் உலவையும் முகாயும்
> கடுவும் தான்றியும் கொடுமுள் தொடரியும்
> கள்ளியும் கடம்பும் முள்ளியும் முருக்கும்
> ஈங்கையும் இலவும் தேங்காய் நெல்லியும்
> வாகையும் பிறவும்"

என்றும் வருணிக்கின்ருர்.

இவ்வருணனைகளில் நெய்தல் இல்லை, ஏனெனில் அது வடநாட்டில் இல்லையல்லவா? தமிழ் நாட்டில் உண்டு. ஆனாலும் நிலத்தை ஐந்து திணைகளாகப் பிரித்

தல் தமிழ் இலக்கணம் ஆகும். வடநாட்டுக் கதையாயி னும் தமிழ்நாட்டு இலக்கியமாக்கிப் பாடுகின்றார் ஆசிரியர்.

6. தொழிற் சிறப்பை வருணிக்கும்போது மிக அரிய செய்திகளை உட்புகுத்திக் கூறுகின்றார். 'பொதியிற் சந்தனம், விந்தமலை யானைத் தந்தம், வடமலைப் பொன், மேற்கடற் கொடிப்பவழம், கொற்கைத்துறை முத்து, வெஞ்சமலை வெள்ளி, ஈழத்துச் செப்பு, இமயத்து வயிரம், கடாரத்து இரும்பு' ஆகிய இவைகளைக் கொண்டு

"யவனத் தச்சரும் அவந்திக் கொல்லரும்
மகதத்துப் பிறந்த மணிவினைக் காரரும்
பாடலில் பிறந்த பசும்பொன் வினைஞரும்
கோசலத்து இயன்ற வோவியத் தொழிலரும்
வித்தநாட்டு வண்ணக் கம்பரும்"

சிறந்த வேலைகளைச் செய்தனர் என்று அக் காலத் தொழில் சிறப்புக்களை விவரிக்கின்றார். தென் நாட்டு மன்னர்களிடம் யவனர் முதலிய பிறநாட்டார் வேலைக்கு அமர்ந்த செய்தி பத்துப்பாட்டு முதலிய நூல்களில் வரு வதை நினைப்பூட்டுகின்றன.

விளையாடலில் கண்ட சுவையின்பப் பெருக்கு:

சர் வால்டர் ஸ்காட் (Sir Walter Scott) என்ற ஆங்கில ஆசிரியர் 'ஐவன் ஹோ', 'டாலிஸ்மன்' என்ற நவீனங் களில் வெற்றி வீரர்களைப் பெண்மணிகள் காதலிக் கிற செய்தியை வருணிக்கிறார். அந்த முறையில் ஆண் கள் பெண்களின் விறலைப் போற்றி மணமும் செய்து கொண்டனர் என்று நமது ஆசிரியர் பாராட்டியிருக் கின்றார். ஆங்கிலக் கவி ஆயுதப் பயிற்சியில் போட்டி யிட்டு வென்ற வீரனை மாலையிட்டு மகிழ்ந்தாள் ஒரு சீமாட்டி என்றார்; நமது நூலாசிரியரோ பெண்களுக் குரிய பந்தாட்டத்தில் மிக வீரத்துடன் சாகசச் செயல் களைச் செய்த ஒரு பெண்மணியின் அரிய செயலை வியந்து

காதலித்தான் மன்னன் என்று வருணிக்கின்ருர். அந்த வருணனை மிக உயர்ந்த பொருட்செறிவில் இயற்றப் பட்டுள்ளது.

உதயண குமரனின் தேவியராகிய வாசவதத்தையும் பதுமாபதியும் ஒரு நாள் தம் தோழியரை இரு கூருகப் பிரித்துப் பந்தாடும்படி செய்து மகிழ்வராயினர், அம் மகளிர் ஆடலை ஆடவர் காணுதல் மரபன்று. எனவே அவ்வாடலைக் காண அவாக்கொண்ட உதயண வேந்தன் பெண் வேடங்கொண்டு ஒரு பிடியிலேறிச் சென்று அம் மகளிர் பந்தாடும் அழகினைக் கண்டு களிகூர்ந்தான். கோப்பெருந் தேவியர் இருவருடைய தோழியரும் கண்டோர் வியக்கும்படி திறம்பட ஆடா நின்றனர். திறம்பட ஆடியவருள்ளும் தலை சிறப்ப மானனீகை என்னும் ஒரு தோழி அனைவருடைய பாராட்டினையும் பெற்ருள். அவள் இருபத்தொரு பந்துகளை எடுத்து பிறர் வியக்கும்படி ஆடுகையில்-

“சுழன்றன தாமம் குழன்றது கூந்தல்
அழன்றது மேனி அவிழ்ந்தது மேகலை
எழுந்தது குறுவியர் இழிந்தது சாந்தம்
ஓடின தடங்கண் கூடின புருவம்
அங்கையின் ஏற்றும் புறங்கையி னேட்டியும்
தங்குற வளைத்தும் தான்புரிந் தடித்தும்” (4—12—225)
அவள் பந்தாடினள்

சொற்போக்கு கண்டு மகிழ்க.

அவளுடைய பந்தாட்டத்தைக் கண்ட உதயணன் பெரிதும் வியந்தான். மேலும் அம்மானனீகையின் பேரழகும் அக்கலையழகோடு கலந்து விடவே அவ்வேந் தன் அவள்பால் கட்டுக் கடங்காத காதல் வேட்கை கொண்டான்.

பந்தாட்டம் முடிந்த பின்னர் உதயணன் தன் மாளிகைக்குச் சென்று காதற் பெருக்கினல் தவித்துக் கொண்டிருந்தான். மானனீகை என்பவள் வாசவதத்

தையின் ஒப்பனை மகள் என்பதும் அவளே எப்பொழுதும் வாசவதத்தைக்கு அணி செய்கின்றாள் என்பதும் அவள் யவன மொழியும் கற்றிருக்கின்றாள் என்பதும் உதயணன் பிறரை வினவித் தெரிந்து கொண்டான். அவ்விரவு தன் மாளிகைக்கு வந்த வாசவதத்தையைக் கூர்ந்து நோக்கி, "தேவி நினக்கு ஒப்பனை செய்தவர் யார்? இவ்வொப்பனை நினது இயற்கை அழகைக் கெடுக்கின்றது. யானே நின் அழகிற்கேற்ப அணிவன் காண்" என்று கூறி அவ்வொப்பனைகளைக் கலைத்து விட்டுப் பூந்தாதினைச் சந்தனத்தோடு குழைத்து முல்லையரும்பாகிய எழுதுகோலில் தோய்த்து அவ்வாசவதத்தைக்குக் கோலம் செய்வான் போன்று யவனமொழியாலே வாசவதத்தையின் நெற்றியில் ஒரு திருமுகம் வரைந்து மானனீகையின் பால் விடுத்தான்.

அத்திருமுகத்தின் பொருள் வருமாறு-

"ஒடியா விழுச்சீர் உதயணன் ஓலை
கொடியேர் மருங்குல் குயின்மொழிச் செவ்வாய்
மானனீகை காண்க! சேணுயர்
மாட மீமிசை மயில்இறை கொண்டென
ஆடன் மகளிரொ டமர்ந்தொருங் கீண்டி
முந்துபந் தெரிந்தோர் முறைமையிற் பிழையாப்
பந்துவினை யாட்டினுள் பாவைதன் முகத்துச்
சிந்தரி நெடுங்கண் என் நெஞ்சகங் கிழிப்ப
கொந்தழற் புண்ணொடு நொந்துயிர் வாழ்தல்
ஆற்றேன் அவ்வழல் அவிக்கும் மாமருந்து
கோற்றேன் கிழவிதன் குவிமுலை யாகும்
பந்தடி தானுறப் பறையடி யுற்றவென்
சிந்தையும் நிலையும் செப்புதற் கரிதென
சேமம் இல்லாச் சிறுநுண் மருங்குற்
காதாரமாகி அதனொடு தளரா
அருந்தனந் தாங்கி அறியும்என் நெஞ்சில்
பெருந்துயர் தீர்க்கும் மருந்து தானே (நீயே)
துன்றிய வேற்கண் தொழிலும் மெய்யழகும்
பைங்கொள் கொம்பர்ப் படர்தரும் இந்நோய்
ஆழ்புனற் பட்டோர்க் கரும்புணை போல
சூழ்வளை தோளி காமநற் கடலில்

தாழ வுறுமல் கொள்க தளர்ந்துயிர்
சென்றால் செயல்முறை ஒன்றுமில், அன்றியும்
அடுக்கிய இளமை தலைச்செலின் நாம்தர
கிடைப்பதில் இரப்போர்க் களிப்பது நன்றென
நினைத்த வாசகம் நிரப்பின் றெழுத
இடத்தளவு இன்மையின் கருத்தறி வோர்க்கு
பரந்துரைத் தென்னை பாவைக் கிக்குறை
இரந்தனென் அருள்.'' (4-13-63 to 91)

இத்திருமுகத்தில் தன் காதல் உள்ளம் முழுவதையும் உதயணன் திறந்து காட்டியிருக்கிறான். எனினும் தன் மனக்கருத்தெல்லாம் சொல்லில் அடங்காமை கண்டு நொந்துபோகிறான்.

இனி நமது இலக்கியங்களுள் இத்தகைய காதற் கடிதம் தரும் அளவு இன்பம் செறிந்த பகுதிகள் இல்லை. இக்கடிதம் திரும்பத் திரும்ப ஓதினும் தித்திக்கும் என உணர்வோம்.

மறுநாள் வாசவதத்தைக்கு ஒப்பனை செய்யச் சென்ற மானனீகை அவள் நெற்றியில் யவன மொழியில் எழுதியிருந்த காதற் கடிதத்தைப் படித்து அதற்கு விடையாக அதே மொழியில் அவள் நெற்றியில் எழுதிவிட்டாள்.

'' முழுதியல் அருள்கொண் டடியனேன் பொருளா
யெழுதிய திருமுகம் பழுதுபட லின்றிக்
கண்டேன் காவலன் அருள்வகை யென்மாட்
டுண்டே யாயிறு மொழிகவெம் பெருமகன்
மடந்தையர்க் கெவ்வா றியைந்ததை யியையும்
பொருந்திய பல்துறை யுயர்ந் தோர்க் காகும்
சிறியோர்க் கருளிய உயர்மொழி வாசக
மனையவ தன்று லிவ்வயி னொருவருங்
காணா ரென்று காவலு ளிருந்து
பேணா செய்தல் பெண்பிறந் தோருக்
கியல்பு மன்றே யயலோ ருரைக்கும்
புறஞ்சொலு மன்றி யறந்தலை நீங்குந்
திறம்பல வாயினுங் குறைந்தவென் திறத்து
வைத்ததை யிகழ்ந்து மறப்பது பொருளோ ''
(4-13-110 to 123)

இவ்வாறு மானனீகை மறுத்தனள்.

ஆனாலும் மன்னன் காதலை மறக்காது அவளை உடன்படும்படி செய்தனன். திருமணமும் செய்து கொண்டான். ஊடலும் ஏற்பட்டு ஒப்புதல் முடிகிறது.

இந்த வழக்கம் வெகு விசித்திரமாக இல்லையா? நெற்றியில் அறியாமொழியில் எழுதி காதலைத் தெரிவித்து மறுமொழியும் பெறுதல் என்ன வேடிக்கை! மேலும் தன் தேவியின் நெற்றியிலேயே அவளுக்குப் பகையாக ஒரு கடிதம் எழுதி அனுப்புதல் இவ்வுலகில் ஏற்படுமோ? அதனை உன்னிய நூலாசிரியருடைய சூழ்ச்சித்திறன் எப்படிப்பட்டது? இதனை அறிந்து மகிழ்ந்து வியப்போமாக.

ஊடல் இன்பம் :

ஊடல் என்பது உலகில் எங்கும் நிகழ்வதொரு காதல் நிலை. அது இளமையில் புதிதாய் மணந்த மணமக்கள் இடை நிகழ்வது. நெஞ்சில் எழும்புர் ஐயப்பாடுகளால் எழுவது. ஐயப்பாடு தெளிந்ததும் கூடல் ஏற்படும். இன்பம் அதிகரிக்கும். ஏழைகளிலும் செல்வர்களிலும் நடைபெறும். பிரபுக்களிலும் அரசகுடும்பங்களிலும் மிகுதியாகத் தோன்றும். நாடகாசிரியர்கள் இதனைப் பெரிதும் கையாளுவர். ஆங்கில நாடகாசிரியன் ஷேக்ஸ்பியர் 'வேனிஸ் வர்த்தகன்' (Merchant of Venice) என்ற நாடகத்தில் இறுதி அங்கத்தில் இலகுவாய் ஊடலைப் புகுத்தி நாடகச்சிறப்பை உயர்த்து கிருன். பிறமொழிக் காப்பியங்களிலும் நாடகங்களிலும் இப்போக்கு மிகுதியாக ஆளப்பட்டிருக்கிறது. நமது நாட்டிலும் இலக்கியங்களில் வெகுவாய்க் காணலாம். பெருங்கதையில் ஊடல் நிகழ்ச்சி வெகு இன்பம் தருவதாக இருக்கிறது. திருவள்ளுவரே ஊடல் இன்பத்தை

> "ஊடுதல் காமத்திற்கு இன்பம் அதற்கின்பம்
> கூடி முயங்கப் பெறின்"

என்று புகழ்கிருர். அப்படியாயின் கொங்குவேளிர் எத்தன்மையாக அதனைக் கையாளுவர்! இனி எடுத்துரைப்போம்.

உதயணகுமாரன் ஒருநாள் பதுமாபதியின் மாளிகையில் அளவளாவியிருக்கையில் அம்மாளிகையின் கண் எழுதப்பட்டிருந்த ஒரு மானின் ஓவியத்தையும் அதன் கண் அழகினையும் கூர்ந்து நோக்கி அவ்வழகில் கருத்து ஒன்றி நின்றான். அதைக்கண்ட பதுமாபதி தன் மருங்கில் அவன் இருந்தும் தன் அழகைப் பொருட் படுத்தாமல் வேறெதனையோ கூர்ந்து நோக்குகிறானே என்று சினந்து அவன் செவியிற் படும்படி

" சூட்டு முகந்திருத்தி வேட்டுநறு நீரின்
மயிரும் இறகும் செயிரறச் கழீஇச்
கோல்நெய் பூசித் தூய்மையுள் நிறீஇ
பாலும் சோறும் வாலிதின் ஊட்டினும்
குப்பை கிளைப்பறாக் கோழி போல்வர்
மக்கள் என்று மதியோர் உரைத்ததைக்
கண்ணிற் கண்டேன் என்று கைந்நெரித்து "

(3-14-108-114)

கூறிப்பின் தன்னையே நோவாளாய்,

" தம்மால் வந்த தாங்கரும் வெந்நோய்
தம்மை நோவ தல்லது பிறரை
என்னது நோவல் ஏதம் உடைத்தெனக்
கருங்கேழ் உண்கண் கயலெனப் பிறழ்ந்து
பெருங்கயத் தாமரைப் பெற்றிய வாகத்
திருநுதல் வியர்ப்பெழுந் திருநிலத் திழிதர
நிலாவுறு திருமுக நிரந்துடன் மழுங்கி "

(3 - 14 - 117 - 122)

ஒருபால் ஒதுங்கினள். இந்நிலையைக்கண்ட உதயணன் பெரிதும் அஞ்சி,

" கரும்பேர் கிளவி கதிர்முகை முறுவல்
... ...
பெருந்தடங் கண்ணி ! பிழைப்பொன் றுணரேன்
அரவுவாய்க் கிடப்பினும் அலர்கதிர் தண்மதி
குருவுக்கதிர் வெப்பம் ஒன்றும் இல்லை
சிறியோர் செய்த சிறுமையுண் டெனினும்
தரியாது விடார் தா நனிப் பெரியோர்
என்பது சொல்லி " (3 - 14 - 132 - 143)

இரந்து அவளது சிறுபுறம் நீவி தோடு திருத்தி நலம் பாராட்டிச் செவ்வி தேர்ந்து தழுவ முயன்றான். அந் நங்கை இவற்றானும் ஊடல் தீராமல் ஒருபால் செல்லுங் கால் அம்மாளிகை உச்சியின்மேல் இருந்து ஒரு கூகை அக் கூரிருட் பொழுதில் அஞ்சத்தகக் குழறிற்று. அவ்வொலியாலே அவள் அஞ்சி நடுங்கியவளாய் அண் ணலைக் கதுமெனத் தழுவிக்கொண்டாள். அவ்வச்ச முயக்கத்தை உதயணன் பெரிதும் விரும்பி

"மெல்லியல் மாதரொடு மேவன விளந்து
புல்லியும் தலைத்தும் புணர்ந்தும் பொருந்தியும்
அல்குலும் ஆகமும் ஆற்றநலம் புகழ்ந்தும்
அமரர் ஆக்கிய அமிழ்தெனக் கிளையோள்
தன்முலை எயிற்றுநீர் தானென அயின்றும்
ஒழுகா நின்ற காலை" (3 - 14 - 159 - 64)

என இன்பத்தில் திகழ்ந்தான்.

இந்த நிகழ்ச்சிகளை ஓவியம் போல வரைந்து இருக்கின்றார் ஆசிரியர்.

மெய்ப்பாடுகள் :

மெய்ப்பாடுகள் இலக்கியத்திற்கு மேன்மை தருவன. மெய்ப்பாடுகள் எட்டு என்பர் தொல்காப்பியனார். அவைகளைச் சுவை என்பார்கள். நாடகங்களில் மெய்ப் பாடு எனவும் காப்பியங்களில் சுவை எனவும் வழங்கப் பெறும். அதனை வடமொழியில் ரசம என்பார்கள். வடமொழி நாடகங்களில் ஒன்பது ரசமாகக் குறிப்பார் கள். தமிழில் சுவைகள் நகை, அழுகை, இளிவரல், மருட்கை, அச்சம், வெகுளி, பெருமிதம், உவகை என எட்டாக விரிப்பர். இவைகளுக்குத் தகைசான்ற நூல் களில் எடுத்துக் காட்டுக்கள் நிரம்ப இருக்கின்றன பெருங்கதையில் சிறப்பாக இவைகளைக் காணலாம். ஒன்றிரண்டு எடுத்துக்காட்டி விளக்குவாம்.

1. நகைச் சுவை : முன்னர் கூறிய மானனீகை காதற் கதையின் தொடர்ச்சியே இதற்கு எடுத்துக்

காட்டாகும். உதயணன் தன் தேவி வாசவதத்தையின் பிறை நுதலில் வரைந்த திருமுகத்தைப் படித்தறிந்த மானனீகை "தேவீ, பெருமகன் எழுதிய பேரலங்காரத் திருமுகம் அழகுடைத்து" என்றாள். அச்சொற்களுக்கு இரு பொருள் உண்டு. "உதயணனால் செய்த கோலம் அழகுடைத்து" என்பதும், "நினது முகத்தில் பொறிக்கப்பட்ட ஓலைப்பாசுரம் இனிமை உடைத்து" எனவும் பொருள்படுதல் உணர்க. மறு நாட் காலையில் அத்திருமுகத்திற்கு மறு மொழி எழுதினதை முன்பே குறித்தோம். "அருள் உடைத்தாயினும் இச் செயலை ஒழிக. காவலுள் இருந்து பேணு செய்தல் பெண்ணாயிருப்போர்க்கு ஆகா இயல்பு, நினது எண்ணத்தை மறத்தல் நகுதி" என்றாள்.

இம்மானனீகை என்பவள் யார் என்று உதயணனும் தேவியும் அறியார். கோசல மன்னனின் மகளாகத் தோன்றி ஒரு காரணத்தால் வாசவதத்தையின் தோழியாகக் கரந்து உறைபவள்-வேந்தர் குடிப்பிறந்தாளாகிய மானனீகை எழுதிய நிருபம்

"நிலத்திற் கிடந்தமை கால்காட்டும் காட்டும்
குலத்திற் பிறந்தார் வாய்ச்சொல்"

என்ற திருக்குறளுக்குச் சிறந்த எடுத்துக்காட்டாகத் திகழ்தல் அளவற்ற இன்பம் தரும். சான்றோனாகிய உதயணன் நெஞ்சம் தன் தகுதிக்கேற்ற இடத்தே சென்றது - உயர் குடிப்பிறந்தாள் அதனை மறுத்தனள். உதயணன் மீண்டும் நெருக்கினதினால் ஊழும் அங்ஙனம் இழுத்தலினால் அவள் ஒருவாறு உடம்பட்டு அரண்மனைப் பூம்பொழில் மண்டபத்தைக் குறிப்பிட்டு (தமிழ் முறைப்படி) இரவுக்குறியிடம் கூறிவிட்டாள்.

உதயணனும் அன்று இரவில் அம் மண்டபம் அடைந்தான்; அங்கே மானனீகையைக் கண்டான். ஆனால் உதயணன ஒழுக்கத்தில் வாசவதத்தை ஐயுற்று அவனைச் சோதிப்பதற்குத் தன் தோழி காஞ்சன

மாலையை அனுப்பினாள் அவளும் உதயணன் அறியாமல் அம் மண்டபத்தே ஒளிந்திருந்து நடந்ததைக் கண்டாள். தலைவிக்கு அவற்றைக் கூறினாள்.

மறுநாளும் காதலர் அம்மண்டபத்தே கூடுவர் என்பதறிந்து வாசவதத்தை மானனீகையைச் சிறைப்படுத்தி தானே சென்று மண்டபத்தில் இருந்தாள். உதயணன் புதுக் காதலியைக் காண்பதற்கு விரைந்து சென்று வாசவதத்தையை மானனீகையாகப் பாவித்து அவள் தோளைத் தொட்டான். வாசவதத்தை அதனைத் தள்ளினாள். அவன் மானனீகையே ஊடினள் என்று எண்ணி இவ்வாறு கூறினன்.

"முரசு முழங்கு தானை அரசொடு வேண்டினும்
தருகுவல் இன்னே பருவரல் ஒழியினி
மானே தேனே மானனீகாய்"

எனக்கூறி அவள் காலைப்பற்ற முயன்றான்.

வாசவதத்தையோ கால் கொடாது மறுத்தாள். அவன் அணுக அணுக அவளும் பெயர்ந்து பெயர்ந்து போயினள். இங்ஙனம் உடல் முதிரவே அவள் காலில் உதயணன் வீழ்ந்து வணங்கினன்.

அது கண்ட வாசவதத்தை கொல்லெனச் சிரித்தாள். "மிக்கோய்! கூறிய மானும் தேனும் மானனீகையும் யானன்று என் பெயர் வாசவதத்தை" என்றாள். அந்தோ அப்போது அவன் நிலைமை என்னும்!

நகைச் சுவை மூன்று வகைப்படும். முறுவலித்தல், அளவாய் சிரித்தல், பெருகச் சிரித்தல். பெருங்கதையில் இம் மூன்றிற்கும் பல எடுத்துக்காட்டுக்கள் உள்ளன. அவற்றைப் படித்து இன்புறலாம்.

வட மொழியில் இதனை ஹாஸ்ய ரசம் என்பார்கள்.

2. அவலச்சுவை: இது துன்பம் (வடமொழியில் சோகம் அல்லது கருணை என்பர்) இதற்குப் பல பகுதிகள்

உள்ளன. உஞ்சைக் காண்டம் (46) உழைச்சன விலாவணை (47). உரிமை விலாவணை, இலாவண காண்டம் (10) யூகிக்கு விலாவித்தது (19) தேவிக்கு விலாவித்தது என்ற நான்கு பகுதிகளும் அவலம் ஆகும்.

அமைச்சன் யூகி இறந்தான் என்று கருதி உதயணன்,

"மாழாந்து உயிர் வாழ்வு ஒழிகெனச்
சிதர்பொறி எந்திரம் போலச் சிதர்ந்து
தகரும் பூணும் மார்பிடைத் துயல்வர
சோரும் கண்ணினன் துளங்கி மெய்ம்மறப்ப
இடியே றுண்ட நாகம் போல
கொடியேர் சாயல் கொழுங்கவின் வாடப்
பூவிறுங் கூந்தல் புல்லென விரிய
வாசவ தத்தையும் வத்தவன் மார்பில்
மம்மர் எய்திய மயக்க நோக்கி
விம்மல் எய்திய வியன்பெருங் கோயில்
அழுகை ஆகுலம் கழுமிய பின்றை" - 2-10-106-118.

எனக் காவியத் தலைமக்கள் சோகித்தலும்,

"மாதாங்கு தடக்கை மன்னருள் மன்னன்
நளிகதிர் மண்டில நாண்முதல் தோன்றி
ஒளியிடப் பெறுஅ உலகம் போல
இருளகம் புதைப்ப மருளகத் தெய்தி
தருமமும் கருமமும் தளரச் சாஅய்
ஆழின் அல்லதை அரசியல் வழாமை
வாழ்தல் ஆற்றேன் யானென மயங்கி" - 10-132-138.

என உதயணன் சோகித்தலும் காண்க.

வாசவதத்தை தீப்பற்றிய அரண்மனையில் இறந்து விட்டாள் எனக்கருதிய காஞ்சனமாலை கல்லும் மண்ணும் உருகும்படி கத்தினள்.

"நாவலந் தண்பொழில் தண்ணார் ஓட்டிய
காவலன் மகளே கனங்குழை மடவோய்!
மண்விளக் காகி வரத்தின் வந்தோய்
பெண்விளக் காகிய பெறலரும் பேதாய்
பொன்னே திருவே அன்னே அரிவாய்

நங்காய் நல்லாய் கொங்கார் கோதாய்
வீணைக் கிழத்தீ வித்தக உருவீ
தேனேர் கிளவீ சிறுமுதுக் குறைவீ
உதயண குமரன் உயிர்ப்பெருந் தேவீ
புதையழல் அகவயிற் புக்கனை யோஎனக்
கானத் தீயிடைக் கணமயில் போல — 2-18-76-86

என்ன உருக்கம்! இன்னும் பல பகுதிகள் உள்ளன. ஓதினால் கண்ணீர்க் கம்பலைக் களவில்லை என்க

3. இளிவரற்சுவை : இளிவரல் என்றால் அருவருப்பு - வடமொழியில் குற்சை அல்லது பீபத்சு எனப்படும். உதயணன் காம இடும்பையில் இறங்கி எளியனாகிறான். இதனை இடவகன் யூகிக்குக் கூறினன்.

"போகப் பெருநுகம் பூட்டிய காலை
மாக விசும்பின் மதியமும் ஞாயிறும்
எழுதலும் படுதலும் அறியா இன்பமொடு
ஒழுகுபுனல் அகழினை உடையெனக் கிடந்த
முழுமதில் நெடுங்கடை முதற்பெரு நகரம்
தாரணி யானை பரப்பித் தலைநின்று
ஆருணி அரசன் ஆள்வதும் அறியான்
தன்னுயிர் அன்ன தம்பியர் நினையான்
இன்னுயிர் இடுக்கண் இன்ன தென்றறியான்
அவையும் கானமும் அவைவகுத் திடுவான்
அந்தி மந்திரத் தருநெறி யொரீஇத்
தந்தையொ டொறுக்கப் படாஅன் சிந்தை
அகன்உணர் வில்லா மகனே போல
தன்மனம் பிறந்த ஒழுக்கின னாகிய
பொன்னகர் தழீஇய புதுக்கோப் போலச்
செவ்வியும் கொடாஅன் இவ்வியல் புரிந்தனன்
அண்ணல்" — 2-9-184-199.

இப்பகுதி இளிவரற் சுவை காட்டுகிறது.

இனி, இராசகிரி நகரத்தே உதயணன் மாறு வேடத்துடன் சென்றபோது அந் நகர மன்னன் மகள் காமக் கோட்டத்திற்கு வழிபடச் சிவிகையில் சென்றாள் அப்போது நெருங்கிய கூட்டத்துள்ளே உதயணன்

செய்தி யறியச் சென்றான் அவனைக் காவலர் கடிந்து தடுத்தனர். அந்நிலை தனக்கு எய்தியதை நினைத்த உதயணன் தன்னுள்,

"நெஞ்சுநிறை துயரமொடு
நீக்கச் சென்றனென் நெருகல் இன்றிவண்
நீக்கப் பட்டனென், ஆதலின் நிலையா
ஆக்கமும் கேடும் யாக்கை சார்வா
ஆழிக் காலில் கீழ்மேல் வருதல்
வாய்மையா மென" — 3-6-29-36

நினைந்து வருந்தினான் இம்மொழிகளில் இனிவரற் சுவை இருத்தல் காண்க. மேலும் காஞ்சித் திணையும் அழகாக அமைந்திருத்தலைக் காண்க.

4. மருட்கைச் சுவை: இது வியப்பு என்னும் மெய்ப்பாடு. ஆச்சரியப்படுதல். வட மொழியில் அற்புதம் என்பர்.

இறந்தோரை எழுப்பித்தரும் வித்தையை உடைய ஒரு முனிவனைப் பற்றி அமைச்சர்கள் 'என்னே, இஃதென்னே' என வியந்தனர்.

"இருநிலம் புகுதலும் ஒருவிசும் பிவர்தலும்
வருதிரை நெடுங்கடல் வாய்க்கொண் டுமிழ்தலும்
மந்தரம் ஏந்தலும் என்றிவை பிறவும்
கண்டும் அறிதும் கண்கூ டாக
செத்தோர்ப் புணர்க்கும் விச்சையொடு புணர்ந்தோர்
கேட்டும் அறியலம் வீட்டருஞ் சிறப்பின்
புண்ணியம் உடைமையின் நண்ணினை மிங்
கொருதலையாகத் தருதல்வாய்" — 3-4-86-94

என்று வியத்தலும்.

விரிசிகையின் அழகைக் கண்ட நகர மாந்தர் —

"குடிமலி கொண்ட கொடிக் கோசாம்பி
வடிநவில் புரவி வந்தவர் பெருமகற்கு
ஆக்கம் வேண்டிக் காப்புடை முனிவர்
அஞ்சுதரு முதுகாட்டு அஞ்சார் அழலின்

விஞ்சை வேள்வி விதியிற் றந்த
கொற்றத் திருமகள் மற்றியவள் தன்னை
ஊனூர் மகளி ருள்வயிற் றியன்ற
மானேர் நோக்கின் மடமகள் என்றல்
மெய்யன் றம்மொழி பொய்யென்போரும் (4-17-22-30)

இதில் காணும் வியத்தலும் ஆராய்க.

5. **அச்சச்சுவை:** அச்சம் ஒரு சுவையா என்று மேற்கத்தியர் கேட்பார்கள். அதையும் ஒரு சுவையாக்குவர் நல்லிசைப் புலவர்கள். அவர்கள் ஆற்றல் காண்க. வட மொழியில் இதனை பயம் என்பார்கள்.

உஞ்சை நகரில் தீப்பற்றிக்கொண்டது. மக்கள் அஞ்சி ஓடினார்கள். அன்னார் மனோநிலை காண்க

"ஈற்றுப் பெண்டிர் இளமகத் தழீஇ
ஊற்றுநீர் அரும்பிய உள்ளழி நோக்கினர்
காற்றெறி வாழையிற் கலங்கி மெய்ந்நடுங்கி
ஆற்றேம் யாமென்று அலறினர் ஒருசார்
போது கொண்டணியில் பொறுக்க லாற்றுத்
தாது கொண்டிருந்த தாழிருங் கூந்தலர்
கருங்கேழ் உண்கண் கலக்கமொ டலரப்
பெருஞ்சூற் பெண்டிர் பேரழல் நோக்கி
வருவோர்க் கண்டு வணங்கினர் ஒருசார்
தவழும் புதல்வரை ஒருகையாற் றழீஇப்
பவழம் சேர்ந்த பல்காழ் அல்குலர்
அவிழ்ந்த பூந்துகில் அங்கையில் அசைஇ
நகைபூங் கோதையொடு நான்ற கூந்தற்கு
மிசைக்கை காணாது புகைத்தீ எழுப்பப்
படைத்தோன் குற்றம் எடுத்துரைஇ இறக்கேம்
அங்கித் தேவன் அருளென அயன்மனைப்
பொங்குநீர்ப் பொய்கை புக்கனர் ஒருசார்
(1-43-136-152)

அச்சம் எவ்வாறு நெஞ்சைக் கலக்கியது காண்க

6. பெருமிதச் சுவை: பெருமிதம் என்றால் வீரம். இதன் பிறப்பிடம் கல்வி, தறுகண், புகழ், கொடை என்ற நான்கு. அடியிற்கண்ட பகுதியில் இந்நான்கு வருதல் காண்க.

உதயணன்பால் கற்று கல்வியில் தேர்ந்த பிரச்சோதன மன்னன் மக்கள் அரங்கேறியபோது ஆன்றோர் அம்மன்னனை நோக்கிக் கூறியவை.

"பனிவிசும் பியங்குநர் பாடோர்த்து நிற்பக்
களிகொள் இன்னிசைக் கடவுள் வாழ்த்தி
தேவ கீதமொடு தேசிகந் தொடர்ந்த
வேத இன்னிசை விளங்கிழை பாட
திருந்திழை மாதர்கொல் தெய்வங் கொல்லென
இருந்தவர் தெருளார் இசைபுகழ்ந் தேத்தி
நூலும் செவியும் நுண்ணிதின் துணித்தே
யாழும் பாடலும் அற்றம் இன்றி
விலக்கும் விடையும் விதியின் அறிந்து
துளக்கில் கேள்வித் தூய்மையின் முற்றி
வத்தவ நாடன் வாய்மையிற் றருக்கும்
கொற்ற வீணையும் கொடுங்குழை கொண்டனள்
இறைகெழு குமரரும் ஏனை விச்சை
துறைநெறி போகிய துணிவினர் ஆயினர்
தேயாத் திருவ நீயும் தேரின்
நிலங்கொண்ட முனியாய் கலங்கோட கடவாய்
வேள்வியிற் றிரியாய் கேள்வியிற் பிரியாய்
இனையோய் தாணிழல் தங்கிய நாடே
வயிர வெல்படை வானவர் இறைவன்
ஆயிரங் குஞ்சரத் தண்ணல் காக்கும்
மீமிசை உலகினும் தீதகந் தன்றெனத்
தொல்லிசை யாளர் சொல்லெடுத் தேத்த"
(1-37-127-148)

இதில் காணும் வீரச் சுவைகளைக் கண்டு இன்புறலாம்.

7. வெகுளிச் சுவை: வெகுளி என்றால் சினம் இதுவும் ஒரு சுவையா என்பீர். மெய்ப்பாட்டில் சினம் வெகு வினைகள் செய்யும். தொல்காப்பியனார் வெகுளியின் நிலைக்களன்-உறுப்பறை, குடிகோள், அலை, கொலை என, நான்கென்பர்.

உதயணன் வாசவதத்தையை வஞ்சகமாகக் கவர்ந்து போயினன் என்ற செய்தியை மறமாச்சேனன் என்ற மன்னன் வராகன் என்ற பணியாளிடம் கேட்டதும் அவ்வேந்தன் சினந்து,

"செருச்செய் நெடுங்கண் தீயெனச் சிவப்ப
பிரச்சோதன னெனும் பெரும்பெயர் விளக்கம்
மகிழ்ச்சி எய்தி வத்தவற் றெளிந்த
இகழ்ச்சி அவற்றுள் இரங்கிற் றின்றெனச்
சுற்ற மாக்களைச் சுடுவான் போலப்
பொற்றார் மார்பன் பொங்குபு வெகுண்டு
முகைநகை முத்தொடு தகைமுடி தயங்க
அருவரை அகலத் தாரம் புரளத்
திருமுடி அண்ணல் தீப்படச் சீறி
எழுபுறழ் திணிதோள் எடுத்தனன் ஓச்சி
பொழிமணித் திண்தோள் பொறிபடப் புடைத்து
மாற்று சிங்கத்தின் மறக்குறவ கேட்ட
ஏற்றுச் சிங்கத்தின் இடித் தெழுந்துரறி
எள்ளிச் சிறந்த இன்னா மன்னனைப்
பற்றுபு தம்மென்"— (1-47-100-121)

எனக் கட்டளை இட்டான். இதனைக் குடிகோள் நிலைக் களனாகப் பிறந்த வெகுளி என்பர். வெகுளியை வட மொழியில் ரௌத்திரம் என்பார்கள்.

8. உவகை: உவகை என்றால் மகிழ்ச்சி அது செல்வம், அறிவு, புணர்ச்சி, விளையாட்டு முதலியவை களில் தோன்றும் மகிழ்ச்சியாகும். எனவே காமம் பற்றி வரும் சுவை எல்லாம் இதன்கண் வரும். மேலே காட்டிய ஊடலும் கூடலும் இதற்கெடுத்துக் காட்டுக்களாகும். அவலமும் காமச்சுவை சார்பாகத் தோன்றின் மிக இனிமை உடைத்ததாகும். இன்பம் பற்றிய அவலமும் இன்பச் சுவையே ஆகும். ஆங்கிலக் கவிஞர் ஷெல்லி என்பவர் கூறுகிறார்.

(Our sincerest laughter with some pain is frought on sweetest songs are these that tell of saddest thought)

"இன்பம் எழும்பும் எம் இதையோ
இமியோர் துயரம் எடுத்தாளும்
துன்ப எண்ணம் துளிர்த்திருக்கும்
துயர வாழ்வைக் கொண்டிருப்போம்."

உவகையை வடமொழியில் சிருங்காரம் என்பர்.

இந்த வகையில் எட்டு மெய்ப்பாடுகளுக்கும் எடுத்துக் காட்டுக்கள் பெருங்கதையிலிருந்து கூறினோம். இனி வட மொழியில் ஒன்பதாவது சுவை ஒன்று கூறப்படுகிறது. அது சாந்தம் அல்லது அமைதி எனப்படும். அது தமிழில் எடுத்தாளப் படவில்லை. பெருங்கதையில் அமைதிக்கும் எடுத்துக் காட்டு உண்டு. உதயணன் முதலியோர் உலகப் பொருள்களிலும் ஆட்சியிலும் வெறுப்பு உற்று தருமோபதேசம் பெற்று தவம் செய்த போது சாந்த நிலை பெறுகிறார்கள். அந்தத் துறவறநிலை அமைதிச் சுவைக்கு எடுத்துக் காட்டு ஆகும். உலக வாழ்வில் உவகை முதலிய எட்டு மெய்ப்பாடுகளையும் துய்த்த பிறகு இறுதியில் பெறுவது சாந்த நிலை அது தான் வாழ்க்கையின் இறுதிநிலை. பெருங்கதை வெறும் உலகியல் சுவைகளைத் துய்ப்பதற்கு மட்டுமேயன்றி ஆன்மீக அமைதி பெறுவதற்கும் ஆக வரையப்பட்ட நூல் ஆக்கி விட்டார் நம் புலவர் பெருமான்.

தண் தமிழ்வளம் ஆளப்பட்டமை

தான் எடுத்துக் கொண்டது வட நாட்டுக் கதையாக இருந்தபோதிலும் கம்பர் முதலான தகைசான்ற நல்லிசைப் புலவர்கள் எடுத்தாண்ட முறையேபோல் அது வரை தமிழ் மொழியில் தோன்றின சிறந்த தமிழ் வளத்தைக் கொங்குவேளிர் நன்கு எடுத்தாண்டிருக்கின்றார். சிறப்பாகச் சங்க நூல்களில் இருந்த அறிவு சான்ற கருத்துக்களை ஆங்காங்கு போற்றி ஆண்டிருக்கின்றார் ஆகவே தமிழ்ப் பெருங்கதையில் பண்டைத் தமிழ் வளம் மிகக் காணப்படுகின்றது. சங்க காலத்திறுதியில் தமிழ் இலக்கியத்தில் ஒரு மறுமலர்ச்சி உண்டாயிற்று. அப்போது பழைய நலன்கள் எல்லாம் புதிய உருவத்தில் தோன்றின. அந்த நிலையே மறுமலர்ச்சி நிலையாகும். அந்நிலை பெருங்கதையில் நன்கு விளங்குகிறது. இதைப் போலவே சிந்தாமணி, சிலப்பதிகாரம் மணிமேகலை முதலிய பெருங் காப்பியங்களில் விளங்கின. பெருங்கதையில் செய்யுட்போக்கும் சீரிய நடையும் பொருட்

செறிவும் சங்கத் தொகைப் பாட்டுக்களை ஒத்து அமைந் திருப்பதே சான்றாகும்.

இந்தக் காரணத்தினல்தான் இப்பெருங் கதை யானது நம் பண்டைத் தமிழ் நூல்களுக்கு நுண்ணுரை கண்டுரைத்த அடியார்க்கு நல்லார் பேராசிரியர் முதலிய உரையாசிரியர்கள் எல்லோருக்கும் மேற்கோள் நூலாக அமைந்தது.

மேலும் இப்பெருங்கதையில் திருக்குறள், நாலடி யார் முதலியவற்றில் கூறப்படும் பொருள்கள் தக்க இடங்களில் அழகாக எடுத்தாளப்பட்டிருக்கின்றன.

1. திருக்குறளை எல்லாப் புலவர்களும் எடுத்தாண் டிருந்தாலும், இந்நூலில் எடுத்தாண்டிருக்கும் முறை சிறந்ததாக இருக்கிறது. இந்நூல் உறுப்பினர்கள் அதாவது காப்பியத் தலைவன் முதலியோர்கள் கூற்றோடு திருக்குறள் கருத்துக்கள் ஒன்றியிருத்தல் பாலோடு தேன் கலந்தாற்போல இருக்கின்றன. இதனைப் படியுங்கள்.

"வியன்கண் ஞாலத்து இயன்றன கேண்மின்
நன்ருய் வந்த ஒருபொருள் ஒருவற்கு
நன்றேயாகி நந்தினும் நந்தும்
நன்ருய் வந்த ஒருபொருள் ஒருவற்கு
அன்ருய் மற்றஃ தழுங்கினும் அழுங்கும்
தீதாய் வந்த ஒருபொருள் ஒருவற்குத்
தீதே யாகித் தீயினும் தீயும்
தீதாய் வந்த ஒருபொருள் ஒருவற்கு
ஆசில் பெரும்பொருள் ஆகிலும் ஆகும் எனச்
சேயவர் உரைத்ததைச் செவியிற் கேட்டும்' (2-1-57-66)

இந்த உரைகள்

"நல்லவை எல்லாம் தீயவாம் தீயவும்
நல்லவாம் செல்வஞ் செயற்கு" (குறள் 375)

எனவரும் குறளில் தொனிக்கின்றன. அக்குறளுக்குச் செய்யுளுரை போலப் பெருங்கதை அமைந்திருக்கிறது. மேலும் ஆங்கிலத்தில்,

'ஆண்வாத்திற்கொத்தது பண்டம் பெண்வாத்திற் கொவ்வாது'

'ஒருவனுக்கு அமிழ்தம் மற்றவனுக்கு நஞ்சு'

என்ற பழமொழிகளை ஆய்ந்தறிக.

2. உதயணனைக் காதலித்த வாசவதத்தை தன் தந்தை தனக்கு வேறிடத்தே மணம் பேசுகிருர் என்று கேள்வியுற்றபோது நொந்து கொண்டவள்

"விதுப்புறு நடுக்கமொடு விம்முவனள் ஆகி
இதுமெய் யாயின் இன்னுயிர் வேண்டி
வாழ்வோர் உளரெனின் சூழ்கதன் வினையென
ஆவி நுண்டுகில் யாப்புறுத் தாயினும்
சாவ துறுதியான்" (1-36-61-65)

என்று கூறுகின்ருள். இப்பகுதியைப் பாடுங்கால், வேளிரின் நெஞ்சத்தே

"செல்லாமை உண்டேல் எனக்குரை மற்றுநின்
வல்வரவு வாழ்வார்க் குரை" (குறள் 1151)

என்னும் திருக்குறள் நினைவுபட்டிருத்தல் வேண்டும் எனலாம்.

3. இனி பிரச்சோதனன் தன் மக்கள் கலை பயின்று நிரம்பினர் என்று தன் தேவியர்க்குக் கூறியபொழுது

"திருநுதல் ஆயத்துத் தேவியர் நடுவண்
பெற்ற நாளினும் பெரும்பூப் புதல்வரை
கற்ற நாள்வயிற் களிசிறந் துரைஇ
மகிழ்ச்சிக் கிளவி மழையென இசைப்ப" (1-37-78-81)

என்ற வேளிர் மொழிகள்

"ஈன்ற பொழுதில் பெரிதுவக்கும் தன்மகனைச்
சான்ருே னெனக்கேட்ட தாய்" (69)

என்னும் திருக்குறளின் விளக்கமன்ருே.

4. உதயணனும் வயந்தகனும் வாசவதத்தையையும் காஞ்சனமாலையையும் பிடியின் மேலேற்றிக்கொண்டு சயந்தி நகரம் செல்லும் வழியில் பிடி நோயுற்று விழுந்தது. பாழும் புதரில் விழுந்தது. இவ்விரண்டும் போக

துயரம் உற்றுப் பெண்களைக் காவல்புரி என்று சொல்லு கையில் உதயணன் சொன்னது,

" கவற்சியில் கையறல் நீக்கி முயற்சியில்
குண்டுதுறை இடுமணல் கோடுற அழுந்திய
பண்டிதுறை யேற்றும் பகட்டினைப் போல
இரிவேம் இவ்விடர் நீக்குதற் கியைந்தனம் "
(1 – 53 – 52 - 55)

என்ற கருத்து

"மடுத்தவா யெல்லாம் பகடன்னான் உற்ற
இடுக்கண் இடர்ப்பா டுடைத்து" (குறள் 624)

என்ற குறளில் வந்ததல்லவா ?

5. உதயணனைச் சூழ்ந்த வேடர்கள் படைவீரர்களால் தோல்வியுற்று வெருண்டோடியதைப் புலவர்

" மத்துறு கடலில் தத்துறு நெஞ்சினர்
பைவிரி நாகத் தைவாய்ப் பிறந்த
ஒலிப்புயிர் பெற்ற எலிக்கணம் போல
ஒழிந்தோர் ஒழிய " (1-56-272-275)

என்றதில்

" ஒலித்தக்கால் என்னும் உவரி எலிப்பகை
நாகம் உயிர்ப்பக் கெடும் " (குறள் 762)

என்ற குறள் நினைவுக்கு வருகிறது.

6. பிரச்சோதனனிடம் சென்ற யூகியை அவன் படைப்பை மெச்சி இரு நங்கைகளை அவனுக்கு மணம் செய்வித்து உதயணனிடம் அனுப்பும்போது சொன்ன வழியனுப்பும் சொற்கள்

" நவிற்றொறும் இனிய ஞானம் போலப்
பயிற்றொறும் இனியநின் பண்புடைக் கிழமை
உள்ளுந் தொறுள்ளுந்தொ றுள்ளம் இன்புற
பிரிவுறு துன்பம் எம்மாட் டேயத்" (5-7-148-150)

என்ற கருத்து

" நவிற்றொறு நூனயம் போலும் பயிற்றொறும்
பண்புடை யாளர் தொடர்பு" (குறள் 783)

7 தனக்கு ஒரு மகன் வேண்டுமென விரும்பின உதயணனை நோக்கி இயக்கன் சொன்னதில் நட்பின் இயல்பைப்பற்றி

" உடையழி காலை உதவிய கைபோல்
நடலை நீர்த்தல் நண்பன தியல்பு " (5-3-39-40)

என்ற சொற்களின் பொருள்.

" உடுக்கை இழந்தவன் கைபோல் ஆங்கே
இடுக்கண் களைவதாம் நட்பு (கு - 788)

என்ற குறளில் வந்ததேயாம்.

இவ்வெடுத்துக் காட்டுக்களால் கொங்குவேளிர் திருக்குறளை எத்துணைச் சுவைப்படத் துய்த்துச் சீரணித்துத் தமதாக்கிக்கொண்டார் என்று கூறவும் வேண்டுமா?

இயற்கை வருணனைகள் :

ஆங்காங்கே வருணிப்பதற்கு வரும் இயற்கைப் பொருள்களை எவருடைய நெஞ்சையும் அள்ளும்படியான உவமைகளைக் கொண்டு புகட்டுகிறார். அவற்றில் கடல், நிலம், வான், பொழுது இவைகளைப்பற்றிய உவமைகள் கணக்கில. பொழுதைப்பற்றி வருணிக்கையில் எப்புலவரும் எடுத்தாளாத சிறப்பில் அதனைச் சித்திரிக்கின்றார்.

" ஆண்கடன் அகறல் அதுநோன் றேழுகுதல்
மாண்பொடு புணர்ந்த மாசறு திருநுதல்
கற்புடை மகளிர் கடன்எனக் காட்டி
வினைக்கும் பொருட்டும் நினைத்து நீத்துறையுநர்
எல்லை கருதிய திதுவென மெல்லியற்
பணைத்தோள் மகளிர்க்குப் பயிர்வன போல
மனைப் பூங்காவின் மருங்கிற் கவினிய
பைந்தார் முல்லை வெண்போது நெகிழ " (3-7-7-13)

என்று மாலைப்பொழுது வருகின்றதாம். நங்கையர்கள் பகலெல்லாம் ஆடவர்களை விட்டுத் தன்னந் தனியே வருந்திக் கொண்டிருந்தார்கள். மாலை வந்து விட்டது. இனிச் சிறிது பொறுத்தல் வேண்டும். ' ஆக்கப் பொறுத்தவர் ஆறப் பொறுக்க வேண்டுமல்லவா?

இல்லறத்தை நடத்தப் பொருளும் பெறவேண்டும். அந்த் உழைப்பிற்காகப் பகலில் பிரிய வேண்டி வந்தது. கற்புடைய நங்கையர் அப்பிரிவுத் துன்பத்தை நோன்றலும் ஆயிற்று. இனி அவர்கள் திரும்பி வரக்கூடிய மாலைப் பொழுதும் இது தான் என்று கூறுவது போல் மாலைப் பொழுதும் தன் முல்லை நகை தோன்ற ஆறுதல் கூறிக் கொண்டு வருகிறதாம்.

(முல்லைத்துறைப் பிரிவினைக் காட்டும் இலக்கியப் பண்பு)

மேலும் தாம் ஈட்டிய பொருளை எல்லாம் வறியோர்க்கு உதவிப் புகழும் புண்ணியமும் எய்தமாட்டாராய்த் தமக்கும் ஒரு அந்திப் பொழுது உண்டு, அது அணித்தாய் வரும் என்பதனைச் சிந்தியாமல்

'' பெறுக்கைச் செல்வம் வீசுதல் ஆற்றுது
மறுத்துக் கண்கவிழ்ந்த மன்னர் போல
வாசம் அடக்கிய வாவிப் பன்மலர்
மாசில் ஒள்ளொளி மணிக்கண் புதைப்ப''வும் (11-15-18)

அங்ஙனம் குவிந்த மலர்களை நினைத்துப் பசியோடு வந்த அழகிய வண்டுகள் தாம்

'' பெருமை பீடற நாடித் தெருமந்து
ஒக்கல் உறுதுயர் ஒப்புதல் உள்ளிப்
பக்கம் தீர்ந்த பரிசிலர் உந்தவா
செறுமுகச் செல்வரில் சேராது'' (19-3-2)

போனற் போல அம்மலர்களைச் சேராமல்

" உறுபொருள் உள்ளது உவம்ப வீசி
வெறுவது விடாக விழுத்தகு நெஞ்சத்து
உரத்தகை யாளர் சுரத்துமுதல் சீறார்
எல்லுறு பொழுதில் செல்லல் ஓம்பி
மகிழ்மதம் அயின்றிசின் ஆங்கு மல்லிகை
அவிழ்தா தூதி அளிதுயில் அமர" (23 28)

வருகின்றது. இந்த அருமையான நினைவுகள் எல்லாம் அந்தச் சிறு மாலைப் பொழுதில் முகிழ்கின்றன. இது எத்துணைச் சிறந்த புலமை! தேடிய எல்லாம் புதைத்து விட்டுத் தம் அந்திக் காலத்தே வாய் வாளாது வறிதே அவற்றை எல்லாம் வைத்து இறந்து போகும் மாந்தர்

அக்காலத்தும் இருந்தார்கள். எக்காலத்தும் இருப்பார்கள் அல்லவா? இக்கருத்து அடியிற் குறித்த நாலடியார் வெண்பாவில் இருத்தல் காண்க.

> "மல்கு திரைய கடற்கோட் டிருப்பினும்
> வல்லூற் றுவரில் கிணற்றின்கட் சென்றுண்பர்
> செல்வம் பெரிதுடைய ராயினும் சேட்சென்றும்
> நல்குவார் கட்டே நசை" (263)

இவ்வுலகில் இறைவன் இரு திறத்தாரைப் படைத்துள்ளான். பண்பும் பசியும் உள்ள நல்லிசைப் புலவனைப் போற்றாத செல்வரையும், பண்பினைப் போற்றிப் பசியை நீக்கும் புலவரையும் வைத்துள்ளான். மாலைக்காலத்தே புல்லர் போல தாமரை மலர்கள் வண்டு என்ற பாணனை வரவேற்காது விட்டன. அதே நேரத்தில் அவ்வண்டுப் பாணனை மல்லிகை வள்ளல் முகமன் கூறி வரவேற்றுப் புதிய தேனை ஊட்டும். மாலைப்பொழுதிலே அவ்வண்டைத் தன் இதழ்ப் படுக்கையில் அமர்த்தித் துயில் கொள்ள இடம் தருகிறான் இது என்ன வளமையான உவமை! இனியும் அம்மாலையிலே கருங்கால் நாரைகள் தொலைவிலுள்ள தடாகங்களுக்குச் சென்று ஆரல் மீன்களைக் கொத்திக் கொண்டுத் தாம் உண்ணாது தம் குஞ்சுகளை (பார்ப்பு) நினைத்து தம் கவுளில் அடக்கிக் கொண்டு குஞ்சுகள் உறங்கும் வயல்களுக்குப் பறந்து வந்து உண்ணக் கொடுக்கும். இந்த இயற்கைச் செய்கைகள் எப்படிப்பட்ட அழகிய உவமைகள்!

இந்த மாலைப் பொழிதின் உவமைகள் எல்லாம், உதயணனும் பதுமாபதியும் ஒருவரை ஒருவர் கண்டமையால் ஒத்த அன்புடையவர்களாகி இருக்க, அதனையே சிந்தனை கொண்டு மாலைப் பொழுதைக் கழிக்கும்போது ஏற்பட்ட நினைவுகள். (கண்ணுறு கலக்கம் என்ற பகுதியில் (3-7) வருணிக்கப்பட்டவைகள்) பிறகு அன்றிரவு முழுதும் கலங்கிக் கொண்டிருந்தனர் என்று நூலாசிரியர் மேலும் வருணிக்கத் தொடங்குகிறார்.

வேளிர் வடநாட்டுக் கதையை நார் ஆக ஆக்கிச் செந்தமிழ் பூங்காவில் மலர்ந்த தமிழ் பண்புகளாகிய

நறுமலர்களைத் தொடுத்து இந்நூலை மாலையாக்குகின்றார் எனலாம். ஆகவே இக்கதைக் காப்பியம் நறுந் தமிழ் மணமே வீசுகின்றது அல்லவா ?

செந்தமிழ் வளம் (நாட்டு வளம்)

கொங்குவேளிர் செந்தமிழ் வளத்தை வெகு நன்றாக ஆராய்ந்து அவற்றைத் தம் நூலில் ஆண்டிருக்கிறார். அதில் முதல், கரு, உரி, என்னும் முப்பொருளையும் நினைந்து அவற்றை அழகுற அமைத்த இடங்கள் பலவுள என்று எடுத்துக் கூறலாம்.

உஞ்சையிலிருந்து உதயணன் வாசவதத்தையைக் கைப்பற்றிக்கொண்டு செல்லும்வழியில் பலவகைப் பட்ட நிலங்களைப் பாடுதற்குத் தகுந்த வாய்ப்புக்களை உண்டாக்கிக் கொள்ளுகிறார். வடநாட்டில் இப்படிப்பட்ட வள நிலங்கள் உண்டோ இல்லையோ; இருப்பதாக நெஞ்சில் கொண்டு அவைகளைத் தமிழ் நாட்டிலும் தமிழ் இலக்கியங்களிலும் கண்டவாறு வருணிக்கின்றார். அவற்றுள் முல்லை நிலமாகிய முதற் பொருளை நினைந்த வுடன் புலவர் பெருமானுக்கு அந்நிலத்தில் எஞ்சிய முதற் பொருளும் கருப் பொருளும் உரிப் பொருளும் உள்ளத்தே தோன்றுகின்றன. முல்லைக்குப் பெரும் பொழுது கார் காலமாகும், சிறுபொழுது மாலையாகும். அக்காலத்து வெப்பமும் தட்பமும் மிகாது இடை நிகர்த்ததாகி ஏவல் செய்யும் இளைஞருக்கு நீரும் நிழலும் பெறுதலில் களி சிறந்து மாவும் புள்ளும் துணையொடு இன்புற்று விளையாடுவன கண்டு தலைவற்கும் தலை விக்கும் காமக் குறிப்பு மிகுமன்றோ? புல்லை மேய்ந்து ஏறோடு பசு கன்றுடன் மன்றில் புகவும் தீங்குழல் இசைப் பவும் பந்தலில் முல்லை மணம் வீசவும் தலைவற்கும் தலைவிக்கும் காமம் சிறக்கும் பொழுது மாலையாகும் என்று உரையாசிரியர் கூறுவர். அவ்வாறு கூறிய உரைகளை நன்கு உணர்ந்த கொங்குவேளிர் பெருங் கதையில் அப்பண்புகளை வாய்த்திருக்கிறார்.

"பொருள்வயிற் பிரிவோர் வரவெதிர் ஏற்கும்
கற்புடை மாதரிற் கதுமென உராஅ
முற்றுநீர் வையகம் முழுது முவப்ப
கருவி மாமழை பருவ மோடெதிர
பாவைப் பேரளவம் பருகுழ நிமிர்ந்து
கொண்மூ விதானம் தண்ணிதிற் கோலி
திருவில் தாமம் உருவுபட நாற்றி
விடுசுடர் மின்னொளி விளக்க மாட்டி
ஆலி வெண்மணல் அணிபெறத் தூஉய்
கோல வனப்பிற் கோடணை போக்கி
அதிர்குரன் முரசின் அதிர்த லானது
தூநிறத் தண்டுளி தானின்று சொரிந்து
வேனில் தாங்கி மேனி வாடிய
மண்ணக மடந்தையை மண்ணுநீ ராட்டி
முல்லைக் கிழத்தி முன்னருள் எதிர
பல்லோர் விரும்பி பரந்துகண் அகன்று
பொருள்வயிற் பிரிந்து பொலங்கல வெறுக்கையொடு
இருள்வயின் வந்த இன்னுயிர்க் காதலன்
மார்பகம் மணந்த நேரிழை மடைந்தையர்
மருங்குல் போலப் பெருங்கவின் எய்திய
சிறுகொடி ஊழ் பரப்பி மற்றவர்
முறுவல் அரும்பிய முல்லை அயல
குரவுந் தளவும் குருந்துவ் கோலும்
அரவு கொண்டரும்ப அறுகால்வண்டினம்
அவிழ்பதம் பார்த்து மகிழ்வன முரலக்
கார்வளம் பழுனிக் கவினிய கானத்து"

(1-49-76-101)

நிகழும் நிகழ்ச்சிகள் ஆராயத்தக்கன. மாரிக்கால வருணனை வெகு சிறப்பாக உணர்த்தப்பட்டது. வள்ளுவர் வான்சிறப்பை எவ்வாறு போற்றுகிறார். மழையினால் தமிழர்கள் அடையும் நன்மை இவ்வடிகள் உணர்த்துகின்றன. இந்த அடிகளில் அமைந்துள்ள உவமையை நன்கு போற்றுவோமாக.

இந்த வகையில் முல்லைநிலம் கடந்தபோது நெஞ்சில் வாய்ந்த உணர்ச்சிகளைக் கூறியது போல, மருத நிலம் கடந்த போது அந்நிலத்திற்குரிய முதல், கரு, உரிப் பொருள்களைத் தக்க உவமைகளோடு வருணிக்

கின்றார். பிறகு குறிஞ்சி நிலம் கடந்த போது அதற்குரிய முதல் கரு உரிப்பொருள்களை வருணிக்கின்றார். பாலை நிலம் கடந்தபோது அவ்வாறே வருணிக்கின்றார் (1-49, 50-52)

தலைவனும் தலைவியும் போகும்போது நருமதை ஆற்றைக் கடக்கின்றார்கள். அப்போது அவ்வாற்றின் அழகுகளை வருணிக்கின்றார் புலவர். நருமதையைக் கண்டிருந்தாரோ இல்லையோ காவிரியைக் கண்டிருப்பார். அதன் வருணனையே நருமதைக்கும் சூட்டியிருப்பார். அவ்வருணனைகள் தமிழ்நாட்டுப் பண்புகளைத் தெள்ளென விளக்குகின்றன.

இயற்கைவளம்

(குறிஞ்சி நிலம்)

இனிப் புலவர் பெருமான் குறிஞ்சி நிலத்தையும் அந்நில மக்களின் வாழ்க்கை வளங்களையும் வருணிக்கையில் தாம் கொங்கு மண்டலத்தில் நேரில் கண்ட கிழக்கெல்லை கொல்லி மலையையோ அல்லது வடக்கெல்லைதலைமலை, தாளவாடி, பருகூர் மலைகளையோ அன்றி மேற்கெல்லை நீலகிரி வெள்ளிமலை ஆனைமலைத் தொடர்களையோ வருணிக்கிறதாகத் தோன்றும். ஆனைமலைத் தொடரின் அடியில் திருமூர்த்தி மலைக்கு அவர் சென்றிருக்கலாம். ஏனெனில் அங்கே சமணர் ஆதிக்கம் அன்னாளில் இருந்தது. தீர்த்தங்கரரின் திருவுருவம் செதுக்கப் பெற்ற பெரும் உருண்டைப் பாறையின் அருகிலே நீர் வீழ்ச்சியும், அழகிய நீரோடையும், காட்டு மக்கள் குறிச்சிகளும் இன்றும் இருக்கின்றன. அக்காட்டு மக்களின் வாழ்க்கை நலங்களையும் ஆடல் பாடல்களையும் கண்டு களித்திருக்கலாம். அங்கே அகன்ற பாறையின் மேலே வெட்டப்பட்டிருக்கும் கல்வெட்டினால் அது அமண சமுத்திரம் எனப்பெயர் உற்றிருந்தது என அறிகிறோம்.

உதயணனும் வாசவதத்தையும் மலைவளம் காணச் சென்று கான்யாற்றுக் கடும் புனலாடியும் பலநிற மலர்கள் பூத்து, மேல் மூடியைத் திறந்த ஆபரணப் பெட்டியைப் போலத் தோன்றும் குறுவாய்ச் சுனை நீரில் முடிவொலி யைப் பிறப்பித்து அத்தாளத்திற்கேற்பப் பாடியும் காட்டு அரமகளிர் போன்ற குழையர், கோதையர், இழையர், இணர்த்தாழயர் தாரிணர்களும் ஆகிய பலவகை மகளிர் இடைநின்று அவர்களுடைய ஆடலைக் கண்டு பாடல் களைக் கேட்டு இன்புற்றும் பாறையாகிய உரலில் ஐவன நெல்லைச் சொரிந்து யானைக் கொம்பாகிய உலக்கையால் தம் ஐயருடைய இயல்புகளைப் பாடிப் புகழ்ந்து பாசவல் இடிக்கும் வேட மகளிருடைய அம்மனை வள்ளைப் பாட்டைக் கேட்டும் அருவியாடியும் சுனைவிளையாடியும் பூங்குழை மகளிர் பொன்வள்ளத் தேந்திய தேறலையும் மதுவையும் உண்டு அம்மலைச் சாரலில் உண்டாட்டயர்ந் தனர்." உடன் வந்த மகளிரும் பூக் கொய்து நீராடிக் குரவையாடிப் பந்தாடி விளையாடினர். இதனை உண்டாட்டுத் தலைப்பின் கீழ் வேளிர்,

"கான்யாற்றுக் கடும்புனலாடி
மணிநிழற் பாறை மருங்கில் பலகி
சத்திகை தொடுத்தும் பித்திகை பிணைத்தும்
சித்திர மாகச் செந்தளிர் வாங்கி

(2- 14- 8-30)

என்று கூறுகிறார், இந்த வளங்களை கொங்கு நாட்டு மலைத் தொடர்களில் காணலாம்.

கதைத் தலைவர் தலைவியர் முதலியோர் பண்புகள்

பெருங்கதையில் வரும் கதாநாயகர்கள் யார் என்ற கேள்வியை எழுப்பும்போது மற்ற காவியங்களைவிட இதில் ஒரு அற்புதமான நிலை எழும்புகிறது. சில சமயங் களில் மயக்கமும் தோன்றுகிறது. ஆங்கிலத்தில் தாக்கரே (Thackeray) என்ற ஆசிரியன் தன் நூல் ஒன்றின் தலைப்பு "தலைவன் இல்லா நவீனம்" "A nove.

without a Hero" என்று வரைந்தான். அதுபோலவே பெருங்கதையிலும் குறிப்பிட்ட ஒரு தலைவன் என்று கூறுமல் பல தலைவர்களைக் கொண்ட காவியம் எனவும் கூறலாம். ஏனெனில் பஞ்சதந்திரம் போல நோக்கப் படும் சங்கிலிப் பின்னல் என்னக் கதைகள் போகின்றன. ஆகவே தலைவர்கள் பலர் இருக்க முடிகிறது. உதயணன் எல்லாரிலும் சிறந்த கதாநாயகனுக இருந்த போதிலும், வாசவதத்தை சிறந்த கதாநாயகியாக இருந்தபோதிலும் யூகி, உருமண்ணுவா, பிரச்சோதனன், பதுமாபதி, மானனிகை முதலியவர்களும் சிறந்த பாத்திரங்களாக இருக்கின்றனர். அன்னுர்களுடைய சிறப்பைக் குறைத்துச் சொல்ல வகையில்லை. மேலும் உதயணனைப் போலவே யூகியும் உருமண்ணுவாவும் நரவாணதத்தனும் தம்தம் பகுதியில் சிறந்த தலைவர்களாகவும் விளங்குகிருர்கள். அதுபோலவே வாசவதத்தை போல பதுமாபதியும், மானனீகையும் விளங்குகிருர்கள். இவர்கள் எல்லாரும் சிறந்த கதாபாத்திரங்கள்தாம்.

இனி இங்கே நாம் கூறுவது மட்டுமல்ல. பண்டைய வடமொழிக் கவிஞர்களும் அவ்வாறே எடுத்தாண்டிருக் கிருர்கள். குணுடியன் முதலியோர் உதயணனை நடுநாயகமாக வைத்துக் கதை விரித்தால், சுபந்துகவி வாசவதத்தாவையும், சூத்தரகன் வீணுமாசவதத்தாவை யும், பாசன் ஸ்வப்ன வாசவதத்தையையும் நடுநாயக மாக வைத்து வெவ்வேருக நாடகம் செய்திருக்கிருர்கள். பாசன் யௌசந்தராயன் என்ற யூகியை நடுநாயகமாக வைத்து நாடகம் செய்திருக்கிருன். ஆகவே பல பாத்திரங்கள் நாயகத் தன்மை ஏற்கப்படலாம் என்ப தற்கு இப்பெருங்கதை இடம் தருகின்றது. இது ஒரு பெரும் சிறப்பு அல்லவா.

1. உதயணன்: இந்நூற் கதாநாயகன் குருகுலத் தில் மன்னன் சதாநிகனுக்கும் அரசி மிருகாவதிக்கும் பிறந்தவன். நாடு வத்தவ நாடு. தலைநகர் கோசாம்பி. கதிரவன் உதித்த பொழுதில் இவன் உதித்ததுபற்றி உதயணன் எனப்பட்டான்.

புதையிருண் அகற்றும் பொங்கொளி மண்டிலம்
உதய ரிவர்தரப் பிறந்தோன் மற்றிவன்
உதயண னெனப் பெயர்முதற் கொளீஇ

தேவியர் வாசவதத்தை, பதுமாபதி, மானனீகை, காஞ்சனமாலை என நால்வரை வெவ்வேறு சமயங்களில் மணந்தான். தலைவனுக்கு ஏற்ப கல்வி முதலிய சிறப்பியல்புகளில் விளங்கினவன்.

' விச்சையும் வனப்பும் விழுக்குடிப் பிறப்பும்
ஒத்தொருங் கமைந்த உதயண குமரன் ' எனவும்

" இளமையும் வளப்பும் இல்லொடு வரவும்
வளமையும் தறுகணும் வரம்பில் கல்வியும்
தேசத் தமைதி மாசில் சூழ்ச்சியோ
டெண்வகை நிறைந்த நன்மகன் "

முதலான பல பண்புகளைப் பெற்ற பண்பாளன் எனப் புகழப்பட்டான் அரசனுக்கரசனாக வழங்கப்படுவான்.

' மணியானை யானை மன்னருள் மன்னன்
உதயண குமரன் " முதலாகப் புகழப்பட்டான் "

இவன் தாய்க்குலம் ஏயர்குலம், தந்தைக்குலம் குரு குலம். இரண்டின் பண்புகளையும் பெற்று இருவகை உரிமையும் பெற்றவன். இயற்கை அழகிலும் செயற்கை அழகிலும் சிறந்தவன். மிக்க இளமைப் பருவத்திலேயே சகல கலைகளையும் கற்று, விற்படை, யானையேற்றம், யாழ் விச்சை, பெற்று கற்பித்தலில் ஆசான் ஆகவும் இருந்து தேசிகன் எனப் பெயர் பெற்றவன்.

' பயனுணர் கேள்வி வகையமை நறுந்தார்
வத்தவர் பெருமகன் ' எனப்பட்டான்.

யானையின் இலக்கணம் அறிந்து அதனை அடக்கும் ஆற்றலொடு பிரச்சோதனனுடைய வெறியானை நகரைப் பாழ்ப்படுத்தியபோது அதனை அடக்கி மதிக்கப்பட்டான். அதற்காக இவனுக்கு மாளிகை அளிக்கப்பட்டது. இவனுடைய யாழ் கோடபதி என்பது. யாழின் இலக்கணங்கள் அறிந்தவன். தன்னைச் சுமந்த பிடி இறக்கும் தருவாயில் அதன் செவியில் மந்திரம் உபதேசித்து

நற்கதி தந்தவன். எதையும் ஆராய்ந்தே செய்பவன். இடவகன், உருமண்ணுவா, யூகி, வயந்தன் என்ற மந்திரிகளால் பலசமயங்களில் நன்றியுடன் உதவப்பட்டுத்துன்ப சமயங்களை நீக்கிக் கொண்டான். அறப்போரிலும் மறப்போரிலும் பேராற்றல் கொண்டவன். வில்வித்தையில் ஓரி போன்றவன். நன்றியறிவில் சிறந்தவன். காம வேட்கையும் இளமையில் கொண்டவன். முதுமையில் துறவுபூண்டு சித்தகதி அடைந்தவன்.

2. யூகி: இவன் வடமொழியில் யௌகந்தராயன் எனப்படுவான். இவனைக் கதாநாயகனாகக் கொண்டு பாசகவி யௌகந்தராயன் என்ற நாடகம் எழுதியிருக்கிறான்-கதை சிறிது வேறுபடும் (Mythie Senty Jaml - இவன் உதயணன் மந்திரிகளுள் முதன்மையானவன் இவன் குணங்களும் பண்புகளும் மிகச் சிறந்தவை. வியப்பும் ஆனவை.

"பரம விருடிகள் பல்லோர்க்குத் தலைவன்
தருமம் தாங்கிய தவாஅக் கொள்கைப்
பிரம சுந்தரன் எனும் பெரும் பெயர் முனிவற்குப்
பழிப்பில் கற்பில் பரம சுந்தரியெனும்
விழுத்தகு பத்தினி விரும்பிப்பெற்ற புத்திரனின்"

வில்வித்தை முதலிய எல்லாக் கலைகளிலும் உதயணனுடன் கற்றுப் பயின்று உடன் வளர்ந்தவன். அவன் உயிர்த்தோழனும் உபகாரியுமாக இருந்தவன்.

"பொன்னு இயற்கைப் புகழது பெருமையும்
ஆன்முலைப் பிறந்த வானிறலமிர்தம்
மலைப்பெய் நெய்யொடு தலைப்பெய் தாங்கு
வேறுபட்டேகினும் கூறுபட்டியலா
அன்பினி னளைஇய நண்பி னமைதியும்
அசைவில் தானை விசய வெண்குடை"

"பெருநில மன்னர் கருமம் காழ்த்த
அருகதி நுனித்த அமைச்சின் ஆற்றலும்"

இன்னவை பிறவும் உடையவள். நண்பன் துன்பத்தைப் போக்குதலில் முன்னின்றவன். சிறைத்துன்பத்தினின்றும் நீக்கி அரசாட்சியை மீண்டும் வரச் செய்து நண்பன்

மேன்மையுறப் பெரு முயற்சி செய்தவன். பிரச்சோதனன் உதயணனைச் சிறைப்படுத்தினன் எனக் கேட்டவுடன் 'என் தலைவனைக் கபடமாகப் பிடிப்பித்த அவனுடைய மகள் வாசவதத்தையைக் கொண்டு வருவன்' என்று சபதம் செய்து தான் இறந்ததாக வதந்தியைப் பரப்பித் தன் கருத்தை நிறைவேற்றியவன். "கெட்ட காலை விட்டனர் என்னாது நட்டோர் என்பது நாட்டினவன்". அமைச்சன் சாலங்காயனோடு சொற்போர் புரிந்து வென்ற கல்விமான்.

> "பெருவிறல் தோழன் இடனறி சூழ்ச்சியூகி
> அரும்பெறல் சூழ்ச்சியவன் ஒழுக்கியல் திரியாயூகி"

எனப் பாராட்டப்படுபவன். உதயணன் வாழ்நாள் முழுதும் சிறந்த மதியால் துணை செய்து பாதுகாத்த நன்றிமான்.

3. உருமண்ணுவா: இவன் உதயணனுடைய மந்திரிகள் நால்வருள் அவன் உயிர்த்தோழன். பல வகைப் பெருமையும் வாய்ந்த உயர்குடிப் பிறப்பினன். வயந்தகனுடன் சேர்ந்தே வழங்கப்படுவான். யூகிக்கு அடுத்தபடியில் இருப்பவன். சேனைகளைப் போரில்நடத்துவதில் மிக வல்லவன். எவ்வுபாயத்திலும் மன நடுக்கம் இல்லாதவன். நட்பு, ஊக்கம், வீரம், பகைக் கஞ்சாமை, காலம், இடம் முதலியவைகளை நன்கு அறிந்தவன். வாசவதத்தையை வலிந்து கொண்டு வந்த உதயணனை உபசாரத்தோடு வரவேற்றுச் சயந்தி நகரில் மணஞ் செய்வித்து வேண்டியதறிந்து யாதொரு கவலையுமின்றிப் பாதுகாத்து வந்தோன். இராச்சிய நகரில் உதயணன் மறைந்திருந்தபோது தானும் மறைந்து பாதுகாத்தவன். உதயணனுடைய வாழ்வைக் கருதி அஞ்சாமல் போரில் அவர் முன் இருந்து பகைவரால் சிறைப்படுத்தப் பட்டோன். மறைந்திருந்த யூகியின் கருத்தையறிந்து கொள்வதற்கும் தன் கருத்தை அவனுக்குத் தெரிவிப்பதற்கும் ஆக சாதகன் என்ற அன்பனை அழைத்துக் கொண்டு காரியங்களைச் சாதித்தவன். சிக்கலான

வழக்கையும் தீர்க்க வல்லவன். உதயணன் விருப்பப்படி பதுமாபதி தோழியான இராசனையை மணந்தவன். உதயணனுல் ஏனுதி மோதிரமும் சேனுபதிப் பட்டமும் பெற்று சயந்தி, இலாவணம் என்ற நகரங்களையும் வருவாயுடைய ஊர்களையும் படைகளையும் பெற்றவன். துறவறம் கொண்ட தன் தந்தைக்குப் பாதுகாப்பு அளித்தவன். கருவுற்ற வாசவதத்தை உதயணன் இவர்களோடு பாது காவலுக்கு விமானம் ஏறச் சென்றவன். இவன் புதல்வன் பூதி என்பான். 'உயர்பெருந் தொல்சீர் உருமண்ணுவா' 'ஒட்டிய நண்பின் உருமண்ணுவா' எனப்பட்டவன். இவன் வடமொழிப் பெயர்.

4. வயந்தகன்: உதயணனுடைய அமைச்சர்களில் ஒருவன். அவன் உயிர்த்தோழன். குலத்தில் அந்தணன். வில் வித்தையில் வல்லவன். அவன் குறிப்பறிந்து நடந்து மதிப்புப் பெற்றவன். பகைவன் விடுத்த மத யானையைத் தன் யானையாக ஏமாந்த உதயணனை 'நிமித்தம் நன்ருக இல்லையாதலால் புறப்படவேண்டாம்' என்று தடுத்தவன். யானைக்குள் இருந்து வெளி வந்த வீரர்களோடு போர் புரிந்தும் சிறைப்பட்ட உதயணன் ஓலையை யூகியிடம் சேர்ப்பித்தவன். உஞ்சை நகரில் சென்ற பிறகு மாறுவேடம் பூண்டு பிரச்சோதனன் மக்களுக்கு வில் வித்தை கற்றுக் கொடுத்து அங்கு நடந்தவற்றை யூகிக்குத் தெரிவித்தவன். வான நூலில் வல்லவன். எக்காலத்தும் உதயணனுக்கு உதவி புரிந்து கொண்டே இருந்தவன். பலனைத்தரு நகரங்கள் பதினென்றும் நாடோறும் 1000 பொன்னும் பெற்று மதிக்கப் பட்டவன்.

5. உஞ்சேனை நகர சக்கரவர்த்தி பிரச்சோதனன். அவன் முதல் மந்திரி சாலங்காயனன்; மகத தேயத்தரசன் தருக்கன், உதயணன் தம்பியர் பிங்கல கடகர், கோசாம்பிக் குயவன் சாதகன், உதயணன் அமைச்சன் இடவகன் முதலியோர் மற்ற முதல்தரமான கதாபாத்திரங்கள் ஆவர். இவர்களில் கோசாம்பிக்

குயவன் சாதகன் குறிப்பிடத்தக்கவன். இவன் சாதியில் குயவனாக இருந்த போதிலும் நன்றி உணர்ந்து நன்மை செய்கிறவன். உதயணன் சிறைப்பட்டுச் சென்றபொழுது அது பொருது வேறு வடிவம் பூண்டுகொண்டு பிறரறியாமல் அவனுக்குப் பல உதவிகள் புரிந்தவன். அவன் பல செய்திகளையும் ஒருவர்க்கொருவர் தெரிவிக்கும் தூதனாக இருந்தவன். இந்த நலங்களுக்காக உதயணன் அவனுக்கு ஒரு பட்டத்தையும் இரண்டு ஊர்களையும் பரிசாகத் தந்தான். சாதி, குலம் என்பது பாராமல் அருஞ்செயலே நன்கு மதிக்கப்பட்டது.

இனிப் பெண்மணிகளில் சிறந்தவர்களைக் குறிப்பாம்.

1. வாசவதத்தை : உதயணனுடைய தேவிமார்களில் முதல்வியும் பட்டத்தரசியும் ஆவாள். சக்கரவர்த்தி பிரச்சோதனனுடைய தேவியருள் முதல்வி பதுமகாரிகையின் புதல்வி. இந்திரனருளால் உதித்ததால் இப்பெயர் பெற்றாள். இவளுடைய செவிலித்தாய் சாங்கியத்தாய். அழகிலும் குணத்திலும் சிறந்தவள்.

'தெய்வத் தாமரைத் திருமகட் கெடுத்தோர்
ஐயப் படூஉ மணியிற் கேற்ப
ஒண்மையுட நிறையு மோங்கிய ஒளியும்
பெண்மையும் பெருமையும் பிறவும் உடைமையின்
பாசிழை யாயத்துப் பையென நின்ற
வாசவதத்தை"

எனப்பட்டாள்.

பெண்பாலார்க்குரிய கலைகளில் மிகப் பயிற்சி உள்ளவள். அவற்றில் இசையையும் யாழையும் உதயணன்பால் கற்றுத்தேர்ந்தவள். மாலை தொடுத்தல் முதலிய கைவேலையிற் சிறந்தவள். சிற்பமும் அறிந்தவள். தன்பால் உள்ள காதலினால் உதயணன் இராசீயத்தை மறந்துவிட்டதைப் பிறர் சொல்ல அறிந்து தான் இறந்து போய் விட்டதாகப் பெயர் பண்ணிச் சில காலம் செவிலித்தாயோடு வேற்றுருக் கொண்டு மறைந்திருந்தாள்.

அவளுக்கும் உதயணனுக்கும் பரஸ்பரம் ஒப்பற்ற அன்பு இருந்தது அதன் பொருட்டு இருவரும் பட்ட துயரங்கள் பல. இவள் பிரிவாற்ருமையால் உதயணன் உயிர் துறக்கவும் நினைத்தான். அவளுடைய அணிகலன் களையும், மான், கிளி முதலிய விளையாட்டுயிர்களையும் கண்டு விளித்து அவன் புலம்பினது எவரையும் கண்ணீர் துளிக்கச் செய்யும். இவளுக்குக் காஞ்சனமாலையிடத்து மிக்க அன்பு. பதுமாவதி இரண்டாம் மனைவியாக வாய்ந் தும் அவள் கவலவில்லை. மானனீகை இவள் நெற்றியி லேயே நிருபம் வரைந்து உதயணனுடன் மணம் செய்த கவிதைத்தன்மை வேறு எங்கு கிடைக்கும்? மிக்க தூய்மையானவள்பற்றி இவள் வயிற்றில் 'உதித்த நரவாணதத்தன் வித்தியாதரச் சக்கரவர்த்தியாகி மிகப் புகழடைந்தான். இவனைப்பற்றிய தனியான ஒப்பற்ற நாடகங்கள் மிகச் சிறந்த வடமொழியாசிரியர்கள் எழுதி இருக்கிருர்கள்.

2 பதுமாவதி: இவள் மகத மன்னன் தருசக னுடைய தாயின் சகோதரி மகள். காசிராசன் புதல்வி. தாய் உதயையோடை, அபிமானமாக தருசகன் தங்கை எனப்பட்டாள். இராசகிரியத்தில் ஏழு நாள் நடந்த காமன் விழாவில் வழிபடுவதற்குக் காமன் கோட்டத் திற்குச் சென்றபொழுது மாறுவேடத்தில் நின்ற உதயணனுக்கும் இவளுக்கும் நட்புண்டாகி இயற்கை மணம் நிகழ்ந்தது. தன் கன்னிமாடத்தில் அவனை வெகு நாள் ஒருவரும் அறியாதபடி வைத்திருந்தாள். தருசக ஞேடு பகைவர் போரிட வந்தபோது உதயணனும் தோழர்களும் அவர்களை வென்று துரத்தி விட்டனன். அப்போது பதுமை அவனுக்கு இரண்டாந்தேவியாகத் தரப்பட்டாள். சிறந்த கற்பும் குணமும் உடையவள். வாசவதத்தையுடன் ஒற்றுமையாக வாழ்ந்தவள். பிறரிடன் குற்றம்காணுள், பொருமை இல்லாள். இராவதி, இராசனை, யாப்பியாயினி அவளுடைய உயிர்த்தோழியர்கள். இவளுடைய நற்குணங்களைப் பற்றிப் பல செய்யுளடிகள் வருகின்றன.

3. மானனீகை: இவள் உதயணனின் தேவியரில் ஒருத்தி. கோசல அரசனுடைய மகள். இவள் தாய் வசுந்தரி. கோசல அரசனை வென்று அவனது அந்தப்புரத்தில் இருந்த மங்கையரோடு இவளையும் கவர்ந்து சென்றான் பாஞ்சால அரசன். அங்கே பாஞ்சாலன் தன் பட்டத்தேவிக்குப் பணிப் பெண்ணாக அமர்த்தினான். பாஞ்சாலனைக் கொன்று உதயணன் மானனீகையைக் கொண்டு வந்து வாசவதத்தைக்குப் பணிப் பெண்ணாக அமர்த்தினான். பந்தாட்டப் போரில் மானனீகையின் வல்லமையைக்கண்ட உதயணன் அவளைக் காதலித்து மணம் செய்து கொண்டான். அந்தக் கதை முன் கூறப்பட்டது. அவள் யவன மொழியிலும் சிற்ப வேலையிலும் பந்தாட்டத்திலும் வல்லவள்.

4. காஞ்சனமாலை: இவள் வாசவதத்தையின் உயிர்ப்பாங்கி, பேரழகி, சுவை பயக்கும் இனிய மொழியள்.

" அவந்திகை உவந்தவள் கண்மணி யனைய
ஒண் ணுதற் பாவை காஞ்சன மாலை

ஆபத்து வந்த காலத்தில் தேவியைக் காப்பாற்றினாள்.

" கொடிப்படை கோமக னாகக் கூழை
வடுத்தீர் வயந்தகன் வாள்வலம் பிழந்து
கழத்தப் பூம்படை கைவயின் அடக்கி
காவல் கொண்ட கருத்தின னாகப்
புரிசைச் சுற்றம் காஞ்சனை யாக."

என்பதினால் அறிக. அவள் வீடு தீக்கிரையான போது இறந்தாள் என எண்ணிப் புலம்பின திசை.

" நாவலந் தண்பொழில் நண்ணார் ஒட்டிய
காவலன் மகளே, கணங்குழை மடவோய்,
மண்விளக் காகி வரத்தில் வந்தோய்,
பெண்விளக் காகிய பெறலரும் பேதாய்,
பொன்னே திருவே அன்னே அரிவாய்
நல்லாய் நல்லாய் கொங்கர் கோதாய்

வீணைக் கிழவி வித்தகக் கிழவி
தேனேர் கிழவி சிறுமுதுக் குறைவி
உதயண குமாரன் உயிர்த்துணைத் தேவி
புதையழ லகவயிற் புக்கனையோ"

எனப் புலம்பினாள்.

பந்து விளையாட்டில் பயிற்சியுடையவள். நன்றியே பொறுமையே கலனாகப் பெற்றவள். தோழியாக இருந்தாலும் மிகப் பண்புடையவள்.

5. இவர்களே தவிர அரண்மனை மகளிர் மற்றும் சிலர் இருந்தனர். மற்றொரு முதன்மையான பெண்பால் இக்கதையில் வருகின்றாள். அவள் பெயர் சாங்கியத்தாய். இயற் பெயர் தெரியவில்லை. கோசாம்பிநகர்ப் பார்ப்பனி. இளமையில் கணவன் நீங்கினது பற்றி ஒழுக்கந் தவறியது. அவளை யமுனையிற்றள்ள அதிகாரிகள் கொண்டுபோனபோது உதயணன் காப்பாற்றினான். பிறகு தீர்த்த யாத்திரை சென்று கங்கையாடி இமய மலையில் பெரியோரிடம் பல சமயக் கொள்கைகள் கற்று குமரியாடச் சென்றபோது உஞ்சையில் தங்கினாள். அவள் கல்வி கண்டு பிரச்சோதனன் தன் பட்டத்துத் தேவிக்கு நீதி நெறி போதிக்க நியமித்தான். பிறகு குழந்தை வாசவதத்தைக்குச் செவிலியானாள். சாங்கிய சமயியான தினால் சாங்கியத்தாய் எனப்பட்டாள். இளைஞர்கள் எல்லார்க்கும் தாயாக விளங்கினாள்.

"முன்னுப காரத்து நன்னயம் பேணித்
தன்னுயிர் கொடுக்கும் தவமுது தாய்"

என்று புகழப்பட்டாள்.

கதை நிகழ்ந்த இடங்கள் :

தமிழ்க் காப்பியமான சிலப்பதிகாரத்தைப் புகார், கூடல், வஞ்சி என்று மூன்று தலைநகரங்களில் வைத்து இளங்கோவடிகள் தாம் எடுத்துக்கொண்ட காப்பியத்தை விளக்குகிறார். மற்றொரு பெருங்காப்பியமான மணிமேகலையைப் புகார், மதுரை, மணிபல்லவம், காஞ்சி

என்ற புகழ் பெற்ற இடங்களில் வைத்துத் தன் கதை வரலாற்றை அழகுபடுத்துகிருர். அதுபோலவே கொங்கு வேளிர் பெருங்கதையை, உஞ்சை, செயந்தி, மகதம், வத்தவம் என்ற நாடுகளிலும் நடத்திவைத்துப் பின் நரவாணதத்தனுடைய ஆட்சியை வித்தியாதர உலகத்தி லும் நடத்திவைத்து ஐந்தாவது பகுதி துறவு பெற்றதை வனத்திலும் வைத்தார். இந்த முறை இக்கதையை வட நாட்டுப் பெரும் பகுதியிலும் நடத்திக் காட்டினது ஒரு சிறப்பு என்க. இந்த முறையினுல் எந்த நாட்டில் நடத்தி வைத்தால் பொருத்தமாக இருக்குமோ அதைத்தெரிந்து கதை வைக்கப்பட்டது ஒரு மகிழும் செய்தியாகும்.

கவிஞர் பெருமான் தம் வரலாற்றில் 12 நாடுகளே யும், 21 நகரங்களேப் பற்றியும் கூறினுலும் அவற்றில் கதை சிறப்பாக நிகழ்ந்த 5 நகரங்களேப் பற்றியே விளக்க மாகக் கூறுகிருர். அவைகள் இருந்த நாடுகளேப்பற்றியே விவரிக்கின்ருர். முதலில் கூறினது அவந்தியைச் சேர்ந்த உஞ்சையைப்பற்றியே. 1. அது உஞ்சேனே, உச்சைனி நகரம் எனப் பெயர் பெறும். பிரச்சோதனனுடைய இராசதானி. மதில் முதலிய அரண்களாலும் செல்வத் தாலும் சிறப்ப அமைதியாலும் சிறப்புற்றது. அகநகர் புறநகர்கள் உண்டு. பகையச்சம் இல்லே. மக்கள் முருகக் கடவுளே வணங்குவார்கள். இதனருகில் மகாகாளவனத் தில் காளி கோயிலும் மகாகாளன் என்ற சிவன் கோயி லும் உண்டு. இன்றைக்கும் அக்கோயில் 12 சோதிர் லிங்கங்களுள் ஒன்றெனெ வழங்கப்படுகிறது. முத்தி நகரம் ஏழனுள் ஒன்று. சைன முனிவர்கள் வசித்த நகரம். ஒரு யோசனே அளவுள்ள பொய்கை ஒன்றும், ஒரு ஆறும் இருக்கின்றன. அவற்றின் கரைகளில் நீர் விளேயாட்டு விழா நடைபெறும். உதயணன் வஞ்சனே யால் சிறைபட்டது முதல் வாசவதத்தையைப் பிடிமேல் ஏற்றிச் சென்றது வரை கதை இங்கே நடந்தது.

2. செயந்தி: உதயணனுடைய ஆட்சிக்குட்பட்ட நகரம். இதனே அமைச்சன் உருமண்ணுவா பாதுகாத்து

வந்தான். உதயணனுக்கும் வாசவதத்தைக்கும் திருமணம் இங்கேதான் நடந்தது அந்த மண நிகழ்ச்சியில் அக்காலத்தில் நடந்த சடங்குகள் முழுவதும் இதில் கூறப்பட்டுள்ளன. மருத நில வளமும் அருகில் அழகியதோர் மலையும் உண்டு. முதலில் உதயணனும் வாசவதத்தையும் அந்த மலையருகில் தங்கினர்கள். திருமணச் சடங்குகள் நடைபெற்றன. மணவறையில் மணமக்களைக் கட்டிலேற்றிச் சகல சடங்குகளும் நடத்தினர்கள். அம்மி மிதித்தல் முதலியன நடந்தன. ஆருந் திங்களில் மயிர் களைந்தார்கள். பிறகு தெய்வச் சிறப்புச் செய்யப்பட்டது. சினலயம் சென்று கடவுளை முறைப்படி வழிபட்டார்கள். பிறகு ஊர்வலம் சென்று அரண்மனை அடைந்தார்கள். பிறகு நீராடினர்கள். இந்த ஊரைப் பற்றி ஆசிரியர்,

> "தயங்கிழைத் தாமரைத் தண்பணை தழீஇய
> சயந்தியம் பெரும்பதி"

என்றும்,

> "இருங்கடல் வரைப்பின் இசையோடு விளங்கிய
> சயந்தியம் பெரும்பதி"

என்றும் வருணிக்கப்பட்டது

3. இராசகிரியம்: மகத நாட்டின் தலைநகர். இது புகழ் பெற்ற ஒரு பழமையான நகரம். பல விண்மீன்களிடையே ஒரு முழு மதி தோன்றுவது போலப் பல ஊர்களிடையே இந்நகரம் பொலிந்துள்ளது

> "விடுசுடர்ப் பேரொளி விமானம் போலச்
> சேணெளி திகழும் மாண்வினை மாடம்"

விளங்குவது அதன்புறத்தே யவனச் சேரிகள் 100-ம், எறிபடைப்பாடிகள் 150-ம், தமிழ் வீரர்கள் சேரிகள் 1000மும் சித்திர சாலைகள், தண்ணீர்ப் பந்தல் முதலிய தருமத் தானங்களும், தேவாலயங்களும் இருந்தன. அகழி சூழ்ந்த மதில்களிடையே பெரும்படைச்சேரி, போகச்சேரி, உழவர் சேரி, வணிகர் சேரி, அந்தணர் சேரி, அமைச்சர் சேரி முதலிய சூழப் பெற்ற வீதி

களிடையே இராச மாளிகை தாமரைப் பொகுட்டைப் போல விளங்கியது. இதனரசன் தருசகன். உதயணன் சில மாதங்கள் பிரமசாரியாக மறைந்திருந்து அவனுக்கு உதவி செய்து நட்பைப் பெற்று, அவன் தங்கை பதுமையை மணந்து இன்புடன் வசித்து வந்தான்.

மகத நாடு

இந்நகர் தலைமைத் தானமாகக்கொண்ட நாடு மகத நாடெனப் புகழ் பெற்ற நாடு. இந்த நாடே பிற்காலத்தில் சந்திரகுப்தன், அசோகன் முதலியோர் ஆண்ட நாடு. இதனைக் கொங்குவேளிர் மிக ஆர்வத்தோடு வருணிக்கின்றார்.

"துறக்கம் புரியும் தொல்லையில் இயன்றது
பிறப்பற முயலும் பெரியோர் பிறந்தது
சிறப்பிடை யறாத தேசிக முடையது
மறப்பெருந் தகையது மாற்றோர் இல்லது
விறற்புக ழுடையது வீரியம் அமைந்தது
உலகிற் கெல்லாம் திலகம் போல்வது
அலகை வேந்தன் ஆணை கேட்பது
அரம்பு மல்லலும் கரம்பு மில்லது
செல்வப் பெருங்குடி சிறந்தணி பெற்றது
நல்குர வாளரை நாமனு மில்லது
நன்பெரும் புலவர் பண்புளி பன்னிய
புகழ்ச்சி முற்று மகிழ்ச்சியின் மலிந்தது
இன்னவை பிறவும் எண்ணுவரம் பிகந்த
மன்பெருஞ் சிறப்பின் சேத நன்னாடு" (3-2-41-54)

பொருட்செறிவைப் பாருங்கள். கம்பர் பம்பையை அழகு படுத்தியது போலல்லவோ மிளிர்கிறது.

4. கோசாம்பி. இது வத்தவ நாட்டின் தலைநகர். உதயணன் இராசதானி. யமுனை ஆற்றின் கரையில் உள்ளது. அகழியால் சூழப்பெற்ற மதில்களிடையே கடைவீதிகள் பல தெருக்கள் கொண்டது. உதயணனின் பல நகரங்களில் முதன்மையானது. இதனருகில் மதுதம்பீர வனமும், புற நாட்டினர் தங்க ஒரு பூங்காவும்

உள்ளன. உதயணன் சிறைப்பட்ட காலத்தில் பாஞ்சால அரசனல் கவரப்பட்டது. உதயணன் அவனைக் கொன்று தன் நகரை மீட்டுக்கொண்டான். அப்போது தானியங்களையும் நாணயங்களையும் கவர்ந்து கொண்டார்கள். இந்நகரில் ஒரு சிறந்த விழா நடைபெறும். "விழநாடு பொலிந்த அழகிற்ருகிய" அக்காலத்தில்.

"பத்திப் படாகையும் பல்பூங் கொடியும்
சித்திரத் தெழுதிய வித்தக விமானமும்
இருநிலத் தியங்கும் இயந்திரப் பாவையும்
மருவினை நுட்ப தியவனப் புணர்ப்பும்
பொத்தகை யானையும் பொங்குமலப் புரவியும்
சித்திர மானையும் மக்கடந் தொட்டிலும்
வேண்டா ரொழுக்கும் விளக்குறு பூதமும்
தெரிவுற பலிகலக் குப்பையும்"

விளங்கின. தற்காலம் Carnival நடைபெறும் பொருட் காட்சி விழாவிற்கு ஒப்பிடலாம்.

இவ்வாறு இராசதானி நகர்களே அன்றி வத்தவ நாட்டில் வேறு சில உப நகர்கள் இருந்தன. அவைகளிலும் உதயணனும் அவனுடைய தோழர்களும் அடிக்கடி இருந்திருக்கிருர்கள் என்று கதை கூறுகிறது. உதயணனுடைய தலைநகர் கோசாம்பி என்று அறிவோம். ஆனல் அவனுக்குத் திருமணம் நடந்தது அவனுக்குட்பட்ட சயந்தி நகரம் ஆகும். மேலும் யூகி தான் செய்ய வேண்டிய செய்கைகளுக்காகப் புட்பக நகர் புகுகிருன். இதுவும் வத்தவ நாட்டு ஊர்தான். பிறகு இலாவாண நகர் சென்று அருகோர் மலையில் இயற்கை அழகு செயற்கை அழகு கொண்ட சாரலிலே நகர மாந்தர் காட்சிகளைக் கண்டு மகிழ்கிருர்கள். இந்த இலாவாண நகரம் ஒரு சிறந்த நகரம் ஆகும். அதற்குத் தொலைவில் ஒரு வனத்தில் ஒரு முனிவர் இருக்க அங்கே உதயணன் சென்று அவர் மகள் விரிசிகையைக் காதலித்து மணத்தலும் அதனல் வாசவதத்தைக்கு ஊடல் ஏற்பட்டு ஒரு கருங்குரங்கு வர அச்சத்தால் ஊடல் தீர்ந்ததும், உதயணனும் தேவியும் இலாவாண நகரில் சில காலம்

வசித்தனர். இந்தச் சமயத்தில் யூகி உதயணனைத் தேவியிடமிருந்துபிரித்து நல்வழிப்படுத்த எண்ணித்தேவியைச் சுரங்க வழி அனுப்பிவிட்டு அரண்மனைக்குத் தீயிடச் செய்து தேவி இறந்தாள் என்று பொய்ப் பிரசாரம் செய்து உதயணனைத் துயரத்தில் ஆழச் செய்து நல்வழிப் படுத்தினன். பிறகு யூகி முதலானோர் சண்பைநகர் அடைந்து அங்கே இருந்தனர். அங்கே சண்பைநகர் வருணனை கூறப்பட்டது.

ஆகவே தலைநகர் கோசாம்பி அன்றி சயந்தி, இலாவாணம், வனச்சாரல், தவவனம், சண்பை நகர் முதலான பல இடங்களும் வருணிக்கப்பட்டன. மேலும் அவைகளில் சிற்சில காலம் கதாநாயகர்கள் இருந்தனர். பல செயல்களில் ஈடுபட்டனர் என அறிகிறோம். இவைகளால் அந்நாளில் நாட்டில் எவ்வாறு நகரங்கள் இருந்தன, ஆட்சி நடைபெற்றது, மாந்தர்கள் வாழ்ந்தனர், அரசர்கள் அவர்கள் குடும்பங்கள் பலவகை வகுப்புகள், தொழிலாளர்கள், முனிவர்கள், சமய மாந்தர் முதலியோர்கள் சேர்ந்து வாழ்ந்தனர், அரசர்களுக்கு அமைச்சர்கள் எவ்வாறு உதவி புரிந்தனர், நன்றியோடு ஊழியம் செய்தனர், கடவுள் வழிபாட்டில் ஈடுபட்டனர், மேலும் எவ்வாறு உலகீய இன்பங்களில் ஈடுபட்டனர், பொதுவாக மாந்தர் இன்பகரமாகவே இருந்தனர் என்பதும் நூலாசிரியர் விரிவுப்படுத்தியிருக்கிறார். அவ்வாறு கூறும் மொழி மிக சுவைப்பட இருத்தற்கு அங்கங்கே எவ்வாறு சொல்லணி, பொருளணி, மணியிடை பவழம் போல இணைத்திருக்கிறார் என்பது புலப்படும்.

ஆசிரியர் வரலாறும் குறிப்புக்களும்

நம் நாட்டு மக்களிடம் தன்னலம், தற்புகழ்ச்சி, தற்பெருமை என்பன பொதுவாக இல்லை. எத்தனை வல்லவனை போதிலும் தன் பெயர் பரவவேண்டும் என்ற எண்ணமே இல்லை. தன் செயல்கள் எத்தனை சிறந்திருந்த போதிலும் அவைகளை நிலைநிறுத்திப் பிறர் புகழ

வைக்கவேண்டும் என்ற கருத்து இல்லை. அவன் அரசனை போதிலும், கல்விமானை போதிலும், அறம் செய்தவனை போதிலும் தற்புகழ்ச்சி இல்லாது வாழ்க்கை நடத்துவான். ஒரு மன்னன் இறைவனுக்குப் பெருங் கோயில் கட்டுவான். தனக்கெனப் பெரிய அரண்மனை கட்டிக்கொள்ளான். அந்தக் காரணத்தினுல்தான் சோழ, பாண்டிய, சேர, பல்லவர் அரண்மனைகளை இன்று காணோம். ஆனல் அவர்கள் கட்டிய கோயில்கள் அழியாமல் நிற்கின்றன. அரண்மனைகளைச் சிறப்பாகக் கட்டாமல் விட்டதைப் போலத் தம் வரலாறுகளையும் எழுதி வைக்கவில்லை. அரசர்களைப் போலவே சிறந்த கவிஞர்களும் தங்கள் கவிதைகளும் நூல்களும் சிறந்திருக்க வேண்டுமென்று எண்ணிஞர்களேயன்றி தம் புகழை விரிக்கக்கூடிய தம் வாழ்க்கை வரலாறுகளை எழுதி வைக்கவில்லை கம்பர், ஒட்டக்கூத்தர், புகழேந்தி, சேக்கிழார், கச்சியப்பர் முதலியவர்களுடைய வாழ்க்கை வரலாறுகள் விரிவாக நமக்குக் கிடைத்திருக்கின்றனவா? ஆனல் அவர்கள் இயற்றிய நூல்கள் இருக்கின்றன. அவைகளைப் படித்து அன்னுர் பெருமைகளை அறிகிருேம். இதற்குக் காரணம் அவர்களுடைய தன்னலம், தற்பெருமை, தற்புகழ்ச்சி இல்லாமையே காரணம் என்க. இந்தப் பெருந்தன்மையினுல் பிற்காலத்தாராகிய நாம் தான் குறைவு பெற்றவர்கள் ஆகிருேம். புலவர்கள் வரலாறுகள் தெரியாத மொழியாளர்கள் ஆக இருக்கிருேம். இந்தக் குறைபாட்டை நீக்குதல் மிகக் கடினமாக இருக்கிறது.

இந்தக் குறைபாடு வடமொழியிலும் தென்மொழியிலும் இருக்கின்றது. காளிதாசன் போன்ற பெருங்கவிஞர்களுடைய சரியான வரலாருே இருந்த காலமோ உறுதியாகக் கூற முடிகிறதா? தென்னுட்டிலும் கம்பர், வள்ளுவர் போன்ற பெரும்புலவர்களின் வரலாறுகளும் காலங்களும் உறுதியாகச் சொல்ல முடிகிறதா? அதுபோலவே கொங்குநாட்டுச் சிறந்த கவிஞரான கொங்குவேளிருடைய வரலாறுகளும்,

வாழ்ந்த காலமும் உறுதியாகக் கூறமுடியாதவர்களாக இருக்கிறோம். ஆனாலும் தெரியாது என்று சொல்லி வாளா இருப்பதும் சரியல்ல. பலவகையிலும் ஆராய்ச்சிகள் புரிந்து அப்பெரிய புலவர் பெருமகனாரின் வாழ்க்கைக் குறிப்புக்களையும் குணாதிசயங்களையும் அன்னார் வாக்குகளிலிருந்து சுற்றிலுமிருந்த சூழ்நிலை களில் இருந்து கல்லியெடுத்துக் கோவைப்படுத்த இயலும் அல்லவா. அம்முறை எடுத்தாய்வோம்.

ஆசிரியர் பிறந்த மண்டலம் :

புலவர் பெருமகனாரின் பெயரே அவர் கொங்கு மண்டலத்தைச் சேர்ந்தவர் என்பதைப் புலப்படுத்தும். அவருடைய இயற் பெயர் நமக்குத் தெரியவில்லை ஆதாரங்களும் இதுவரை கிடைக்கவில்லை. கொங்கு மண்டலத்தைச் சேர்ந்த ஒரு வேளிர் பெருமகனார் என்றே குறிக்க முடியும். சங்க காலத்தில் கொங்குமண்டலம் ஒருதனி நாடாகக் கருதப்பட்டது. அம்மண்டலத்து மக்களுக்குக் கொங்கர் என்று பெயர் குறிக்கப்பட்டது. அகநானூறு புறநானூறு என்ற தலைசான்ற சங்க நூல்களிலும் பதிற்றுப்பத்திலும் கொங்கர்களுடைய பெயர் மட்டுமன்றி அவர் தீரவீரச்செயல்களும் போற்றப் பட்டுள்ளன. கொங்கர் வாழ்ந்த நாடு கொங்குநாடு; அந்நாட்டு வேளாளர்கள் கொங்குவேளாளர் எனப் பட்டார்கள். இன்றைக்கும் கொங்கு வேளாளர் என்ற ஒரு உயரிய குலம் இருக்கிறது. ஒவ்வொரு நாட்டிலும் வேளாளர் இருந்து வருகிறார்கள். கொங்கு வேளாளரைப் போல் பாண்டி வேளாளர், சோழ வேளாளர், கார்காத்த வேளாளர் (கார்மண்டலம்) சேரகுல வேளாளர், துளுவ வேளாளர் (துளுநாடு) ஏயர் குல வேளாளர் (ஹேஹயர்) முதலியவர்கள் நாட்டுப் பெயர் கொண்ட குலப்பெயர் வாய்ந்தவர்கள். இனி வேளாளரில் சிறந்த தலைவர்கள் வேளிர் எனப்பட்டார்கள். வேள்-நிலம், வேளிர்-நிலக்கிழார்கள். வேளாளர் தலைவர்கள் வேளிர் எனப் பட்டார்கள். தமிழ் நாட்டில் சங்க காலத்திலும் அதற்குப்

பின்வந்த காலத்திலும் வேளிர் என்ற சிறப்புப்பெயரால் பல தலைவர்கள் இருந்தார்கள். கடையெழு வள்ளல்கள் வேளிர்களே. பாரி, ஆய், எழினி, பொதினி காரி, ஓரி, பேகன், மலையன் முதலியோர்கள் வேளிரே. ஆகவே கொங்குவேளிர் கொங்கு மண்டலத்தில் வாழ்ந்த ஒரு பெருங்குடியில்பிறந்த நற்குடித்தலைவர் என்று கூறலாம். அவர் தோன்றின கொங்குமண்டலம் தற்காலக் கோவை வட்டம், தென்சேல வட்டம், வட திருச்சி வட்டம் வட மதுரை வட்டம் என்ற பகுதிகளைக் கொண்ட ஒரு பிரதேசம் என்க (கொங்குநாட்டு வரலாறு காண்க).

இக்கொங்குமண்டலம் தெற்கு, மேற்கு வடக்கு, வடகிழக்கு என்ற திக்குகளில் மலைத்தொடர்களால் சூழப்பட்டு நடுவில் சம நிலமாகப்பெற்று தென்கிழக்கு மூலையில் திறந்த வெளியாக ஒரு அகல் விளக்குப்போல அமைந்துள்ளது அம்மலைகள் முறையே பன்றி மலை, (வராகமலை) ஆனைமலை. வெள்ளிமலை. நீலமலை (கிரி), திம்பம்மலை, பாலமலை, தோப்பூர்மலை, சேர்வராயன்மலை, கொல்லிமலை என்பவையாம். இம்மலைகள் இடையே விளக்கின் எண்ணெய் இழுக்கும் திரிபோல் காவிரியாறு அம்மண்டலத்தின் மத்தியில் ஓடி சோழநாட்டிற்குச் செல்லுகிறது. காவிரியும் அதன் உபநதிகளும் கொங்கு நாட்டு வளமை உரங்களைக் கரைத்துக் கொண்டுபோய் சோழ நாட்டிற்கு ஊட்டுகிறது. இதன் ஒரு துணை ஆறு ஆகிய நொய்யல் ஆறு கொங்குநாட்டை இரண்டு பிரிவுகளாகச் செய்து தென் கொங்கு வட கொங்கு என்று இரண்டாக வகுத்திருக்கிறது. அரசியல் முறையில் இவ்விரண்டு பகுதிகளும் இம்மண்டல வரலாற்றை மிகவும் பாதித்திருக்கிறது.

வடகொங்கு பெரும்பாலும் வடக்கே உள்ள கன்னட நாட்டு அரசியலுடன் கலந்து வந்திருக்கிறது. தென் கொங்கு செந்தமிழ் வழங்கும் பாண்டி மண்டலத்தோடு பங்குகொண்டிருக்கிறது. சென்ற இருபது நூற்றுண்டு களாகக் காவேரி வடகரைத் தலைக்காட்டில் ஆண்ட

கங்கர் வம்சத்தாராலும் (2ஆம் நூற்றுண்டு முதல் 9ஆம் நூற்றுண்டு வரை), ஹொய்சாள மன்னர்களாலும் (11-ஆம் நூற்றுண்டு முதல் 13-ஆம் நூற்றுண்டு வரை), கருநாடக விஜயநகரத்தாராலும் (14-16-ஆம் நூற்றுண்டு வரை) மைசூர் உடையார்களாலும் (17, 18-ஆம் நூற்றுண்டு வரை), வடகொங்குப்பகுதி கன்னடிய உறவு கொண்டிருந்தது. அவர்களில் கங்க மன்னர்களுடைய ஆட்சியில் அவர்கள் போற்றின சமண சமயம் இப் பகுதியை மிகவும் ஈடுபடுத்தியது. அதாவது 3-ஆம் நூற்றுண்டு முதல் 9-ஆம் நூற்றுண்டு முடிய 6 நூற்றுண்டுகள் வரை சமண சமய ஆதிக்கம் வட கொங்கில் மிகுதியாகப் பெருகிற்று. சமண சமய மக்கள் இப்பகுதியில் குடியேறினதன்றி கோயில்களைக் கட்டியும், பள்ளிகளை நிறுவியும், வசதிகளைத் தாபித்தும், கலைகளைப் பெருக்கியும், நூல்களை ஆராய்ந்தும் வந்தார்கள்.

ஆசிரியர் வாழ்ந்த நாடுகள் :

பண்டைய காலத்திலிருந்து கொங்குமண்டலம் இருபத்து நான்கு நாடுகளாகப் பிரிக்கப்பட்டிருந்தது. அந்நாடுகளில் ஆதிக்கம் பட்டக்காரர் என்ற தலைவர்களிடம் இருந்தது. ஒவ்வொரு நாட்டிற்கும் ஒவ்வொரு பட்டக்காரரும் அவர்களுக்கு எல்லாம் பெரிய பட்டக்காரர் ஒருவரும் இருந்து நாட்டு வழக்குகளைத் தீர்த்து வந்தார்கள். கொங்கு வேளாளரில் இப்பட்டம் இன்றைக்கும் விளங்குகிறது. கொங்கு வேளாளரைப் போல் மற்ற வகுப்பினர்களும் இந்த முறையையே பின்பற்றி வந்திருக்கிறார்கள். உதாரணமாக கங்கடிகார ஒக்கிலியர்களில் பட்டக்காரர் முறைமை உண்டு. தேவாங்கர்களிலும் மற்ற தெலுங்கு கன்னடிய வகுப்பார்களிலும் உண்டு. இதன் சிறப்பு இந்நாளில் குறைத்துகொண்டு வருகிறது குலாச்சார வழக்குகளிலும் நலம் பொலம் முதலிய சடங்குகளிலும் இன்றும் பட்டக்காரர்களுக்கு முதல் மரியாதை செய்யும் வழக்கம் நிற்கவில்லை.

இருபத்து நான்கு நாடுகளில் நொய்யல் ஆற்றிற்கு வடபால் உள்ள நாடுகளில் காவிரிக்கு இருபுறமும் உள்ள நாடுகள் பூந்துறை நாடென்றும், அதனை அடுத்து மேல்புறம் உள்ளது குறும்பு நாடெனவும் கூறப்படும். இந்த இரண்டு நாடுகளும் கங்கர் ஆட்சிக் காலத்திலே மிகச் சிறந்து விளங்கியிருந்தன. பூந்துறை நாட்டில் காவிரிக்குக் கீழ்புறம் உள்ள பகுதி கீழ்க்கரை பூந்துறை நாடெனவும் மேற்புறம் உள்ள பகுதி மேற்கரை பூந்துறை நாடெனவும் வழங்கின. கீழ்க்கரை பூந்துறை நாடு குன்றத்தூர்க்கடற்றம் எனவும் வழங்கிற்று. அது தற்காலத் திருச்செங்கோடு வட்டத்தில் அடங்கியது. மேற்கரை பூந்துறைநாடு ஈரோடு வட்டத்தின் வட கிழக்குப்பகுதி ஆகும். இதற்குத் தலைமை ஊர் பூந்துறை. இனி குறும்புநாடு என்பது தற்கால ஈரோடு வட்டத்தின் மேல்பாகம். இதற்குத் தலைமையூர் விசயமங்கலம் ஆகும். குறும்பு நாட்டை சுந்தரமூர்த்திகள் தேவாரத்தில் பாராட்டியிருக்கிறார். "கொங்கில் குறும்பில் குரக்குத் தளியாய்" என்று ஊர்த் தொகையில் உள்ள ஒரு குறிப் பாகும். குரக்குத்தளி என்ற புனித ஊர் தற்போது பெரிய பாளையம் என வழங்குகிறது. இங்கே சுந்தரர் பாடிய சுக்கிரீசுவரர் கோயில் இன்றும் நன்றாக இருக்கிறது. ஆகவே பூந்துறை நாடும் குறும்பு நாடும் இரண்டும் சேர்ந்து தற்கால ஈரோடு வட்டம் முழுவதையும் உட் கொண்டிருக்கிறது இந்த வட்டம் முழுவதிலும் கங்கர் காலத்தில் சமணம் ஆதிக்கம் பெற்றிருந்தது. அதற்குச் சான்றுகள் இந்தப் பகுதியிலே சமண நிலையங்கள் பெரும் பாலும் உள்ளனவையாகும். தற்போது அழியாமல் நிலைத் திருக்கும் சமண சின்னங்கள் 1. விசயமங்கலம் (சந்திரப் பிரபாதீர்தங்கரர் கோயில்) 2. அரசண்ணாமலை (நேமி நாதர் கோயில்) 3. வெள்ளோடு (ஆதிநாதர் கோயில்) 4. பூந்துறை (பாரிசநாதர் கோயில்) 5. சீனாபுரம் (ஆதி நாதர் சனகை என்பது) 6. திங்களூர் சந்திரவசதி (புட்ப நாதர் கோயில்) 7. அரச்சலூர் மலை (சமணர் படுக்கை களும் பிராம்மிகல் வெட்டுக்கள் உள்ளன என்பனவாகும்.

ஆசிரியர் தோன்றின ஊர் :

நூலாசிரியர் தோன்றின பெருமை பெற்று விளங்குவது விசயமங்கலம். இது குறும்பு நாட்டுத் தலைநகர். கோவை, ஈரோடு புகைவண்டிப்பாதையில் ஒரு நிலையம். இந்நிலையத்திலிருந்து மூன்றுகல் வடக்கில் உள்ளது ஊர். மேலும் கோவை சென்னை நெடும் பாதையில் 42-வது கல்லில் இது அமைந்திருக்கிறது. இவ்வூரிலிருந்து நாலாபக்கங்களிலும் கிளைப்பாதைகள் செல்லுகின்றன. ஊர் மூன்று பகுதிகளாக இருந்திருக் கின்றது. மேல்பகுதி விஜயாபுரி என்றும் கீழ்ப்பகுதி விஜயமங்கலம் என்றும் வடபகுதி பசதிப்புரம் என்றும் பெயரால் வழங்கி வந்தன. விஜயாபுரியும் விஜய மங்கலமும் தற்போதும் செழிப்பாக இருக்கின்றன. பசதிபுரம் என்ற பகுதி தற்போது மறைந்து விட்டது. நெட்டைக்கோபுரம் என்ற சந்திரப்பிரபா தீர்த்தங்கரர் உடைய ஆலயம் ஒன்றுதான் மீந்து இருக்கிறது. இம் மூன்று பகுதிகளும் சமண ஆதிக்கக் காலத்தில் சிறப்பாக இருந்து அம்மூன்றும் இணைந்த ஒரு பெரிய நகரமாக இருந்திருக்கவேண்டும். கொங்கு நாட்டில் சமண சமயம் செழிப்பாக இருந்த காலத்தில் 72 சமண ஆலயங்கள் இருந்ததாகச் சமண அர்ச்சகர்கள் கூறுகிறார்கள். அவைகளில் சிறந்த தலம் விஜயமங்கலம் ஆகும். விஜயமங்கலத்தைச்சுற்றி இப்போது பல சமணக் கோயில்கள் இருப்பதை முன்னமே கூறி யுள்ளோம். பல அழிந்து விட்டன. தற்போது அவைகள் இருந்த இடம் தெரியவில்லை. இனி விஜயமங்கலம் என்ற பெயரைச் சற்று ஆராய்வோம். அப்பெயர் விஜயமங்கை என்று அந்நாளில் வழங்கி வந்தது. இது வடமொழிப் பெயர். சமணர் வைத்த பெயராக இருத்தல் வேண்டும். பொதுவாகக் கொங்குநாட்டு இடப்பெயர்கள், சிறப்பாக ஊர்ப்பெயர்கள் எல்லாம், தனித் தமிழ்ப் பெயர்களாக இருக்கின்றன. வடமொழிப் பெயராக இருந்தால் அதற்குத் தனிக் காரணம் இருந்திருக்க வேண்டும். ஜைனர்கள் வடமொழிப் பெயர்களை

விரும்புகிறவர்கள். அவர்கள் இவ்வூரில் குடியேறித் தங்கள் சமயத்தைத் தாபித்து வெற்றி (விஜயம்) பெற்றதினால் ஊரின் பெயரை விஜயமங்கலம் என்று வைத்தார்கள் போலும். முற்பெயர் யாதோ அறியோம்.

விஜயமங்கலத்தின் வடக்குப்பகுதி முன் செழிப்பாக இருந்து பசதிபுரம் என்ற பெயரில் வழங்கி வந்தது. பின்னால் தாழ்ச்சியடைந்து குடியிருப்புகள் மறைந்து கோயிலைத்தவிர மற்றப் பகுதிகள் புறம்போக்குகளாகவும் விளை நிலங்களாகவும் மாறி விட்டன. கோயிலுக்குப் பண்டை மன்னர்களால் விடப்பட்ட நிலங்களும் கைமாறிப்போய் வேறு ஆட்களுக்குச் சேர்ந்து விட்டன. பசதிபுரம் என்ற சொல்லுக்குச் சமணர் ஊர் என்று பொருள். பிறவட்டங்களிலும் இப்பெயர் வழக்கத்தில் இருக்கிறது. கன்னட வட்டங்களில் ஜைனக் கோயில் குடியிருப்புக்களுக்குப் பசதி என்று பெயர் தற்போதும் வழங்குகிறது. பசதிப்புறக்கோயிலில் வழிபாடு செய்கிற அர்ச்சகர்கள் கன்னடிய ஜைனர்களே. இவர்கள் வய நாட்டிலிருந்து இங்கே குடியேறினதாகச் சொல்லு கிறார்கள். இவர்களுடைய உறவினர்கள் மைசூர் சீமையில் இன்னமும் இருக்கிறார்கள். ஆகவே இக் குடும்பங்கள் கங்கவம்சம் தலைக்காட்டில் ஆண்ட காலத்தில் தெற்கே வந்து குறும்பு நாட்டிலும் பூந்துறை நாட்டிலும் குடியேறி கோயில்களைக்கட்டிக் கொண்டு வாழ்ந்திருக்கலாம். ஒவ்வொரு அர்ச்சகர் குடும்பமும் ஒவ்வொரு கோயிலைக்கட்டிப் பிடித்துக்கொண்டு பிழைக் கிறார்கள். சென்ற பல நூற்றாண்டுகளாகப் பரம ஏழைகளாகிப்பரிதாபமான நிலையில் தாழ்ந்து போயும் தமக்கு ஏற்பட்ட கோயில்களை விடாமல் பிச்சை எடுத்தாவது கோயில்களில் தங்கள் மூர்த்திகளுக்கு ஆராதனை வழுவாமல் செய்து கொண்டு வருகிறார்கள். சமணர்கள் தங்கள் சமயப்பற்றில் பெயர் போனவர்கள் என்று திருத்தொண்டர் புராணம் வாசித்தாலே தெரிய வரும். அதேபற்றோடு விஜயமங்கலத்திலும் இருந்திருக் கிறார்கள்.

வழிபட்ட கோயில் :

விஜயமங்கலத்துப் பசதிபுரத்தில் உள்ள கோயில் அருமையான ஜைனக்கோயில். இதனை நாட்டு மக்கள் நெட்டைக் கோபுரம் என்றும், மூர்த்தியை அம்மணீசர் என்றும் அழைக்கிறார்கள். கோயில் சாதாரண இந்துக் கோயில்போலப் பார்வை அளிக்கிறது. சுற்றிலும் மதில்கள். உள்ளே மண்டபங்கள். வாயிலில் உயரிய கோபுரம். வெளியே கொடிக்கம்பம். இப்படிப்பட்ட கோயில் கொங்கு நாடெங்கும் காணலாம். ஆனால் உள்ளே இருக்கும் மூர்த்திகளைக் கண்டால்தான் வேற்றுமை தெரியும். மூர்த்திகள் நிர்வாணமாக நின்றிருக்கும் காட்சி இந்து கோயில்களில் காணமுடியாது. ஆடையின்றி இருப்பதினால் மூலத்தான மூர்த்தியை அம்மணீசர் என்கிறார்கள். தமிழில் அம்மணம் என்றால் நிர்வாணம் என்பது பொருள். மேலும் அம்மணம் என்றால் சமணம், அவர்கள் தொழும் மூர்த்தி அம்மணீசர் என்று ஆகி அச்சொல்லில் மகரம் இரட்டித்து அம்மணீசர் என்றும் பெயர் ஏற்பட்டிருக்கலாம். பொதுமக்கள் இந்த மூர்த்தியை வேறு சமயத்து மூர்த்தி என்று கருதுவதே இல்லை. பல கோயில்களில் உள்ள மூர்த்திகளைப் போலவே இதனையும் வழிபடுகிறார்கள். அர்ச்சகர்களும் பூணூல் அணிந்து கொண்டிருக்கிறார்கள். கன்னட பிராமணர் என்று கருதி ஐயர் என்றே எண்ணி அழைக்கிறார்கள். பழைய அரசர்களும் இக்கோயிலுக்கு மானியம் தந்திருக்கிறார்கள். அவர்கள் இந்தக் கோயிலுக்கும் மற்றக் கோயில்களுக்கும் வேற்றுமை பாராட்டாது இவ்வண்ணம் செய்திருக்கலாம். இந்தக் கோயில் மூர்த்திகளை இந்நூலாசிரியர் வழிபாடு செய்திருக்கவேண்டும். அந்தக்காலத்தில் சமணக் குடும்பங்கள் இங்கே மிகுதியாக இருந்திருக்க வேண்டும்.

ஆசிரியர் வழிபட்ட கோயிலைப்பற்றிச் சற்று அதிகமாக அறிய வேண்டியது அவசியம் அல்லவா? நெட்டைக் கோபுரம் என்று அழைக்கப்படும் இந்தக் கோயில் பார்த்த

மாத்திரத்தில் மிகப் பழையது என்று அறியலாம். பல நூற்றாண்டுகளாகச் செப்பனிடப்படாத காரணத்தினால் அது பாழடைந்த தோற்றத்தில் இருக்கின்றது. சுற்றுப் பக்கங்களில் யாதொரு பாதுகாப்பும் இல்லாததினால் ஆடு மாடு மேய்ப்பவர்கள் அதனுடைய சின்னங்களை அழித்துக்கொண்டே வந்திருக்கிறார்கள். கோயிற் சுவர்களில் இருந்த கல்வெட்டுக்களை அரசாங்கத்தார் படியெடுத்திருக்கிறார்கள். இடிந்துபோன சில இடங்களைச் செப்பனிட்டும் இருக்கிறார்கள். ஆனாலும் செய்ய வேண்டிய பாதுகாப்பு செய்யப்படவில்லை. நெட்டைக் கோபுரம் என்று மக்கள் சொன்னாலும் இதன் பெயர் சந்திரப்பிரபா தீர்த்தங்கரர் கோயில் என்றறிய வேண்டும். மூலஸ்தானத்தில் இருக்கும் மூர்த்தி அந்தத் தீர்த்தங்கரருடைய திருவுருவமே ஆகும். இக்கோயில் கொங்கு நாட்டில் கட்டப்பட்டதாகையால் மற்றக் கொங்குக் கோயில்களைப் போலவே கட்டப்பட்டுள்ளது.

இக்கோயில்தான் கொங்கு நாட்டுச் சமணக் கோயில்கள் எல்லாவற்றிலும் மிகப் பெரியது. கோயிலைச் சுற்றிலும் விரிந்த பிரகாரமும் உயர்ந்த மதில்களும் உண்டு. முன் வாயிலில் உயர்ந்த கோபுரமும் அதன் வெளியில் கொடிக்கம்பமும் இருக்கிறது. இவ்வகைக் கொடிக்கம்பம் கொங்கு நாட்டுக் கோயில்களில் சிறப்பாக அமையப்பெறுவதாகும். கோயில் கட்டிடம் கருங்கல்லால் அமைக்கப் பெற்றது. ஐந்து மண்டபங்களைக் கொண்ட பெருங்கோயிலாக உள்ளது. தீர்த்தக்கிணறு ஒன்று உள்ளது. அது பீமனுடைய பெயரால் வழங்குகிறது. கல்வெட்டுக் கொண்டது.

இக் கோயிலில் ஒவ்வொரு மண்டபத்திலும் மூர்த்திகள் வைக்கப்பட்டிருக்கின்றன. இந்துக் கோயில்களில் இவ்வாறில்லை. கர்ப்பக் கிரகத்தில் சந்திரப்பிரபா தீர்த்தங்கரர், இரண்டாம் மண்டபத்தில் வர்த்தமான மகாவீரர் என்ற 24-வது தீர்த்தங்கரர், மூன்றாவது மண்டபத்தில் அனந்தநாத தீர்த்தங்கரரும் மேற்கும்

வடக்குமாக 13 தீர்த்தங்கரர்கள் உருவங்களும், நான்காவது மண்டபத்தில் நேமிநாதர் யட்சி கூஷ்பாணினியும் ஆதீசர் என்ற ரிஷபாதீர்த்தங்கரரும், ஐந்தாவது மண்டபத்தில் நாகராசர் மருதேவி திருமணக்காட்சியும் மற்றும் சில காட்சிகளும் தெரிகின்றன. கோபுரம் மூன்று நிலைகள் கொண்டது. கொடிக்கம்பம் 30 அடி உயரமுள்ளது. சமண மொழியில் மானஸ்தம்பம் என்று பெயர். (இக்கோயிலைப்பற்றிய மற்ற விவரங்கள் எனது மற்றொரு நூலாகிய கொங்குநாடும் சமணமும் என்ற நூலில் காண்க).

சந்திரப்பிரபா ஆலயம் மிகப்பழமை பெற்ற ஆலயம். இது கங்கர்கள் கொங்குநாட்டை ஆண்ட காலம் முதலே கட்டப்பட்டு வழிபாட்டில் இருந்திருக்க வேண்டும். அப்போது இந்தத்தளி சுடு மண் தளியாக இருந்திருக்க வேண்டும். ஏனெனில் அக்காலக் கல்வெட்டுக்கள் இங்கே கிடைக்க வில்லை. பிற்காலக் கல் வெட்டுக்கள் கிடைத்திருக்கின்றன. ஆசிரியர் காலத்தை அறிய இக் கல்வெட்டுக்கள் ஒருவாறு உதவிபுரியும். கோயில் முன் மண்டபத்தில் ஒரு தூணில் கீழ்ப்புறமாக கிரந்தத்திலும் தமிழிலும் பொறிக்கப்பட்ட ஒரு கல்வெட்டு இருக்கிறது. அதில் சாமுண்டராசனுடைய தங்கை புல்லப்பை என்ற ஒரு பெண்மணி நிசீதிகை செய்ததாகக் கண்டிருக்கிறது. நிசீதிகை என்றால் உண்ணாவிரதமிருந்து உயிர்விடும் ஒரு சடங்காகும். இச்சடங்கு மிகவும் புனிதமான சடங்கு என்று சமணர்கள் கருதுகிறார்கள். இக்கல் வெட்டில் கண்ட சாமுண்டராசன் கங்க அரசர்கள் மாரவர்மன் II ராஜமல்லன் II இவர்கள் காலத்தில் அமைச்சராய் இருந்து சரவண பௌகுளத்தில் (மைசூர் சீமை) கோமடேசுவரர் திருவுருவத்தை நிலைநாட்டின அதே சாமுண்டராயன் என்று கல்வெட்டு ஆராய்ச்சி யாளர்கள் கூறுகின்றார்கள். அப்படியாயின் இந்தக் கல்வெட்டு 10-ம் நூற்றாண்டின் இடையிலேயே ஏற்பட்டு இருக்கவேண்டும். அதாவது கி. பி. 983 என்றறிக, (597—1905,.

மேலும் இவ்வாலயத்தில் கொங்குச் சோழர் (11-13ம் நூற்றாண்டு காலத்துக் கல் வெட்டுக்களும் விஜயநகர ஹரிஹரராயன் கல்வெட்டும் இருக்கின்றன. கொங்குச் சோழர்களில குலோத்துங்கச் சோழன் கல்வெட்டின்படி சகம் 1035-ல் இக்கோயிலுக்கு ஒரு நிலம் தானம் செய்யப்பட்டது. அக் கல்வெட்டின்படி இக்கோயிலின் பெயர் வீரசங்காதப்பெரும்பள்ளி என்பது. சமணர்கள் ஆலயங்களுக்குப்பள்ளி என்ற சொல் வழங்கப்பெறும். பெரும்பள்ளி என்று பெயர் கொடுக்கப்பட்டுள்ளதால் இக் கோயில் மற்றச் சமணக்கோயில்களைக் காட்டிலும் பெரிதாக இருந்திருக்கவேண்டும் (598—1905) மற்றும் இரண்டு கல் வெட்டுக்கள் அரைகுறைகளாகத் தெரிகின்றன. அவைகளிலே சில திருவிழாக்களுக்குக் கொடுக்கப்பட்ட தானமும் கதவு நிலை முதலியவைகளைத் தந்த செய்தியும் காண்கிறோம். (சகம் 1189) மேலும் விஜயநகரத்து அரசன் கல்வெட்டில் சகம் 1334-ல் ஒரு நிலம் தானம் செய்த செய்தி கூறப்பட்டுள்ளது. ஆகவே மேலே கண்ட ஐந்து கல்வெட்டுக்களின்படி 10-ஆம் நூற்றாண்டு முதல் 14-ஆம் நூற்றாண்டு வரை அதாவது ஐந்து நூற்றாண்டுகள் முழுவதும் இந்த ஜைன ஆலயம் செழிப்பான நிலையில் இருந்ததெனலாம்.

இப்படிப்பட்ட செழிப்பான நிலையில் சமணக்குடிகள் கொங்கு நாட்டில் விஜயமங்கலத்தைச் சுற்றி வாழ்ந்தார்கள் என அறியலாம்.

ஆசிரியர் குலமும் சமயமும்

ஆசிரியர் வேளிர் குலத்தில் பெருங்குடியில் தோன்றின ஒரு பெருமகனார் என்று முன்னமே குறிக்கப்பட்டது. அவருடைய சமயம் சமணம் என்றும் கண்டோம். கங்கர் வமிசம் தலைக்காட்டில் கொங்கணி வரும் மகாதிராயனால் தாபிக்கப்பட்டது. (340-400 கி. பி.) அது முதல் இராச மல்லன் II (870-907) காலம் வரையில் மிகச் சிறப்பாக ஆட்சி புரிந்தது. பிறகு இராக்கசகங்கன் (984-1022) வரை

எட்டிச் சென்றது. இந்த அரசர்களில் பலர் சமணர்கள். அவர்கள் அவையில் இருந்த பல சமண ஆசிரியர்கள் சொல்படி கங்கவாடியில் அனேக சமண ஆலயங்களுக்குத் தானங்கள் வழங்கியிருக்கிறார்கள். அவர் வம்சத்தில் தோன்றின சிறந்த அரசர்கள் அவிநீதன் (520–540) துர்விநீதன் (540–600) என்பார்கள். இவர்களில் துர்வி நீதன் சமண சமயத்தில் ஆர்வம் கொண்டவன். அவர்கள் காலம் முதல் இராஜமல்லன் II (870-907) காலம் வரை சமணம் கங்கைவாடியில் சிறப்புற்றது. இராசமல்லன் II காலத்தில்தான் சாமுண்டராயன் என்ற அமைச்சன் உலகப்புகழ்பெற்ற கோமடேசுவர சிலையை சிரவண பௌகுளாவில் நிறுத்தினான் என்று கண்டோம். அவனுடைய தங்கை புல்லப்பை விஜயமங்கலத்தில் நிசீதிகை உற்றாள் என்று கல்வெட்டு கூறுகிறது. ஆகவே கங்கை வாடிக்கும் குறும்பு நாட்டிற்கும் நீண்டகாலமாகத் தொடர்பு இருந்திருக்கிறது. (இச்செய்தி முழுவிவரங்கள் கொங்குதேச ராஜாக்கள், தலைக்காட்டு கங்கர்கள் (M. V. கிருஷ்ண ராவ் எழுதியது) மைசூர் சிறை அரசியல் நூல்கள் முதலியவைகளில் காணலாம்). கொங்கணி வர்மன் காலத்திலிருந்தே சமணக் குருக்கள்மாரும் சமணக் குடிகளும் தெற்கே வடகொங்கு நாட்டில் குடியேறினார்கள். ஹரிவர்மன் தலைக்காட்டைத் தலைநகராக்கி ஆண்டான் (436-460). மேலும் அவிநீதன் (500-540) சமணர்களுக்கு நிரம்ப தானங்கள் செய்தான். துர்வி நீதன் (550–600) மிகச்சிறந்த மன்னன். தன் கீழ் இருந்த நாட்டுப் பகுதிகளை ஒற்றுமைப்படுத்திப் பலப்படுத்தினான். ஆனால் அவனுக்கும் மாற்றாந்தாய் மகனுக்கும் நேர்ந்த போரில் கொங்குநாட்டு ஆட்சி அவன் பங்காளி கைக்குச் சென்றுவிட்டது. ஆனால் பின்னர் நடந்த போரில் அதனை அவனே மீட்டுக் கொண்டான். அது முதல் பல நூற்றாண்டுகள் வட கொங்கு கங்கர்கள் வசமே இருந்தது.

மேலும் துர்விநீதன் சிறந்த அரசியல் நிபுணன். கல்விமான் ஆகவும் இருந்தான். வடமொழியில் வல்ல

வன். கவி பாரவி எழுதிய கிராதார்ச்சுனீயம் என்ற நூலில் 15 ம் சருக்கத்திற்கு உரை வகுத்தவன். பைசாச பாஷை யில் குணாட்டியர் எழுதிய பிரகத்கதையை வடமொழியில் மொழிபெயர்த்தவன் என்று புகழப்படுகிறான். இச் செய்தியை மேல்நாட்டு ஆராய்ச்சியாளர்களும் ஒத்துக் கொள்ளுகிறார்கள். இந்தப் பிரகத்கதை தற்போது கிடைக்கவில்லை. அதன் மூல நூலாகிய பைசாச நூலும் கிடைக்கவில்லை. பின்னால் பல வடமொழியாசிரியர்கள் அந்நூலின் பகுதிகளை எடுத்து எழுதியிருக்கிறார்கள். குணாட்டியர் எழுதிய நூல் சைவச்சார்பானது. பின்வந்த ஆசிரியர்களும் சைவச்சார்பே அனுசரித்துள்ளார்கள். ஆனால் துர்விநீதன் சமணச் சார்புடையவன், ஆகையால் சமணக் கொள்கைகளைப் புகுத்தியிருப்பான். துர்விநீதன் இயற்றிய பிரகத்கதையைச் சார்ந்தே கொங்குவேள் பெருங்கதை எழுதினதினால் அதில் சமணக் குறிப்புக் களைப் புகுத்தியிருக்கக்கூடும்.

ஆசிரியர் கொங்குவேளிர் துர்விநீதனுக்குப் பிறகு அல்லது அதே காலத்தில் தோன்றியிருக்கவேண்டும். அந்நூலை அவர் சமண நூல் ஆகவே ஆக்கிவிட்டார். அக்காலத்தில் வடகொங்கும் சிறப்பாகக் குறும்புநாடும் பூந்துறைநாடும் கங்ககுலத்தார் ஆதிக்கத்தில் சமணக் குடிமக்கள் குடியேற்றத்தில் இருந்தது. அக்காலம் முதல் இராஜமல்லன் காலம் வரையில் குடியேறி அர்ச் சகத் தொழில் செய்தவர்கள் கன்னடிய சமணர்களே அவர்கள் நாட்டில் குடியேறின பிறகு தமிழ் கற்றுக் கல்வியில் வல்லுநர் ஆகிவிட்டனர். தற்போதும் சமணக் குருக்கள் தமிழில் வல்ல கன்னடிய மக்களே ஆவர். பின் காலத்தில் கொங்கு மண்டல சதகம் இயற்றிய கார்மேகக் கவிஞர் அவ்வர்ச்சகக் குடியில் தோன்றியவரே. ஆகவே துர்விநீதன் கால முதல் குறும்பு நாட்டில் குடியேறின குலத்தார்கள் சமண சமயத்தில் சார்ந்திருந்த வகையில் சமணம் செழித்து இருந்தது.

நூல் ஆசிரியர் தொழில்

ஒரு நாட்டு அரசன் மற்றொரு நாட்டைப்பிடித்து ஆளும்போது அவ்வாறு பிடிந்த நாட்டில் ஒரு ஆட்சித் தலைவனை வைத்தும், அவன் கீழ்ப் பல சிறு தலைவர்களை வைத்தும் ஊர்களில் நாட்டாண்மைக்காரர்களை வைத்தும் ஆளுவான். மேலும் நாட்டைச் செழிப்பிக்கத் தன் இனத்தாரைக் குடியேறச் செய்தும் தன் ஆட்சியைப் பலம் ஆக்கிக் கொள்வான். இந்த ஆட்சித்திறம் எங்கும் என்றைக்கும் நடக்கும். விஜயநகரத்தரசர் தமிழ் நாட்டைப்பிடித்து ஆண்ட காலத்தில் நாயக்கர் மன்னர்களை ஆட்சித் தலைவர்களாகவும் பாளையக்காரர்களைச் சிறு தலைவர்களாகவும் ஊர்களில் மணியம் கணக்கு முதலியவர்களையும் குடிகளில் தொழிலாளர்களையும் வைத்து ஆட்சி புரிந்ததையும் அறிவோம். இதே முறையில் கங்கர் ஆட்சியிலும் நடைபெற்றது வட கொங்கு நாட்டை அவர்கள் பல நூற்றாண்டுகளாக ஆண்ட நாளில் பூந்துறை, குறும்பு நாடுகளில் அதிகாரிகளையும் சமணக் குடிகளையும் வைத்தார்கள். அச்செய்தி இயற்கையாக நடைபெறுவதேயாம். அவ்வாறு நடை பெற்றதில் குறும்பு நாட்டில் சில பெருங் குடி மக்கள் அமர்ந்தார்கள். நாட்டுப் பழங்குடி மக்களிலேயே நம்பிக்கையுற்றவர்களாக இருந்தால் அவர்களை நாட்டாண்மைக்கு நியமிப்பதுண்டு. உதாரணமாக விஜயநகர ஆட்சியில் மதுரை நாயக்க மன்னர்கள் தாங்கள் புதிதாகக் கொணர்ந்த தெலுங்குப் பாளையக்காரர்களே யன்றி தமிழ்ப் பெருங்குடி மக்களையும் பாளையக்காரர்களாக அமைத்தார்கள். அவ்வாறு அமைந்தவர்கள் தான் திருநெல்வேலித் தமிழ்ப்பாளையக்காரர்களும் தென் கொங்கு ஊற்றுக்குழி சமத்தூர் பாளையக்காரர்களுமே ஆவார்கள். அது போலவே கங்கர் வமிச ஆட்சிக் காலத்திலும் பூந்துறை குறும்பு நாடுகளில் பழங்குடி மக்களில் சிலரை வேளிர்களாக நியமித்தார்கள். அப்படிப் பட்ட பெரும்பழங்குடி மக்களில் வந்தவர் கொங்குவேளிர். இவர் அக்குறுப்பு நாட்டில் தலைசிறந்த குறு நிலத்

தலைவராக இருந்தார். அவ்வண்ணம் குறுநிலத்து நாட்டாண்மை பெற்ற காலத்தில் தலைமுறை தலைமுறையாகப் பல ஆண்டுகள் ஆட்சித் தொழிலைப் புரிந்து வந்தார். பெருங்குடி மக்களில் வாழையடி வாழையாக வந்தபடியால் நாட்டில் செல்வாக்கும் பெரும்புகழும் பெற்று வந்தார். மிகுந்த செல்வாக்குள்ள பெருமக்களைப் பெயர் வைத்துக் கூப்பிடுதல் கொங்கு நாட்டு வழக்கம் அல்ல. தற்போதும் பழைய கோட்டைப்பட்டக்காரரை எஜமான் என்றும் அவருடைய ஊரை எஜமான் புதூர் என்றுமே பொதுமக்கள் கூறுவார்கள். அவருடைய இயற்பெயரை அறியவும் மாட்டார்கள். அதுபோல் கொங்குவேளிரை அந்தக் குடிப்பெயராலேயே மக்கள் வழங்கினர்கள். நாளாவட்டத்தில் அப்பெயரே நிலைத்து விட்டது தாமரை என்ற சொல்லின் இலக்கணம் போல கொங்கு வேளிருடைய இயற் பெயர் மறைந்து போய் பொதுப்பெயரே அவர் பெயராய் நின்று விட்டது.

நூலாசிரியர் கல்வித் திறம்

பெருங்கதையின் நூல் நயம், உயர்ந்த நடை, கவிதை அழகு இவைகளை நோக்குங்கால் அதன் ஆசிரியரின் கல்வித்திறம் வெகு நன்ருகப் புலப்படும். இளமையில் இருந்தே கல்வி கேள்விகளில் பற்றுடையவர் ஆகித் தம் ஆராய்ச்சி வல்லமையை மிகுதிப்படுத்தி இருக்கவேண்டும். தமிழ்மொழி மட்டும் அல்ல வட மொழியும் நன்ருகக் கற்றிருக்க வேண்டும். வட மொழியில் வல்லுநர் ஆகியிருந்த சமணப் பெருங்குரவர்களிடம் இலக்கிய இலக்கண நூல்களை நன்கு கற்றும் தமிழ்மொழி வல்லுநரிடம் தமிழ் இலக்கிய இலக்கணங்களை நன்கு கற்றும் துறைசான்ற புலமை பெற்றிருக்கவேண்டும் ஏனென்ருல் பெருங்கதைப் போக்கு மணிமேகலை, சிலப்பதிகாரம் போன்ற பெருங்காப்பியங்களோடு ஒப்பிட்டுச் சமமாக வைக்க வல்ல பெருமை பெற்றிருப்பதை நாம் அறியலாம். வடநாட்டுக் கதையைத் தமிழ் நாட்டு இலக்கண மேன்மை பெறும்படி வகுப்பது

எளிதல்ல. எவ்வாறு வால்மீகி இயற்றிய இராம காதையைக் கம்பர் தமிழ் நாட்டுப் பேரிலக்கியமாகப் படைத்தாரோ அதே போல வடக்கே வத்த நாட்டு உதயணன் கதையைக் கொங்கு நாட்டில் நடந்த ஒரு சால்புடைய வரலாறென்று போற்றத் தக்க வகையில் கொங்குவேளிர் புலவர் பெருமகனார் அமைத்திருக்கிறார். நூலில் காணும் சில வடமொழிப் பெயர்களை விட்டு நூலைப்படித்தால் அதனை எவரும் வடநாட்டுக் கதையல்ல தமிழ் நாட்டுக் கதை யென்றே கூறுவார்கள். தமிழ் இலக்கணம் வழுவாது பொருட் செறிவு குறையாது ஒரு ஒப்பற்ற காப்பியமாக வகுப்பது என்றால் ஆசிரியருடைய கல்வித்திறம், ஆராய்ச்சித்திறமை, செய்யுள் நடைப்பெருமை, நீரோட்ட அமைதி இவைகளை எவ்வாறு வியப்பது. இவர் ஒருவர் மட்டும் தனியாக ஒரு பெரும் புலவராக இருந்திருக்கின் இத்தனைப் பெருமை அடைந்திருப்பாரா? இவரோடு அளவளாவி நூல் உணர்ச்சி அறிய வல்ல மற்றக் கல்வியாளர்களும் இருந்திருக்கவேண்டும். முன்னாளில் மதுரையில் சங்கப் புலவர்கள் சங்கம்கூடி மெய்நூல்களை ஆராய்ந்ததுபோல் விஜயமங்கலத்தில் ஒரு அரிய சங்கம் கூட்டி அதில் பல அறிஞர்கள் இடையில் கொங்குவேளிர் நூலாராய்ச்சி செய்திருக்க வேண்டும். அப்படிப்பட்ட சூழ் நிலையில் தான் பெருங்கதை போன்ற தலைசான்ற நூல் தோன்றி இருக்கலாம். அப்படிப்பட்ட ஆராய்ச்சி சங்கம் ஒன்று விஜயமங்கலத்தில் சமணர் ஆதிக்கத்தில் இருந்தது என்பதற்குத் தக்க சான்றுகள் இருக்கின்றன.

விஜயமங்கலத்திருந்த பெருங்கவிஞர் கொங்கு வேளிர் உதயணன் கதையாகிய பெருங்கதையை இயற்றி அரங்கேற்றிய காலத்தில் அங்கிருந்த சங்கத்தார் கேட்ட கேள்விகளுக்குத் தன்னிடம் இருந்த ஓர் அடிமை மாதைக் கொண்டு விடை பகரச் செய்தார் என்று கொங்கு மண்டலச் சதகம் கூறுகிறது. அச்செய்யுள் வருமாறு :

நீதப் புகழ் உத யேந்திரன் காதை
நிகழ்த்து தற்குக்
கோதற்ற மங்கையின் மூன்று பிறப்புற்ற
கொள்கை யன்றி
மேதக்க சொற் சங்கத்தார் வெள்கவே
கொங்குவேள் அடிமை
மாதைக் கொண் டுத்தரம் சொன்னதுவும்
கொங்கு மண்டலமே

(உதயேந்திரன் காதை - உதயணன் காதை; கோதற்ற மங்கை - குற்றமற்ற விஜய மங்கலம்; மூன்று பிறப்புற்ற கொள்கை - நூலை எழுதுதற்கு எடுத்த சன்மம் மூன்று; ஆசிரம வேறுபாடு பிறப்பு வேறுபாடெனக் கருதுதலும், ஒரு பிறப்பில் தொடங்கிய பிராரப்த வினை மூன்று பிறப்பு வரைத் தொடரும் எனவும் இதற்குப் பொருள் கூறுவர். மேதக்க சொல் சங்கத்தார் வெள்க - மேன்மை தங்கிய கல்வியில் சிறந்த தமிழ்ச் சங்கத்தார் வெட்கம் உற; அடிமை மாதைக் கொண்டு - தன் வேலைக்காரியைக் கொண்டு; உத்தரம் - விடை பகர்ந்தது)

இந்நூல் செய்து வருகையில் தம் அகால மரணத்தைக்கணிகரால் அறிந்து எப்படியேனும் அதனை மாற்றிக் கொண்டு இந்நூலைப் பூர்த்தி செய்ய வேண்டும் என்ற கவலையுற்று இல்லறத்தினின்று நீங்கி வானப் பிரத்தமும் பின் அதனின்று நீங்கித் துறவறமும் கொண்டு இந்நூலை முடித்திருக்கலாம் என்று இதற்குப் பொருள் கூறப்படுகிறது. அக்காலத்தில் மதுரைத் தமிழ்ச் சங்கமேயன்றி கொங்கு நாட்டிலும் சங்கம் இருந்ததெனவும் இதனல் தெரிகிறது. கம்பர் வீட்டுக் கட்டுத் தறியும் கவி சொல் லும் என்ற பழமொழிக்கிணங்க கொங்குவேள் அடிமை மாது விடை பகர்ந்திருக்கலாம். கேள்விகளும் விடைகளும் தெரியவில்லை. தம் வீட்டு வேலைக்காரியும் தமிழ்ச் சங்கத்தாரிடம் கேள்விகளுக்கு விடை பகர்ந்து அவர்கள் வெட்கும்படி செய்தால் அந்தக் கவிஞரின் கல்வித் திறத்தைச் சொல்லவும் முடியுமோ. மேலும் கொங்குவேளிர் ஒரு சங்கத்தை நிறுவி அவர்கள் பாராட்டத் தம் வாழ்நாளை நன்கு இன்புறக் கழித்தார் என்று அறிய

லாம். சமணர்களில் நற்சங்கம் ஒன்று இருந்த தென்பதற்குக் கொங்கு மண்டலச் சதகம் மட்டுமேயன்றி மைசூர் சீமைக் கல்வெட்டுக்களாலும் வச்சணந்தி மாலைப் பாயிரவுரையாலும் அறிகிறோம். "இந்நூல் கேட்பித்தது யார் அவைக் களத்ததெனின் நற்சங்கத்தா ரவைகளத்தென்றுணர்க" என்று அப்பாயிரம் கூறுகின்றது. வில்லி பாரதத்துப்பாயிரத்தில் "கொங்கர்குல வரபதியாட் கொண்டான் என்றொரு குரிசில் தோன்றி......நான்காஞ் சங்கமென முச்சங்கத் தண்டமிழ் நூல் கலங்காமல் தலை கண்டானே" என்ற செய்யுளால் அறிகிறோம். கொங்கு வேள் கொங்கு நாட்டுச் சங்கத்தில் தலைமை பூண்டவராகி இருத்தல் வேண்டும்.

சமயப் படிப்பு :

கொங்கு வேளிருடைய சமயம் சமணம் என்ற ஜைனம். அதன் கொள்கைகளை நன்கு படித்து வாழ்க்கையில் புகுத்தியிருந்தார். அதனால்தான் எடுத்துக் கொண்ட நூலில் தம் கொள்கைகளை நன்கு புகுத்தியிருக்கிறார். உதயணன் கதையைப் பைசாச மொழியில் எழுதிய குணாட்டியர் சைவ கணத்தைச் சேர்ந்தவர். ஆகவே அன்னார் தம் நூலில் சமணக் கோட்பாடுகளைக் கூறிப் போந்திருக்க முடியாது. அதன் பகுதிகளை வடமொழியில் எழுதிய காஷ்மீரா நேபாளி நூலாசிரியர்களான ஏனையோர்கள் சமணக் கொள்கைகளைப் புகுத்தியிருக்க முடியாது. புகுத்தவுமில்லை. ஆனால் அக்கதையை வடமொழியில் எழுதிய துர்விநீதன் ஒரு வேளை சமணக் கொள்கைகளை எழுதியிருக்கக்கூடும். அந்நாட்டுக் குறுநிலத் தலைவரான கொங்குவேளிர் தம் சமயக் கொள்கைகளைப் புகுத்துவது தம் கடமை என்று உணர்ந்தே தமக்குத் தோன்றின இடமெல்லாம் சமயக் கொள்கைகளைக் கையாண்டு இருக்கிறார். அவர் சமணச் சமயப்படிப்பில் ஊறியிருத்தல் வேண்டும். ஆகவே தானாகவே அச்செய்திகள் உள்புகுந்து விட்டன.

உதயணனுக்கு சாவம்வதத்தைக்கும் சயந்தி நகரில் திருமணம் நடைபெறுகின்றது (இலாவண காண்டம் 22 பக்கம் மலைப்பகுதி) அப்போது நகரத்தில் பலவகைப் பட்ட கம்பலை ஏற்படுகிறது. அவற்றை ஆசிரியர் வருணிக்கும்போது "பன்னூறுயிரம் ஆரவாரங்களுள், பவழ மாலைகளை உச்சியினின்றும் அடிகாறும் தூக்கப் பட்டனவாய்த் திகழும் நீலநிறக் கழிகளிடத்தே கொளுவி அணி செய்யப்பெற்ற அரா அந்தரணத்திய மாலையோடு பொருட்டின்கண் கோக்கப்பட்ட ஒளியுடைய முக்குடை யும் பொறிகளாலே சுழலா நிற்பவும், உரையாலும் ஓதற் றெழிலாலும் ஒப்பற்ற புலமையையுடைய சான்றோர்கள் மாறுபடாத திண்ணிய மெய்ந்நெறிச் செலவினை உடைய ராய் இவ்வுலகம் உயரும் பொருட்டு வந்து அவதாரம் செய்த தீர்த்தங்கரர் முதலிய அறிவருடைய வரலாற்றினை கூருநிற்பவும் மாந்தர் அருகக் கடவுளை அருச்சிக்கவும் இவ்வாற்றால் எழுந்த ஆரவாரங்களும்" பிறவும் கூறுகின்றார். இங்கே பிற சமய ஆரவாரங்களைக் கூறு மல் முக்குடை (சந்திராதித்தம், நித்த விநோதம், சகல பாசனம்) சுழச்சி, தீர்த்தங்கரர் வரலாற்றைக் கூறும் ஒலிகள், அருகக் கடவுள் அருச்சனை, என்ற சமணர் ஒலி களை மட்டும் கூறினது ஆசிரியரின் சமயப்பற்றை விளக்குகிறது.

மேலும் 6-வது தெய்வச் சிறப்பு என்ற பகுதியில் திருமணம் முடிந்து நீராடிய பிறகு தெய்வம் தொழு தற்குத் திருக்கோயில் செல்லுதலும் அக்கோயில் வழி பாட்டுச் சிறப்பும் கூறப்படுகிறது. அக்கோயில் அருகன் கோயில் எனவும் அக்கோயில் அமைப்பைக் கூறி உதயணனும் வாசவதத்தையும் இறைவன் முன்னின்று நெஞ்சுருகி வாழ்த்திப் பரவுதலும் கூறப்படுகிறது. இதில் அருகக் கடவுள் கோயிலினுடைய அமைப்பு தேவர்களில் ஆண்பாலர், தேவமகளிர், கந்தருவ மகளிர், இந்திரன் முதலியவர்களின் ஓவியங்கள் அமைந்து இருத்தல் வருணிக்கப்பட்டுள்ளன. அந்தக் கோயில் இறைவன் முன் சென்று நூல் முறைப்படி வாழ்த்துப் பாடல்களைப்

பாடி வாழ்த்தி "இறைவனே எளியேன் பிறவிப் பெருங் கடல் நீந்தி முத்தி நிலையை எய்துவேனாகத் திருவருள் புரிக" என்று கைகூப்பி வணங்கிப் பூப்பலி கொடுத்து தெய்வம் பராவினர் என்று ஆசிரியர் கூறுகின்றார். இதனால் ஆசிரியர் தம் சமயப் பண்புகளை வற்புறுத்தி யிருக்கிறார் அல்லவா ?

மேலும் இறுதிக் காண்டமாகிய துறவுக் காண்டத்தில் உதயணன் ஆருக சமயத்தின் முறைப்படி துறவு பூணுகிறான். ஒரு நாள் பட்டத்து யானை வெறிகொண்டு நகரை அழித்தது. ஆருக சோலை ஒன்றில் தரும வீரர் என்ற சாரணர் தலைவர் தருமோபதேசம் செய்ய அனை வரும் அது கேட்டு நல்வழியடைந்தனர், யானை அங்கு செல்ல அது கேட்டுக் கோபம் நீங்கி அமைதியடைந்தது. அது கண்டு உதயணன் தானும் தருமோபதேசம் கேட்க விழைந்து தன் மகன் கோமுகனுக்குப் பதவி தந்து விட்டு தவவனம் சென்று தருமசுருதி என்ற முனிவரைச் சரணம் அடைந்து நிற்க அவர் ஜின தருமங்களை விரிவாக உபதேசிக்க அவைகளைக் கேட்டு தவ ஒழுக்கத்தில் நின்றான். பிறகு யோகசமாதி செய்து முடித்துச் சித்த பதத்தை அடைந்தான். அவன் தேவிபரும் மந்திரிகளும் தவம் செய்து கற்பலோகத்தை அடைந்தனர்.

இந்த வகையில் காவியமும் அருக சமய முடிபைப் பெறுகின்றது. இவ்வாறு நூலாசிரியர் நூல் முழுதும் சமண நூலாகவே இயற்றுகிறார். இதுவும் அவருடைய சமண சமயப்பற்றை விளக்குகிறது.

சமயக் கொள்கைகள் :

மேலும் நூல் முழுதும் ஆங்காங்கே சமண சமயக் கொள்கைகளை விரித்து இடையிடையே தொகுத்திருப்ப தற்குச் சில எடுத்துக்காட்டுக்களைக் கூறுவாம் :

1. சமணக் கொள்கைகளின்படி காதி கர்மம் என் பது ஆன்மாவின் அறிவை மறைக்கும் தீவினையாகும். அதனை,

"வெந்துயர் அருவினை வீட்டிய அண்ணல்" 2-1-15
"காதி வெவ்வினை கடையறு காலை" 3-27-149

என்ற அடிகளில் விளக்குகிறார்.

2. கருமந் தீர்ந்த உயிர் மேலே செல்லும் என்பது சமணக் கோட்பாடு. இதனை,

'வினைதீர் உயிரின் மிதந்தது' (1-40-185)

என்கிறார்.

3. அல்லாத உணவை நீக்க வேண்டியது சமணர் கடமை. அதனை,

'அல்லூண் நீத்தலின் அடங்கிய உடம்பினன் (4-7-159)

என்பதில் குறித்தனர்.

4. மந்திரங்கள் ஐந்து. அதனைப் பஞ்சமந்திரம் என்பர்.

'அஞ்சாது ஐம்பதம் நினைமதி நீ' (5-3-134)

என்றுரைக்கின்றனர்.

5. ஓதி என்றால் முற்பிறப்பை அறியும் அறிவு. இதனை,

'ஒன்றிய உறுநோய் ஓதியின் நோக்கி' (5-3-43)

என்பதில் விளக்குகிறார்.

6. ஒரு குன்றின் மேல் நின்று பதுமை போல அசைவு அற்று நின்று செய்யும் தவயோகத்திற்குப் பிரதிமாயோகம் அல்லது படிவக்குழு என்று பெயர் (1-39-14) இதனை "ஓங்கிய படிவத்து அறம்புரி தந்தை' (2-11-63) என்கின்றார். தீர்த்தங்கரர்கள் பிரதிமா யோகம் செய்தனர். (இப்படிப்பட்ட உருவங்கள் கார்க்கல், சிரவண பௌகுளாவில் காணலாம்)

7. சித்தர்.

'முகடுயர் உலக முன்னிய முனிவர்' 1-35-219
'திருப்பே ருலகம் பெற்றான் போல'-சித்த பதவி. 3-12-77
'பெயர்ச்சி யுலகம் பெற்றான் போல'

8. அருகத்தானம், அராந்தானம், சேதிய, ஜினு லயம் இவைகள் சமண நிலையங்கள்.

"அருந்தவர் பள்ளியும் அருகத் தானமும் (4–2–12)
அருமணி சுடரும் அரான் தானமும்
துகடீர் பெருமை சேதியந் தொழுது"

9. அருகன் அமர்ந்த மரம் அசோக மரமும், அவன் கொண்ட குடை முக்குடையும் ஆகும்.

"அணித்தகு பள்ளி அசோகத் தணிநிழல்
தாமம் முக்குடை தாமுறை கலிப்ப"

என்ற அடிகளால் அறிக.

10. ஆதி வேதம். வேதங்களும் மூன்ருவது.

"ஆதி வேதத் தகவயின்"

என்ருர்.

11. பவண லோகம் - நாகருலகம்.

"பைந்தலை நாகர் பவணம்"

12. பள்ளி என்பது நீத்தோர் உறைவிடம்.

"அருந்தவர் பள்ளி"
"படிவப் பள்ளி"
"மூதறி முனிவன் பள்ளி"

13. இமயம் இரு வகை.

"இருவகை இமயமும் பெருகுபுனல் யாறும்"

14. சோதிடர் (சந்திரர் முதல் ஐவர்) விமானம்.

"மாதிரத் தியங்கும் சோதிடர் விமானமும்"

15. வெள்ளிமலை - வித்தியாதரர் வசிக்கும் மலை.

"விச்சா தரர்உறை வெள்ளியம் பெருமலை
விளங்கொளி விஞ்சையர் வெள்ளியம் பெருமலை"

16. ஐம்பெருங்குலம்: இக்குவாகு குலம் முதலியன.

"அலகையாகிய ஐம்பெருங் குலத்து"

17. இயக்கி என்பது யக்ஷ தேவதை.

" இயக்கி யுண்டு "
" இயக்கி இவளே "

இவர்கள் தீர்த்தங்கரருடைய யட்சி தேவதைகள். இதுவரை எடுத்தாண்ட சமணக் கொள்கைகளைத் தக்க இடங்களில் ஆங்காங்கே எவ்வாறு ஆண்டிருக்கின்றார் என்பதை அறியலாம். தம் சமயத்தைப் பொதுமக்களுக்கு அறிவுறுத்தும்பொருட்டு கதைக்குள் ஆண்டிருப்பதினால் அவர் அக்கொள்கைகளில் எத்தனை பற்றுடையர் என அறியலாம்.

வழிவந்த சமணப் புலவர்கள் :

பொதுவாகவே சமணப் புலவர்கள் சமயப்பற்று மிகுதியாக உடையவர்கள். அதற்குக் காரணம் அவர்களுடைய கடுமையான தவக் கொள்கைகளும், ஒழுக்கங்களும் ஆகும் அக்கொள்கைகளைப் பிற மக்களிடம் பரப்ப வேண்டும் என்பது அவர்களுடைய நோக்கம். அவ்வாறு பரப்புவதற்கு அவர்கள் கல்வித் திறமையையே ஆதாரவாகக் கொண்டார்கள். அவர்கள் வடநாட்டிலே புகழ் பெற்று இருந்தபோது வடமொழியில் மிக வல்லுநர் ஆகி கணக்கற்ற நூல்கள் இயற்றினார்கள். அவர்கள் சிறப்பாக வியாகரணம், நிகண்டு, கணக்கு, சோதிடம், மருத்துவம் முதலியவைகளில் சிறந்து விளங்கினார்கள் அவர்கள் தென்னாட்டில் குடியேறினபோது, தாம் குடியேறின நாடுகளில் வழங்கின மொழிகளை நன்கு கற்றுப் பெரும் புலவர்களாகி அம்மொழிகளில் பல நூல்களை எழுதி அவைகளின் மூலம் தம் சமயக் கொள்கைகளைப் பரப்பினார்கள். கன்னட மொழியில் வியாகரணம், நிகண்டு, காவியம், செய்யுள் நூல், அணி நூல் முதலியவைகளை இயற்றி அம்மொழியின் வளத்தை மிகுதிப்படுத்தினார்கள். அதுபோலவே தெலுங்கு மொழியிலும் அவர்களுடைய இலக்கிய உதவி நன்கு பெருகிற்று. தமிழ் நாட்டிற்கு வந்தபோதும் இங்கு எதிர்ப்பு நிரம்ப இருந்தும் அவர்கள் தம் நோக்கத்தில் வெற்றியுற்றார்கள். பெருங்காப்பியம்,

நிகண்டு, நீதி நூல்கள், இலக்கிய நூல்கள், தனிச் செய்யுட்கள், அணியியல், செய்யுளியல் முதலிய பல வகைகளிலும் அவர்கள் இயற்றியவைகளே சிறந்து விளங்குகின்றன. ஆகவே சமணர்கள் எங்குச் சென்றாலும் தங்கள் கல்வி ஒளியைப் பெருக்கிப் பொதுமக்களிடைப் பேருதவி தந்திருக்கிறார்கள். ஏனைய சமயத்தார்கள் சமய நூல்களை மட்டும் எழுதினார்களேயன்றி இலக்கியங் களுக்குத் தனிச் சிறப்புக்கள் செய்யவில்லை.

இனி கொங்கு நாட்டில் இச்சமயப் புலவர்கள் எவ் வாறு உதவியிருக்கிறார்கள் என்று சிறிது ஆராய்வோம். பெருங்காப்பியங்களுக்குக் கொங்குவேளிர் பெருங் கதையை அருளினார்கள். அவர்களைப் பின்பற்றி வந்த கொங்குப் புலவர் பெருமக்களை இனி எடுத்துரைப்போம். இலக்கண நூல் ஒன்றை இயற்றினவர் சனகைப் பவணந்தி முனிவர் என்று எந்த மாணவனும் அறிவான். தமிழைக் கற்கிறவன் நன்னூலைக் கற்காவிடின் அவன் கல்வி முடிவு பெறாது. அந்த பவணந்தி முனிவர் தோன்றியது கொங்கு நாட்டுக் குறும்பு நாட்டுச் சனகா புரம் என்று கொங்கு மண்டலச் சதகம் கூறுகின்றது.

“ கங்கக் குரிசில் உவக்க நன்னூலைக் கனிந்துபுகல்
துங்கப் புலமைப் பவணந்தி மாமுனி தோன்றிவளர்
கொங்கிற் குறும்பு தனிலாதி நாதகுரு விளங்கு
மங்குற் பொழில்சனகா புரமும் கொங்கு மண்டலமே ”

என்றபடி பவணந்தி கொங்கு நாட்டினர்.

சனகாபுரம் என்ற ஊர் தற்போது சீனாபுரம் என்று மருவியிருக்கிறது. இச்சீனாபுரத்தில் ஆதீசர் என்ற சமண முதல் தீர்த்தங்கரருடைய கோயில் இருக்கிறது. அது அழிந்த நிலையில் இருந்தாலும் மூர்த்தியின் திரு வுருவம் அழகாக இருக்கின்றது. இதனையே பவணந்தி முனிவர் வழிபட்டிருக்கவேண்டும்.

மேலும் பவணந்தி முனிவரை நன்னூல் பாடும்படி வேண்டிக்கொண்ட சீயகங்கன் என்ற மன்னனுக்கும் கொங்கு மண்டலம் என்று ஒரு செய்யுள் கூறுகின்றது.

"தொல்காப் பியத்தின் குணதோடந் தேர்ந்து சொலுவ [தற்குத்
தொல்காப் பியங்கற்க நீண்ட தனைச் சுருக்கியிசை
ஒல்காப் பெரும்பவ ணந்தியென் றேதி உபசரித்த
வல்கா வலன்சீய கங்கனும் தான்கொங்கு மண்டலமே."

இவ்விரு பெருமக்களையும் தொண்டைமண்டலத்தார் என்று அம்மண்டலத்துச் சதகம் கூறும். ஆனாலும் கங்க வம்சத்தார் வடகொங்கு நாட்டை ஆண்ட காலத்தில் சமணம் இங்கு பரவின நிலையைக் காணுங்கால் நன்னூல் இங்கேயே தோன்றியிருக்கவேண்டும் அல்லவா? அந் நன்னூலுக்குப் பல உரைகள் பின்னால் தோன்ற மயிலை நாதர் என்ற சமணப் புலவர் உரை மிக்க பொருட் செறிவோடு இருக்கின்றது. தொல்காப்பியத்திற்குப் பின் தோன்றிய எல்லா இலக்கண நூல்களிலும் நன்னூல் எளிதானதும் சிறந்ததுமாக இருக்கிறது.

ஐம்பெருங் காப்பியங்களுள் ஒன்றாகிய சிலப் பதிகாரத்தை இயற்றிய இளங்கோவடிகள் குணவாயில் கோட்டத்தில் அரசு துறந்து துறவு பூண்டிருந்த வகையில் சமணர் எனக் கருதப்படுகின்றார். அவருடைய ஒப் பற்ற நூலுக்கு அருமையான பேருரை எழுதிய அடியார்க்கு நல்லார் சமணர் என்று கூறுவதுண்டு. அவர் வாழ்ந்த ஊர் நிரம்பை என்று கொங்கு மண்டலச் சதகம் கூறுகிறது.

"குருவை உணர்ந்த இளங்கோ வடிகளும் கொண்டு
தருவை நிகரும் சிலப்பதிகாரத் தனித்தமிழுக் [சொன்ன
கருமை யுரைசெய் அடியார்க்கு நல்லா ரவதரித்து
வருமைப் பொழில் நிரம்பைப் பதியுங் கொங்கு
மண்டலமே"

இந்தச் செய்யுளில் "குருவை உணர்ந்த இளங்கோ வடிகள்" என்பதற்குச் சற்குருவாகிய தீர்த்தங்கரருடைய நிலையை நன்கு உணர்ந்து துறந்த இளங்கோவடிகள் என்று சதக உரையாசிரியர் உரை எழுதி இருக்கின்றார். ஆகவே அவர் கருத்தில் இளங்கோவடிகள் சமணர் என் பதாம். அடியார்க்குநல்லார் கொங்கில் நிரம்பை என்ற

ஊரில் உதித்தவர் என்றும் பொப்பண காங்கேயன் என்ற கொடை வள்ளல் ஆதரவில் வாழ்ந்தவர் என்றும் சிலப் பதிகார உரைச் சிறப்புப்பாயிரத்தால் தெரிய வருகிறது. நிரம்பை என்ற பெயர் குறும்பு நாட்டு ஊர்த்தொகையில் காணப்படுகிறது. அது விஜயமங்கலத்துக்கு அடுத்துக் கூறப்பட்டுள்ளது. ஆகவே அதற்கு அணித்திருக்க வேண்டும். காங்கேயர் என்ற பட்டப் பெயர் வகித்த பரம் பரைக் குடும்பங்கள் இந்த வட்டத்தில் உண்டு. ஆனல் தற்போது அவ்வூர் இருந்த இடம் தெரியவில்லை.

பொள்ளாச்சி வட்டத்து வாரக்கா நாட்டில் களந்தை என்ற ஒரு பண்டைக் கல்வெட்டுத் தலம் இருக்கிறது. அதன் ஈசருக்கு ஆதீசர் என்ற ஒரு பெயர் உண்டு. ஆதிசர் என்ற பெயர் முதல் சமண தீர்த்தங்கரரின் பெயர். முற்காலத்தில் இந்த ஊரில்தான் வச்சணந்தி முனிவர் இருந்ததாகக் கூறுவர். அவர் வச்சணந்தி மாலை பாடியவர். குணவீர பண்டிதர் மாணுக்கர் இருவர் இலக் கண ஆசிரியர்கள். அதே நாட்டில் தேவணும் பாளையத் தில் ஆற்றினிடையில் அமணீசுரர் என்ற கோயில் ஒன்று இருக்கிறது. அம்மணீசுவரர் என்றும் கூறுவர். இவ்வூர்கள் சமண ஆதிக்கம் கொண்டவைகள்.

ஆகவே கொங்குவேளிரின் வழிவந்த சமணப் புலவர்கள் பவணந்தி, அடியவர்க்கு நல்லார், குணவீர பண்டிதர், வச்சணந்தி முனிவர் முதலானேர் ஆவர். இறுதியில் வந்தவர் விஜயமங்கலத்தில் தோன்றிய கார்மேகக் கவிஞர். இவரும் சமணர். அர்ச்சக குடும்பத்தைச் சேர்ந்தவர். அவரே பண்டைய சரிதங்கள் முழுதும் கெடாமல் சேகரித்துச் சதகமாக இயற்றியவர். அந்நூல் இல்லாவிடில் இத்தனை விவரங் களும் கிடையாமற் போயிருக்கும்.

கதையில் மன்னர் உறவு

பெரும் புலவர்கள் தாங்கள் நேரில் கண்டவை களேயே வெகு சுவையோடு கூறுவர். கொங்குவேளிர்

தமிழ் நாட்டுப் பெரும் புலவர். அவர் தமிழ் நூல்களை ஆழ்ந்த நுண்ணறிவோடு ஆராய்ந்ததன்றி நேரிலே தம் காலத்து நாட்டியல்புகளை அறிந்தவர். ஆகவே அவர் எடுத்துக்கொண்ட கருத்துக்கள் தமிழ் நாட்டில் நேரில் கண்ட செய்திகளாக இருப்பதே இயல்பு. வேறு நாடுகளின் செய்திகளை வரைந்தாலும் அவைகளில் தமிழ்ப் பண்பாட்டைக் கலந்திருப்பது இயற்கை.

தமிழ் நாட்டில் 15 நூ. முன் சேர சோழ பாண்டியர் பல்லவர், கங்கர், வேளிர்கள் முதலிய தலைவர்கள் ஆட்சி புரிந்து வந்தார்கள். இவர்களுக்குள் அடிக்கடி கலகங்கள் உண்டாகும். ஒவ்வொரு காலத்தில் ஒவ் வொருவர் வெற்றியடைவர். பின்னர் மற்றொரு காலத் தில் சேர்ந்து கொள்வர். வேளிர்களுடைய போர்கள் சங்க நூல்களில் நிரம்பக் கூறியிருக்கக் காண்கிறோம். இந்தத் தலைவர்களுக்குள் அடிக்கடி மண சம்பந்தங்கள் ஏற்பட்டு ஒன்று கூடுவார்கள். என்றாலும் எல்லாரும் தமிழர்களே. அந்த மனப்பான்மை எல்லாரிடத்தும் உண்டு.

இதனை வடநாட்டுப் பிரகத் கதையில் அவர் படித் திருக்கலாம். தென்னாட்டைப் போலவே வட நாட்டிலும், உஞ்சை, கோசாம்பி, இராசகிரியம், மகதம் முதலிய பல நாடுகளாகப் பிரிந்திருந்த நாடுகளில் வெவ்வேறு அரசகுலங்களும் அரசர்களும் ஆண்டு வந்தார்கள். இவர்களுக்குள் அடிக்கடி போர்களும் பிறகு சமாதான மும் மணப் பொருத்தங்களும் ஏற்படும். ஆகவே பகைமை தோழமை இரண்டும் இயல்பாகவே இருந்தன. உஞ்சை மன்னுதி மன்னனை பிரச்சோதனன் உதயணனைச் சிறைப்பிடித்தான். உதயணன் தந்திரமாக பிரச்சோதனனுடைய மகள் வாசவதத்தையைக் கவர்ந்து கொண்டு போகிறான். பிறகு இருவருக்கும் நட்பு ஏற்படு கிறது. அதற்குள் பாஞ்சால அரசன் உதயணன் நகரில் இல்லாதபோது அந்நகரைக் கவர்கிறான். உதயணன் விடு தலை ஆனவுடன் தன் நகரைப் பிடித்துப் பாஞ்சாலனைக்

கொன்று விடுகிறான். மகதநாட்டரசன் தருசகன் வளர்ப்புத் தங்கை பதுமாபதியை உதயணன் மணக்கிறான். அது போலவே கோசலநாட்டு இளவரசி மானனீகையைப் போரில் சிறைப்பிடித்துத் தன் தேவிக்கு உதயணன் தோழியாக நியமிக்கிறான். ஆனால் அவள் கல்வித் திறத்தைக்கண்டு தந்திரமாக அவளை அவனே மணம் செய்து கொள்ளுகிறான். இவ்வாறு செய்திப் பகுதிகளைக் காணும்போது உஞ்சை, கோசாம்பி, மகதம், கோசலம், இந்த நாட்டு மன்னர்களின் குடும்பங்கள் ஒன்றோடொன்று இணைந்து விட்டதை அறியலாம். பகைவர்களாக இருந்தவர்களும் கூட சில சமயங்களில் நண்பர்களாகித் திருமணம் செய்துகொள்ளுகிறார்கள். நாடுகள் தோல்வியுற்றாலும் அழிக்கப்படுவதில்லை. கப்பம் கொடுப்பதும் ஒன்றுக்கு ஒன்றாகத் தாழ்வடைவதும் மட்டுமே இறுதிச் செயல்கள். இந்த வகை அரசநிலைதான் வட நாட்டில் கொங்குவேளிர் கண்டது. அது தமிழ் நாட்டைப் போலவே இருந்தது. ஆகவே அதனை வெகு உருக்கமாக விவரிக்கின்றார்.

நகரமும் நாட்டுப்புறமும்:

ஒவ்வொரு நாட்டிலும் தலைநகரமும் மற்ற நகரங்களும் அவைகளைச் சுற்றி நாட்டுப்புறங்களும் இருந்தன. நகரங்களில் செல்வர்களும் கல்விமான்களும் வாணியர்களும் யந்திரக்காரர்களும் இருந்தார்கள். நாட்டுப்புறங்களில் உழவர்கள் இருந்தார்கள். உழவர்கள் வேளாண்மைத் தொழில் செய்து தானிய உணவுப் பொருள்களை உற்பத்தி செய்து மக்களுக்கு ஈவார்கள். ஊர்களில் பருத்தி நூற்றல், நெசவு, பலவகை உடைகள், ஊர்திகள் தட்டுமுட்டுச் சாமான்கள் முதலியவை இயற்றுவார்கள். கொல்லர் முதலியோர் ஆயுதங்கள் முதலிய இரும்புச் சாமான் ஐம்பொன் வேலைகள் செய்வார்கள். கல்விச் சாலைகள், இசைச் சாலைகள், சிற்பச் சாலைகள் நகரங்களில் இருந்தன. கட்டிட வேலைகள் அவைகளுக்கு வேண்டிய சாமான்கள் செய்யப்பட்டன.

மொத்தமாக உணவு, உடை, உறையுள் இவைகளே மனிதனுக்கு இன்றியமையாத தேவைகள் ஆனபடியால் அவைகளைக் குறையாமல் உற்பத்தி செய்யும் ஆற்றல் மக்களுக்கு உண்டு. அரசும் தக்கவாறு உதவி செய்து வந்தது.

நகரங்களில் இவைகள் ஒழுங்காக இருந்தால் அவையே துறக்க உலகம் என்று கூறலாம். ஆனல் தீமைகளும் இருந்தன என்று புலவர் கூறுகின்ருர். இவ் வடிகளை உணர்க :

" புனை நகர் வரைப்பினும்
கோயில் முற்றத்தும் வாயின் மருங்கினும்
யானைத் தானத்தும் அருந்தவப் பள்ளியும்
தானைச் சேரியும் தானெடுத்துரைக்கும்
பாடை அறியாத் தேசிகச் சேரியும்
ஓதுநர்ச் சாலை யகத்தும் ஓவா
சூதுபொரு கழகத் தருகலும் தோமில்
நல்லதும் தீயதும் அறிந்தகத் தடக்கா
மட்டு மகிழ் மகளிர் துட்டச் சேரியும்
காரிகை பகரும் கருங்கடை மழைக்கண்
வார்கொடி மகளிர் வளநகர் வரைப்பினும்
குதிரைப் பந்தியும் கோடிகர் வரைப்பினும்
மதிமயக் குறூஉ றுகமணி கடையிலும்
நீர்த்துறைக் கரையினும் கூத்துறை சேரியும் ''

(2-8-55-69.)

அந்நகரத்தில் இருந்தன. அவைகளில் தீயவை சூதாடு மன்றில்கள், கள்ளுண்மகளிர், பரத்தையர், அறிவை மயக்கும் கள்ளுக்கடைத்தெரு, கூத்தர் சேரி முதலியன மேலும் மன்னன் மாளிகையில்,

" பண்மணி விளக்கும் பள்ளிக் கட்டிலும்
பொன்னி னடைப்பையும் பூரண கலசமும் "

" அந்தக் கேணியும் எந்திரக் கிணறும்
தண்பூங் காவும் தலைத்தோன் றருளிய
வெண்சுதைக் குன்ருெடு வேண்டுவ பிறவும்
இணையோர்க் கியற்றிய விளையாட் டிடம் "

இருந்தன.

"பந்தும் கிளியும் பசும்பொற் றூதையும்
கந்தியன் மயிலும் கரந்துறை பூவையும்
கண்ணியும் கழங்கும் கச்சும் முற்றிலும்
பவழப் பாவையும் பளிக்குக் கிளிக்கூடும்"

பெண்களுக்குத் தரப்பட்டன. அவர்களின் கல்வித் தேர்ச்சியை அறிய மன்னன்,

"அடிசில் விளையும் யாழின் றுறையும்,
கடிமலர்ச் சிப்பமும் கரந்துறைக் கணக்கும்
வட்டிகை வரைப்பும் வாக்கின் விகற்பமும்
கற்றவை எல்லாம் காட்டுமின்"

என உரைத்து அவர்களை மகிழ்வித்தான். இந்தக் காட்சி எத்தனை சிறந்தது.

நகரத் தெருக்களிலே இல்லங்களில் கற்புடைப் பெண்கள் இல்லறம் நடத்திக்கொண்டு ஒழுங்காக இருக்க கணிகையரும் பரத்தையரும் வேறு தெருக்களில் தம் தொழிலில் அமர்ந்து இருப்பார்கள். இந்தப் பரத்தைத் தொழில் எக்காலத்தும் எந்நாட்டிலும் இருந்தது போலும். இவர்கள் சேரி நகரில் ஒரு சாக்கடைக்கு ஒப்ப இருந்ததெனலாம். அவர்களால் விளையும்தீமை அவர்களோடே நின்று விடுமாம்.

அக்காலத்தில் கல்வி அறிவு நிரம்ப இருந்தது. ஆண் பெண் இருதிறத்தாரும் கல்வி கற்று விளங்கினார்கள். கற்பிக்கும் ஆசிரியர்களும் இருந்தார்கள். வனங்களில் முனிவர்கள் ஆசிரமங்களில் சமய போதனை செய்ய, நகரங்களில் இலக்கிய ஆசிரியர்கள் மொழிப் பயிற்சி கொடுக்க, சிற்றூர்களில் சிற்றாசிரியர்கள் எழுத்து கற்பிக்க, தேர்ந்த மக்களுக்குக் கணிதம், சோதிடம், மருத்துவம் முதலியன கற்றறிந்தோர் கொடுக்க, கல்வி கற்பிக்கும் முறை மிகத் தேர்ச்சி பெற்றிருந்தது. ஆண்களேயன்றி பெண்களும் நாட்டுமொழியோடு யவன மொழியும் கற்றார்கள். வாணிபத் துறையில் தேர்ச்சிபெற்றிருந்த வாணிபர்கள் பல மொழிகளும் கற்கவேண்டிய தேவை இருந்தது. அந்நாளில் உரோம், கிரீசு, ஈஜிப்ட் முதலான

தொலை நாடுகளிலிருந்து பெருஞ் சாத்துக்கள் மூலமாக வாணிபம் நடைபெற்றது. அந்த வாணிபர்கள் வந்தால் அன்னாரோடு பேச அவர்கள் மொழியும் கற்கவேண்டி வந்தது. வாணிபம் மட்டுமே யன்றி அரசியல் வகைகளுக்கும் பிறமொழிகள் தேவைப்பட்டன. மானனீகையும் உதயணனும் யவன மொழி மூலம் கருத்துக்களைப் பரிமாறிக்கொண்டது நினைவிருக்கலாம். காதற் கடிதம் முழுதும் நெற்றியில் எழுத முடிந்ததும் அது ஒரு சித்திரம் போல விளங்குவதாகவும் இருந்தால் அந்த எழுத்து மிகச் சுருங்கிய அளவில் அமைய வேண்டியிருக்கும். ஆகவே அது அரபு, அல்லது பாரசீகமாக இருந்திருக்கவேண்டும். மேலும் சிற்பம், ஓவியம், இன்னிசை வாச்சியம், குழல் முதலிய பல வித்தைகளையும் பெண்கள் கற்றனர். ஒப்பனை செய்தல், அழகு படுத்துதல் இவைகளிலும் தேர்ச்சி உண்டு.

மக்கள் எல்லாரும் யாதாவது ஒரு தொழிலைக் கற்றிருந்தார்கள். பொதுவாக உழவு மிகுதியாக இருந்தது. நூல் நூற்றல், நெசவு இரண்டாவதாக இருந்தது. கட்டிட வேலை மூன்றாவது. இவை எல்லா நாட்டிலும் எக்காலத்திலும் உண்டு. இவைகள் பெரும்பாலும் பரம்பரையாக வந்த தொழில்கள். ஆடல், பாடல், இசை, சிற்பம், ஓவியம் முதலிய தொழில்களும் செய்யப்பட்டன. இசைக் கருவிகள் சிறப்பாக யாழ் மிகவும் பயிலப்பட்டது. அவைகள் செய்வதற்கே கற்ற மாந்தர் இருந்தனர். வீட்டு வேலைகளுக்கு சிறப்பாக செல்வர் வீட்டிலும் அரச வம்சத்தினர் வீட்டிலும் அமர்ந்தனர். அலிகளும் பேடிகளும் அந்தப்புரங்களில் வைக்கப்படவில்லை என்று காணலாம். ஏனெனில் அவர்களைப்பற்றிப் பேச்சு இல்லை. மேல் நாட்டார்களில் அன்னாரும் நிரந்தரப் பரம்பரை அடிமைகளும் இருந்தார்கள். பெருங்கதையில் ஆராய்ந்த வரையில் எடுத்துக்காட்டுக்கள் கிடைக்கவில்லை. இந்த விதத்தில் பாரத நாடு உயர்ந்த நிலையில் இருந்தது. வெளிநாட்டு மக்கள் சிறப்பாக யவனர்கள் வேலைகளுக்கு அமர்த்தப்பட்டார்கள். அவர்களில் தச்சர், கருமார்,

ஓவியர், சிற்பர் இருந்தனர். மிக நுட்பமான இயந்திரங் களைச் செய்து வந்தனராம். யவனர் என்பது மேல் நாடு களிலிருந்து வந்த பிற வகுப்பார்களுக்குப் பொதுவாக இடப்பட்ட பெயர்; சிறப்பாக கிரேக்கர்கள் அவர்கள்தான் Ionions ஐயோனியன் என்ற பெயர் பெற்றிருந்தார்கள். ஐயோனிய என்பது 'யவன' என்று மருவின தென்பர். அந்தச் சொல் பாரத நாட்டில், ரோமர், கிரீக், ஈஜிப்ட், யூதம், பாரசீகம், ஆப்கான் முதலிய நாட்டு மக்களுக்கு அழைப்புப் பெயராம். சங்க நூல்களில் பட்டினப்பாலை, மதுரைக்காஞ்சி முதலிய நூல்களில் யவனக் காப்பாளரும் தொழிலாளர்களும் அரண்மனைகளிலும் நகரங்களிலும் வேலைபார்த்து வந்த விவரங்கள் காணப்படுகின்றன அல்லவா?

விளையாடல் :

மக்களுக்குள் மகிழ்ச்சி உண்டாக்குவது விளையாட்டு. அது பலவகைப்படும். உடல் பயிற்சி, பந்தாட்டம் முதன்மையானவை. உடற் பயிற்சி இளைஞர்களுக்குத் தரப்பட்டது போர் வீரர்களாகச் செல்லும் ஆடவர் களுக்கு அப்பயிற்சி சிறப்பாகத் தரப்பட்டது. உல்லாச மாக விளையாடுவதோ நீர் விளையாட்டு ஆகும். தடாகங் களில் நீச்சல் அடித்துக்கொண்டு பந்துகளை வீசி விளையாடுவதும் உண்டு. அவ்விளையாட்டு நீர் விளை யாட்டு விழாவில் மிகவும் நன்ருகப் போற்றப்பட்டது. குதிரைகள்மேல் ஏறிக்கொண்டு பந்துகளை வீசி ஆடுவது (போலோ) பாரத நாட்டில் தோன்றியது என்பர். அதுவும் அந்நாளில் இருந்திருக்கலாம். பொழுது போக்கிற்காகச் சூது ஆடுதல் மிகப்பழைய ஆட்டம். அதிலும் சதுரங்கம் என்ற ஆட்டம் இங்கிருந்துதான் மேல் நாடுகளுக்குச் சென்றதென்பர். வேட்டை யாடுதலும் ஒரு ஆண்மையாட்டம் ஆகும். இனி பெண்களுக்குச் சில தனி ஆட்டங்கள் உண்டு. நாட்டுப்புறத்துப் பெண்கள் பலவகை ஆட்டங்களைக் கொண்டிருந்தனர். அவை தமிழ்நாட்டில் சிறப்பாக

இருந்தன. நாட்டியம் கூத்து என்பர். அவைகளைப்பற்றி மிகுதியாகப் பெருங்கதையில் கூறப்படாவிட்டாலும் வடநாட்டில் பரத நாட்டியம் என்ற பெயரால் மிகவும் வழங்கி வந்தது. தமிழ்நாட்டில் சிலப்பதிகாரத்திலும் அதன் உரையிலும் மிகச் சிறப்பாக வழங்கப்பட்டது.

ஊசல் முதலிய வீட்டு ஆட்டங்கள் பெருங்கதையில் கூறப்பட்டுள்ளன.

மேலும் கருவிகளில் நீர் வீசும் கருவி இருந்ததாகப் பெருங்கதை கூறுகிறது. நீர் விளையாட்டில் ஒருவர் மேல் ஒருவர் பல வண்ணங்கள் கொண்ட நீரை குழாயினால் பீச்சுவதுண்டு. காமன் விழாக்களில் இது நடைபெறும். இது வடநாட்டில் தற்காலத்திலும் நடைபெறுகிறது. நகரங்களில் பெரிய நீர் பீச்சு யந்திரங்கள் இருக்கக்கூடும். உல்லாச வனங்களில் இருந்தன.

இனி இயந்திரப் பொறிகள் மிகவும் சிறப்பாகக் குறிக்கப்பட்டிருக்கின்றன. அவைகளில் ஊர்தி, ஆயுத வகை, அவைகளை வீசும் யந்திரம், எந்திரக் கிணறு, யந்திரக்கட்டில், கத்தரிக்கோல், தெப்பம், மண்ணுற் புரளும் யந்திரம், வையம் ஈர்க்கும் இயந்திரம் முதலிய அதிசயப் பொறிகள் கூறப்பட்டுள்ளன.

இவைகளில் குறிப்பாகச் சொல்லப்பட்டவை 1. காளைகள் இன்றி விரைந்து செல்லும் யந்திரவண்டி. (உந்தூர்தி) 2. பல வீரர்களை ஆயுதங்களுடன் தன்னுள் அடக்கிக்கொண்டு உயிருள்ளது போல் நடந்து சென்று மயக்கும் யானைப் பொறி, 3. ஏற விரும்பியவர்களை தன்னுள் ஏற்றிக்கொண்டு பார்க்கவேண்டிய இடங்களை அவர்கள் பார்க்கும்படி ஆகாயவழியே செல்லும் யந்திர விமானம் (வான் ஊர்தி, வான் குமிழி) 4. காலத்தைக் காட்டும் எந்திரம் (கடிகாரம்) 5. கடிகாரம் (சிறு கடிகாரம்) 6. நாண் மீன் முதலிய வற்றின் தோற்றத்தையும் அத்தமித்தலையும் புலப்

படுத்தும் பொறி மண்டலத்தை உள்ளே பெற்று அரச மங்கையர் ஏறுதற்குரியதாயிருந்த வண்டி முதலான விசித்திரமான இயந்திரங்கள்.

இந்த அதிசய யந்திரங்களைப் பற்றிச் சிறிது விவரிப்போம். அற்புத இயந்திரங்களைப் பற்றிய பகுதி வருமாறு :

பத்திப் படாகையும் பல்பூங் கொடியும்
சித்திரித் தெழுதிய வித்தக விமானமும்
இருநிலத் தியங்கும் இயந்திரப் பாவையும்
அருவினை நுட்பத் தியவனனப் புணர்ப்பும்
பொத்தகை யானையும் பொங்குமயிர் புரவியும்
சித்திர மாலையும் அக்கடந் தொட்டிலும்
பெண்டா ரொழுக்கும் விளக்குறு புதமும்
தெரிவுற லரிய பலகலக்குப்பையும்
எண்ணரும் பல்பொறி யெந்திரப் பொருப்பும் (5–9–19–29)

என்ற விசித்திர யந்திரங்கள் இருந்தனவாம்.

இனி இவற்றில் பல வீரர்களை ஏற்றிக்கொண்டு உயிருள்ளதுபோல் நடந்து மயக்கும் யானைப்பொறி உதயணனைப் பிடிப்பதற்கு உஞ்சையரசன் உபயோகப் படுத்தின யந்திரமாம். இப்படிப்பட்ட ஒரு இயந்திரம் கிரீக்கு தேசத்தார் ட்ரோஜன் (Trojan) முற்றுகையில் உபயோகித்தார்கள். ஆனல் அங்கே கண்டது ஒரு குதிரை. உலிசஸ் (Ulysses) என்ற தந்திர நிபுணர் இதனைப் பயன்படுத்தி ட்ராய் (Troy) கோட்டையைப் பிடித்தான். இரண்டு செயல்களும் ஒப்பிடக்கூடியவையே. அக்காலத்தில் கிரீக்கு வரலாற்றிலிருந்து இச்செய்கை யந்திரமோ அதன் கொள்கையோ இந்தியாவிற்கு வந்திருக்கலாம். மேற்குக்கும் கிழக்குக்கும் போக்குவரவு இருந்ததல்லவா! இதைப்போலவே மற்ற இயந்திரங்களையும் கண்டு கொள்க.

சிந்தாமணி, மணிமேகலை முதலியவைகளில் கூறியிராத விசித்திர யந்திரங்கள் இந்தப் பெருங் கதையில்தான் கூறம்பட்டுள்ளன. இக்கால நடவடிக்கை

களில் பயன்படுத்தக் கூடிய இயந்திரங்கள் 15 நூற்றாண்டுகளுக்கு முன்னே அல்லது 25 நூற்றாண்டு களுக்கு முன்னே இருந்திருக்குமா என்று இக்கால மக்கள் ஐயப்படுவார்கள். ஆனால் கவிஞருடைய மனோ வேகம் எத்தனைமட்டும் செல்லுகிறது ஆராயுங்கள்.

இனி காளைகளின்றி விரைந்து செல்லும் யந்திர வண்டி தற்காலத்து உந்தூர்தி (Motor) அல்லது புகை வண்டி எனலாம். இவைகள் கண்டு பிடித்து ஒரு நூற்றாண்டளவில்தான் ஆகும். ஆனால் அவற்றில் கணக்கற்ற வேறுபாடுகளும் மாறுதல்களும் ஏற்பட்டு விட்டன. ஆவியால் உந்தப்பட்டதும் பிறகு மண்ணெண்ணெயால் துரத்தப்பட்டதும் பிறகு அணு சக்தியால் உந்தப்படுவதும் காண்கின்றோம். ஆனால் 20 நூற்றாண்டுகளுக்கு முன் எதனால் உந்தப்பட்டன. கவிஞனுடைய மனோவேகத்தால் உந்தப்பட்டன என் போமோ ?

இனி ஏற விரும்புவர்களைத் தன்னுள் ஏற்றிக் கொண்டு பல இடங்களைப்பார்த்து வைக்க வான வழியே செல்லும் யத்திர விமானம் இக்காலத்தில் வானக்குமிழி அல்லது விமானம் (aeroplane balloon) எனப்படும். இவைகளும் மானுடப்பயிற்சிக்கு ஒரு நூற்றாண்டளவில் வந்தன. வாசவதத்தை கருவுற்ற போது எப்படி நாட்டு இயற்கைக் காட்சிகளைக் காணச் சென்றாள் ? எல்லாம் வெறும் மனோவியாசமா !

மேலும் காலத்தைக் காட்டும் கடிகை யந்திரம், வான் மீன்களை உற்றுநோக்கி அறியப்படும் யந்திரங்கள் 5 நூற்றாண்டுகளுக்கு முன் எவரும் அறியார். ஆனால் முன்காலக் கவிஞர்கள் நினைத்ததுண்டு.

இவை போன்ற அற்புத யந்திரங்கள் கதா நாயகர் நாயகிகளால் பயன்படுத்தப்பட்டன என்று கவி சொல்லும்போது அக்கவியிலும் எதிர்நாளைய அறிவு எத்தன்மையான உச்ச நிலையில் இருந்ததென்று

எண்ணவும் முடியுமா. சிந்தாமணியில் மட்டும் சீவகன் பிறப்பு அவன் தாய் வானம் ஊரும் குதிரையின் மீது சென்று இறங்கியவளவில் ஒரு மயானத்தில் ஏற்பட்ட தென்று திருத்தக்கதேவர் கூறுகிறார். ஆனால் வேறெந்த நூல்களிலும் இந்த அற்புதங்கள் சொல்லப்படவில்லை. பெருங்கதையில் மட்டும் கொங்கு வேளிரின் உள்ளொளி யால் இவைகள் தோன்றின.

போர் புரிதல் :

தனி மனிதனுடைய வாழ்விலும், குடும்பத்தினுடைய பிழைப்பிலும், நாட்டினுடைய நலத்திலும், உயர்வும் தாழ்வும் இயற்றக்கூடிய குணங்கள் நட்பும் பகைமையுமே யாம். இவ்விரண்டு குணங்களினால் ஒன்றுக்கொன்று கூட்டுறவும் பிரிவினையும் ஏற்படும். பகைமையினால் ஏற்படும் பிரிவினையின் காரணத்தினால் போர்கள் உண்டாகின்றன. உலக வரலாறு தோன்றின கால முதல் தற்காலம் வரையில் பலவகைப்பட்ட போர்கள் நடந்திருக்கின்றன. கணக்கற்ற உயிர் அழிவு பொருளழிவு ஏற்பட்டும் அவைகளால் விளைந்த துன்பங் களால் வருந்தியும் மக்கள் இப்போர்களை நிறுத்தவே இல்லை. உயர்ந்த அறிவில் திகழ்ந்த மக்கட் கூட்டங் களும் போரை ஒழிக்கப் பல முயற்சிகள் நல்ல எண்ணத் துடன் செய்தும் இதுவரை வெற்றிபெறவில்லை. எல்லாவற்றிற்கும் அடிப்படைக்காரணமாகிய பகைமை நின்றுபோய் அன்புமயம் ஏற்பட்டால் ஒழிய உலகில் போர்மயம் மறையாது.

நாகரீகமும் விஞ்ஞானமும் முதிர முதிர பகைமை குறையாது, தன்னலம் குறையாது. ஒருவரின் செல் வாக்கை மற்றொருவன் பிடுங்கிக்கொள்ள முயற்சித்துப் புதுப் புது பயங்கர இயந்திரங்களை உண்டுபண்ணி நாசத்தொழிலில் ஈடுபடுகிறான். இந்நாளிலேயே இவ் வாறு இருக்க 25 நூற்றாண்டுகளுக்கு முன் எந்த நிலையில் மானிட சமூகம் இருந்திருக்கும்? உஞ்சை, மகத, வத்தவ. பாஞ்சால நாடுகளில் ஒற்றுமை இன்றி ஒருவருக்

கொருவர் மோதிக்கொண்டு போர் புரிந்தார்கள் என்று பெருங்கதை கூறுகிறது. முதலில் நடைபெற்ற ஒரு போரை எடுத்துக்காட்டாகக் கூறுவோம்.

உஞ்சைச் சக்கரவர்த்தி ஒருநாள் தன் கணக்கனை யார் யார் கப்பம் செலுத்தவில்லை எனக் கேட்க, வத்தவ நாட்டானும் வைசாலி நாட்டானும் செலுத்தவில்லையென்று கூற, அவர்கள் ஏன் செலுத்தவில்லை எனக் கேட்க, அமைச்சன் சாலங்காயனன் அவனிடம் தெய்வ யானையும், வல்லமையுள்ள அமைச்சர்களும் இருக்கின்றனர்; ஆகவே வெல்லப்படான். தந்திரமாகத்தான் பிடிக்கவேண்டுமென்ருன். அவன் சொற்படி வைசாலிக்கு ஒரு சேனையை யனுப்பி விட்டு உதயணன் இருக்குமிடத்திற்குப் போர் வீரர்கள் நிரம்பிய ஒரு யந்திர யானையை அனுப்பினுன். அந்த யானையைக் கண்டு தன் தெய்வ யானை என்று மயங்கி அருகில் சென்று யாழ் வாசித்தபோது யானைக்குள்ளிருந்து வீரர்கள் வெளிப்பட்டு உதயணனை வளைத்துக் கொண்டனர். போர் நடந்தது. உதயணன் தனித்திருந்ததினுல் சூழ்ச்சியால் பிடிபட்டான். இந்த வகையில் கோசாம்பியும் சயந்தியும் பிடிபட்டன. உதயணன் சிறையில் அடைக்கப்பட்டான். அக்காலத்திலேயே வஞ்சனையால் போர் நிகழ்த்தப் பட்டது. போரில் யானை குதிரை காலாள் கலந்து கொள்வது வழக்கம்.

இனி மற்ருெரு போர் உதயணன் மகதத்தில் இருந்தபோது நிகழ்ந்தது. அவன் தருசகர் அந்தப் புரத்தில் இருந்தபோது பகையரசர்கள் 9 பேர் இராசகிரியத்தை வளைந்து கொண்டனர். அதை உதயணன் அறிந்து வெளி வந்து தருசகனுக்கு உதவியாகப் பகை அரசர்களுடன் போர் புரிந்து துறத்தினன். தருசகனும் மகிழ்ச்சியடைந்து அந்த உதவிக்காகத் தன் மகள் பதுமாவதியை அவனுக்கு மணஞ் செய்து கொடுத்தான். (3-18 முதல் 21 வரை) அப்போர் நிகழ்ச்சியைப் புலவர் பெருமான் கூறுகின்ருர் :

" மழுவும் குந்தமும் முழுமயிற் பீலியும்
சங்கமும் கணையமும் சத்தியும் வாளும்
பிண்டி பாலமும் பிறவும் எல்லாம்
தண்டாக் கருவி தாந்துன்ற போகிய
வண்டார் தெரியல் மறவர் மயங்கி
யருநிலம் அதிரத் திரிதல் ஓவா
வீதி வட்டமோ. டாதிய கதிவயின்
பாழி பயிற்றி நூழி லாட்டவும்
போர்க்கள வட்டம் கார்க்கட லொலியென " 3-20-64

போரில் வீழ்தல் வருணிக்கப்படுகிறது. அது தொடங்கி 140 அடிவரை போர் நிகழ்ச்சி மிக உருக்கத்தோடு வருணிக்கப்படுகிறது.

இனி மூன்றுவது போர் உதயணன் பதுமாவதி வதுவை முடித்தும் தனது நாடாகிய கோசாம்பியின் மீது படையெடுத்து அதனை வென்று ஆட்சி பெற்ற செய்தி (3-23வது) படை யெழுச்சி என்ற பகுதியில் கூறப்பட்டுள்ளது.

" இருநூ றுணையு மீராயிரங் குதிரையும் (3-23-30 முதல்)
அறுநூற் றிரட்டி யான்மணித் தேரும்
அறுபதி ணுயிரம் எறிபடை மன்னரும்
திருமணிச் சிவிகையும் பொருவினைப் படாகையும்
செங்காற் பாண்டிய நன்று பூண்ட
பைம்பொன் னூர்தியும் பவழக் கட்டிலும்
படாஅக் கொட்டிலும் பண்டிபண் டாரமும்
கடாஅக்களியானைக் காவலற் கிடைந்த
பணைத்தோட் சிலசொல் பதுமா நங்கைக்
கமைக்கப் பட்ட அகன்பரி யாளமும்
அன்னவை யெல்லா மந்நிலை நல்கி "

அப்போது பாஞ்சாலனுடன் போர் நடந்தது.

" சிலைத்தன தூசி மலைத்தன யானை
ஆர்த்தனர் மறவர் தூர்த்தனர் பல்கணை
விலங்கின ஒள்வாள் இலங்கின குந்தம்
விட்டன தோமரம் பட்டன பாய்மா
துணிந்தன தடக்கை குனிந்தன குஞ்சரம்

அற்றன பைந்தலை இற்றன பல்கொடி
சோர்ந்தன பல்குடர் வார்ந்தன குருதி
குழிந்தது போர்க்களம் எழுந்தது செந்துகள்
அழிந்தன பூழி விழுந்தனர் மேலோர்" (3-27-107-16)

இப்படி நிகழ்ந்த காலை ஆரணி வீரர்கள் கொல்லப் பட்டனர். பஞ்சாலனை உதயணன் வெட்டி வீழ்த் தினன்.

சமய நிலையங்கள் – (அராந்தாணம்)

கொங்குவேளிர் இளமை முதல் விஜய மங்கலத்து. சந்திரப்பிரபா ஆலயத்தை வணங்கி வந்தவர். அந்தக் கோயிலினுடைய சிற்பம் முழுதும் நன்கு அறிந்திருந் தார். ஆகவே அவர் சயந்தி நகரில் உதயணனுக்கும் வாசவதத்தைக்கும் திருமணம் ஆனவுடன் வழக்கப்படி திருக்கோயில் வணக்கம் செலுத்தச் சென்றபோது அக் கோயிலை வருணிக்கையில் தனது நாட்டில் கண்ட கோயில் அழகுகளையே அங்கேயும் கொண்டு செலுத்து கிருர். அதை எடுத்துக்கூறல் பொருத்த முடையது அல்லவா. இலாவண காண்டம் தெய்வச் சிறப்பு என்ற பகுதியில் திருக்கோயிலின் சிறப்பு கூறப்பட்டிருக் கின்றது. (40 முதல் 161 வரை அடிகளில் விவரிப்பதனைக் காண்க) இவ்வருணனையில் கட்டிட இயல் எவ்வளவு அருமையாகவும் விரிவாகவும் அறிவிக்கப்பட்டிருக்கிறது என்பது எவருக்கும் வியப்பைத்தரும். சிற்ப நூல்களிலும் இந்த விவரங்கள் காண முடியாது. சிலவற்றை மட்டும் கூறுவோம். சித்திர வளைவுகள் கொடிக் குழிகள், நாசி என்னும் உறுப்பு, தூண்கள், இரும்பு முள்கொண்ட போதிகைகள், அவைகளை இணைக்கும் பவழ மாலைகள், நீலமணிக் கலசங்கள் (குடங்கள்) பக்கத்துளைகள், இடைத்துளைகள், பொற்றகட்டுப் பரப்பு; நெல்லின் கனி ஞளில் மாலைகள் கட்டிய கூடப்பரப்பு வகுப்பறைகளில் எண்வகை மங்கலப் பொருள்கள் எழுதிய ஓடவுத்தரம், மணியிழைத்த நிலை, அதில் கோக்கப்பட்ட இயந்திர

மமைந்த சித்திர வெள்ளிக் கதவு, முத்து மாலை சித்திர மாலை உடைய வாயில்; மண், மரம், யானைக் கொம்பு முதலியவைகள் அகற்றி முழுதும் பசும்பொன்னும் மணியாலும் இயற்றப்பெற்று அடிப் பகுதிக்கேற்ற உச்சி யுடைய நிலை இல்லம் (உள் மண்டபம்); அரும்பு மலர் தளிர் போன்ற வேலைப்பாடு கொண்ட தோரணங்கள்; உடைய கோயில்.

அராஅந்தாணத்திலிருந்த அரியணை மாண்பு வருணிக்கப்பட்டது. பொன்னாலும் மணிகளாலும் இயற்றப்பட்ட அரியாசனம். வில் போல் வளைந்த கிம்புரிக் கண்ணாடியின் முன்னர் சார்மனை, இருபுறமும் தேவ ஆண்பாலர் உருவங்கள் சாமரை வீசி நிற்கவும் மற்றும் அழகிய தேவ மகளிர் ஓவியங்கள் சாமரை வீசி நிற்கவும், காந்தருவ மகளிரின் அழகிய ஓவியங்கள் சாமரை வீசி நிற்கவும், பிறகு இந்திரர் முதலியோர் - உருவங்கள் சுற்றிலும் நிற்கவும், நடுவிலே அராந்தாணத்தில் முக்குடைகள் ஒன்றன் மேல் ஒன்று ஒளி வீசவும் இறைவன் திவ்விய இருக்கையில் அமர்ந்திருப் பார்.

இப்படிப்பட்ட அழகிய வருணனை அருகன் கோயில் கொண்டிருந்தது என்கிறார் கொங்குவேளிர். இதைத் தவிர சேதியம் பெருமலை என்ற மலையில் ஒரு சினாலயம் இருந்தது. அது சண்பைநகர்க்கருகு உள்ளது. மற்றொரு சேதி என்ற சினாலயம் (சைத்தியாலயம்) வித்தியா தரருடைய உலகில் இருந்தது.

> விளைகொள் விஞ்சை வீருயர் உலகில்
>
> ... ...
>
> வந்தனை செய்குநர் பூசனைக்களரி. (5-4-115)

மேலும் உஞ்சையில் காளவனம் என்ற வனம் புறநகரி லுளது. அதில் ஒரு காளி கோயிலும் மாகாமை என்ற சோதிர்லிங்கக் கோயிலும் உண்டு. 'தாழாப் பெரும்

புகழ்க் காளக் கடவுள்' மற்றும் இராசகிரியில் ஊர்ப் புறத்தே காமன் கோட்டம் என்ற மன்மதன் ஆலயம் இருந்தது. அதில் ஆண்டுதோறும் காமன் விழா நடை பெறும்.

> "தாமரைப் பொய்கையும் தண்பூங் கேணியும்
> காமன் கோட்டமும் கடிநகர் விழவும்"

இந்த எடுத்துக் காட்டுக்கள் அக்கால சமய நிலையைத் தெளிவுறக் காட்டுகின்றன.

அக்கால மக்கள் வாழ்க்கை நிலை

கொங்குவேளிர் குறும்பு நாட்டிலும் பூந்துறை நாட்டிலும் வாழ்ந்த பெரும்புலவர். மக்களிடையே நாடாளும் தலைவருமாக இருந்தனர். ஆகவே பொது மக்களுடைய பழக்கவழக்கங்களை நன்கு அறிந்தவராக இருந்தார். ஆகவே தான் எழுதின காப்பியத்தில் தன்னுடைய முழு அறிவையும் புகுத்தியிருத்தல் இயற்கையல்லவா. எடுத்துக் கொண்ட கதை வடநாட்டுக்கதையான போதிலும் மக்களுடைய பழக்க வழக்கங்களை எழுதும்பொழுது தான் நேரில் கண்டறிந்த மனித இயல்புகளையே அதில் கலந்திருத்தல் வேண்டும். பெருங்கதையின் கதைப் போக்குகளை ஆராயும் போது, மன்னர்களுக்குள் நடந்த சம்பவங்களும், அமைச்சர்களுடைய தந்திரங்களும், வியக்கத்தக்க யந்திரச் செய்திகளும் விட்டுவிட்டு, பொதுவான மக்கட் செய்திகளை அள்ளியெடுத்துக் கோவைப்படுத்தினால் தமிழ் நாட்டு மக்கட் போக்குகளையே காணமுடியும்.

கொங்குவேளிர் கண்ட மக்கட் சமூகம் ஆளும் வகுப்பாரையும் ஆளப்பட்ட வகுப்பாரையும் கொண்டிருந்தது. ஆளும் வகுப்பாரில் மன்னர் குடும்பங்களும் அமைச்சர் குடும்பங்களும் படைவீரர்களும் படைத்தலைவர்களும் நாட்டாண்மைக்காரர்களும் இருந்தனர். ஆளப்பட்ட வகுப்பார்களுள் உழுது உண்போர்களும், உழுவித்

துண்போர்களும், கைத் தொழிலாளர்களும், மற்ற வேலை யாளர்களும் இருந்தார்கள். ஆட்சியாளர்கள் ஆளப் பட்டோரிடம் வரிவாங்கித் தம் ஆட்சியை நடத்தி வந்தார்கள். ஆளப்பட்டோர்கள் வரி கொடுத்துத் தம் தொழிலை நடத்திப் பிழைத்து வந்தார்கள் மன்னர்களுக் குள் போர்கள் நடைபெறும். ஆனால் அப்போர்களினால் ஆளப்பட்டோர்களுக்குத் துன்பம் நேரிடாது. போர் வீரர்களும் மன்னர்களும் துன்புறுத்தப் படுவார்களே யன்றி ஆளப்படுவோர்களாகிய குடியானவர்கள் துன் புறுத்தப்படமாட்டார்கள். இந்த முறைதான் பொது வாக நாட்டில் இருந்தது.

சமூக நிலையில் ஆட்சியாளர்கள் தனிப் பங்காளர் களாக இருந்து தமக்குள்ளேயே காதல், மணம், இன்பம், உறவு, பொருள் சேர்க்கை, பகை, போர், அழிவு முதலிய செயல்களைக் கொண்டிருந்தார்கள். அதே காலத்தில் ஆளப்பட்டோர் தமக்குள்ளேயே, உறவு, மணம், ஊழியம், தொழில், வாணிபம், கைவேலை, இன்ப துன்பங்கள் மக்கட் பெருக்கம் முதலியவைகளைக் கொண்டிருந்தார்கள். இவ்விரு பங்கினரும் தங்களுக் குள் பல குலங்களாகவும் பிரிந்து வாழ்ந்தார்கள். இரு வகுப்பார்களிலும் கல்விமான்களும் கவிஞர்களும், அறிஞர்களும், யந்திரத் தொழிலாளர்களும் இருந்தனர். இவர்களால் ஆட்சியும் பொதுசன சமூகமும் பலன் அடைந்தது. அந்நாளில் சாக்கடைபோலப் பரத்தையர் குலமும் தனியே குண ஈனர்களின் உல்லாசத்திற்காக இருந்தது. இச்சாக்கடையினால் ஈனகுணம் வெளியே இழுக்கப்பட நற்குணமாகிய கற்புடைய மாதர் சமூகம் கேடு அடையாமல் தூய்மையாக இருந்தது.

பொது மக்களாகிய ஆளப்பட்டோரின் அன்றாட நடவடிக்கைகளைப் பற்றிப் புலவர் பெருமான் விவரமாக எடுத்துக் சொல்லவில்லை. அவர்கள் வாழ்க்கை, பொழுது போக்கு, இன்பதுன்பங்கள் முதலியன அமைதி யாகவே நடைபெற்றிருக்கும். நாட்டு விழாக்களாகிய

நீர்விழா, காமன் விழா முதலிய பெரும் விழாக்களில் அவர்களும் பங்கு எடுத்துக் கொண்டு இன்பம் துய்த்து இருப்பார்கள். சமய நிலையங்களுக்குச் சென்று வழிபாடு செய்து வந்திருப்பார்கள். திருமணங்களும் ஒத்த குடும்பங்களில் நடத்திக்கொண்டு ஆடம்பரம் இன்றி இல்லறம் நடத்துவார்கள் காதல் மணங்களும் களவு மணங்களும் பொதுவாக இன்றி பெற்றோர்கள் கூட்டு விக்க இளைஞர்கள் ஒத்துக்கொண்டு இல்லறத்தை நடத்துவார்கள். இந்த முறையில் அமைதி பெற்ற வாழ்க்கையிலே பொதுமக்கள் வாழ்க்கை நடைபெற்று வந்தது. ஆகவே புலவர் பெருமகனாரும் இந்த வாழ்க் கையைச் சிறப்பாக எடுத்துரைக்கவில்லை.

ஆனால் ஆட்சியாளர் வகுப்புகளிலே வாழ்க்கை வேறுவிதமாக இருந்தது. அதைப்பற்றிப் புலவர் பெருமகனார் வெகு ஆர்வத்தோடு குறிப்பிடுகிறார். மன்னர்களுள்ளும் தலைவர்களுள்ளும், நம்பிகளுக்கும் நங்கைகளுக்கும் காதல் தோன்றும். அதனை ஒட்டி மணம் தோன்றாவிட்டால் களவு ஏற்படும். பெற்றோர்களுக்குத் தெரியாமல் காதலியை எடுத்தேகி மணம் செய்து கொள்ளுவதும் அதனால் பகைதோன்றிப் போர் நிகழ் வதும் உண்டு. அன்றி சந்தி ஏற்பட்டு அமைதியாகத் திருமணம் ஏற்படுவதுமுண்டு. காதல் நேரிடும்போதெல் லாம் வெவ்வேறு மணங்கள் ஏற்படுவதுண்டு இதனால் ஒரு பேரரசன் பல மனைவியரை மணந்து இல்லறம் நடத்துவதுண்டு. இந்த வகையில் அடிக்கடி ஊடல் களும் பிறகு கூடல்களும் நடைபெறுவதுண்டு. இப்படிப் பட்ட அமைதியில்லாத காமபரவசமான வாழ்க்கையை உதயணன் வாழ்விலும் அவன் மகன் நரவாணன் வாழ்விலும் காண்கிறோம். அதனை வெகு ஆர்வத்தோடும் கவிநயத்தோடும் புலவர் அமைத்திருக்கிறார்.

உதயணன் சரிதையில் உதயணன் உஞ்சை மன்னர் மன்னனாகிய பிரச்சோதனனுக்குக் கப்பம் செலுத்தாமற் போக அவனைத் தன் இயந்திர யானையின் மூலம் வென்று

சிறைப்பிடிக்கிறான். ஒரு யானை வெறிபிடித்து நகரைப் பாழ்ப்படுத்த, உதயணன் சிறையிலிருந்து விடுதலை பெற்று யானையை அடக்கினான். அது கண்டு பிரச்சோதனன் உதயணனைத் தன் மகள் வாசவதத்தைக்கு யாழ் கற்பிக்கும்படி நியமிக்கிறான். இருவருக்கும் காதல் பிறக்கிறது. அக்காதல் முதிர உதயணன் வாசவதத்தையை அழைத்துக்கொண்டு தன் நாடு செல்கிறான். அது களவு. பிறகு சயந்திபுரியில் திருமணம் நடக்கிறது. அது கடி மணம். பின்னரும் பதுமாவதிக் காதலும், மானனீகை காதலும் ஏற்பட்டு திருமணங்கள் நடக்கின்றன. அப்போது வாசவதத்தை ஊடலும் பின்னர் சந்தி நடந்து கூடலும் ஏற்படுகின்றன. இந்தச் செய்திகள் செந்தமிழ் இலக்கிய அகத்துறையின் பால் சேரும். புலவர் பெருமகனார் இவைகளை வெகு சுவைபட வருணிக்கிறார். அது காலவழக்கம் எனலாம்.

அரசர்கள் அன்றாட வாழ்க்கை எவ்வாறு நடத்தினார்கள் என்பதற்கு உஞ்சை மன்னன் பிரச்சோதனன் விடியலில் கொண்ட செய்கைகளில் காண்கிறோம்.

> " பிரத்யோதனன் துயில் உணர்ந்தெழுந்து
> கண்களுக்கு மையெழுதிப் பசுவைத்தரிசித்து
> காலைக் கடனை முடித்துக் கொண்டு பெண்களைத்
> துறந்த மாசறு படிவத்தையுடைய துறவிகளை
> வணங்கிப் பெரியோர் மந்திரித்து அளித்த
> தீர்த்தத்தை உட்கொண்டு பேரத்தாணியில்
> மாலை தொடர்ந்த மங்கலப்பந்தரின் கீழே
> விரிநூல் அந்தணர் இருக்கும் வெண்மணை
> சூழ்ந்த ஆசனத்தே இருந்து கேட்க வேண்டிய
> தருமங்களையும் பிறவற்றையும் அறிஞர்பால் கேட்டான் "

பிறகே பிற செயல்களைச் செய்தானும். இது அரசர் விடியலில் செய்யும் முறை. இதனைப் புலவர் பெருமான்

> (1-34-5)ல் " நெடுந்தகை பூவணை வைகிய
> திருவீழ் கட்டில் திறத்துளி காத்த
> வல்வேல் சுற்றத்து மெய்ம்முறை கொண்ட
> பெயர்வரி வாசனை கேட்டபின்
> ....

அமிழ்தியல் யோகத் தஞ்சனம் வகுத்து
கமழ் கொள் பூமியில் கபிலை முன்னிறீஇ
மகடு உ த்துறந்த மாசறு படிவத்து
தூக டீராளர்க்குத் துளக்கிய முடியன்
மலர்க் கண் ணனை இய மந்திர நறுவீர்
பலருடன் வாழ்த்தப்பண்பளி யெய்தி
பால் பரந்தன்ன வால்வெள் விதானத்து
மாலை தொடர்ந்த மங்கலப் பந்தர்
விரிநூல் அந்தணர் வெண்மணை சூழ்ந்த
திருமணிக் கட்டில் திறந்துளி எய்தி
அறநிலை பெற்ற அருள் கொள் அவையத்து
நிறைநூல் பொத்தக நெடுமணை ஏற்றி
வல்லோர் வகுத்த வாசனை வாக்கியப்
பல்லோர் பகரப் பயம்பல பருகி
தரும் விகற்பமொடு காமமும் கெழீஇய
இன்பக் கேள்வி இனிது கொண் டெழீஇ
துன்ப நீங்கும் தொழில் முறை போக்கி
முடிகெழு மன்னரொடு முற்றவை நீக்கி
கடிபெரு கோயிலுட் காட்சி விரும்பி "

பிரச்சோதனன் அரண்மனை சென்றான் என்று வெகு சுவையுடன் காலை வழக்கங்களைப் புலவர் ஒவ்வொன்றாகக் கூறுகின்றார்.

இனி அக்காலத்துத் திருமணச் சடங்குகளை அடியிற் கண்ட விவரங்களோடு புலவர் குறிக்கின்றார் (2-1-7) முதலில் திருமண நாளை ஆராய்ந்துரைக்கும் கணிகன் குறிக்க அதனை வள்ளுவன் முரசறைந்து நகருக்கு அறிவிக்கிறான். நகரமாக்கள் இல்லங்களை ஒப்பனை செய்கிறார்கள். மாந்தர் மணமக்களை வாழ்த்துகிறார்கள் தோரணகம்பங்கள், பொன்மாலைகள் வாயிலில் நடுகிறார்கள். மணப்பந்தர் அழகாக அமைக்கிறார்கள். அறுசுவையோடு உண்டிவழங்க பெருமண்டபங்களும் சிற்றாண் பந்தர்களும் அறக்கோட்டங்களில் அமைக்கிறார்கள். தெருக்களைத் தூய்மைப் படுத்தி மணல் பரப்பி வண்ணத்துகில்களைக் கட்டி கண்ணாடிகளையும் படங்களையும் தொங்கவிட்டு மடற் குருத்துக்களைக்கட்டுவார்கள். அறவோர்கள் தீர்த்தங்கரர்களின் வரலாற்று

களை ஓதி அருச்சிப்பார்கள். கள்ளுண்போர் பலவிதமான கள்ளை அருந்திக் களிப்புறுவார்கள். யானைகளை நிறுத்தித் தெருவில் நடத்துவார்கள். அரண்மனைப்பணி மக்கள் எல்லா அணிவகைகளையும் அணிந்து கொள்வார்கள். இவ்விதமான ஆரவாரங்கள் நடைபெறக் கணிகன் நாள் கோள் முதலியவற்றை விழிப்புடன் ஆராய்ந்து நல்ல முழுத்தம் இஃதென்று பெரியோர்க்கு உணர்த்துவான். வேள்வியில் சிறந்த வேதப்பார்ப்பனன் நல்ல இடத்தை ஆராய்ந்து கட்டிய பூப்பந்தரின்கீழ் வெண்மணலைப் பரப்பி முக்குழி யமைத்து சமிதைகளையிட்டு அவியாத வேள்வித்தீயை வளர்த்தி நாற்பத்தைந்து தெய்வங்களை மந்திரத்தாலே நிலைபெறச் செய்த ஒப்பனை அழகுடைய காலிடந்தோறும் கூரியமுனைகளையுடைய அகலிடத்தே பொன் நிறைகுடங்களை அழகுபெற அமைத்து ஐந்து வகை சிற்றுண்டிகளோடே அறுசுவை அடிசில் திரளை அந்தணர் பலரும் உண்ணவும் பார்ப்பன முதுமகள் அம்மியிடப்பட்ட கீழ்த்திசை மூலையில் மேடையின்மேல் அயிராணிக்கு முன்னர் 'ஆவிரைமலர் மாலையைத்தூக்கி அருந்ததியையும் வசிட்டமுனிவனையும் வாழ்த்தி மணமக்களைப் புறநிலையாக வாழ்த்த வேதம் படைத்த நான்முகனை உரிய இடத்தில் இருத்திப் பால் அடிசில்களைக் கடவுட் பலியாகப் படைத்து வெற்றிலையோடு சந்தனம் மஞ்சள் நறும்புகை கொடுத்து, தேவிகளே வாசவதத்தை தரும் இப்பலிகளை நுகர்மின்' என வழங்குவர். பந்தற் கால்கள் தோறும் நான்முகக் கடவுள் முதலிய தெய்வங்களைச் செம்முது மகளிர், கன்னிமகளிர் வலம் வந்து உழுந்து, நெல், உப்பு, மலர், வெற்றிலைச் சுருள், சந்தனம் ஆகிய மங்கலப் பொருள்களை அங்கையில் அடக்கிக் கொண்டு 'ஏழுமுறை வணங்குமின்' என்று உழுந்து முதலியவற்றைத் தூவி வணங்கினர்.

பிறகு அணிகளால் அழகுறப்பெற்ற வாசவதத்தையைக் காஞ்சனை என்ற தோழி அழைத்து வந்து உதயணன்பால் கூட்டி வைத்தாள். அப்புண்ணிய மனையிடத்தே பார்ப்பனன் கீழ்த்திசை நோக்கி நூலிற்

கூறிய முறைப்படி மந்திரம் ஓதி நெய்யை வேள்வித் தீயில் பெய்து "போகமும் கற்பும் ஒருங்கே கூடி நிலை நிற்பனவாக" என்று சடங்கின் குறிப்புப் பொருளைக் கூறி உதயணன் கையாலே வாசவதத்தையின் சிற்றடியைப் பற்றுவித்து அம்மியின் மேல் வைப்பித்து மண மக்களின் அங்கைகளாலே மங்கலப் பொரியை வேள்வித் தீயில் பொலிவுறும்படிப் பெய்வித்தனன். பார்ப்பனன் மேருவில் நிற்கும் நாவல் மரம் போலவும் மேருமலை போலவும் பிரிவின்றி நீடூழி வாழ்க என்று வாழ்த்தித் திருமணச் சடங்கு முறையைச் செய்தான். சுற்றத்தார் போற்ற பெற்ரோர் தீ முன்னர் நீருடன் கொடுக்கத் தீயினை வலம் வந்து நன்மக்களைப் பெறுவாயாக என வாழ்த்தித் தனது விரலை அவள் நெஞ்சிடையே நுழைத்துத்தடவித் தென் திசையில் தர்ப்பைப் புல்லில் நடத்திச் சென்று மணத்தவிசின் மேல் அமர்த்தினர். பிறகு திங்கள் நிறைந்த வானில் வடபகுதியில் அருந்ததியைக் காட்டி அவள் போல் கற்புடன் இருப்பாய் என்று மும்முறை கூறி வணங்கினன்.

பிறகு சதுர்த்தி நோன்பு இருந்து நான்கு நாட்கள் சடங்குகள் செய்து மணச்சடங்கு நிறைவேற்றினர்கள். பிறகு இருவரையும் அழகு செய்த பள்ளிக் கட்டிலின் மேல் ஏற்றி வைத்தார்கள்.

திருமணம் நிகழ்ந்த பிறகு ஆறு திங்கள் கழித்து நல்ல நாள் கணித்து உடல் மயிர் களையும் சடங்கு நடந்தது. அதற்கும் அழகிய பந்தர் முதலியன கட்டி அந்தணர்கள் மந்திரம் ஓத மயிர் வினைஞன் கத்தியால் உதயணனுக்கும் வாசவதத்தைக்கும் மயிர்வினை செய்தான். பிறகு குளிக்கும் நீர் ஆட்டினர்கள். இருவருக்கும் நெய் யணிவித்து நீராட்டி ஒப்பனை செய்தார்கள். பிறகு திருக்கோயில் வழிபாடு நடந்தது. அருகன் கோயில் மாண்பும் வழிபாடு நடத்தின மாண்பும் கூறப்பட்டன. அருகன் கோயிலில் அழகுகள் வெகு விவரமாகக் கூறப்பட்டன. வழிபாடு முறையும் பிரார்த்தனை செய்த சொற்களும்

உரைத்திருக்கிறார் புலவர் பெருமான். இந்தத் திருமண வினைகளுக்கும் தற்காலச் சடங்குகளுக்கும் சில வேறு பாடுகள் இருக்கக் காணலாம். காப்புக் கட்டல் (கங்கணம்) தாலி அல்லது மங்கல நாண் கட்டுதல், இந்த இரண்டும் காணவில்லை. இனி ஆறு திங்கள் கழித்து மயிர்வினை செய்தல் தற்போது இல்லை. அது திருமணத்திற்கு முன்பே நடைபெறும். ஆணுக்கு மட்டும் அன்றிப் பெண்ணுக்கும் மயிர்வினை செய்தல் இல்லை. நீராடுதல் என்ற நலங்கு இருபாலருக்கும் உண்டு. கோயிலுக்குச் சென்று வழிபடுதல் திருமணத்திற்கு முன்பே நடைபெறும். இந்த முறைகளில் வேறுபாடுகள் தோன்றுகின்றன.

நூலின் நடைப்போக்கும், சொற்போக்கும்

பெருங்கதை அகவற்பாவினால் ஆகியது என்றும் அது பெருங்காப்பியங்களான மணிமேகலை சிலப்பதிகாரம் என்பவைகளைப் போன்ற செய்யுள் நடைகொண்ட தென்றும் முன்பே சொல்லப்பட்டது. விருத்தப்பாவில் கண்டபடி எதுகை மோனைகள் மிகுதியாக இல்லாமல், ஆசிரியப்பாவில் உள்ளபடி உயிர் அளபெடைகள் மிகுதியாயுடைய நடையே காண்போம். சொல்லழகுகள் சிலப்பதிகாரத்தை ஒத்திருக்கப் பொருளழகுகள் சமண காவியங்களை ஒத்திருக்கும். பெருங்கதை சமண நூலாகையால் சமண காவியமாகிய சிந்தாமணியை ஒத்திருப்பது இயல்பேயன்றோ. பெருங்கதைக் கருத்துக்களுக்கும் சிந்தாமணிக் கருத்துக்களுக்கும் ஒப்புவமை ஆங்காங்கே இருப்பது வியக்கத்தக்கதல்ல. எடுத்துக் காட்டாக ஒன்றிரண்டைக் கூறுவோம். உஞ்சை நகரில் நீர் விழாவில் நகர மாந்தர் களிப்போடு நீர் ஆடினதைக் கொங்குவேளிர்,

'மாற்று மன்னர் ஆடுமின் எனத்தம்
உரிமை மகளிரொடு செருமீக் கூறி
கரைசென் மாக்கள் கலாஅங் காமுறூஉ
மரைசகுமரர் ஆர்ப்பொலி யரவும்"

என்றார். அதே கருத்து சிந்தாமணியில்,

"கணமலை யரசன் மங்கை கட்டியங் காரனைப்
பணைமுலை மகளிரெல்லாம் பவித்திரன் படையதாக
விணைமலர் மாலை சுண்ண மெரிமணிச் சிவிறி யேந்திப்
புணைபுறந் தழுவித் தூநீர்ப் போர்த்தொழில்
தொடங்கினரே"

என்ற செய்யுளில் வருதல் காண்க.

நீர்விழாவில் பெண்கள் விளையாட்டை வருணிக்கையில் ஏழுவகைப் பெண்டிரைத் தமிழ்க் கவிஞர் உலாக்களில் வருணிப்பது போல இந்தப் புலவர் பெருமகனும் வருணிக்கின்றார். பேதை மகளிர், பெதும்பை மகளிர், மங்கை மகளிர், மடந்தை மகளிர், அரிவை மகளிர், தெரிவை மகளிர், பேரிளம் பெண்டிர் என்ற ஏழு பருவ மகளிரையும் அவரவர்கள் குணங்களுக்குத் தக்கபடி வருணிக்கின்றார். வடநாட்டில் உண்டோ இல்லையோ தமிழ்க் காவியங்களில் அமையப் பெற்றுள்ளது என்பதைப் புலவர் காட்டுகிறார்.

மேலும், உதயணன் பிறப்பைக் கூறும் பொழுது,

"கயலேர் கண்ணி துயில்ஏற் றெழவே
உயிர்போய் உருமையின் உறுபுட் போக
பொற்றொடி மாதர் பொறைநோய் கூர
எல்லாக் கோளும் நல்வழி நோக்க
திருமணி விளக்கந் திசைநின் றழலப்
பெருமணிப் பாரையிற் பிறந்தனை கிடந்தோய்"

என்று கொங்குவேளிர் கோள்நிலை ஒளிநிலை சிறப்புகளைக் கூறுகிறார். இதனைத் திருத்தக்க முனிவர் சீவகன் பிறந்த பொழுது கண்ட காட்சியில் வருணிக்கிறார்.

"இருள்கெட இகலி எங்கும் மணிவிளக்கெரிய ஏந்தி
அருளுடை மனத்தவாகி அணங்கெலாம் வணங்கி நிற்ப
பொருகடற் பருதிபோலப் பொன்னனான் பிறந்த போழ்தே
மருளுடை மாதர் உற்ற மம்மர்நோய் மறைந்த தன்றே"

இந்த இரண்டு செய்யுட்களுக்கும் உள்ள ஒத்த பண்புகளை ஆராய்ந்து மகிழலாம். ஒருவரை ஒருவர் மன

மொத்து எழுதினார்களோ என்று மயங்குவோம். இந்த முறையில் கணக்கற்ற எடுத்துக்காட்டுக்கள் உள்ளன. ஆழ்ந்து அறிந்து இன்புறுவோம்.

இனி கொங்குவேளிர் தம் நூலில் ஆண்டிருக்கும் சில சொற்களை ஆராய்ந்து பார்த்தால், அவைகள் சங்க இலக்கியத்திலாவது பிற்காலத்திய இலக்கியத்திலாவது ஆண்ட சொற்களாகத் தெரியவில்லை. சமணர்கள் தென் நாட்டிற்கு வந்தபோது மணிப்பிரவாள நடையை ஒரு வாறு தமிழில் புகுத்தினார்கள். அதனுடைய மாதிரியை ஸ்ரீ புராணத்தில் காணலாம். மணிப்பிரவாளம் வட மொழியும் தென் மொழியும் கலந்த ஒரு நடை. இது பிற் கால வைண நூல்களிலும் உண்டு. இப்படிப்பட்ட ஒரு கலப்பு நடையைக் கையாண்டபோது சில வட சொற்கள் தற்சமமாகத் தமிழில் புகுத்தி விட்டார்கள். அவைகள் வடமொழிச் சொற்களாக இருந்த போதிலும் திரிந்து விட்ட வகையில் தமிழ்ச் சொற்களைப் போல உருவம் எடுத்திருக்கின்றன. இவ்வாறு உருமாறின சொற்கள் பல சமயிகளால் எடுத்தாண்ட போதிலும் சமணர்கள் எடுத்தாண்ட சொற்கள் சமண நூல்களில் சிறப்பாகக் காணப்படுகின்றன. அவைகள் பெரும்பாலும் சிந்தா மணி, சூளாமணி, பெருங்கதை முதலிய நூல்களில் உள் ளன. கொங்குவேளிர் ஆண்டிருக்கும் சில சொற்களைக் கூறுவோம்.

1. 'விழா வாத்திரை' என்பதில் ஆத்திரை என்ற சொல் யாத்திரை என்ற வடசொற் சிதைவு.

2. உழாச்சன விலாவணை என்பதில் உழாச்சனம் பக்கத்து மக்கள்; விலாவணை என்பது அழுகை என்று பொருள் கொள்வர். இதில் விலாவணை என்பது விலாபனு என்ற வடமொழிச் சிதைவு. அவலம் என்ற தமிழ்ச் சொல்லால் கூறியிருக்கலாம்.

3. உரிமை விலாவணை என்பது உறவினர் அழுகை என்பது பொருள். உரிமை என்பது உறவினர் என்ற பொருளில் வந்திருக்கிறது.

4. உடன் மயிர் களைந்தது, கடிக்கம்பலை என்ற சொற்றொடர் புகள் தமிழ்ச் சொற்களாயிருந்தும் சொற்றொடர்பு அரியவை.

5. மண்ணு நீராட்டியும் - என்பதில் மண்ணு நீர் - குளிக்கிற நீர் - ஔவையார் ' கடல் பெரிது மண்ணீரும் ஆகா ? என்று கூறியிருக்கிறார். மண்ணு நீர் - மண்ணீரிலிருந்து வந்ததா.

6. யூகி போதரவு - யூகி சாக்காடு என்பவைகளில் போதரவும் சாக்காடும் அரிய சொற் போக்குகள்.

7. யூகி விலாவித்தது - யூகி அழுதது என்று பொருள்படும். விலாபனை என்ற பெயர்ச்சொல் விலாவித்தது என்ற வினைச்சொல்லாக மாறினது. இந்த மாறுதல் மிக அருமை.

8. முக வெழுத்து - என்பது முகத்தில் எழுத்தால் கடிதம் எழுதித் தெரிவித்தது. இந்த தொடர்பும் அதிசயமே.

9. வயா கேட்டது வயா தீர்த்தது என்பவைகளில் வயாக் என்பது நடுக்கம், "வயாத் தீர்வதற் கோருயாத் துணை இன்றி" (4-13-140) என்பதில் வயா என்றால் நடுக்கம், உயா என்றால் விறைவுதல் - உசா என்பதன் திரிபு. வயா நோய் என்று அது வருத்தம் தருவது என்ற பொருளில் வந்தது.

10 அசா நோய் என்பதில் அசா என்பது தளர்ச்சி, அயா என்ற வடமொழியின் மரூஉ. "அசா அத்தானுற்ற வருத்தம்" நாலடி 201 – "வேய்த்தோள் அசா நோய் தீரிய" (5-1-242)

11. அரா அந்தாணம் - அருகன் தானம் என்பதன் மரூஉ. 'அரா அந்தாணமும் மணமணற்றெண் டிரைக் குமரித்துறையும்" (5-4-151)

12. ஆரவள்ளி - 'அரிச்சா லேகமும் ஆரவள்ளியும், (1-4-9) என்பது சாளர வகைகள், (ஜன்னல்) அரிச்சர லேகம் என்பது மான்கண் போன்ற சாளரம் ஆரவள்ளி முத்துக்கோத்த பொற் கொடிகளால் ஆகிய சாளரம். கதிர்ச்சாலேகம் இரும்புக் கம்பிகளால் ஆன சாளரம்.

மேலே சில சொற்கள் காட்டப்பட்டன. இவைகள் சமணர் பயன்படுத்தின சொற்றிரிபுகள் எனலாம். நடைப்போக்கில் கொங்குவேளிர் இவை போன்ற பல அருஞ்சொற்களைப் புகுத்தி ஒரு நடை கற்பித்திருக்கிறார்.

வேற்றுமைகள்

வடமொழி பிரகத்கதை நூல்களுக்கும் தமிழ்ப் பெருங்கதைக்கும் பல வேற்றுமைகள் இருக்கின்றன. முதலாவது கதையின் அளவு அல்லது பெருக்கம். வடமொழிக் கதைகள், கதைத்தொடக்கத்தில் உதயணன் கதையைச் சொல்லி, பிரதானப் பகுதிகளில் நரவாணன் சரிதையைக் கூறும். உதயணன் கதை ஒரு பங்காஞல் நரவாணன் சரிதை 16 பங்காகப் பெருகியிருக்கும் ஆகவே தமிழ்க் கதையைவிட வடமொழிக் கதைகள் பல மடங்கு பெரிதாக இருக்கின்றன. பெருங்கதை ஆறு காண்டங்களாகப் பிரிந்து 5 காண்டங்களில் உதயணன் பிறப்பும் வளர்ப்பும் ; வாசவதத்தை மணமும் ; மகதத்தில் வாழ்க்கையும்; பதுமாவதி, மானனீகை, விரிசிகை என்ற மூன்று கன்னிகைகளை மணத்தலும் நான்கு காண்டங்களில் விரிந்து 5ல் நரவாணன் பிறப்பும் திருமணமும் கூறி 6வது காண்டத்தில் துறவோடு முடிகிறது. இக்கதையில் உதயணன் கதை வடமொழி கதைத்தொடக்கம் என்னும் கதாபீடத்தில் அடங்கும். நரவாணன் பிறப்பும் மதன சஞ்சிகையின் மணமுமே 5ஆம் காண்டத்தில் அடங்கி விட்டது. உதயணன் துறவு ஆருவது காண்டத்தில் முடிகிறது. ஆஞல் வடமொழியின் முக்கிய கதை நரவாணன் பிறப்பு முதல் கணக்கற்ற பெண்களை

மணப்பதிலேயே பெரும்பகுதி ஏற்படுகிறது. அக் கதைகள் தமிழ்நூலில் இல்லை.

வடமொழி நூல் பல அரச கன்னிகளைக் காதலித்துக் மணப்பதிலேயே நோக்கம் கொண்டிருக்கிறது. தமிழ் நூலோ மணஞ்செயலை வருணிபபதோடு நிற்காமல் நீதிகள். சமய தத்துவங்கள், நாட்டுப்பழக்க வழக்கங்கள் நகரங்கள் நாட்டுப்புறங்களின் வருணனை, இயந்திரப் பொறிகளின் விவரங்கள் முதலியவற்றை வருணிக்கின் றன. வடமொழி நூலில் உதயணன் முதலிய மன்னர்கள் சைவ சமயிகளாகக் கூறப்படுகின்றனர். ஆனால் பெருங் கதையிலோ அவர்கள் சமண சமயத்தினர்களாகக் கூறப் படுகின்றனர். வடமொழி நூல்கள் சைவச் சார்பான நூல்கள். பெருங்கதையோ சமணச் சார்பான நூல். இந்த வேற்றுமைகள் நன்கு தெரிகின்றன.

இனி சரித்திரச் செய்திகளுக்கும் பெருங்கதைக்கும் சில வேற்றுமைகள் இருக்கின்றன. அவற்றில் ஒரு வேற்றுமையை இங்கு எடுத்துக்காட்டுவோம். சரித்திர ஆராய்ச்சியின்படி உதயணன் புத்தர் உலகில் வாழ்ந்த காலத்திலேயே வத்ச நாட்டில் கௌசாம்பியில் ஆண்டவ னென்றும், அவன் முதலில் பௌத்த சமயத்திற்கு விரோதமாக இருந்தான் என்றும், அப்போது புத்த ருடைய முக்கிய சீடனை பிண்டோல பாரத்வாஜனைத் துன்புறுத்தியதாகவும், அந்தக் காலத்தில் உதயணன் அரசி சாமாவதி புத்தர் மாணுக்கியானதாகவும் அதைக் கண்டு மாகண்டியா என்ற மற்றொரு அரசி அரசனிடம் கோள்சொல்லி விரோதம் விளைவித்துச் சாமாவதியை விலக்கச் செய்ததாகவும், இந்தச்சூழ்ச்சி முற்றும் அறிந்த பிறகு உதயணன் பச்சாத்தாபப்பட்டு பிண்டோலரிடம் சரண் அடைந்து புத்த தருமத்தை உபதேசிக்கப் பெற்ற தாகவும் அது முதல் பௌத்த தருமத்தைப் போற்றி வந்த தாகவும் வரலாறு கூறுகிறது. (Age of Imp. Unity - K. M. Munshi, p. 369).

இந்தச் சரித்திர வரலாற்றிற்கும் பெருங்கதைக்கும் உள்ள வேற்றுமையை நன்கு அறியலாம். உதயணன் புத்த சமயத்தினன் ஆனுன் என்று சரிதம் கூறுகிறது. ஆனுல் பெருங்கதையோ உதயணன் அருகன் கோயிலே வழிபட்டதாகவும் இறுதியில் சமண சமயப்படி துறவுப் பூண்டதாகவும் கூறுகிறது. அந்த விபரத்தை முன்னமே கூறியிருக்கிருேம். ஆகவே கொங்கு வேளிர் தாம் சமண ராதலால் தன் காதாநாயகனேயும் சமணன் ஆக்கி விட்டார் என அறியலாம். இதற்குக் காரணம் தம் சமய மாகிய சமணத்தைப் பரப்புவதற்கு ஒரு சமயம் கண்டு பிடித்து அதன் மூலம் சமண சமயக் கொள்கைகளே உலகில் பரப்ப எண்ணியிருக்கக் கூடும் என்றும் அறியலாம்.

ஓவியப்பயிற்சியின் சிறப்பு

யூகி ஓவியக் கலேயில் சிறந்தவன். தன் கருத்தை வெளியிட ஓவியத்தைப் பயன்படுத்திக் கொண்டவன். யூகி ஒருதடவை மறைந்திருந்தான். அவனிடம் சாங்கியத்தாய் என்ற அறிவுடைய தோழி சென்று உஞ்சையில் நடந்ததும் சயந்தியில் நடந்ததும் ஆன செய்திகள் சொல்லவே, அவன் உதயணனுடைய வடிவம் போல ஓவியம் ஒன்றைப் படத்திலெழுதி அவ்வுருவத்தில் நான்கு கண்களேப் பொறித்து அவற்றுள் மேலேயுள்ள கண்களே மழுங்கியதாக அமைத்து அப்படத்தை அவளி டம் கொடுத்து "இதனே உதயணனுக்குக் காட்டு" என்று சொன்ஞன் அவளும் உதயணன் வாசவதத்தை யோடு இருக்கும் சமயம் பார்த்து அவனுக்குக் காட்டினள். அவன் அப்படத்திலமைந்த நுட்பவேலே களேக் கண்டு வியந்து "மனிதனுடைய உறுப்புக்களுள் அடிகளே—ஆட்கள்; தோள்—மனேவி; பல்—மக்கள்; கண்—தோழி; தலே—இருமுது குரவர்; என்னும் நூற் கருத்தை அறிந்தவஞகையால் தன் தோழர்கள் நால்வரும் மேலான கண் மழுங்கியிருத்தலேக் கண்டு

தன் தோழன் யூகிக்கு ஏதோ துன்பம் வந்துளது என்று யூகித்துக் கவலையுற்ருன். இந்த முறையில் ஓவியம் மூலமாகக் கருத்தை வெளிப்படுத்தும் ஆற்றல் அப்போது இருந்தது.

இதில்கண்ட நூற்கருத்தைக் கொங்குவேளிர் அடியிற்கண்ட அடிகளில் உரைக்கிருர் —

"இடப்படு ஞாலத் துடம்பொடு புணர்ந்த
இன்னியல் மாந்தர் திண்ணிய உறுப்பினுள்
தாளே பெருங்கிளே, தோளே துணேவி
பல்லே மக்கள், கண்ணே தோழர்,
முடியே குரவர், அடியே ஆளாம்,
ஆக்கையின் நாடி அவ்வணம் காணின்
மேற்கட் குற்றது விதுப்பியல் வழாது
நூற்கள் நுனித்த நுண்ணுணர் வெண்ணம்"

(2-10-98-105)

இதில் மானுட உடம்பின் உறுப்புக்களுக்குக் கூறும் உவமைகள் எத்துணேச் சிறப்போடு அமைந்துள்ளன காண்மின்.

தேவைப் பொருள்கள்

பிரச்சோதன மன்னன் உதயணனுக்கு யானேச் சேரியில் ஒரு மாளிகை அமைத்து அதில் ஒரு அரச குமாரனுக்குத் தேவைப்படும் பொருள்களே நிரப்பி வைக்கும்படிக் கட்டளே யிட்டான். அதன்படி ஆட்கள் அமைத்த பொருள்களே வேளிர் வருணிக்கிருர்—

"பன்மணி விளக்கும் பள்ளிக் கட்டிலும்
பொன்னின் அடைப்பையும் பூரண கலசமும்
கவுரியும் கடகமும் கதிர்முத் தாரமும்
நிகரின் மாண்கல நிதியொடு நிறைந்த
ஆரியச் செப்பும் யவன மஞ்சிகையும்
பொன்செய் பேழையொடு பொறித்தாழ நீக்கி
நன்கலப் படுத்து நறுமலர் பரப்பி
விரைவிரியாளர் புரையுறப் புணர்த்த
பண்டம் புதைத்த வண்டுபடு வளநகர்

மடையரும் மகளிரும் மல்லரும் அமைச்சரும்
கடையரும் கணக்கரும் காப்பரும் உளப்பட
இறைவினை திரியா பழவினை யாளரை
வழிமுறை மரபிற்றந் தொழிற்முறை நிறீஇ" (3-4-72-84)

இவையெல்லாம் நிறைவேற்றி உதயணனை அதில் அமர்த்தினர்கள்.

நீர்விழாவிற்குச் சென்ற அரசகுமாரிகளுடன் அடியிற்கண்ட பொருள்களை வேலையாட்களாகிய கூனர்கள் எடுத்துச் சென்றனர்.

"கடைப்பகச் செப்பே கவரி குஞ்சம்
அடைப்பைச் சுற்றமோ டன்னவை பிறவும்
அணிகலப் பேழையும் ஆடைவட்டியும்
மணிசெய் வள்ளமும் மதுமகிழ் குடமும்
பூப்பெய் செப்பும் புகையகில் அறையும்
சீப்பிடு சிக்கமும் செம்பொற் கலசமும்
காப்பியக் கோசமும் கட்டிலும் பள்ளியும்
சுட்டிக் கலறும் சுண்ணகக் குற்றியும்
வட்டிகைப் பலகையும் வருமுலைக் கச்சும்
முட்டிடு வட்டு முகக்கண் ணடியும்
நக்கிரப் பலகையும் நறுஞ்சாந் தம்மியும்
கழுத்திடு கழங்கும் கவறும் கண்ணியும்
பந்தும் பாவையும் பைங்கிளிக் கூடும்
யாழும் குழலும் அரிச்சிறு பறையும்
தாழ முழுவமும் தண்ணுமைக்கருவியும்" (1-38-161-75)

எத்துணைப் பொருள்கள்! இவைகள் எல்லாம் அரச போகத்தைச் சுட்டுவன.

மேலும் உதயணனும் வாசவதத்தையும் உஞ்சையை விட்டுத் தம் நாட்டிற்குத் தப்பிக்கொண்டு போகையில் புளிஞர் சவரர்களிடையே அகப்பட்டுத் திண்டாடிக் கொண்டு போகையில் வயந்தகனும் இடலகனும் உதவிப் படை கொண்டுவந்து வேடர்களைக் கொன்று மீட்டு ஒரு மலைச்சாரலில் படைவீடு அமைத்து அதில் தம்பதிகளை இருத்தினர்கள். அப் படைவீட்டில் பலவகைப் பொருள்களும் ஆயத்தம் செய்யப்பட்டன. மகிழ்ச்சியுடன்

இருவரும் தங்கினார்கள். அப்போது வாசவதத்தைக்கு என்று அமைத்திட்ட பொருள்களின் எண்ணிக்கையை வேளிர் குறிக்கின்றார்.

பாவையும் முற்றிலும் பூவையும் குழலும்
பைம்பொற் கவறும் பளிக்குமணி நாயும்
சிங்காதனமும் பொங்குபூந்தவிசும்
பள்ளிப் பலவகைப் படுப்பவும் பிறவும். (1-57-32-61)

இவற்றை உரை நடையில் குறிப்போம்—

பாவை, முற்றில், வேய்ங்குழல், பொற்கூறு, பளிக்கு நாய், சந்தனப் பலகை, சந்தனப்பேழை, சாந்தரையம்மி, அகிற்புகை துணையகல், சிக்கம். கோதைச் செப்பு, கிளி, மயில் பூவை, பொற்கரண்டம், அணிகலப்பேழை, மணிக் கண்ணாடி, மணிவிளக்கு, மயிர்வினைத் தவிசு, இருக்கைக் கட்டில், அடைப்பை, கோடிகம், முட்புணைவட்டு, பட்டமளி, ஆலவட்டம், சாந்தாற்றி, மாலைப் பந்து ஆக 27 பொருள்களை ஏந்திக்கொண்டு மங்கையர் ஒருபால் நின்றனர்.

மேலும் உதயணனுக்காக, பரிமா, யானை, தேர், கொற்றக் குடை, வேல், கொடி, கவரி, முரசு, சங்கம் படவம், விதானம், சிங்காதனம், பொங்கு பூந்தவிசு ஆக 13 பொருள்களைக் கொண்டு சிலதியரும் இயவரும் சிந்து தேசத்துப் பலவகை மொழி பேசும் மக்களும் ஒருபால் நின்றனர்.

மேலும் கைக்கோலிளைஞரும், கணக்கரும், மெய்க் காப்பாளரும், வீரரும், பிறரும் சூழ்ந்திருந்தார்கள். இத்தனைப் பொருள்களும் அரச தம்பதிகளுக்குத் தேவையாக இருந்தன என்றால் அந்த அரச குடும்பத்தின் செல்வாக்கைப்பற்றி என்னென்று கூறுவதோ!

அணிவகைகள்

பெண்மணிகள் அணிந்து கொள்ளும் அணிகலன்களை ஓரிடத்தில் கொங்குவேளிர் குறிக்கின்றார். சாதாரணமாகச் சுபகாரியங்களைச் செய்யும்போது இன்னின்ன அணிகலன்களை அரசி அணிந்து கொண்டாள் என்று கூறுவது வழக்கம். ஆனால் வேளிரோ ஒரு துயரச்செய்தியை உரைக்கும்போது அவைகளைக் கூறுகிறார். வாசவதத்தையின் அரண்மனை தீப்பிடித்து எரிந்த காலையில் அதனைக் கேட்ட உதயணன் எரிந்துபோன ஒரு பெண்மணியின் அணிகலன்களை ஒவ்வொன்றாய்க் கையில் எடுத்துக் கொண்டு வியாவிக்கிறான். இந்த முறையில் கம்பரும் சீதை தன் அணிகலன்களை இராவணன் தூக்கிக்கொண்டு போகையில் கீழே எறிந்துவிட அவைகளை இராமன் கண்டு ஒவ்வொன்றாய்ச் சொல்லி அழுததனை ஒத்திடலாம். வாசவதத்தையின் அணிகலன்களில் பொன்னரி மாலை, பட்டப்பேரணி, திலகம், காதணி இலைத் தொழில் அமைந்த பேரணிகலன்கள், இதயவாசனை என்னும் மார்பணிகலன், காரிகை, முத்தாரம், தாலி முத்தவடம், சித்திர உத்தி, பொன்னாண், சங்கிலி, தோளணிகள், இடையணிகள், மாணிக்கப்பரல் இட்ட கிண்கிணி, சிலம்பு, விரற்சுற்று, வளையம், ஆழி, இரட்டைவடம், மகரவாய், விரலணி, கிண்கிணி பாடகம், இனியும் முடிபணிகள் முதலாய் அடியணிகலன் வரையில் அணிந்தவைகளை ஒவ்வொன்றாக நினைந்து நினைந்து கூறிப் பல உவமைகளுடன் எடுத்துரைக்கும் பாவனையில் வேளிர் அவைகளின் பெயர்களை அமைத்திருக்கிறார். இது இனிய கவியின்பத்தைத் தோற்றுவிக்கிறது. இதன் முழு இன்ப அவலக்கவிகளையும் தேவிக்கு விலாவித்தது என்ற பகுதியில் (2–19)

" தன்னுதல் மாதர் பின்னிருங் கூந்தல் (75)
பொன்னரிமாலாய்
வடக்கண் மாதர் முடிக்கல முதலாய்
வடிக்கலந்தழீஇ முடித்தார் மார்பன்

அசற்றியும் அயர்ந்தும் முரற்றியும் உயிர்த்தும்
வீழ்ந்தும் எழுந்தும் தாழ்ந்தும் தளர்ந்தும் (204)

வரை உள்ள செய்யுட்பகுதி மிகுந்த கவியின்பம் அவலச் சுவையில் உள்ளன. (இவை ஷெல்லியின் கூற்றை ஒத்திருக்கிறது).

மலர் வகைகள்

இலாவாண நகரின் அருகிலே செயற்கையழகும் இயற்கை யழகும் பொருந்திய ஒரு அழகான மலை இருக்கிறது. அம்மலைக்குச் செயந்தி நகர மக்கள் சென்று உல்லாசமாகப் பொழுது போக்கினர். அந்தச் செய்தியைக் கூற வந்த கொங்குவேளிர் அம்மலையில் காணும் மரம் செடி கொடி மலர் முதலிய இயற்கைப் பொருள்களைக் கூறி மாசனங்கள் மலர்களைப் பறித்து மாலைகள் கட்டி அணிந்து கொண்டதும் மாடிவீடுகளில் அமர்ந்து விளையாடினதும் நன்கு விவரித்திருக்கிருர். அவ்வாறு விவரிக்கையில் மலர்களின் வகைகளை வரிசையாகக் கூறுகிருர். (2–12–11 முதல் 34)

"பலவும் மாவும் நலமா நாகமும்
மகிழும் பிண்டியும் வரியிதழ் அனிச்சமும்
வேங்கையும் ஆவும் விளவும் வேயும்
கோங்கமும் குரவும் கொடிக்குருக் கத்தியும்
நரையும் நந்தியும் அறைபயில் அகிலும்
வழையும் வாழையும் கழைவளங் கவினிய
திகிரியும திில்லையும் மயில்பூம் பயினும்
முல்லையும் பிடாவும் குலலையும் கொன்றையும்
குருந்தும் வெட்சியும் நரந்தையும் நறவும்
நறும்பா திரியும் நாண்மலர்க் கொகுடியும்
இறும்பமல் ஏலமும் ஏரிலவங்கமும்
மைங் கூதாளமும் வெண்பூஞ் சுள்ளியும்
கொய்தகை போந்தும் கைதகை காந்தளும்
திமுசும் தேக்கும் ஞெமையும் ஆரமும்
சேபா லிகையுஞ் செங்கொடு வேரியும்
தீவாயத் தோன்றியும் திலக முந்திரிசோற்
பகன்றையும் பலாசும் அகன்றலைப் புழுகும்

குளவியும் குறிஞ்சியும் வளவிய மௌவலும்
சிறுசெங் குரலியும் சிறு செண்பகமும்
நறும்பொற் கொட்டமும் துறும்புடி கஞலி
இன்னவை பிறவும் பன்பரம் பயின்று
கொடிப்பூம் பந்தரிடைப் பரந்து".

என்று 57 தாவரங்களும் அவற்றில் விளையும் மலர்களும் ஒழுங்காகக் கூறியுள்ளார். இந்த முறையில் மரஞ் செடி கொடி மலர்கள் வடக்கே அம்மலையில் உண்டோ இலவோ அறியோம். ஆனால் இவைகள் தமிழ் நாட்டில் உண்டு. சங்க நூலாகிய பத்துப்பாட்டில் குறிஞ்சிப்பாட்டில் 99 வகை மலர்கள் கூறப்பட்டுள்ளன. அவைகளில் பெரும்பாலான மலர்கள் இந்த நூலில் வந்துள்ளன. கொங்குவேளிர் தாம் கண்ட தாவரங்களையும் அவற்றில் மலரும் மலர்களையும் வட நாட்டிற்குக் கொண்டு சேர்க்கிறார். கவிநயம் சிறக்க வைப்பதற்கு இந்த முறையைக் கையாளுகிறார் என்க.

மேலும் மாசனம் மகிழ்ந்தது (12) என்ற இந்த தலைப்புப் பகுதியில் இயற்கையழகுகளைச் செயற்கை அழகுகளோடு இணைத்து அரும்பெரும் கவிதையை உரைத்திருக்கின்றார். இங்கே அமைந்திருக்கும் பல வகையான நயங்கள் அறிந்து இன்புறற்பாலன. குறிஞ்சி நில வருணனையோடு மாடிவீடுகளின் அமைப்பும் சுற்றிலும் அழகிய விலங்குகள் பறவைகள் திரிந்தும் கூவியும் மகிழ்ச்சி தருவதும் மிக இன்பத்தைத் தந்ததென்று வருணிக்கிறார்.

இனிப்பூமாலை கட்டுவதற்குப் பல வேறு மலர்களைத் தொடுப்பதில் விரிசிகை என்ற முனிவர் பெண் தெரிந்தெடுத்த மலர்களைப் பார்க்கின் எல்லாம் தமிழ் நாட்டு மலர்களாகக் காண்கிறோம்.

"புகழப்பட்ட பூமரக்காவினுள்
நந்தி வட்டமும் நாகத் தலரும்
சிந்து வாரமும் சேபாலிகையும்
மணிக்குருக்கத்தியும் மணிப்பூஞ்சுள்ளியும்
நாட்சிறு சேடமும் நறுஞ் செண்பகமும்
கோட்கமைந் தேந்திய கோலப் பன்மலர்" (2-15-102-107)

இதில் மலர்மாலை புனைவதற்குத் தெரிந்தெடுத்த மலர்கள் எட்டு ஆகும். இறைவனுக்கு மாலை தொடுப்பதற்கு எடுக்கும் மலர்கள் எட்டு என்று அறிவோம். மலர் எட்டு அல்லது அஷ்டபுஷ்பம் என்பது தென்னாட்டுக் கோயில் வழக்கு. இங்கே பயன்படுத்தும் எட்டுமலர்கள் புன்னை, வெள்ளருக்கு, சண்பகம், நந்தியாவட்டம், குவளை, பாதிரி அலரி, செந்தாமரை என்பன. எட்டு குணங்களையும் சொல்லுவதுண்டு.

பொருளணிகள் சில

இரண்டடிகளில் உவமையணிகள் வெகு இனிமை யாகவும் சுருக்கமாகவும் பொருட்செறிவு கொண்டவை யாகவும் பல இடங்களில் ஆளப்படுதல் காண்போம். உவமானங்கள் தெளிவாகவும் உள்ளத்தை எழுப்பி ஆணித்திறத்தில் பதியும்படியாகவும் உள்ளன. அவற்றில் சில கூறுவாம்.

1. " ஆன்மூலை பிறந்த வானிற அமிர்தம்
மலைப்பெய் நெய்யொடு தலைப் பெய்தாங்கு " (2-8-11-12)

பாலும் தேனும் கலந்தாற்போல உதயணனும் யூகியும் வெவ்வேறிடத்தராயினும் நண்புடைமையினலே ஒன்று பட்டனர்.

2. " கெட்ட காலை விட்டனன் என்னுது
நட்டோர் என்பது நாட்டினை நன்றென் " (2-9-117)

இடவகன் யூகியைப் பாராட்டி உற்றுழி உதவாது கைவிட்டனன் என்னுது நண்பன் எனக்காட்டினை என்றது.

3. " தந்தையொ டொறுக்கப்படான் சிந்தை
அகனுணர் வில்லா மகனே போல் " (2-9-194)

தந்தையால் அன்றித்தானே சிந்தை செய்யும் அகவுணர்வுடையவன்.

4. " கொடுங்காழ் சோரிறும் கூடம் ஊன்றிய
நெடுங்காழ் போல நிலைமையில் வழாது " (2-10-163)

வளைந்த கை மரங்கள் கீழே விழுந்தும் தூண்கள் தன்னிலைமையில் தளராது நிற்கும். அது போல் உதயணன் குணம் இருந்தது.

5. " நித்திலம் பொதிந்த இப்பிபோல
திருவயிற் றகவயின் உருவொளிஅரு " (2-11-49)

முத்தினைக் கருக்கொண்ட இப்பிபோல இங்கே முத்து உதயணன்; இப்பி - மிருகாபதி - உவமைகள்.

6. " தேன்சுவை கொளீஇ வேம்பின் ஊட்டும்
மகார் மருதாளரின் மறந்தகை அண்ணல் " (2-11-173)

வேம்பினாலாய மருந்தினைத் தேன் சுவையைச் சேர்த்து இனிதாக ஊட்டும் குழந்தை வைத்தியர் போல - உதயணன் விரும்பாதவற்றை விரும்புவனவற்றோடு கலந்து விரும்பிக்கேட்கும்படிக் கூறி·

7. " பெருமையில் பிறப்பினும் பெற்றிபோகா
சிறுமையாளர் செய்கை போல் " (2-12-144)

சிறுமையாளர் செய்கை பிறருக்கு ஈயாமை. தம் மதத்தே மொய்க்கும் வண்டினம் கடியும் யானைபோல.

8. " உறியோர்க்குதவுதல் செல்லாதொய்யென
சிறியோர் உற்ற செல்வம் போல் " (2-14-33)

செல்வத்தை உறவோர் பொருந்தாது மறத்தல்போல் வண்டினம் தேன் நுகராமல் மறந்துவிட்ட மலர் உடைய செண்பகச் சோலை.

9. " செய்வினை மடிந்தோர்ச் சேர்ந்துறை வியனே
மையறு தாமரை மலர்மகள் தானெனல்
வையகத் துயர்ந்தோர் வாய்மொழி ஆதலின் " (2-17-39)
" மடியுளான் மாமுகடி என்ப மடியிலான்
தாளுளான் தாமரை யினாள் "

என்ற குறளிற் கண்ட மெய்ம்மொழி இங்குக் காண்க.

10. "தனிக்கன்றுள்ளிய புனிற்ரு போல
விரைவிற் செல்லும் விருப்பினன்" (2-18-11)

தனிக்கன்றை உள்ளிய ஈன்ற பசுவைப்போல விரைந்து செல்லும் விருப்பினன்.

11. "கொள்கைக் கட்டில் உள்ளுற மூட்டி
மாசுவினை கழித்த மாதவர் போல" (2-19-62)

துன்பம் சுடச்சுட நோற்ருலே இருவினையாகிய குற்றத்தைக் கழித்த துறவியர், தீயினுட்கிடந்து அந்த சுடுதலாலே தம்பால் பதிந்த முத்து முதலியன கழியப்பெற்று மாசு நீங்கி மிக்கு ஒளிரும் பொன்னணிகளுக்கு உவமை. இதற்கு மேற்கோள்.

"சுடச்சுடரும் பொன்போல் ஒளிவிடும் துன்பம்
சுடச்சுட நோற்கிற் பவர்க்கு" — குறள் 269.

12. "பல்சிறைப் புறவம் பரிந்துடன் ஆடி
யவ்வாய்க் கொண்ட வாரிரை யமிழ்தம்
செவ்வாய்ப் பார்ப்பிற்குச் சேர்ந்தவண் சொரிதலின்
உறுபசி வருத்தமும் அன்பினது பெருமையும்
திறவதி னேக்கித் தெரியா நின்றுழி
வேந்தனும் வினவியவள் வேட்கை விரும்பி" (5-1-68-73)

இது ஒரு இயற்கை உவமை. ஒரு புறவு தன் வாய் கொண்டிருந்த அரிய இரையைத் தன்னுடைய பார்ப்பின் வாயிற் சொரிந்ததைக் கண்டு பார்ப்பின் பசி வருத்தத்தையும் தாய்ப்புறவினது அன்பின் பெருமையையும் நோக்கி அதன் அன்பைப் பாராட்டிக் கொண்டிருந்த வேந்தன் வினவியறிந்து கொண்டு தாகித்தவர்களுக்குத் தண்ணீர் போன்ற அவளுடன் துயின்ருனும்.

இந்த உவமை எத்தனை எளிதாகவும் இனிமையாகவும் இயற்கைப் பொலிவோடும் திகழ்கின்றது. ஆராய்ந்து மகிழ்க.

இந்த உவமைகள் போல பல பல இயற்கை உவமைகள் இப் பெருங்கதையில் உள்ளன.

ஊடல் இன்பம்

மேலும் உதயணன் வளமலைச்சாரலில் தன் சுற்றத்துடன் உண்டாடி மகிழ்ந்திருக்கும்பொழுது ஒரு பூம்பொழிலில் ஒரு துறவியின் மகள் விரிசிகை என்பவளைக் கண்டு மகிழ்ந்து அவளுக்கு மலர்மாலை புனைந்து சூட்டி மடிமீதிருத்தி மகிழ்ந்தனன். அவள் சென்றபிறகு வாசவதத்தை வந்தாள். விரிசிகைக்கு மலர்மாலை சூட்டினதை அறிந்து கொண்டு சினமுற்று, சிவந்த கண்களில் வெய்ய நீர்த்துளிகளைச் சிந்தி கையிலிருந்த கண்ணிகளையும் தழைகளையும் எறிந்துவிட்டு,

"கிடைத்த தாமரைப் பூவில் உள்ள தேனை உண்ணுமல் நெடுந்தூரத்தில் இருக்கும் நெய்தற்பூவில் உள்ள தேனை உண்பதற்குச் செல்லும் வண்டைப்போல் வார் ஆடவர் என்பதை இன்று கண்கூடாகக் கண்டேன்" என்று சொல்லி கடுஞ் சினம் கொண்டு தோழிகளை நோக்கி 'என் தந்தையின் அணிநகர்க்கு என்னை அனுப்பிவிடுங்கள்" என்று சொல்லித் தன் கோலங்களைச் சிதைத்துக் கொண்டே அச்சோலையின் ஒரு பக்கத்தே சென்ருள். அதனைத் தோழி காஞ்சனையால் கேட்ட உதயணன் அவளைத் தழுவி முத்தமிடவும் அவள் சினந் தணிந்தாள் அல்லள். அப்போது அம்மலைச் சாரலில் இருந்த ஒரு பலா மரத்திலிருந்து ஒரு ஆண் குரங்கு திடீரென்று குதித்து வந்தது. அதனைக்கண்டு அஞ்சி நடுநடுங்கி வாசவதத்தை விரைந்து வந்து அவனைத் தழுவிக்கொண்டாள். ஊடலும் தொலைந்து களிப்பில் கழித்தனர்.

இந்த இனிய ஊடற்கருத்து வள்ளுவர் வகுத்த குறளில் இன்பப் பாலில் காணலாம். கொங்குவேளிர் இந்த இனிய காதற் படத்தைக் கருத்தோவியமாகக் கற்பித்திருக்கின்ருர். செய்யுள் இனிமை கண்டு மகிழுங்கள்.

“ வண்டார் சோலை வளமலைச் சாரல்
உண்டாட் டயரும் பொழுதின் ஒருநாள்
... ...
ஒருசிகை முடித்த உறுப்பமை கோலத்து
விரிசிகை என்னும் விளங்கிழை குறுமகள்
இருந்தினி தொழுகும் இயன்மலைப் பள்ளியுள்
கண்டு ... ... வந்தவர் பெருமகள்
சூட்டு நலம் புனைந்து சுடர்நுதற் கிய
மடவரல் மாதை வாவென அருளி
உச்சிக் கேற்ப ஒப்பனை கொளீஇ
அமைபுரி தோளியை அன்பில் அணைஇ
புனைமலர்ப் பிணையல் சூட்டினன்
கண்ணார் கனங்குழை கதுமெனக் கண்டே
மண்ணார் மார்வன் மாதரைச் சூட்டிய
காமர்ப்பிணையல் கதுப்ணி கனற்ற
தளிர்ப்பழங் கண்ணியும் தழையும் வீசியிட்
டொளிப்பூந் தாமம் உள்பரிந்து சிதற

“ முழுநீர்ப் பொய்கையுட் பொழுதொடு விரிந்த
செழுமலர்த் தாமரைச் செவ்விப் பைந்தாது
வைகல் ஊதா வந்தக் கடைத்தும்
எவ்வம் தீராது நெய்தற் கூவாவும்
வண்டே யனையர் மைந்தர் என்பது
பண்டே உரைத்த பழமொழி மெய்யாக்
கண்டேன் ஒழிஇனிக் காமக் கலப்பு ”

எனச் சினந்தனள்...பிறகு ஊடல்.

“ அரணி அருளென் றடைவது போன்றோர்
கருமுக முசுக்கலை கதுமெனத் தோன்ற
இன்ன தென்றுணரா நன்னுதல் நடுங்கி
மன்னவன் மார்பின் மின்னென ஒடுங்க
விழுத்தகு மாதரொடு விளையாட்டு விரும்பி ” (2-15-16)

கழித்தனன்.

அணியியல் வகைகள்

கொங்குவேளிர் சிறந்த தகைசான்ற புலவர் ஆன திறல் கவியின்பம் அளிக்கிற அணிகளை வெகு அற்புதமாக அங்கங்கே ஆண்டு வந்திருக்கின்றார். சிலவற்றைக் கூறுவாம்.

உதயணனும் வாசவதத்தையும் உஞ்சையில் ஒருவரை ஒருவர் பார்க்க நேரிடுகிறது அவர்கள் கண்கள் சந்திக்கக் காதல் கொள்ளுகிறார்கள். பிறகு பிரிய நேரிடுகிறது. அப்போது அடைந்த விரக தாபத்தை வருணிக்க வந்த புலவர் கோமான் முதலில் அந்த மாலைப் பொழுதை வருணிக்கின்றார். பகலவன் பேரொளியோடு ஒளி செய்து கொண்டிருந்து ஒளியைச் சிறிது சிறிதாகக் குறைத்துக்கொண்டு மேற்கு மலையின் பின்னர் தாழ விலங்குகளும் பறவைகளும் மறைந்து கொள்ள, ஒரு மன்னர் மன்னன் வலிமை குறைய குறுநில மன்னர்கள் தலை நிமிர்ந்து ஓங்குதல் போல விண்ணிடத்துத் தாரகைகள் கண் சிமிட்டத் தொடங்கின. அப்பொழுது தாய் முலைப்பாலை உண்ணும் காலத்தில் முடியை முறைப்படி பெற்ற அரசிளங்குழவி போல பிறைமதி தோன்றிற்று என்று அழகிய அணியில் வருணிக்கின்றார்.

இதில் மன்னர் மன்னனை கதிரவனுக்கும் குறுநில வேந்தரை விண்மீன்களுக்கும் உவமை கூறி, மன்னன் உள்ள பொழுது தோன்றாமல் இருந்து அவனுடைய பெருமை நீங்கினவுடனே சிற்றரசர் தம்மைப் புலப்படுத்திக் கொண்டு வரல்போல் மாலை வரவும் கதிரவன் மேற்கே சாயவும் உடுக்கள் விண்ணில் தோன்றின என்கிறார்.

பிறகு பிறைமதி தோன்றிற்று. ஒரு மன்னன் தன் உரிமை மகன் குழந்தையாக இருக்கும் பொழுது இறந்துவிட உரிமை கொண்டு அரசிளங்குழவி வெண் கொற்றக் குடையின் கீழ் விளங்குவது போல பிறைச்சந்திரன் தோன்றினான் என்றார். அதனைக் கன்னியர் தொழுவார்கள் என்றும் கூறினார். அந்த நாள் வரலாற்றை மனதிற் கொண்டு இந்த உவமை இயற்றினார் என்று கூறலாமோ? கரிகாற்பெருவளத்தான் மிக்க இளமையில் முடிதரிக்கப் பெற்றான். மேலும் தலையலங்கானத்துச் செருவென்ற நெடுஞ்செழியனும் அதே இளமையில் திருமுடிபெற்றான். சங்க காலத்தில் நிகழ்ந்த இவை

களைக் கொங்குவேளிர் நினைத்துக்கொண்டு வருணித்தார் போலும்.

இனி செம்மை பொருந்திய இனிய செய்யுட் பகுதியைக் கூறுவோம். (1–33–40)

"சென்றுசென் றிறைஞ்சிய சினந்தீர் மண்டிலம்
சூடுறு பாண்டிலிற் சுருங்கிய கதிர்த்தாய்
கோடுயர் உச்சிக் குடமலைக் குளிப்ப
விலங்கும் பறவையும் வீழ்த்துணைப்படர
புலர்பு முத்துகுத்த புன்மைத் தாகி
நிறைகடன் மண்டிலம் நேமி உருட்டிய
விறைகெழு பெருவிரல் எஞ்சிய பின்றை
கடங்கண் ணரிந்த கையர் ஆகி
இடந்தொறும் பல்கிய மன்னர் போல
வரம்பில் பன்மீன் வயின்வயின் விலங்கி
பரந்துமீ தரும்பிய பசலைவானத்து
தலைத் தேர்த் தானைக்குத் தலைவன் ஆகி
முலைப்பாற் காலத்து முடிமுறை யெய்தி
குடைவீற் றிருந்த குழவி போல
பொழில்கள் விளங்கும் தொழிநுகம் பூண்டு
புயன்மாசு கழிஇ புனற்றுநா ளுலவாது
வியன்கண் மாநிலம் தாங்க விசும்பூர்ந்து
பைந்தொடி மகளிர் பரவினர் கைதொழ
செங்கோட் டிளம்பிறை செக்கர்த் தோன்றி"

(1–33–58)

இந்த உவமையணிகளை ஆராய்ந்து மகிழ்க!

வரலாற்றுப் பகுதிச் சான்றுகள்

(Vol. I – பக்கம் 36 – தொடர்ச்சி)

பெருங்கதை ஒரு சிறந்த இலக்கியம் மட்டும் அல்ல, இதில் வரலாற்றுப் பகுதிக்குப் பல சான்றுகளும் உண்டு. மேலும் நில நூல் பகுதிக்கும் சான்றுகள் உள்ளன. இவ்விரண்டு வகைச் சான்றுகளுளும் சில எடுத்துக் கூறுவோம்.

முதலில் வரலாற்றுப் பகுதியில் வடநாட்டுப் பகுதியும் தென்னாட்டுப் பகுதியும் ஆக இரண்டு பகுதிகளாகப் பிரித்துக் கூறலாம். இந்தச் சிறந்த நூலில் காணும் முக்கிய கதாநாயகர்களின் பெயர்கள் வரலாற்றில் வந்த பெயர்களே. மேலும் அதில் கண்ட நாட்டுப் பெயர்களும் ஊர்ப் பெயர்களும் வரலாற்றில் வந்தவைகளே. வத்த மன்னன் உதயணன், உஞ்சை மன்னன் பிரச்சோதனன், கோசல மன்னன், மகத மன்னன், தருசகன், பாஞ்சால மன்னன் ஆருணி முதலியோர் வரலாற்றில் வரும் பெயர்களே. அவர்கள் எல்லாரும் புத்தர் உலகில் வாழ்ந்த காலத்தில் இருந்தவர்களே. மேலும் அக்காலத்தில் இருந்த நாடுகளில் வத்ச, மகத, அவந்தி, சிந்து, சேதி, யவனம், விதேயம், கலிங்கம், காந்தாரம், கம்போசம், கோசலம், பாஞ்சாலம், காசி முதலிய நாடுகளும் அக்காலத்து நாடுகளே. நகர்களில், கோசாம்பி, அயோத்தி, காசி, இராசக்கிரகம், உஜ்ஜியினி, சயந்தி, இலாவாணம், சண்பை, பாடலிபுத்ரம் புடபகம் முதலியன வரலாற்றில் வந்தவையே. ஆறுகளில் சிந்து, யமுனை, நருமதை ஆறுகள் அன்றும் இன்றும் உள்ளவையே. பௌத்த, ஜைன புராண வரலாறுகளில் உதயண சரிதம் தோன்றியுள்ளது. சில மாறுபாடுகளுடன் இருந்தாலும் சரித ஆராய்ச்சிக்கு மிகவும் சிறப்பாக உள்ளது. மேலும் அக்காலத்து அரசியல், அமைச்சியல், போர் முறை, வாணிபம், பொருளாதாரம், சமூக நிலை, உழவு, இயந்திரத் தொழில், கல்வி நிலை, சமய நிலை, ஆசாரம் முதலான பல செய்திகளுக்கும் இந்நூலில் நிரம்பச் சான்றுகள் உள்ளன. சமுதாய நிலையில் அரசனுக்கும் குடிகளுக்கும் உள்ள தொடர்பு, மன்னர்களுக்குள் ஒரு வம்சத்திற்கும் மற்றொரு வம்சத்திற்கும் உள்ள தொடர்பு மன்னர்கள் சமய வாழ்க்கையில் ஈடுபாடு முதலிய பல முதன்மையான கேள்விகளுக்கு இந்நூல் விடை தருகின்றது.

இனி தென் தமிழ் நாட்டுக் கொங்கு நாட்டு வரலாற்றிற்கும் ஆராய்ச்சிக்கும் மிகுந்த சான்றுகள் தருகின்றது

கொங்கு நாட்டு இலக்கியச் சிறப்பேயன்றி நாட்டுச் சமூக நிலை, சமய நிலை, செல்வ நிலை முதலிய பல செய்திகளுக்கும் இந்நூல் ஆராய்ச்சிக்கு இடம் தருகிறது. ஒரு காலத்தில் கொங்கு நாடு சமண சமயத்திற்குத் தக்க இடம் தந்தது என்றும் அதனால் பல சமணப் புலவர்கள் தோன்றியும் சங்கம் ஆராய்ந்தும் நாட்டின் முன்னேற்றத்திற்கு இடம் தந்தார்கள் என்பதற்கும் இந்நூல் ஆதாரமாக இருக்கிறது. இதனைக் குறித்துப் பின்னால் விவரிப்போம். கொங்கு நாட்டுச் சரிதத்தை ஆங்கிலத்தில் பதிப்பித்த சென்னைப் பல்கலை கழகத்து வரலாற்று ஆசிரியர் ஒருவர் கொங்குவேளிர் என்ற பெயர் மட்டும் குறித்து விட்டு அவர் ஒரு சிறந்த புலவர் என்று மட்டும் எழுதி விட்டு வரலாற்றுப்பகுதிக்குப் பெருங்கதை அளித்திருக்கும் சான்றுகளைப் புறக்கணித்து விட்டது வருந்தத் தக்கது. காரணம் இங்கு குறிக்க வேண்டியதில்லை. அறிஞர்களே அறிந்து கொள்வர்.

பலவகைப் பொருள்கள்

மேலும் மாந்தர்க்குப் பயன்படும் பொருள்கள் பல வகைகளை எடுத்துக் கூறுவதில் அடியிற்கண்டவைகளைக் கூறுகிறார் புலவர். (3–17–131–168)

1. வாசனைப் பொருள்கள் :

“பல்லுறைப் பையில் உள்ளுறை தோறும் –131
நாகத் தல்லியும் நயந்த தக்கோலமும்
வாசப் பனிதமும் சோணப் பூவும்
குங்குமக் குயிற்றியும் கொழுங்காற் கோட்டமும்
மொண்காழ்த் துருக்கமும் மொளிநா குணமும்
காழக நூறும் கட்சா லேகமும்
கோழிரு வேரியும் பேரில வங்கமும்
அந்தண் டகமும் அரக்கு மகிலும்
சந்தனக் குறையொடு சாந்திற் குரியவை
பிறவும் ஒருவா நிறைய அடக்கி –140

வாசனைப் பொருள்கள் 16 தனித்தனிப் பைகளில் உறைகளில் அடக்கி வைக்கப்பட்டன.

2. உணவுப் பொருள்கள் :

முதிர்பழ மிளகும் எதிர்வது திகழ்ந்த
மஞ்சளும் இஞ்சியும் செஞ்சிறு கடுகும்
தலைப்பெருங் காயமும் நலத்தகு சிறப்பில்
சீரகத் தரிசியும் ஏலமும் ஏனை
காயமும் எல்லாம் ஆய்வண் அடக்கி –145

உணவுப் பொருள்களில் 8 வகை அடக்கப்பட்டன.

3. மருந்துக் குரிய பொருள்கள் :

அஞ்சன மனோசிலை யளியரி தாரமும் –146
துத்த மாஞ்சியத் தவத் திரதம்
திப்பிலி சிந்துப் பொப்புமுறை அமைத்து
தாழி மேனை தவாத துவர்ச்சிகை
வண்ணிகை வங்கப் பாவையோடின்ன
மருத்துறுப் பெல்லாம் ஒருப்படுத் தடக்கி –151

மருந்துக் குரிய பொருள்களை 11 தனிப்பைகளில் அடக்கினர்.

4. ஆடவர் கோலங்கள் :

இலச்சினை ஒன்றிய தலைச்சுமைச் சரச்சினர் –152
நானமண்ணிய நீணிறக் குஞ்சியர்
மணிநிறக் குவளை யணிமலர் செரீஇ
யாப்புற அடக்கிய வாக்கமை சிகையினர்
மல்லிகை யிரீகி வல்லோர் புணர்ந்த
செம்பொன் மாத்திரை செரீகிய காதினர்
அங்கதிர் சுடர்மணி யணிபெற விரீஇ
மாசின்றி லங்கு மோதிர விரலினர்
வாச நறும்பொடி திமிர்ந்த மார்பினர் –160

இவ்வடிகளில் 8 வகைக் கோலங்களும் ஆடவர் அணிகளும் கூறப்பட்டன.

5. மகளிர் கோலங்கள் :

மகரிகை நிறைய எதிர்முக மாக்கி –161
பாடி மகளிர் விழையும் சேடொளி
பத்திக் கடிப்பும் பவழத் திரியும்

முத்து வடமும் முழுமணிக் காசும்
பன்மணித் தாலியும் மென்முலைக் கச்சும்
முத்திப் பூணும் முளப்படப் பிறவும்
சித்திரக் கிழியில் வித்தக மாக
தோன்றத் தூக்கி ஆங்கவை ஆயத்து
நாற்றிய கையர் ஏற்றிய கோலம். —169

இதில் 9 வகை அணிகள் கூறப்பட்டன.

NOTES

From Mythic Journal Vol. XIV (23-24) P. 53

A. KATHASARITH SAGARA

(18 Lambakas and 124 Tarangas)

1. Katha pita - கதா பீடம் – தரங்கம் (1-3)

குணாட்டியர் கதை

2. Kathamuka – கதாமுகம் – தரங்கம் (9-14)

உதயணன் வரலாறு

கௌசாம்பி (Kausambi) - வத்சர் மன்னன் கதை. பாண்டவர் குலம்-தகப்பன் சதானிகன் Satanika பாட்டன் சகஸ்ரநிகன் Sahasranikan தாய் மிருகாவதி Mrigavati (அயோத்தி மன்னன் கிருதவர்மன் மகள்). ஜமதக்னி ஆசிரமத்தில் வளருகிறான் நாகர் அரசன். வாசுகியின் சகோதரன் வாசுலோமி வீணை தருகிறான். உஜ்ஜயினி Ujjayini மன்னன் சண்டமகாசேனன், Sanda mahasena மகள் Vasavadatta.

நடாகிரி – Nadagiri – யானை.

Two sons Gopalaka and Palaka.

Violya forests - elephant is left and Udayana chases it and is captured by Ujjayini's men.

Maid Viracita – Bandumati – weds Manjulika.

Janakrityayani – nun.

Dramas – Priyadarsika, Ratnavali and Malavi Kagnimitra tell the same story in different names.

3. Lavanaka – இலாவாணகம் – தரங்கம் (15–20)

Udayana's Ministers – Yougandharayana (யூகி) and Rumanvat (உருமண்ணுவா)

பதுமாவதி – பிரத்யோதன் Pradyota, king of Magada மகள் – To have court at Lavanaka and to fix a plot to marry Padmavati

Vasuvadatta became a Brahma lady Avantika.

Varantaka – a Brahman.

After marriage, the court goes to Kausambi.

Gopalaka – King of Videka.

Simhavarna – King of Chedis.

Brahmadatta – King of Kashi.

Udayana's conquests – all states.

4. Naravahanadatta (21–23)

Udayana gives himself to pleasure.

Pingalika – Brahman woman.

Vasavadatta's journey through air by aerial machine.

Naravahana – born – minister's son also.

Marubuti for yougandarayana யூகி.

Harisikha for Rumanvat உருமண்ணுவா.

Tapantaka for Vasantika வயந்தன்.

Gomuka for Nityodita or Ityaka.

5 Chaturdarika (24–26)

வித்தியாதரர் மன்னன் சக்திவேகன் Saktivega கதை வித்தியாதரர் மகள் சந்திரப்பிரபையை மணந்து அந்நாட்டு மன்னன் ஆதல்.

6. மதன மஞ்சுகா Madana manjuka (27—34)

பல கதைகள் புகுகின்றன.

7. Ratnabrabha (35–43)

நரவாணன் - மந்திரி தமந்தகன்.

Hemaprabha – a daughter of Vidyadara திருமணம்.

8. சூர்யப்பிரபா (43—50)

பெரியதோர் கதை.

9. அலங்காரவதி (51—56)

சிவன் கோயிலில் ஒருமங்கை – அலங்கார சீலன் மகள்.

10. சக்தியசஸ் Caktiyacas (57—66)

treacherous nature of woman – horrible stories.

11. Vela

ருசிரதேவன் சகோதரி - ஜயேந்திரசேனை - மணம்.

12. சசாங்கவதி (67—103)

4930-சுலோகங்கள் மிகப் பெரியவை நரவாணன் கதை.

13. மதிராவதி (104)

கங்கைக் கருகில் திரிகிருள் - மதுன மஞ்சிகை பிரிவு.

14. மஞ்சா (105—108)

ஊடல் விளைவு.

15. மகாபிஷேக (109—110)

மலையமலையில் ஒரு குகையில் 7 நகைகள் வாமதேவ முனியின் பாதுகாப்பில் இருந்தன. மந்தரதேவன் - தேவி மணம்.

16. சுரதமஞ்சரி (111—118)

மந்தரகினியின் தீரத்தில் வசந்தோத்சவம் – தீயகனு – உலக நிலையாமை எண்ணி உதயணன் துறவு பூணுகிருன். மந்திரிகளும் மனைவிமாரும் அப்படியே. கோபாலகன் அரசன் ஆகிருன் – காளஞ்ஜரா மலை உச்சியிலிருந்து உயிர்விடுகிருர்கள். விமானம் ஏற்றிச் செல்கிறது.

17. பத்மாவதி (114—119)

கேள்வி கேட்கப்படுகிறது.

18. விசய சீலா (120—124)

நீண்டகதை-விக்கிரமாதித்தன் கதை – 57 B.C.

இந்த 18 இலம்பகங்களிலுள்ள கதை முற்றும் குணாட்டியர் எழுதிஞரா என்பது சந்தேகம்.

B. BRIHADKATHA MANJARI

(Kshemendra)

" The author summarises some parts and enlarges others so that the story might be made more homogenous" says Levi. A comparison of chapters would show complete re-arrangement except first 5 parts. The word Guchcha is used instead of Taranga for the subdivisions. The author has divided his work into 124 chapters as it pleased him. The essayist now goes on discussing the difference between Samadeva and Kshemendha's books. In the end he says one follows the other in all important matters and differs in some details and orders only.

C. KASHMIRIAN ORIGINAL

1. Kashmirian Brihatkatha - author is unanimous. It is a compilation and not original work.

2. Order of books. It is incoherent Somadeva criticises it - But follows it.

3. Subject-matter - It follows manjari for the order of books and Kathasaritsahara for the subject-matter.

4. How Kashmir Book was formed.

It also has 18 parts - History of Udayana - Naravahanadatta and his stories - 16 in number.

Primitive story of Kashmirian version.

1. Kathamuka - Naravahana narrates the story.
2. Ujjain - Sahasnika - Birth of Udayana. Youth. His marriage with Vasavadatta.
3. Lavanika - marriage with Padmavati
4. Naravahana - birth
5. Madanamyuka
6. Pancha books - Vegavathi ...and 6 others
7. Mahabiseka - conquest of north country

V. Chronology of Kashmir Brihatkatha

1. Kathasaritsagara - between the accession of Kalasa and the death of Suryavati i. e. between 1063-64 and 1081-82 A. D.

2. Kshemandra, a contemporary of Kalasa's father.
Bharatamanjari written on 1037
Dasavataracharita 1066
Kshemandra 25 or 30 years earlier than KSS

CHAPTER II

Slokasangraha of Budhuswami

A. ***Name*** (Nepal Manuscript) and date

This is an abridgment of Brihatkatha by Budhuswami.

He lived in 8th and 9th centuries.

The work is full of merit, breathes joy of living.

The poem is attractive.

B. ***Divisions***

I. Kathamuka.
II. Naravahana.
III. Madana mvuka.
IV. Vegavathi.
V. Godamadatta.
VI. Ajonuthi.
VII. Priyadarisa.
VIII. Bhogiritti.

C. ***Contents of Slokasangraha.***

Naravahana - conquered 26 wives - 25000 men. divided into 100 sargas.

A comparative statement of facts between Nepalese and Kashmirian versions is given p. 114 to p. 145.

CHAPTER III

Other versions Brihatkatha

A. *Sanskrit version.*

1. A. S. Indian version – not available.
2. Katha pukasa. Indian library.

B. *Persian version* - a prose of Kashmir sloka sangraha India.

Office - another Persian manuscript.

C. *Tamil* Brihatkatha – 5 kandams.

PART III. GAUDIYA'S BRIHATKATHA 1–149.

I. Fragments of Paisachi Brihatkatha.

II. Accuracy of slokasangraha.

III. Plan and subject - matter of Brihatkatha.

IV. Sources of Brahadkatha.

Local colony of Brihadkatha. Kausambi and its gardens, festivals, streets, river, (yamuna) with sand banks, ferry boat, wood of serpants, yatra every year – all fully described with original touch.

Badravati gate, garden, deer skins - original

Udayana - a local hero. Others are Pradyota, Bimbisara and Prasmajit – all folklore of a city.

Brahmin and Buddism combined.

Kausambi is mentioned along with champa,

Rajagriha, Sraviti and Saketa - cities where Buddha desired to die. The city is 30 miles from confluence of Ganga and Yamuna on Yamuna's left bank on the way from Rajagriha to Ujjayini.

Road between Pataliputra and Barakucha.

Gaudiya goes along Ujjaini, Kausambi, Benares, Rajagriha and Chamba Gaudiya would have frequented these places.

Legend of Pradyota ... p. 173
Legend of Udayana ... p 187

Buddhist connections mentioned.

Part of contact between Brahatkatha and Buddhist love p. 196.

Ch. V. **Originality and Influence of Gunadiya**

Notes by the author ... p. 123
Note on Kausambi ... p. 215

City of Kausambi - a celebrated city in ancient India-famous among Brahman and Buddhists mentioned in Ramayana - Buddha lived in it for a number of years. Hieun Tsang mentioned that a famous statue of Buddha in red sandalwood was installed in the city by Udayana during the life time of the Teacher under a stone dome in the palace of Udayana.

The ruins consist of a fortress - circuit 4 m 3 b 6 gates - The present village of Kosam = Kosam Inam and Kosam Khiraj - west and east of fortress.

Buddhist remains and a sivalingam. a large stone monolith with inscription.

APPENDIX

Nepala Mahatayyln chapters 27 to 31. p. 217–228. Gunadiya's story - in Sanskrit verse,

Munshi's History Vol. II, 6th century B. C.
16 great states - N. India.

Three important states - Magadha, Kosala and Vatsa minor - Kuru, Panchala, Surasena, Kasi, Mithila, Anga, Kalinga, Amaka, Gandhara and Kamboja - 10

Two others - Haihayas, Vitikotras = Avanti and Chedi.

1. *Anga* - (Bhagalpur and Monghir Districts) River Chimpa, Capital Champa.

2. *Kashi* - Rivers Varuna and Asi = Varanasi-capital.

3. *Kosala* – (Oudh) Sadanira (River Gantak) North and South.

Sravasti,– capital of North Kosala.
Kusavati– capital of South Kosala.
Saketa and Ayodhya – other towns.

4. *Vrijji* – (Vajjian) Vaisali – capital of Lichivis.
Videha – capital of Mithila (Tirhut)

5. *Malla* – Capital Kusinara.

6. *Chedi* – 1. near Nepal 2. Bundelkhand.
Suktimati - capital.

7. *Vatsa* – Capital Kausambi (Kosam) – Jamuna, King Udayana – Contemporary of Buddha – Rival with Prodityota of Avanti : Elephant trick and prisoner – Vasavadatta – Queen – Other queen's sister Darsaka of Magadha – Originally not a Buddhist and tortured Pindola afterwards became his disciple. He survived Buddha.

550 B. C.

8. *Panchala* – North and East of Delhi upto Himalayas to Chambal river.

North Panchala – Capital Ahichhatra South Panchala – Capital Kampilya	Kanyakubja in it.

9. *Matya* – (Machala) – Jaipur, Alwar and Bharatpur
Capital Viratnagara (Bairat)

10. *Surasena* – Capital Madura (Muttra) Vrishnis.

11. *Asvaka* – Sindhu-basin. A wet valley.
Capital Potana.

12. *Avanti* – Capital Mahismati. Ujjaini – Capital at the time of Buddha.

13. *Gandhara* – Peshawar and Ravalpindi.
Capital Takshasila (Taxila)

14. *Kamboja* – Hazara District (N. W. F. Province) Rajpura.

Autonomous clans – Sakhyas, Kotyas and Moriyas.